
# நரசிம்மவர்மன்



மயிலை சீனி. வேங்கடசாமி

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

**நூலக நூல்கள்**

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

**பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை**

# நரசிம்மவர்மன்


ஆசிரியர்
ஆராய்ச்சிப் பேரறிஞர்
**மயிலை சீனி. வேங்கடசாமி**

பதிப்பாசிரியர்
**புலவர் கோ. தேவராசன்**, எம்.ஏ., எம்.எட்.,
செயலாளர், தமிழ்வளர்ச்சிப் பேரவை, சென்னை.

வெளியிடுவோர்
**மீனா கோபால் பதிப்பகம்**
மனை எண் - 9, கதவு எண் - 26,
ஜோசப் காலனி, ஆதம்பாக்கம்,
சென்னை - 600 088.
தொலைபேசி: 2453667.

# நூல் விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நரசிம்மவர்மன் |
| ஆசிரியர் | : | மயிலை சீனி. வேங்கடசாமி |
| பதிப்பாசியர் | : | புலவர். கோ. தேவராசன் எம்.ஏ.,பி.எட்., |
| முகப்பு அட்டை | : | ஓவிய அரசு சுப்பு |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| வெளியீட்டு ஆண்டு | : | 2001 |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | கிரவுன் 12.5 X 18 செ.மீ. |
| அச்சு | : | 10 புள்ளி |
| பக்கம் | : | 264 |
| படிகள் | : | 1200 |
| ஒளியச்சு | : | காலக்ஸி கம்ப்யூட்டர் சிஸ்டம் |
| அச்சிட்டோர் | : | குமார் அசோசியேட்ஸ் சென்னை - 600 013. |
| பொருள் | : | வரலாறு |
| விலை | : | ரூ 60.00 |



மயிலை சீனிவேங்கடசாமி
1900 - 1980

# நன்றி உரை

வரலாற்றை ஆராய்வது வீண்வேலை என்று எவரும் கருதக்கூடாது. மேலும் வளர்வதற்கும் எழுச்சி பெறுவதற்கும் வரலாற்றைப் போல ஊக்கம் ஊட்டக்கூடியது எதுவும் இல்லை. அறிவியல் வளராத காலத்தில் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னால் மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகள் சிந்திக்கத் தக்கவை; சுவைதரக்கூடியவை. அவர்தம் கலையார்வமும் வீரத்தால் பெற்ற வெற்றிச்சிறப்பும் நினைத்தால் பெருமிதத்தால் நம் தோள்கள் விம்மும்.

மகேந்திரவர்மனும் நரசிம்மவர்மனும் நடத்திக்காட்டிய ஆட்சியிலே விளைந்த நலன்கள் பலப்பல. காலம் கைகழுவிவிட்ட மன்னர்கள் பலரை வரலாற்றில் சந்திக்கலாம். அவர்கள் வாழ்ந்த அடிச்சுவடுகளே நமக்குத் தெரியவில்லை. ஆனால் பல்லவரின் வல்லமை, காலத்தால் கரைக்க முடியாத சிற்பங்களாகச் சிரிக்கின்றன.

ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் அரிய முயற்சியும் அயரா உழைப்பும் தெளிவான பல்லவர் வரலாற்றை நமக்கு அளித்துள்ளன. அவர் என்றென்றும் நம் வணக்கத்திற்குரிய பேரறிஞர்.

மயிலையார் நூல்களை நாட்டுடைமை ஆக்கிய தமிழக அரசு பாராட்டுக்குரியது. இந்நூல்களைச் செம்மையாகக் கொண்டு வருவதற்குப் பெரிதும் பாடுபட்ட பதிப்பாசியர் மாண்புநிறை புலவர் தேவராசனார் அவர்களுக்கு மிக மிக நன்றி. நூலின் மெய்ப்புத்திருத்திய பெருமக்கள் சு. இலம்போதரனார் அவர்களுக்கும் புலவர் சி. தனபால் எம்.ஏ., பி.டி. அவர்களுக்கும் நன்றி.

**பதிப்பாளர்**

# பதிப்புரை

ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் சிறந்த வரலாற்றுப் பேரறிஞர். ஆழமும் நுட்பமும் நடுநிலைமையும் அவர்தம் அணிகலன்கள். வரலாற்றுத் துறைக்கு அவர் ஆற்றியுள்ள அரும் பணிகள் போற்றுதற்குரியன. தெளிவான கருவி நூல்கள் இல்லாத காலத்தில் வரலாற்றுத் தடயங்கள் அருகியிருந்த காலத்தில் அரும்பாடுபட்டு வரலாற்று நூல்களை உருவாக்கினார். பத்துக்கும் மேற்பட்ட வரலாற்று நூல்களையும், நாற்பதுக்கும் மேற்பட்ட வரலாற்றுக் கட்டுரைகளையும் தமிழுக்கு நன்கொடையாக வழங்கியவர்.

பொதுவாக வரலாறு எனின் போர் வருணனைகளின் தொகுப்பாக இருப்பது வழக்கம். இந்நூல் அவ்வகையைச் சார்ந்ததன்று. இந்நூல் நரசிம்மவர்மன் வரலாறு என்று கூறுவதைவிடத் தமிழகப் பண்பாட்டு வரலாறு, கலையியல் வரலாறு என்று கூறுவது சாலப் பொருத்தம் உடையதாகும்.

பல்லவர்கள் ஆட்சிக் காலம் கி.பி. 300 முதல் கி.பி. 900 வரையுள்ள 600 ஆண்டுகள் ஆகும். இதில் மகேந்திர வர்மன் ஆட்சிக் காலம் கி.பி. 600 முதல் கி.பி. 630 வரையுள்ள 30 ஆண்டுகள் ஆகும். நரசிம்மவர்மன் ஆட்சிக்காலம் கி.பி. 630 முதல் 668 வரையுள்ள 38 ஆண்டுகள் ஆகும். இந்நூல் 68 ஆண்டு கால அரசியல், சமயம், இலக்கியம், கலையியல் வரலாறுகளை உள்ளங்கை நெல்லிக் கனியெனத் தெளிவாக விளக்குகிறது.

இந்நூல் மிகவும் அருமைப்பாடு உடையது. தொல்பொருள் ஆய்வின் துணை கொண்டும், எண்ணற்ற கல்வெட்டுகள், சாசனங்கள், செப்பேடுகளின் துணை கொண்டும் எழுதப்பட்டது. இந்நூல் எழுதும்

பொருட்டு அரிய ஆங்கில வரலாற்று நூல்களும், தமிழ் இலக்கியங்கள் பலவும் ஆராயப்பட்டுள்ளன. அன்றியும் தமிழகத்தில் காணப்படும் குகைக்கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள் யாவற்றையும் நேரில் சென்று கண்டு கள ஆய்வு செய்தே இந்நூலை எழுதியுள்ளார். குறிப்பாகக் காஞ்சிபுரம், மாமல்லபுரம் போன்ற இடங்களுக்குப் பதினைந்து முறைகளுக்கு மேல் நேரில் சென்று நுட்பமாக ஆய்வு செய்திருக்கிறார். இனி, அரசியல், சமயம், கோயில், சிற்பம், ஓவியம், இலக்கியம் எனப் பல்வேறு தலைப்புகளில் மயிலையார் கூறிய செய்திகளையே மிகச் சுருக்கமாகக் கூறுவதும், ஒன்றிரண்டு இடங்களில் சிறப்புகளைச் சுட்டுவதும் எனது பணியாகும்.

***அரசியல்:-***

மகேந்திரவர்மன் புகழ் வாய்ந்த பேரரசன். காவியம், ஓவியம், நாடகம், இசை, சிற்பம், கட்டடம் எனும் கலைகளில் வல்லவன். அவன் அளித்த கலைச் செல்வங்கள் இன்றும் தமிழ்நாட்டில் நின்று நிலவுகின்றன. மகேந்திரவர்மன் பல சிறப்புப் பெயர்களைத் தாங்கியவன். குணபரன், சத்துரு மல்லன், விசித்திர சித்தன், சேதகாரி, மத்த விலாசன், சித்திரகாரப் புலி, சங்கீர்ண ஜாதி போன்ற சிறப்புப் பெயர்களே அவன் ஒரு கலைச் செல்வன் என்பதை நிலை நாட்டும்.

மகேந்திரவர்மன் காலத்திலும் நரசிம்மவர்மன் காலத்திலும் வட இந்தியா முழுவதையும் ஆண்டவன் ஹர்ஷ வர்த்தனன் என்னும் மன்னன். இவன் புகழ்க் கொடி நாட்டியவன். தக்காண இந்தியாவை ஆண்டவன், சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி என்பவன். அவனுடைய இராச்சியத்திற்குத் தெற்கே பல்லவ அரசு புகழுடன் விளங்கியது. செங்கோற் சேந்தன் என்பவன், மகேந்திரவர்மன் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டவன். சேந்தன் மகன் நெடுமாறன் என்பவன் நரசிம்மவர்மன் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டவன். இக்காலங்களில் இலங்கையில் பெருங் குழப்பம் நிலவியது.

பல்லவ அரசு தொடக்கத்தில் ஆந்திர மண்டலம், தொண்டை மண்டலம், சோழ மண்டலம் என்னும் முப்பிரிவுகளைக் கொண்டிருந்தது.

சாளுக்கிய மன்னன் புலிகேசி பல்லவ நாட்டின் மீது படையெடுத்து ஆந்திர மண்டலத்தைக் கைப்பற்றிக் கொண்டான். நரசிம்மவர்மன் காலத்திலும் புலிகேசி பெரும் போர் தொடுத்தான். காஞ்சிபுரம் அருகே புள்ளலூர் எனும் இடத்தில் போர் நிகழ்ந்தது. இப்போரில் புலிகேசி கொல்லப்பட்டான். நரசிம்மவர்மன் தனது தந்தை இழந்த ஆந்திர மண்டலத்தை மீண்டும் கைப்பற்றிக் கொண்டான். நரசிம்மவர்மனுடைய படைத்தலைவர் பரஞ்சோதியார் சாளுக்கியரின் தலைநகரான வாதாபியின் மீது படையெடுத்துச் சென்று வாகை சூடினார். அங்கே வெற்றிக் கம்பம் ஒன்றையும் நிலை நாட்டினார். நரசிம்மவர்மன், வாதாபி கொண்ட நரசிம்மவர்மன் என்றும், மாமல்லன் என்றும் பெரும் புகழ் பெற்றான். தன் படை வன்மையால், பதவி இழந்து தன்னிடம் அடைக்கலம் புகுந்த மானவர்மன் என்னும் இலங்கை அரசனுக்கு மீண்டும் முடி சூட்டினான்.

பல்லவர் காலத்தில் காஞ்சிபுரம் புகழ் பெற்ற தலைநகராக விளங்கியது. தலை சிறந்த துறைமுகப் பட்டினமாக மாமல்லபுரம் விளங்கியது. நரசிம்மவர்மன் காலத்தில் கி.பி. 640 இல் ''யுவான் சுவாங்'' என்னும் சீன நாட்டுப் பௌத்த யாத்திரிகர் காஞ்சிபுரம் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் தமது யாத்திரைக் குறிப்பில் பல்லவர் காலத்தில் காஞ்சி மாநகரம் பெற்றிருந்த உன்னத சிறப்புகள் குறித்தும், சமண பௌத்த சமயங்களின் வளர்ச்சி குறித்தும் விளக்குகிறார்.

**சமய நிலை:-**

மயிலையார் பல்லவர் காலத்தில் இருந்த சமயநிலையை ஆய்வு செய்து பின்வருமாறு விளக்குகிறார்:-

மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் காலத்தில் சமண பௌத்த சமயங்கள் செழித்திருந்தன. ஆனால் சைவ வைணவ சமயங்களோ வலிமை குன்றியிருந்தன. சமயப் பூசல்களும் மிகுதியாக இருந்தன.

சமண பௌத்த சமயங்கள் வலிமை பெற்றிருந்த காலத்தில், முதிர்ந்த வயதில் தன்னந்தனியாகத் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, பக்தி இயக்கத்தையும் சைவ சமயத்தையும் வளர்த்துப் பரப்பியவர் திருநாவுக்கரசரே. ஏறக்குறைய இருபதாண்டுகளாக அவர் சமயப்

பிரச்சாரம் செய்தபிறகே, அவருக்குத் துணையாகத் திருஞானசம்பந்தர் தோன்றினார்.

மகேந்திர வர்மன் தொடக்கத்தில் சமண சமயத்தைச் சார்ந்திருந்தான். அவனைச் சைவனாக்கியவர் திருநாவுக்கரசர். மகேந்திரவர்மனைப் போன்றே பாண்டியன் நெடுமாறனும் தொடக்கத்தில் சமணனாய் இருந்தான். அவனைச் சைவனாக்கியவர் திருஞானசம்பந்தர். நாயன்மார்கள் இருவரும் அரசியல் களத்தில் பெருஞ் செல்வாக்குடன் திகழ்ந்தார்கள். அதனால் பக்தி இயக்கமும், சைவ சமயமும் செழித்து வளர்ந்தன.

திருநாவுக்கரசர் தமது 81 ஆம் வயதில் ஏறக்குறைய கி.பி. 650 ல் சிவகதி அடைந்தார். திருஞானசம்பந்தர் தமது 16 ஆம் வயதில் ஏறக்குறைய கி.பி. 656-இல் சிவகதி அடைந்தார்.

பாண்டியன் நெடுமாறன் திருஞானசம்பந்தர் ஆகிய இருவரது கால ஆராய்ச்சியிலும் வரலாற்றுப் பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாத்திரியார் செய்த தவறுகளை எல்லாம் இந்நூலில் மயிலையார் மறுக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கோயில்கள்:-**

மயிலையார் கோயில் கட்டடக் கலையில் ஏற்பட்ட வளர்ச்சி முறைகளைப் பின்வருமாறு விளக்குகிறார்:

கி.பி. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த சோழன் செங்கணான் எழுபத்தெட்டுக் கோயில்களைக் கட்டியதாகத் திருநாவுக்கரசர் குறிப்பிடுகிறார். இக்கோயில்கள் செங்கல், சுண்ணாம்பு, மரம் முதலியவற்றால் கட்டப்பட்டவையாதலால் விரைவிலேயே பழுதடைந்தன.

தமிழகத்தில் முதன் முதலாகப் பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களை உண்டாக்கியவன் மகேந்திர வர்மனே. நரசிம்ம வர்மன் காலத்தில் கோயில் கட்டடக் கலை மேலும் வளர்ச்சியடைந்தது. மகேந்திர வர்மன் விமானங்கள் இல்லாத கருவறையை மட்டும் உடைய குகைக் கோயில்களை அமைத்தான். ஆனால் அவன் மகன் நரசிம்ம வர்மனோ

பாறைகளைக் குடைந்து மண்டபத்தையும், கருவறையும் உண்டாக்கி அவற்றுடன் மேற்புறத்தில் விமானங்களையும் அமைத்து வைத்தான். மகேந்திர வர்மனின் பேரன் இராச சிம்மன் காலத்தில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் கோயில் கட்டடக்கலை மேலும் புதிய வளர்ச்சியைப் பெற்றது. கருங்கற்களினால் சுவர் எழுப்பிக் கோயில் கட்டும்புதிய முறை தோன்றியது. தமிழகத்தில் முதன் முதலாக இராச சிம்மன் காலத்தில்தான் கற்கோயில்கள் தோன்றின.

மகேந்திரவர்மன் தனது ஆட்சிக் காலத்தில் பதினேழு குகைக் கோயில்களை அமைத்தான். அன்றியும் அருச்சுனன் தவசு என்று கூறப்படும் அழகான பாறைச் சிற்பத்தையும் அமைத்தான். நரசிம்மவர்மன் தனது ஆட்சிக் காலத்தில் ஆறு குகைக் கோயில்களையும் இரதங்கள் என்று கூறப்படுகிற பாறைக் கோயில்களையும் அமைத்தான்.

மயிலையார் அனைத்துக் குகைக்கோயில்களையும், பாறைச் சிற்பங்களையும், பாறைக் கோயில்களையும் ஒளிப்படம் எடுத்து நூலில் இணைத்துள்ளார். அவைகளுக்கு விரிவான விளக்கமும் தருகிறார். மகேந்திரவர்மன் கோயில் அமைப்பு இத்தகையது. நரசிம்மவர்மன் கோயில் அமைப்பு இத்தகையது என்று அவைகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

மேலும் இக்குகைக் கோயில்களில் எழுதப்பட்ட சாசனங்களையும் ஒளிப்படம் எடுத்து நூலில் இணைத்து, அவைகளின் பொருள்களையும் தெளிவுபடுத்துகிறார்.

கோயில் சாசனங்களில் சில வடமொழிச் சாசனங்கள். மிகப்பல வடமொழிக்கிரந்த எழுத்துக்களைக் கொண்டவை. பல்லவர் காலத்துத் தமிழ் எழுத்துச் சாசனங்களும் சில உள்ளன. அவை அக்காலத் தமிழ் எழுத்துக்களைப் பற்றி அறியப் பெருந்துணை புரிகின்றன.

**சிற்பக்கலை:-**

மகேந்திரவர்மனும், நரசிம்மவர்மனும் அமைத்த குகைக் கோயில்களில் நூற்றுக்கு மேற்பட்ட அழகிய சிற்பங்கள் அணி செய்கின்றன. அவை அனைத்தும் ஒளிப்படம் எடுக்கப்பட்டு நூலில் இணைக்கப்பட்

டுள்ளன. சில சிற்பங்கள் மயிலையார் உள்ளத்தை நெகிழ வைத்திருக்கின்றன. அவைகளைக் காண்போம்:-

**1. அருச்சுனன் தவசு என்று கூறப்படும் சகர சாகரர் கதைச் சிற்பம்:-**

இப்பாறைச் சிற்பம் குறித்து மயிலையார் கீழ் வருமாறு கூறுகிறார்,

''கண்ணையும் கருத்தையும் கவர்கின்ற இந்தச் சிறந்த சிற்பத்தைக் காண்பவர் வியந்து மகிழ்ந்து பெருமைப்படாமல் இருக்க முடியாது'' என்கிறார்.

**2. கங்காதர மூர்த்தியின் திருவுருவம் கொண்ட அரிய சிற்பம்:-**

இது திருச்சி மலைப் பாறையில் அமைந்த குகைக் கோயிலில் உள்ளது. இது குறித்து மயிலையார்,

''இந்தச் சிற்பம், சிற்பக்கலை ரசிகர்களின் கண்ணையும் கருத்தையும் கவரும் வனப்பு வாய்ந்தது. இக்கல்லோவியத்தைக் காணும் சிற்பக் கலை ரசிகர்களுக்கு மனத்தில் தோன்றும் இன்பவுணர்ச்சி அனுபவித்தறிய வேண்டியது தவிர எழுத்தில் படித்து அனுபவிப்பதன்று'' என்கிறார்.

**3. கொற்றவை சிற்பம்:-**

கோடிக்கால் மண்டபத்தில் இருந்த கொற்றவை சிற்பம் குறித்து,

''இந்த கொற்றவையின் உருவம் புதுமையானது. அருமையானது. இது போன்ற கொற்றவையின் உருவத்தை நமது நாட்டிலே ஏன்? உலகத்திலேயே வேறெங்கும் காணமுடியாது'' என்று மயிலையார் வியக்கின்றார்.

**4. மகிஷாசுர மர்த்தனி சிற்பம்:-**

இச்சிற்பம் மயிலையாரைத் துள்ளிக் குதிக்கச் செய்கின்றது. இது குறித்து,

''இந்தச் சிற்பத்தின் அழகும், செவ்வியும் என்னே! என்னே! இந்தச் சிற்ப உருவத்தை அமைத்து வைத்த கலைச் செல்வன் யாரோ? இந்தச் சிற்பத்தின் செவ்விய அமைப்பைக் காணும்போது நம்முடைய மனம்

பெருமை கொண்டு இறுமாப்புடன் துள்ளிக் குதிக்கின்றது'' என்று மயிலையார் மகிழ்கிறார்.

கங்காதரர் உருவச் சிற்பம், சகரசாகரர் கதைச் சிற்பங்கள், மகிஷாசுர மர்த்தனி உருவச் சிற்பம் யாவும் கருத்து வடிவங்கள். இக்கருத்து வடிவங்களுக்கு மயிலையார் விளக்கம் அளிக்கிறார்.

***ஓவியக்கலை:-***

மகேந்திரவர்மனுக்குச் சித்திகாரப் புலி என்ற சிறப்புப் பெயரும் உண்டு. அவன் உருவாக்கிய சித்தன்ன வாசல் ஓவியங்கள் உலகப் புகழ் வாய்ந்தவை. தரத்தில் அஜந்தா ஓவியங்களுக்கு நிகரானவை. தமிழ்நாட்டு ஓவியங்களிலேயே காலத்தால் முற்பட்ட தமிழ் ஓவியம் இது ஒன்றே. இவை சுவரில் எழுதப்பட்ட சித்திரங்கள் அன்று. உயிர் ஓவியங்கள் என்பார் மயிலையார்.

***இலக்கியம்:-***

மகேந்திரவர்மன் காலத்தில் இயற்றப்பட்ட தமிழிலக்கியம் திருநாவுக்கரசரின் தேவாரப் பதிகங்கள் மட்டுமேயாகும். நரசிம்மவர்மன் காலத்தில் இயற்றப்பட்ட தமிழிலக்கியம் திருஞான சம்பந்தர் தேவாரப் பதிகங்கள் ஆகும். மற்றும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை யாழ்வார் பாடிய பாடல்களும் பாண்டிக்கோவை எனப்பெயர் கொண்ட அகப்பொருள் நூலும் ஆகும்.

மயிலையார் திருநாவுக்கரசர் தேவாரம் குறித்தும், திருஞானசம்பந்தர் தேவாரம் குறித்தும் விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளார். அவை செறிவானவை. முழுமையானவை.

***நாடகக்கலை:-***

மகேந்திரவர்மன் நாடகக் கலையிலும் வல்லவன். மத்த விலாசப் பிரஹசனம் என்னும் நாடக நூலையும் இயற்றியிருக்கிறான். இது ஒரு நகைச்சுவை நாடகம். வடமொழியும், பிராகிருத மொழியும் கலந்து எழுதப்பட்டது. இந்நூலை ''பார்னெட்'' என்பவர் ஆங்கிலத்தில் மொழி

பெயர்த்துள்ளார். இதனை மயிலையார் தமிழாக்கம் செய்து இந்நூலில் வெளியிட்டுள்ளார்.

இந்நூல் ஒரு வரலாற்றுக் களஞ்சியம். கலைக் களஞ்சியம். அரிய ஆய்வுக் கருவூலம் எனலாம்.

எனது அரிய நண்பர் **முத்தமிழ்க் கவிஞர், முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்** அவர்கள் **பழகுதற்கு இனியவர், பண்பாளர், பன்னூல் ஆசிரியர். சிறுவர் இலக்கியங்கள் பலவற்றைப் படைத்துச் சாதனை புரிந்தவர். அரிய நூல்களை வெளியிட்டுப் புகழ் ஈட்டியவர். மயிலையாருடைய நூல்களை எல்லாம் அச்சிட்டுத் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற பேரவா கொண்டவர்.**

தற்போது மயிலையாருடைய வரலாற்று நூல்களையும் அவருடைய அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை மூன்று தொகுதிகளாகவும் வெளியிட முயற்சி மேற் கொண்டார். அவருக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடப்பாடுடையது. அவரது தமிழ்த் தொண்டு அரியது. பெரியது. வளர்க அவர்தம் தமிழ்த் தொண்டு.

**அன்பன்**
**கோ. தேவராசன்.**

ஆராய்ச்சிப் பேரறிஞர்

## மயிலை. சீனி வேங்கடசாமி அவர்களுக்குப் பாவேந்தர் பாரதிதாசன் வாழ்த்து

தாங்கெட நேர்ந்த போதும்
தமிழ்கெட லாற்றா அண்ணல்
வேங்கட சாமி என்பேன்!
விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டோன்!
வீங்கிட மாட்டான்! கல்வி
விளம்பரம் விழைதல் இல்லான்

தமிழுக்குத் தொண்டு செய்வோர்
தலைச்சங்க முதலாய் இன்றும்
தமிழுக்குத் தொண்டர் யார்க்கும்
தலைத்தொண்டன்; அடிமை அல்லன்;
குமிழ்பகுத் தறிவியக்கக்
கொள்கையில் அசைக் கொணாத
இமயமும் தோற்கும் அண்ணல்
ஈடிலாத் திறமை ஆற்றல்!

ஒன்றினும் திரியா துள்ளம்
ஒண்டமிழ்க் குழைப்ப தொன்றே
நன்றினும் நன்று என்று
துறவினை நயந்த மேலோன்.
நன்றிகெட் டதிகாரத்தை

நாடும் எவ்வரசும் அன்னார்
குன்றினும் மிகுந்த சீர்த்தி
கொண்டுயர் வளித்தார் இல்லை.

தமிழையே வணிக மாக்கித்
தன்வீடும் மக்கள் சுற்றம்
தமிழிலே பிழைப்ப தற்கும்
தலைமுறை தலைமுறைக்குத்
தமிழ்முத லாக்கிக் கொண்ட
பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்ச்சீனி வேங்கடத்தின்
கால்தூசும் பெறாதார் என்பேன்!

அஞ்சுதல் அறியா நெஞ்சன்
அகல்வர லாறனைத்தும்
மிஞ்சுதல் இன்றிக் கற்றோன்.
மேம்படும் நூலாராய்ச்சி
கெஞ்சிடும் தனைத்துலக்க
கேண்மையோ டுயர்வு செய்வான்.
எஞ்சுவ துமக்கொன்றுண்டோ
இவனைநீர் மறந்து விட்டால்?

-தமிழ்நிலம் (14-10-52)

### ஆராய்ச்சிப் பேரறிஞர்

# மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் வாழ்வும் தொண்டும்

-புலவர். கோ. தேவராசன், எம்.ஏ.,பிஎட்.,

**தோற்றுவாய்:-**

தனித்தமிழ்த் தந்தை என்றால் மறைமலை அடிகளாரைத்தான் குறிக்கும். தமிழ்த் தென்றல் என்றால் திரு.வி.க அவர்களைத்தான் நினைவூட்டும். மொழி ஞாயிறு என்றால் பாவாணர்தான். அதுபோல் ஆராய்ச்சிப் பேரறிஞர் என்றால் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களைத்தான் குறிக்கும். அவர்தான் ஆய்வுலகின் முன்னோடி. ஆய்வுக்கு இலக்கணம் வகுத்த அறிஞர். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆய்வுப் பணியினைத் தனது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர்.

**குடும்பம்:-**

சீனி வேங்கடசாமி அவர்கள் ஒரு நல்ல தமிழ்க் குடும்பத்தில் பிறந்தவர். தந்தையார் சீனிவாச நாயகர். பரம்பரை சித்த வைத்தியர். தமிழ்ப் புலமை மிக்கவர். மயிலாப்பூரில் காரனீசுவரர் கோவில் தெருவில் புகழுடன் வாழ்ந்து வந்தார். அவரது இல்லத்தில் சிறந்த நூலகம் ஒன்று இருந்தது. அதில் ஏராளமான ஓலைச் சுவடிகளும், சித்த மருத்துவ நூல்களும் தமிழிலக்கிய நூல்களும் இருந்தன.

சீனிவாச நாயகருக்கு மூன்று ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் பிறந்தனர். முதல் மகன் முத்துசாமி என்பவர். இளமையிலேயே இயற்கை எய்தினார். இரண்டாம் மகன் கோவிந்தராசன். பெரும் புலவராய்த் திகழ்ந்தார். மூன்றாம் மகன்தான் ஆய்வுலகம் போற்றும் மயிலை சீனி. வேங்கடசாமி. இவர் 16.12.1900 இல் பிறந்தார்.

சீனி கோவிந்தராசனாரும், தமிழ்க்கடல் கா. நமச்சிவாய முதலியாரும், ஒருசாலை மாணவர்கள். இருவரும் மகாவித்துவான். மயிலை சண்முகம் பிள்ளையிடம் மரபு வழி தமிழ் கற்றவர்கள். சீனி. கோவிந்தராசனார் அக்காலத்தில் பெரும் புலவர் என மதிக்கப்பட்டார். அவர் 1920 இல் திருக்குறள் காமத்துப்பாலை நாடகமாக எழுதிப் புகழ் பெற்றார். திரு மயிலை நான் மணி மாலை எனும் சீரிய சிற்றிலக்கியத்தையும் படைத்தவர்.

மயிலை சீனி. வேங்கடசாமி தமையனாரின் மேற்பார்வையில் உயர் நெறிகளோடு வளர்ந்தார். அவரிடம் முறையாகத் தமிழ்க் கல்வி பயின்றார். பதினாறு அகவை நிரம்பிய அளவிலேயே தமிழ் இலக்கிய இலக்கணங்களில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். மயிலாப்பூரில் உள்ள புனித சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் பயின்று பள்ளி இறுதி வகுப்பில் தேர்ந்தார். பின்னர் ஓவியக் கல்லூரியில் சேர்ந்து ஓராண்டு பயின்றார். ஓவியப் பயிற்சியால் அவர் இல்லம் ஒரு கலைக்கூடமாய்த் திகழ்ந்தது.

அகவை இருபத்தி மூன்றில் சீனியின் குடும்பத்தில் புயல் வீசத் தொடங்கியது. தந்தையும், தமையனாரும் அடுத்தடுத்து இயற்கை எய்தினர். குடும்பச் சுமை முழுவதும் அவர் மீது விழுந்தது. தமக்கையாரைக் காப்பாற்றும் பொறுப்பும், தமக்கையாரின் இரு பேத்திகளை வளர்த்துக் காப்பாற்றும் பொறுப்பும் அவருக்கு ஏற்பட்டது.

**தொழில்:-**

எனவே மோட்டார் உதிரிப்பாகம் விற்கும் கடையொன்றில் எழுத்தராக வேலைக்குச் சென்றார். நிறைய படிக்கவேண்டும், எழுத வேண்டும் என்ற வேட்கை சீனிக்கு இருந்தது. அவர் செய்து வந்த வேலை அதற்கு ஒத்து வரவில்லை. எனவே வேலையை விடுத்தார்.

தமிழகத்தில் நீதிக்கட்சியினர் ஆட்சி புரிந்த காலம் அது. அவர்கள் நடத்தி வந்த திராவிடன் இதழில் 1925ல் ஆசிரியர் குழுவில் ஒருவராய்ச் சேர்ந்து பணியாற்றினார். பத்திரிகைத் துறையில் பல புதிய அனுபவங்களைப் பெற்றார். எந்தக் கருத்தையும் எளிமையாகவும், தெளிவாகவும், சுவையாகவும் வெளியிடும் திறன் அவருக்கு ஏற்பட்டது.

நாளடைவில் இதழ்ப் பணியிலும் அவருக்கு மனநிறைவு ஏற்படவில்லை. தமிழ் ஆய்வுப் பணியில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்ற வேட்கையே மிகுதியாயிற்று. அதிக அளவில் ஓய்வு கிடைக்கக் கூடிய ஆசிரியர் பணியை அவர் மனம் நாடியது. ஆதலால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பயின்று ஆசிரியரானார். தமது இல்லம் இருந்த தெருவில் அமைந்திருந்த நகராண்மைக் கழக இடைநிலைப் பள்ளியொன்றில் ஆசிரியராக அமர்ந்தார். இறுதிவரை இடைநிலை ஆசிரியராகவே பணியாற்றி ஓய்வு பெற்றார்.

***தமிழ்த்தேனீ:-***

மயிலை சீனி ஒரு தமிழ்த் தேனீ. அறிவின் வாயில்களை நோக்கி அவரது கால்கள் எப்போதும் நடந்த வண்ணம் இருந்தன.

சென்னைப் பல்கலைக் கழக நூலகமும், கன்னிமரா நூலகமும், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி ஏட்டு நூலகமும் அவரது அறிவை விரிவு செய்தன. அகண்டமாக்கின. அல்லும், பகலும் நூற்கடலுள் மூழ்கி அரிய முத்துக்களைக் கொணர்ந்தார்.

தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதர் ஏட்டுச் சுவடிகளைத் தேடும் பணியில் ஊர் ஊராகக் கால் கடுக்க நடந்து சென்றார். அவர் போன்று மயிலையாரும் ஊர்தோறும் சென்று கல்வெட்டு ஆய்வினைச் செய்தார். கல்வெட்டுகளைத் துல்லியமாகப் படித்துப் பொருள் உணர்ந்தார். பழைய ஏட்டுச் சுவடிகளைத் தெளிவாகப் படித்தறிந்தார். தொன்மையான சாசனங்களை எல்லாம் தேடித் தேடிச் சேகரித்தார். அவைகளில் கூறப்படும் நுட்பமான வரலாற்றுச் செய்திகளை ஐயமின்றி அறிந்தார்.

கோவில்கள், கோபுரங்கள், கல்வெட்டுக்கள், சிற்பங்கள், ஓவியங்கள், சிலைகள் முதலியவற்றைக் கண்டு மகிழ்வதில் பெரு விருப்பங்கொண்டார் மயிலையார். ஒரு கோயிலைப் பார்த்தவுடன் அதைக் கட்டிய மன்னன் யார்? எந்தக் காலத்தில் அது கட்டப்பட்டது? அக்கோயில் எவ்வகையான அமைப்பை உடையது? அக்கோயில் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள் எவை? என்பன போன்ற விவரங்களைத் துல்லியமாகக் கூறக்கூடியவர். கோயில் கற்கள் ஒவ்வொன்றும் அவருக்கு ஒவ்வொரு

கதையைக் கூறியது. கல்லில் வடிக்கப்பட்ட சிற்பங்கள் அவரிடம் காவியம் பாடியது.

மயிலையார் ஒரு நுண்கலை வாணர். தமிழர் வளர்த்த கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நாடகக்கலை அனைத்தையும் மிக நுட்பமாக ஆய்வு செய்தவர். நம் மூதாதையர் வளர்த்த அழகுக் கலைகள் அழிந்து கொண்டும், அழிக்கப்பட்டுக் கொண்டும் வருவதை அறிந்து கண்ணீர் வடித்தார்.

தமிழ்நாட்டில் நிலவிய சமயங்களை எல்லாம் வெகு நுட்பமாக ஆய்வு செய்தார். தமிழ் மொழியின் வரலாறும், தமிழ் இலக்கிய வரலாறும் சமய வரலாற்றைச் சார்ந்தே உள்ளதால் விருப்பு வெறுப்பின்றி ஆய்வு செய்தார். அறிவுக் கண்கொண்டு ஆய்வு செய்தார்.

தமிழ் எழுத்தியல் வளர்ச்சியை நன்கு அறிந்தவர் மயிலையார். தமிழுடன் தொடர்புடைய கோலெழுத்து, கிரந்த எழுத்து, பல்லவர் எழுத்து, பிராமி எழுத்து எனப் பல்வகையான எழுத்து முறைகளையும் நன்கு அறிந்தவர். அவர் ஒரு பன்மொழி அறிஞருங்கூட. தமிழ், வடமொழி, ஆங்கிலம், திராவிட மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்.

எந்தப் பேராசிரியரின் துணையும் இல்லாமல் எந்தப் பல்கலைக் கழகத்தின் அரவணைப்பும் இல்லாமல் ஆய்வின் பொருட்டு மயிலையார் சென்ற இடங்கள் பல. ஆய்ந்த கல்வெட்டுகள், செப்பேடுகள் மிகப் பல. கண்ட அருங்காட்சியங்களும் மிகப் பல.

கடுமையான உழைப்பாலும், ஊக்கத்தாலும், வாழ்நாள் முழுவதும் பல்வேறு துறைகளில் தமது அறிவெல்லைகளை விரித்துக் கொண்டே சென்றார். அறிவின் வாயில்களைத் தேடித் தேடிச் செல்லும் தேனீயாக விளங்கியவர் மயிலை சீனி.

**பல்கலை வாணர்:-**

சுருங்கச் சொன்னால் மயிலையார் ஒரு பல்கலை வாணர். இலக்கியக் கடல், வரலாற்றறிஞர், மொழிநூற் புலவர், சமயநூல் வித்தகர், நுண்கலை வாணர், வரிவடிவ வரலாற்று வல்லுநர், சொல்லாய்வுச் செம்மல்,

கல்வெட்டு, சாசனம், தொல்லியல் துறைகளில் தனி முத்திரை பதித்தவர். பன்மொழிப் புலவர், மானிடவியல், சமூகவியல் அறிஞர் எனப் பல்வேறு பரிமாணங்களின் பெட்டகமாகத் திகழ்ந்தார்.

**பாவேந்தர் பாராட்டு:-**

மயிலையார் தமிழ் மொழியில் தொடாத ஆய்வுத்துறை என்று எதுவும் இல்லை. தொட்டுத் துலக்காத பகுதி என்று எதுவும் இல்லை. அவர் இடைநிலைப் பள்ளி ஆசிரியர் என்றாலும், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் தொடாத பகுதிகளை, தொடுவதற்கு அஞ்சும் பகுதிகளை எல்லாம் தேடித் தேடி எடுத்துத் துலக்கினார்.

**''அகல் வரலாறு அனைத்தும்**<br>
**மிஞ்சுதல் இன்றிக் கற்றோன்**<br>
**மேம்படும் நூலாராய்ச்சி**<br>
**கெஞ்சிடும் தனைத் துலக்க**<br>
**கேண்மையோடு உயர்வு செய்வான்**

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் மயிலையாருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

**தொடர்பு:-**

மயிலையார் பரந்துபட்ட கல்வியறிவோடு விரிந்துபட்ட அறிஞர் பெருமக்களின் தொடர்புகளையும் பெற்றிருந்தார்.

மயிலையார் வாழ்க்கையில் மிகப் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியவர் கிறித்துவக் கல்லூரியில் பேராசிரியராக விளங்கிய ச.த. சற்குணர் என்பவர் ஆவர். அவர் தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய மூன்று துறைகளிலும் பேரறிஞராய் விளங்கியவர். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மொ.சு. துரையரங்கனார், அ.கி. பரந்தாமனார் போன்ற அறிஞர்கள் சற்குணரிடம் தமிழ் பயின்றவர்கள். மயிலையாரும் சற்குணரிடமே ஆங்கிலமும், தமிழும் பயின்றார். கிறித்துவ சமய இலக்கியங்கள் குறித்தும், வாழ்க்கை நெறிமுறைகள் பற்றியும் அறிந்தார். அஞ்சாமை என்னும் அருங்குணத்தையும் அவரிடமிருந்து பெற்றதாக மயிலையாரே ஒரு

பேட்டியில் கூறியுள்ளார். சற்குணரிடம் கொண்ட தொடர்பு மயிலையார் வாழ்க்கையில் ஒளிவிளக்கை ஏற்றிவைத்தது.

தொடக்கத்தில் மயிலையார் நீதிக் கட்சியினர் நடத்திய திராவிடன் இதழில் துணையாசிரியராய்ப் பணிபுரிந்தார். பின்னர் தந்தை பெரியாரின் குடியரசு இதழில் கட்டுரைகள் எழுதினார். அதன் விளைவாகப் பெரியாரின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. மனத்திற்குச் சரி என்று பட்டதைத் துணிந்து கூறவேண்டும் என்ற உணர்வு தந்தை பெரியாரிடமிருந்து தாம் பெற்றதாக மயிலையாரே ஒரு பேட்டியில் கூறியுள்ளார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரிடமும், குத்தூசி குருசாமியிடமும் மயிலையார் நெருங்கிப் பழகினார். அதன் விளைவாகச் சுயமரியாதைச் சுடரொளியாய் திகழ்ந்தார்.

மறைமலையடிகளார், திரு.வி.க., நாவலர் பாரதியார், கா.சு. பிள்ளை போன்றவர்களுடன் அடிக்கடி உறவு கொண்டு அவர்களின் வழிகாட்டுதலைப் பெற்றார்.

சுவாமி விபுலானந்தரின் தொடர்பு மயிலையாருக்குக் கிடைத்தது. சுவாமிகள் மயிலாப்பூர் இராமகிருட்டிணா மடத்திற்கு வரும்பொழுதெல்லாம், இருவரும் சந்தித்து உரையாடி மகிழ்வர். சிலப்பதிகாரம், தமிழிசை, நடனம், நாடகம் குறித்துப் பல செய்திகளை மயிலையார் சுவாமிகள் வாயிலாக அறிந்து பயன் பெற்றார். தமிழறிஞர் தெ.பொ.மீ அவர்களிடமும் மயிலையார் தமிழிலக்கியங்களைக் கற்றார். தெ.பொ.மீ அவர்கள் சிந்தாதிரிப்பேட்டையில் நடத்தி வந்த வேதாந்த சங்கத்தில் அவ்வப்போது கருத்தரங்குகள் நடைபெறுவது வழக்கம். ஓர் அமயம் ''சமயமும் தமிழும்'' என்ற பொருளில் ஆறு பொழிவுகள் நடைபெற்றன. மயிலையார் அவைகளைக் கேட்டுப் பயன்பெற்றார். அதன் விளைவாக் கிறித்தவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும் என மூன்று அரிய நூல்களை எழுதினார்.

1937இல் நடந்த இந்தி எதிர்ப்பின்போது முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களுடன் ஒத்துழைத்துத் தமிழ் காத்தவர் மயிலை சீனி.

வரலாறு, கல்வெட்டு, சாசனத் துறைகளில் மயிலையாருடைய உற்ற நண்பர்களாகத் திரு. சதாசிவப் பண்டாரத்தார், கே.கே. பிள்ளை, மா. இராசமாணிக்கனார் போன்றோர் விளங்கினார்.

சமணப் பேரறிஞர்கள் ஜீவபந்து ஸ்ரீபால், அ. சக்கரவர்த்தி நயனார் போன்றோருடன் தொடர்பு கொண்டு சமண சமய நுட்பங்களை எல்லாம் அறிந்தார். அவர்களுடன் பலமுறை சைன சின்னங்கள் உள்ள ஊர்களுக்குச் சென்று கள ஆய்வு செய்தார்.

சென்னை மகாபோதி சங்கத்தின் தலைவர் நந்தீஸ்வர தேரோ, இலங்கை பௌத்த மதத் துறவி தருமரத்தின தேரோ போன்றோர்களுடன் நெருங்கிய நட்பு கொண்டு பௌத்த மதத் தத்துவங்களை எல்லாம் நன்கு அறிந்தார்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைவர் கா. சுப்பையா பிள்ளை, கா. அப்பாத்துரையார், அ. சிதம்பரநாதன், மீ.ப. சோமு, அழ. வள்ளியப்பா, பொருளியல் அறிஞர் பா. நடராசன் போன்றோர் மயிலையாரின் அருமை பெருமைகளை எல்லாம் உணர்ந்து போற்றினர். அவருக்கு உற்ற தோழராக விளங்கினர்.

செக்கோஸ்லாவிய தமிழறிஞர் கபிலசுவலபில் மயிலையாரைத் தமது குருவாகவே மதித்துப் போற்றினார்

**குணக்குன்று:-**

பரந்துபட்ட கல்வியறிவினால் மயிலையார் நுண்மாண் நுழைபுலம் மிக்க மாமேதையாகத் திகழ்ந்தார். விரிந்துபட்ட அறிஞர்கள் தொடர்பால் ஆய்வுலகில் பொலிவு பெற்றார். தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் தமிழ்ச் சான்றோனாய் விளங்கினார். குணக்குன்றாய், நிறை குடமாய், எளிமை, இனிமை, அடக்கம் ஆகிய உயர் பண்புகளுக்கு உறைவிடமாய்த் திகழ்ந் தார். பெரும் புலமையும், பொறுமையும், விடா முயற்சியும், சலியாத உழைப்புமே அவர் அணிந்த அணிகலன்கள். கடல் போன்ற ஆழமான கல்வி, நிலவுலகம் போல் பரந்து விரிந்த அறிவு, வானம் போல் உயர்ந்த பண்புகள் இம்மூன்றின் சங்கமம்தான் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்.

**தோற்றம்:-**

மயிலை சீனி எங்ஙனம் தோற்றமளிப்பார் என்பது குறித்து அறிஞர் நாரண துரைக்கண்ணன் கீழ்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறார்.

''ஐந்தடிக்கு உட்பட்ட குறள் வடிவம். பளபளக்கும் வழுக்கைத் தலை. வெண்மை படர்ந்த புருவங்களை எடுத்துக் காட்டும் அகன்ற நெற்றி. கனவு காணும் கண்ணிமைகளைக் கொண்ட வட்டமுகம். எடுப்பான மூக்கு. படபடவெனப் பேசத் துடிக்கும் மெல்லுதடுகள். கணுக்கால் தெரியக் கட்டி இருக்கும் நான்கு முழ வெள்ளை வேட்டி. காலர் இல்லாத முழுக்கை சட்டை. சட்டைப் பையில் மூக்குக் கண்ணாடி. பவுண்டன் பேனா. கழுத்தைச் சுற்றி மார்பின் இருபுறமும் தொங்கும் மேல் உத்தரீயம். இடது கையில் தொங்கிக் கொண்டிருக்கும் புத்தகப்பை. இப்படியான தோற்றத்துடன் கன்னிமரா நூலகத்தை விட்டு வேகமாக நடந்து வெளியே வருகிறாரே! அவர்தான் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்''

**மூன்று செய்திகள்:-**

மயிலையார் குறித்து ஆய்வு செய்யும்போது மூன்று செய்திகளை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

ஒன்று மயிலையார் பத்தாம் வகுப்புக்கு மேல் படிக்காதவர். இடைநிலைப் பள்ளி ஆசிரியர். என்றாலும் பல்கலைக் கழகங்கள் போற்றும் வண்ணம் உயர்ந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டார். ஏன்? பல்கலைக்கழகங்கள் செய்யாத ஆய்வுகளையும் தன்னந்தனி மனிதராய்ப் பிறர் உதவியின்றிச் செய்து முடித்தார். அவர் படைத்த பல நூல்கள் பல்கலைக் கழகங்களில் பாட நூல்களாகத் திகழ்கின்றன.

இரண்டு, அவர் திருமணம் செய்து கொள்ளாமல், வாழ்நாள் முழுவதும் ஆறுமுக நாவலர் போன்று தமிழுக்குத் தொண்டு செய்தார். தமது இன்பங்களை அறவே துறந்து சமண பௌத்த துறவிகளைப் போல் வாழ்ந்தார். புகழ் நாடாது, பொருள் விரும்பாது தன்னை வருத்திக் கொண்டு தமிழுக்காகவே தவம் செய்தார்.

மூன்று, மயிலையார் தனித் தன்மை வாய்ந்த ஆராய்ச்சியாளர். ஆராய்ச்சி செய்வதே வாழ்வாகவும், வாழ்க்கை முழுவதுமே ஆராய்ச்சிப்

பணிக்கெனவும் அமைத்துக் கொண்டு வாழ்ந்தவர். அவரது ஆய்வுப் பணியில் சில சிறப்புக் கூறுகள் உள்ளன.

1. ஆராய்ச்சி உலகில் எவரையும் பின்பற்றாது தனக்கெனத் தனி மரபை வகுத்துக் கொண்டார்.

2. அவரது ஆராய்ச்சியானது செய்திகளின் தொகுப்பன்று. சுரங்கத்திலிருந்து தங்கத்தை வெட்டியெடுப்பது போன்ற கடினமான பணி அவருடையது. ஆழ் கடலில் இருந்து மூச்சினை அடக்கி முத்தெடுப்பது போன்றது. தமிழ்க் கடலுள் மூழ்கி புதிய புதிய உண்மைகளை வெளிக் கொணர்ந்தார். எவருக்கும் அஞ்சாது தன் முடிவுகளைத் துணிவோடு எடுத்துரைத்தார்.

3. காய்தல், உவத்தல் இன்றி நடுநிலைமையோடு ஆராய்ச்சி செய்தார். எதனையும் தகுந்த சான்று காட்டி நிறுவினார்.

4. மானிடவியல், சமூகவியல் அறிவுடன் தமிழர் பண்பாட்டு வரலாற்றை முதன் முறையாக ஆய்வு செய்தவர் மயிலையாரே.

5. தமிழருடைய கலை, பண்பாடு, சமயம் ஆகிய துறைகளில் கருத்து வடிவங்களுக்கு விளக்கம் தேவைப்படுகிறது. அத்துறையில் முதன் முதலாக ஆராய்ச்சி செய்தவர் மயிலையாரே.

**மூன்று தமிழ் மரபுகள்:-**

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் மூவகை தமிழ் மரபுகள் நிலவி வந்தன. அம் மரபுகள் இலக்கிய உலகிலும், வரலாற்று உலகிலும் தோற்றுவித்த ஆய்வுக் களங்கள், இலக்கியப் போர்கள் மிகப் பலவாகும்.

**ஆரியஞ் சார்ந்த தமிழ் மரபு:-**

இம்மரபுகளில் ஒன்று ஆரியஞ் சார்ந்த தமிழ் மரபாகும். இம்மரபினர் தமிழின் தனித் தன்மையை ஏற்க மறுத்தனர். சமஸ்கிருத மொழியின் மீது இவர்களுக்குத் தணியாத தாகம் உண்டு. மூட பக்தியும் உண்டு. தமிழ் இலக்கியம், கலை, நாகரிகம், பண்பாடு அனைத்துமே தமிழ் மக்களுக்குச்

சமஸ்கிருதம் அளித்த நன்கொடை என்பது இவர்கள் கருத்து. தமிழின் தொன்மைக்கும், தனித் தன்மைக்கும் எதிரான கருத்துக்களை வெளியிடுவதே இவர்களது முழுநேர இலக்கியப் பணியாக இருந்தது. வடமொழி நூல்களுக்கு முதன்மை தருவதற்காகத் தமிழ் இலக்கியக் காலத்தைப் பின்னுக்குத் தள்ளினர்.

**இந்திய தேசியம் சார்ந்த தமிழ் மரபு:-**

மற்றொரு மரபு இந்திய தேசியஞ் சார்ந்த தமிழ் மரபாகும். இம்மரபினர் இந்திய தேசியத்தை முன்னிறுத்தினர். தமிழ்த் தேசியத்தைப் பின்னுக்குத் தள்ளினர். தமிழரின் தனித்தன்மையை இந்திய தேசிய நீரோட்டத்தில் கரைத்து விட்டனர். தமிழின் தனித்தன்மையை வலியுறுத்துவது இந்திய தேசியத்திற்கு எதிரானது என்ற கருத்தோட்டம் இவர்களுக்கு உண்டு. இந்திய தேசியத்தால் தமிழ்த் தேசியம் நலிவுற்றபோது எதிர்ப்புக்குரல் எழுப்பாது மௌனம் காத்தனர்.

**தமிழ்த் தேசியம் சார்ந்த தமிழ் மரபு:-**

மூன்றாவது மரபு தமிழ்த் தேசியம் சார்ந்த தமிழ் மரபாகும். இம்மரபின் அடித்தளம் தமிழின் தனித்தன்மையைக் காப்பதும் வளர்ப்பதும் ஆகும். மொழி, வரலாறு, கலை, பண்பாட்டுத் துறையில் தமிழின் தொன்மையைப் பேணிக்காப்பதும், மீட்டுருவாக்கம் செய்வதும் ஆகும். இந்த மரபின் முன்னணி வீரர்களாகத் திகழ்ந்த தமிழறிஞர்கள் பலர். அவருள் குறிப்பிடத்தகுந்தவர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் ஆவார். மயிலையார் இந்திய தேசியத்திற்கு எதிரானவர் அல்லர். ஆயினும் தமிழின் தொன்மையை மீட்டுருவாக்கம் செய்வதை முதன்மைப் பணியாக மேற்கொண்டார்.

மயிலையாருடைய நூல்களும், கட்டுரைகளும், மீட்டுருவாக்கத்தின் வாயில்கள். அவர் கடந்த கால வளங்களை நினைவூட்டினார். நாம் தாழ்ந்து போனதற்கான காரணங்களைத் தேடினார். நம் பெருமைகளை விரிவாக விளக்கினார். நம் மீட்சிக்கான வழி வகைகளை ஆய்வு செய்தார். அவருடைய நூல்கள் ஆரியஞ்சார்ந்த தமிழ் மரபினருக்கு எதிரான படைக்கலன்கள். இந்தப் படைக்கலன்களை ஆரவாரம் இல்லாமல், மேடை

முழக்கம் இல்லாமல், ஆராய்ச்சி பூர்வமாக அசைக்க முடியாத ஆதாரங்களோடு வடித்துக் கொடுத்தார். பண்டைத் தமிழ் மரபை நாம் எளிதில் உணரும் வண்ணம் மீட்டுருவாக்கம் செய்தார்.

**மயிலையாரின் இதழ் படைப்புகள்:-**

மயிலையார் தமிழுக்கு அளித்த நன்கொடைகள் மிகப் பலவாகும். பல்வேறு தமிழ் இதழ்களில் 200 க்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வழங்கியுள்ளார். அவற்றுள் 150க்கு மேற்பட்டவை நூல்வடிவம் பெறாதவை. மயிலையார் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிய இதழ்களில் சில பின்வருமாறு:

குடியரசு, திராவிடன், செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், தமிழ்ப் பொழில், ஆராய்ச்சி, திருக்கோயில், நண்பன், கல்வி, இலட்சுமி, ஆனந்த போதினி, தமிழ்நாடு, சௌபாக்கியம், ஈழகேசரி முதலியனவாகும்.

இவருடைய ஆய்வுகள் பல திறத்தன. சங்க கால ஆய்வுகள், சிலப்ப திகார ஆய்வுகள், திருக்குறள் ஆய்வுகள், இலக்கிய ஆய்வுகள், சமணம் பௌத்தம் பற்றிய ஆய்வுகள், வரலாறு, சமயம் பற்றிய ஆய்வுகள், கல் வெட்டு சாசனம், நாணயம் பற்றிய ஆய்வுகள், சிற்பங்கள் பற்றிய ஆய்வு கள், சொல்லாய்வுகள், இலக்கண ஆய்வுகள் எனப்பல துறைகளில் ஆய்வு செய்து கட்டுரைகள் வழங்கியிருக்கிறார். இவருடைய கட்டுரைகள் திட்ப மும், நுட்பமும் கொண்டு விளங்கும் அரிய ஆராய்ச்சிக் கருவூலங்கள் ஆகும்.

**நூல்கள்:-**

மயிலையார் தமிழன்னைக்கு அணிகலன்களாக முப்பது நூல்களைப் படைத்துள்ளார். அவர் படைத்துள்ள நூல்களின் பெயர்களைப் பார்த்தாலே அவரது பரந்து விரிந்த கல்விப் பரப்பும், கடுமையான உழைப்பும் புலனாகும்.

மயிலை சீனி அவர்களின் பெரும் பங்களிப்பு வரலாற்றுத் துறைக்கு அவர் ஆற்றியுள்ள பெரும் பணியேயாகும். வரலாற்று ஆய்வுக்கென்று ஒன்பது அரிய நூல்களை வழங்கியிருக்கிறார். அவர் தமிழ்நாட்டு

வரலாற்றுக் குழு உறுப்பினராகவும் பணி புரிந்திருக்கிறார். தமிழக அரசு வெளியிட்ட ''சங்க கால அரசியல்'' என்ற நூலில் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவரசர்களைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ளார். வரலாற்றுக்குத் துணைபுரியும் கல்வெட்டுகளை ஆய்வு செய்துள்ளார். இலங்கைத் தமிழர் குறித்து வரலாற்று நோக்குடன் விரிவாக ஆராய்ந்திருக்கிறார். ஏறத்தாழ 350 பக்கங்களில் ஐந்து கட்டுரைகளை எழுதியுள்ளார். இவைகளேயன்றிப் பல்வேறு இதழ்களில் வரலாற்றுத் தொடர்பாக நாற்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகளை வரைந்துள்ளார். வரலாற்றுத் துறைக்கு மயிலையார் ஆற்றிய பணி மகத்தானது என்பதில் ஐயமில்லை.

மயிலையார் இலக்கிய ஆய்வு நூல்கள் என்ற வகையில் ஆறு நூல்களை எழுதியுள்ளார். ''19ம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்'', ''மறைந்து போன தமிழ் நூல்கள்'' எனும் இரு நூல்களும் காலத்தால் அழியாமல் என்றும் நிலைத்து நிற்கக் கூடியன. ''தொல்காப்பியத்தில் ஆய்வுரைகள்'' என்ற சொற்பொழிவு நூல் குறிப்பிடத்தக்க நூலாகும். ''அஞ்சிறைத்தும்பி''- அருமையான சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் கொண்டது.

மயிலையார் சமய ஆய்வு நூல்கள் என்ற வகையில் நான்கு நூல்களை எழுதியுள்ளார். சமணர்களும், பௌத்தர்களும், கிறித்தவர்களும், இசுலாமியர்களும் தமிழுக்கு ஆற்றிய பெருந்தொண்டுகளை நினைவுகூர்ந்து போற்றுகிறார். சமயக் காழ்ப்பின்றி, விருப்பு வெறுப்பு இன்றி ஆய்வு செய்திருக்கிறார். தமிழிலக்கிய வரலாற்றில் சமயங்களின் தாக்கத்தைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

மயிலையார் கலையியல் ஆய்வு நூல்கள் என்ற வகையில் ஐந்து நூல்களைப் படைத்துள்ளார். தமிழர் வளர்த்த அழகுக் கலைகளான கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, கூத்து, காவியம், நாடகம் போன்ற கலைகளை ஆய்வு செய்திருக்கிறார். இத்துறை நூல்கள் மிகவும் அரியன. புதியன.

இதுபோன்றே கல்வெட்டு, சாசனம் என்ற வகையில் இரு நூல்களும், பொது நூல்கள் என்ற வகையில் நான்கு நூல்களும் ஆக முப்பது நூல்கள் தமிழன்னைக்குக் காணிக்கையாக வழங்கியிருக்கிறார்.

மயிலையார் எழுதி அச்சில் வராமல் கையெழுத்துப் பிரதியாக நின்றுவிட்ட நூல்கள் சிலவும் உள்ளன. அவை: 1. இந்து மதமும் தமிழும் 2. இஸ்லாமும் தமிழும் 3. சமணமும் தமிழும் பாகம் 2 4. 18ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் 5. யானைக் கோயில் வரலாறு 6. தமிழ்நாட்டுச் சிற்பக் கலை என்பவை ஆகும்.

மயிலையாருடைய ஆய்வு நூல்களுக்கு என்று சில தனிச் சிறப்புகள் உள்ளன.

1. அவரது ஆய்வு நூல்களில் பெரும்பாலானவை தமிழுலகிற்கு அவரால் முதன் முதலாக வழங்கப்பட்டவையாகும்.

2. அவருடைய ஆய்வு நூல்கள் அனைத்தும் அறிஞர்களுக்கும் பொது மக்களுக்கும் ஒரு சேர விருந்தளிப்பவையாகும். எளிமை, இனிமை, வெளியீட்டு நுட்பம் காரணமாக இரு திறத்தாரையும் ஈர்க்கக்கூடியது.

3. அவரது ஆய்வு நூல்களில் வேண்டாத நூல் என்று எதனையும் ஒதுக்கமுடியாது. அன்றியும் ஒரு நூலில் எந்த ஒரு சிறு பகுதியையும் வேண்டாதவை என்று ஒதுக்க முடியாது.

4. அவரது ஆய்வு நூல்கள் பல்வேறு ஆய்வு நூல்கள் தோன்றுவதற்கு வழி வகுத்துள்ளன.

5. மயிலையார் தமது நூல்களுக்குத் தாமே படம் போட்டு விளக்குவார். சங்ககால மதுரையையும், காவிரிப்பூம் பட்டினத்தையும், வஞ்சி மாநகரத்தையும், காஞ்சி மாநகரத்தையும் படம் வரைந்து விளக்கியுள்ளார். ஏராளமான வரைபடங்களையும் ஒளிப்படங்களையும் அவரது நூல்களில் காணலாம். மயிலையாருடைய 30 நூல்களைப் பற்றியும் சிறு குறிப்புகளேனும் தரவேண்டும். ஆயினும் 3 நூல்களுக்கு மட்டுமே இங்கே சில குறிப்புகள் தரப்படுகின்றன.

***19-ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்:-***

மயிலையாருடைய 19ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் ஓர் அரிய கலைக் களஞ்சியம். தகவல் களஞ்சியம் எனலாம். ''இந்நூல் எழுதுவதற்குப்

பல நூற்றுக்கணக்கான புத்தகங்கள் எனக்குத் துணையாக இருந்தன'' என்று மயிலையார் தமது நூலின் முன்னுரையில் கூறியுள்ளார். இம்மாதிரியான நூல்களை மயிலை சீனி அவர்கள்தான் இயற்ற முடியும் என்று செக்கோஸ்லாவியா அறிஞர் கபிலசுவலபில் புகழாரம் சூட்டியுள்ளார். இந்நூலில் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 226 தமிழ்ப் புலவர்களைப் பற்றிய அரிய குறிப்புகள் உள்ளன. 19ம் நூற்றாண்டில் அச்சான இலக்கிய நூல்கள், உரைநடை நூல்கள், நாடக நூல்கள் என 625 நூல்களைப் பற்றிய பதிவுகள் உள்ளன. 113 இதழ்கள் பற்றிய பட்டியல் தரப்பட்டுள்ளது. அச்சகங்களின் வரலாறு, எகர, ஒகர எழுத்துக்களின் வரிவடிவ வரலாறு, தமிழ் எண்கள் மாற்றம் பெற்ற வரலாறு, கீழ்க்கணக்கு நூலாராய்ச்சி, ஆசிரியர் மாணவர் பரம்பரையெனப் பல செய்திகள், நுட்பமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. கிறித்தவர்கள், இசுலாமியர்கள், ஆங்கிலேயர்கள் வருகையால் தமிழிலக்கியம் செழித்த வரலாறு சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூற்றாண்டைப் பற்றியும் இதுபோன்ற ஆராய்ச்சி நூல்கள் வெளிவர வேண்டுமென்று டாக்டர் அ. சிதம்பரநாதன் அணிந்துரையில் குறிப்பிடுகிறார்.

**மறைந்து போன தமிழ் நூல்கள்:-**

இந்நூல் மற்றுமொரு அரிய படைப்பாகும். மயிலையாருடைய குடும்பத்தில் இளம் வயதில் இரண்டு குழந்தைகள் இறந்துவிட்டனர். அந்தத் துயரம் அவரால் தாங்க முடியவில்லை. அந்நிகழ்ச்சியின் விளைவால் தமிழ் இலக்கியக் குடும்பத்தில் எத்தனை குழந்தைகள் இறந்து போயின என்று கணக்கெடுத்தார். அதன் விளைவாகத் தோன்றியதுதான் 'மறைந்து போன தமிழ் நூல்கள்' உரையாசிரியர்களின் உரைகளையெல்லாம் ஊன்றிப் படித்து மறைந்து போன தமிழ் நூல்கள் பற்றிய குறிப்புகளையெல்லாம் ஒன்று விடாமல் தேடித்தொகுத்துத் தந்தப் பெருமை மயிலையாருக்கு உரியதாகும். இந்நூலில் மறைந்து போன 195 தமிழ் நூல்களைப் பற்றிய அரிய குறிப்புகளையும், இறந்தன போக எஞ்சி நின்ற செய்யுட் பகுதிகளையும், ஒரு சேரத் தொகுத்துத் தந்துள்ளார். இது அரிதினும் அரிய மீட்டுருவாக்கப் பணியாகும். நாம் இழந்துவிட்ட நூல்களைத் தேடிய முதல் அறிஞர் இவரே. மறைந்த மாநகரங்களை அகழ்ந்து எடுப்பது போலத்

தமிழ்ப் பெருங்கடலுள் புதையுண்டுபோன புதையல்களைத் தேடிஎடுத்தார். மிக நுண்ணிய தடயங்களைக் கொண்டே நூல்களை அடையாளங் கொண்டு, சிதைந்து போன உருவத்தைச் செப்பம் செய்து உயிரூட்டி உலவ விட்டவர் மயிலையார். தமது முன்னுரையில் மயிலையார் எழுதுகிறார், ''மறைந்துபோன நூல்களின் முழுத் தொகுப்பு அல்ல இந்நூல். விடுபட்ட நூல்களும் உள்ளன. அவற்றைப் பிறகு எழுதித் தொகுக்கும் எண்ணம் உடையேன்'' என்று. இந்நூல் 1959இல் வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து இத்துறையில் இன்னொரு நூல் வெளிவரவில்லை. தமிழ் நூல் கடலுள் இன்னும் எத்தனை எத்தனை நூல்கள் புதையுண்டு கிடக்கின்றனவோ? அவைகளில் என்னென்ன செய்திகள் மறைந்து கிடக்கின்றனவோ? அவைகளை வெளிப்படுத்த இன்னொரு மயிலையார் எப்பொழுது தோன்றுவாரோ? யார் அறிவார்?

கருவி நூல்கள் இல்லாத காலத்தில், தகவல்களைத் திரட்டும் வாய்ப்புகள் குறைவான காலத்தில் பல்கலைக் கழகங்கள்கூட செய்ய முடியாத பணியினைத் தன்னந்தனி மனிதராய் இருந்து செய்திருக்கிறார் என்று எண்ணும் போது வியப்பு மேலிடுகிறது.

**தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்:-**

நுண்கலைகள் பற்றிய சிறந்த ஆய்வு நூல் இது. கலைகள் குறித்து முழுமையான செய்திக் களஞ்சியம் எனலாம். தமிழகமே கலைகளின் தாயகம் என்பதனை மயிலையார் வலியுறுத்துகிறார். சங்கக் காலந்தொட்டு கட்டடக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, ஓவியக்கலை, நாடகக்கலை யாவும் தமிழகத்தில் செழித்து வளர்ந்து வந்துள்ள பரிணாம வளர்ச்சியை இந்நூலில் படம் பிடித்துக் காட்டுகிறார். இடைக்காலத்தில் இக்கலைகள் அழிந்து போயின. இக்கலைகள் யாவும் மீண்டும் மீட்டுருவாக்கம் செய்யப்படவேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட அற்புதமான நூல்இது. இத்துறையில் தமிழில் வெளிவந்த முதல் நூல். தமிழக அரசின் முதற் பரிசு பெற்ற நூல். தமிழகம் முழுவதும் உள்ள கோவில்களுக்குச் சென்று கலை ஆய்வு செய்து எழுதப்பட்ட கலைப்பெட்டகம் இந்நூல். நமது முன்னோர் போற்றி வளர்த்த கலைகள் யாவும் அழிந்து கொண்டும், அழிக்கப்பட்டுக் கொண்டும் வருகிறதே என்று மயிலையார் கண் கலங்கினார். பொறுப்பற்ற

தமிழ் மக்களை எண்ணி எண்ணிப் பெருமூச்சு விட்டார். இந்நூலில் ''கலைகளைப் போற்றுக'' எனும் பகுதி உள்ளது. இப்பகுதியை மயிலையார் மையினால் அன்று, கண்ணீரால் தான் எழுதியிருக்கக்கூடும்.

**ஆய்வு வகைகள்:-**

மயிலையாருடைய ஆய்வு நெறிகளை நான்கு வகையாகப் பகுக்கலாம். அவை:

1. புதிய செய்திகளைத் தருவது 2. புதிய விளக்கங்களைத் தருவது 3. இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டுவது 4. தவறான கருத்துகளை மறுத்து உண்மையை நிலை நாட்டுவது என்பதாகும்.

**1. புதிய செய்திகளைத் தருதல்:-**

''பாண்டியர் வரலாற்றில் ஓர் அரிய புதிய செய்தி'' என்றொரு கட்டுரையை மயிலையார் வரைந்துள்ளார். சங்க காலத்தில் மூவேந்தர் கொடியில் பொறிக்கப்பட்டிருந்த சின்னங்கள் பற்றிய ஓர் ஆய்வு இது.

சோழன் கொடியில் புலிச்சின்னம், சேரன் கொடியில் வில் சின்னம், பாண்டியன் கொடியில் மீன் சின்னம் பொறிக்கப்பட்டிருப்பது வழி வழி மரபாகும். ஆனால் சங்க காலத்தில் பசும்பூண் பாண்டியன் கொடியில் மட்டும் யானைச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. இவ்வரிய செய்தியைச் சங்கப் பாடல் ஒன்றின் வழியாக விளக்குகிறார். ஏறத்தாழ மூவாயிரம் பாடல்கள் கொண்ட சங்கச் செய்யுட்களில் ஒரே ஒரு பாட்டில் ஒரே ஒரு வரியில் இக்குறிப்பு வருகிறது. அகநானூற்றில் 162 ஆம் செய்யுளில் பரணர் இக்குறிப்பைத் தருகிறார். இதை விளக்குவதுதான் இக்கட்டுரை. இதுபோல எண்ணற்ற புதிய செய்திகளைத் தந்தவர் மயிலையார்.

**2. புதிய விளக்கம் தருதல்:-**

''மாமல்லபுரத்துச் சைன சிற்பங்கள்'' என்றொரு நூல் மயிலையார் எழுதியது. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் அருச்சுனன் தவசு அல்லது பகீரதன் தவசு என்பதைக் குறிப்பன என்று பலரும் எழுதி வந்தனர். ஆனால்

மயிலையார் இதனை மறுத்து மாமல்லபுரத்துச் சிற்பங்கள் சமணர்களின் அஜீத நாதர் புராணத்தில் கூறப்படுகிற சகரசாகரர்களின் கதையென ஆராய்ந்து விளக்கினார். மகாபலிபுரம் என்று தவறாக வழங்கப்பட்ட பெயரை மாமல்லபுரம் என்று அறிமுகப்படுத்திய பெருமையும் மயிலையாரையே சேரும். இதுபோன்று எத்தனையோ புதிய விளக்கங்களைத் தந்தவர் மயிலையார்.

**3. இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டுதல்:-**

மயிலையார் வரலாற்றின் இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டினார். துண்டு துண்டாகச் சிதறிக் கிடந்த வரலாற்றுத் துணுக்குகளை எல்லாம் தமது மதி நுட்பத்தால் இணைத்து ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்தி முழுமையான வரலாற்றை உருவாக்கியவர். ''களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'' என்ற நூலே இதற்குப் போதுமான சான்றாகும்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தை வரலாற்றாசிரியர்கள் இருண்ட காலம் என்று ஒரே வரியில் எழுதி முடித்துவிட்டார்கள். அந்த இருண்ட காலத்திற்கு 69 நூல்களைச் சான்று காட்டி 175 பக்கங்கள் எழுதி ஒளியூட்டியவர் மயிலையார்.

**4. தவறான கருத்துக்களை மறுத்து உண்மையை நிலை நாட்டுதல்:-**

திரு. வையாபுரிப்பிள்ளை, கே.ஏ. நீலகண்ட சாத்திரியார், இராமசந்திர தீட்சிதர், மு. இராகவையங்கார், பி.எஸ். சுப்பிரமணிய சாத்திரியார் போன்ற பேராசிரியர்கள் எழுதிய தவறான பல கருத்துக்களைச் சான்று காட்டி மறுத்தவர் மயிலையார். மறுத்து அவர் எழுதிய நூல்கள் சில. கட்டுரைகள் மிகப் பல. நூல்களுள் ''தொல்காப்பிய ஆய்வுரை'' சிறப்புடையது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவு அந்நூல். அந்நூலில் கூறப்பட்ட சில மறுப்புரைகள் பின் வருமாறு:-

1. வச்சிரநந்தி என்னும் சமணன் சமண சமய வளர்ச்சிக்காகக் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் ஒரு சங்கத்தை ஏற்படுத்தினான். அதனை ''பாண்டியர்கள் தோற்றுவித்த தமிழ்ச்சங்கம்'' என்று வையாபுரியார் தவறாக

உணர்ந்தார். அதன் அடிப்படையில் தமிழிலக்கியக் காலத்தைப் பின்னுக்குத் தள்ளினார்.

வையாபுரியாரும் மேற்கண்ட பேராசிரியர்களும் தொல்காப்பியமும், திருக்குறளும் கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தோன்றின என்றனர். சிலப்பதிகாரம் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்றனர். மயிலையார் அதனை மறுத்தார். தொல்காப்பியம் கி.மு. எட்டாம் நூற்றாண்டிலும், திருக்குறள் கி.மு. முதல் நூற்றாண்டிலும், சிலப்பதிகாரம் கி.பி. 2ஆம் நூற்றாண்டிலும் தோன்றியது எனச் சான்று காட்டி நிறுவினார்.

2. வடமொழியில் எழுதப்பட்ட மனுநீதி, அர்த்த சாத்திரம், காம சூத்திரம், பரத நாட்டிய சாத்திரம் போன்ற நூல்களிலிருந்து கருத்துக்களைப் பெற்றே தொல் காப்பியமும், திருக்குறளும் எழுதப்பட்டன என்ற அவர்களின் கருத்தையும் மறுத்தார். அவர்களின் சமஸ்கிருத மூட பக்தியையும் கண்டித்தார். இவை போன்று பலர் கூறிய தவறான கருத்துக்களை எல்லாம் மறுத்தார்.

மயிலையாரின் ஆராய்ச்சி வண்மையை உணர்ந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

''பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்ச்சீனி வேங்கடத்தின்
கால்தூசும் பெறாதார் என்பேன்'' என்று புகழாரம் சூட்டினார்.

**மயிலையாரும் வாழ்க்கைப் போராட்டங்களும்:-**

மயிலையார் தமது வாழ்நாள் முழுவதும் பல்வேறு இன்னல்களுக்கு இடையே வாழ்ந்தவர். இதனைத் தாம் எழுதிய முன்னுரைகளில் இலைமறை காயாக வெளிப்படுத்தியுள்ளார்.

1940ல் வெளிவந்த ''பௌத்தமும் தமிழும்'' என்ற நூலின் முன்னுரையில் மயிலையார் பின்வருமாறு கூறுகிறார்,

''பல இன்னல்களுக்கு இடையே இதனை எழுத வேண்டியிருந்தது''.

1954 இல் வெளிவந்த ''சமணமும் தமிழும்'' என்ற நூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்,

''வாழ்க்கைப் போருக்கு இடையே பல இன்னல்களுக்கு இடையே சிறுசிறு ஓய்வுக் காலத்தைப் பயன்படுத்தி இந்நூல் எழுதி முடிக்கப்பட்டது.''

1974இல் வெளிவந்த ''களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'' என்ற நூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்,

''வாழ்க்கையில் ஏற்பட்ட மனக்கவலையும் துன்பமும் நோயும் தொடர்ந்து வருத்துகிற காலத்தில் இந்நூலை எழுதினேன்.''

இங்ஙனம் 1940இல் தொடங்கிய இன்னல் 1976 வரைகூட விடுபடாமல் வாழ்ந்திருக்கிறார் என்பதை அறியும்போது நெஞ்சு நெகிழ்கிறது.

''சமணமும் தமிழும்'' என்ற நூலில் மனம் வெதும்பிக் கூறுகிறார்,

''ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன், உண்மையாக உழைத்து ஆராய்ச்சி நூல் எழுதும் உழைப்பாளர்களுக்குத் தமிழ்நாட்டில் இடமில்லை'' என்று.

பொதுவாக மயிலையார் தமது இன்னல்களை வெளிப்படையாகக் கூறமாட்டார். தமது உழைப்புக்கு ஏற்ற பொருளும், புகழும், அங்கீகாரமும் கிடைக்கவில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார். அந்த உணர்ச்சி அவரது அடிமனத்தின் ஒரு மூலையில் இருக்கத்தான் செய்தது. இருந்தாலும் வெளிப்படையாகக் கூறிச் சலித்துக் கொண்டதில்லை. ஒரோர் அமயம் ஓரிரண்டு வார்த்தைகளில் மட்டுமே தம் மனத் துயரத்தை வெளிப்படுத்தி யிருக்கிறார். வாழ்நாள் முழுவதும் மனத்துயரங்களை உள்ளடக்கிப் பொது நன்மைக் கருதி அயராது உழைத்த பெருந்தகையவர்.

மயிலையார் தாம் வாழ்ந்த காலத்தில் போற்றப்பட வேண்டிய அளவிற்குப் போற்றப்படவில்லை என்பதை உணர்ந்து புரட்சிக் கவிஞர்

பாரதிதாசனார் மனம் வருந்தியிருக்கிறார். அவரது உள்ளத்தில் இந்த ஏக்கம் மிகுதியாக இருந்திருக்கிறது. இதனைக் கீழ்வருமாறு வெளிப்படுத்தினார்:-

''நன்றி கெட்டு அதிகாரத்தை
நாடும் எவ்வரசும் அன்னார்
குன்றினும் மிகுந்த சீர்த்தி
கொண்டுயர் வளித்தார் இல்லை'' என்று.

சில சிறப்புகள்:-

பாலைவனத்தில் பசுஞ்சோலை போன்று மயிலையார் ஓரிரு சிறப்புக்களையேனும் பெற்றிருக்கிறார்.

1961இல் மயிலையாருக்கு மணிவிழா நடைபெற்றது. சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற அவ்விழாவில் நீதியரசர் கணபதியா பிள்ளை, மயிலையாருக்கு ''ஆராய்ச்சிப் பேரறிஞர்'' என்ற பட்டத்தை நல்கிச் சிறப்பித்தார்.

1961ஆம் ஆண்டில் தமிழ் எழுத்தாளர் சங்கம் மயிலையாருக்குக் கேடயம் வழங்கிச் சிறப்பித்தது.

1963-1964ஆம் ஆண்டுகளில் மயிலையார் தமிழக எழுத்தாளர் சங்கத் தலைவராக வீற்றிருந்து சிறப்பித்தார்.

1970ஆம் ஆண்டு தமிழக அரசு தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு உறுப்பினராக மயிலையாரை நியமனம் செய்தது.

1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் மதுரைப் பல்கலைக் கழகம் மயிலையாருக்குத் ''தமிழ்ப் பேரவைச் செம்மல்'' என்ற பட்டத்தினை அளித்துச் சிறப்பித்தது.

பல்லாண்டு காலம் தமிழகப்புலவர் குழுவில் அங்கம் வகித்தார். மயிலையார் மறைந்து இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அவர் தொண்டுக்கு உரிய சிறப்புக் கிடைத்தது. ஆம். கி.பி. 2001இல் தமிழக அரசு அவரது நூல்களை நாட்டுடைமையாக்கியது. அவரது குடும்பத்தினருக்குப் பத்து

இலட்சம் ரூபாய் நன்கொடையாக அளித்தது. இது மயிலையார் தொண்டுக்குக் கிடைத்த மாபெரும் நன்றிக் காணிக்கையாகும்.

***மறைவு:-***

மயிலையார் தமது இறுதிக் காலத்தில் கடைசி பத்து நாட்கள், மூளை நரம்புகள் பாதிக்கப்பட்ட நிலையில் செயல்பாடு அற்று இருந்தார். இராயப்பேட்டை மருத்துவ மனையில் 8.5.1980ஆம் நாள் இரவு 8.30 மணி அளவில் மறைந்தார். மறைந்தார் என்பதை விடத் தமது மாபெரும் ஆராய்ச்சிப் பணியை நிறுத்திக் கொண்டு ஓய்வெடுத்துக்கொண்டார் என்பது சாலப் பொருந்தும். உண்மையில் அவர் மறையவில்லை. அவருடைய நூல்களே நிலை பெற்ற சின்னங்களாய் விளங்கி அம்மேதையை நமக்கு நினைவூட்டிக் கொண்டேயிருக்கும். ஆய்வுலகில் என்றென்றும் புகழுடம்பு தாங்கிய வண்ணம் உலா வருபவர் அவர். மயிலை சீனி வேங்கடசாமியின் மாண்புகழ் நீடு வாழ்க.

## ஆராய்ச்சிப் பேரறிஞர்

# மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் எழுதிய நூல்கள்

முதற்பதிப்பு

**வரலாற்று ஆய்வு நூல்கள் (9)**

| | | |
|---|---|---|
| 1. | சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள் | 1970 |
| 2. | பழங்காலத் தமிழர் வாணிகம் | 1974 |
| 3. | களப்பிரர் ஆட்சியில் தமிழகம் | 1976 |
| 4. | சேரன் செங்குட்டுவன் | 1966 |
| 5. | மகேந்திரவர்மன் | 1955 |
| 6. | நரசிம்மவர்மன் | 1957 |
| 7. | மூன்றாம் நந்திவர்மன் | 1958 |
| 8. | கொங்கு நாட்டு வரலாறு | 1974 |
| 9. | துளுநாட்டு வரலாறு | 1966 |

**இலக்கிய ஆய்வு நூல்கள் (6)**

| | | |
|---|---|---|
| 1. | தொல்காப்பியத்தில் சில ஆய்வுரைகள் | 1970 |
| 2. | இறையனார் களவியல் ஆராய்ச்சி | 1943 |
| 3. | 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் | 1962 |
| 4. | மறைந்து போன தமிழ் நூல்கள் | 1959 |
| 5. | மனோன்மணீயம் - பதிப்பும் குறிப்புரையும் | 1961 |
| 6. | அஞ்சிறைத்தும்பி | 1958 |

**சமயமும் தமிழும் ஆய்வு நூல்கள் (4)**

1. பௌத்தமும் தமிழும் — 1940
2. கிறித்துவமும் தமிழும் — 1936
3. சமணமும் தமிழும் — 1954
4. சமயங்கள் வளர்த்த தமிழ் — 1966

**கலையியல் ஆய்வு நூல்கள் (5)**

1. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் — 1956
2. நுண்கலைகள் — 1967
3. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம் — 1948
4. மாமல்லபுரத்துச் சைன சிற்பங்கள் — 1950
5. இசைவாணர் கதைகள் — 1970

**கல்வெட்டு, சாசனம் ஆய்வுநூல்கள் (2)**

1. சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுகள் — 1981
2. சாசனச் செய்யுள் மஞ்சரி — 1959

**பொது நூல்கள் (4)**

1. உணவு நூல் — 1965
2. புத்தர் ஜாதகக் கதைகள் — 1960
3. பௌத்தக் கதைகள் — 1952
4. கௌதம புத்தர் — 1956

மேலும் 200க்கு மேற்பட்ட அரிய ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார்.

# பொருளடக்கம்


**1. அரசியல்** 61

**2. வேறு அரசர்கள்** 71

**3. சமயம்**

1. சமண சாக்கிய மதங்கள் 88
2. சைவசமய அடியார்கள் 91
3. வைணவ ஆழ்வார்கள் 98

**4. தமிழ் இலக்கியம்** 103

**5. வற்கடம்** 108

**6. கோயில்கள்** 113

1. குகைக்கோயில்கள் 114
2. பாறைக் கோயில்கள் 120

**7. சிற்பக்கலை** 141

**8. தேவார ஆராய்ச்சி**

1. இயற்கைக் காட்சிகள் 174
2. உவமைகள் 180
3. சிறுத்தொண்டர் 183
4. கழியில் மீன் பிடித்தல் 185
5. அரசரைப்பற்றிய செய்திகள் 186

6. பழமொழி, திருக்குறள் 188
7. நாளும் கோளும் 189
8. சமணமுனிவர் குன்றுகளில் தங்கியது 190
9. இசை, ஆடல், பாடல் 191
10. திரு ஏகபாத உரை 194

**9. ஆழ்வார் நாயன்மார் பாடல்கள் 211**

**பின்னிணைப்பு**

1. மகாவம்சம் - 47ஆம் அதிகாரம் 222
2. மூவர் கோயில் சாசனம் 227
3. யுவான் சுவாங் யாத்திரைக் குறிப்பு 242
4. பாண்டியன் நெடுமாறன் கால ஆராய்ச்சி 246
5. முதலாழ்வார் கால ஆராய்ச்சி 252

# முன்னுரை

மகாபலிபுரம் என்று வழங்குகிற மாமல்லபுரம் இக்காலத்தில் உலகமெங்கும் பேர்பெற்ற ஊராகும். உலகத்தின் நானா திசைகளிலிருந்து தமிழ் நாட்டிற்கு வருகிறவர், மாமல்லபுரத்திற்குவந்து இங்குள்ள சிற்பக் கலைகளைக் கண்டு இன்புறுகிறார்கள். அரசியல் தலைவர்களும், கலைவாணர்களும், காவியப்புலவரும், ஓவியக்கலைஞரும், பாவலரும், நாவலரும், பண்டிதரும் பாமரரும் மாமல்லபுரம் சென்று குகைக்கோயில் களையும் பாறைக்கோயில்களையும் கற்றளிகளையும் அழகிய சிற்பங் களையும் கண்டு செல்கின்றனர். இந்தச் சிற்பங்களை அமைத்தவன் **மாமல்லன் நரசிம்மவர்மன்** என்னும் பல்லவ மன்னன்.

காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக்கொண்டு தொண்டை நாட்டையும் சோழநாட்டையும் ஒரு குடைக்கீழ் வைத்து அரசாண்ட பல்லவ மன்னர் களில், மகேந்திரவர்மனுக்கு அடுத்தபடியாகப் புகழ்பெற்றவன் நரசிம்ம வர்மன். நரசிம்மவர்மனுடைய இயற்பெயர் மாமல்லன் என்பது - மாமல்லன், பல்லவரின் துறைமுகப்பட்டினத்துக்குத் தன் பெயரைச் சூட்டி மாமல்லபுரம் என்று வழங்கினான். தன் பெயரைச் சூட்டியதல்லாமல், இப்பட்டினத்திலிருந்த பாறைக் குன்றுகளைக் கலைக்கோயில்களாக அமைத்து அழகுபடுத்தினான். பல்லவர் காலத்தில் பெரிய துறைமுகப் பட்டினமாயிருந்த மாமல்ல புரம், இப்போது பெருமை குன்றி சிறு கிராமமாக இருக்கிறது. மாமல்லபுரம் என்னும் பெயர் திரிந்து மகாபலிபுரம் என்று வழங்கப்படுகிறது.

மாமல்லன் நரசிம்மவர்மன் புகழ்பெற்ற சிறந்த மன்னன். இவ்வரசன் தன் மேல் படையெடுத்துவந்த சளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியைப் போர்க்களத்தில் வென்றதோடு அமையாமல், புலிகேசியின் தலைநகரமான வாதாபிநகரத்தின்மேல் படையெடுத்துச் சென்று அந்நகரத்தைப் பிடித்து, அங்கு வெற்றிக்கம்பம் நாட்டினான். இதனால் இவனுக்கு, 'வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்' என்னும் பெயர் ஏற்பட்டது. இவ்வரசன் வாதாபி நகரத்தை வென்றபோது, இவனுடைய யானைப்படைக்குத் தலைவனாக இருந்தவர் பரஞ்சோதியார் எனப்படும் சிறுத்தொண்ட நாயனார்.

தனக்குரிய இலங்கை அரசாட்சியை இழந்து பகைவருக்கு அஞ்சிக் காஞ்சிபுரத்துக்கு வந்து இவ்வரசனிடம் அடைக்கலம் புகுந்த மானவர்மன் என்னும் இலங்கை மன்னனுக்கு அரசாட்சியை மீட்டுக்கொடுத்தவனும் வாதாபிகொண்ட நரசிம்மவர்மனே.

சைவ சமயத்தையும் பக்தி இயக்கத்தையும் நிலைநாட்டிய திருநாவுக் கரசு சுவாமிகள், திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய சைவ அடியார் களும், பாண்டி நாட்டை அரசாட்சிசெய்து சமண சமயத்தவனாக இருந்து பின்னர் சைவசமயத்தைச்சேர்ந்த கூன்பாண்டியன் என்னும் நெடுமாற நாயனாரும் அவன் அரசியாரான மங்கையர்க்கரசியாரும் அமைச்சரான குலச்சிறை நாயனாரும் மற்றும் சில நாயன்மார்களும் வாழ்ந்திருந்த காலமும் மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்திலேதான்.

அதுபோலவே, வைணவ சமயத்தையும் பக்தி இயக்கத்தையும் நிலைநாட்டிய ஆழ்வார்களாகிய திருமழிசையாழ்வாரும், பேய் பூதம் பொய்கை என்னும் முதலாழ்வார் மூவரும் வாழ்ந்திருந்த காலமும் வாதாபிகொண்ட நரசிம்மவர்மன் காலத்திலேதான்.

பல நூற்றாண்டுகளாகத் தமிழ்நாட்டிலே நிலைபெற்றுச் சிறப்படைந் திருந்த பௌத்த சமயமும் சமண சமயமும், சைவ வைணவர்களின் பக்தி இயக்கத்தினால் தாக்குண்டு, பழைய செல்வாக்கையும் சிறப்பையும் இழக்கத்

தொடங்கிய காலமும் நரசிம்மவர்மன் காலத்திலேதான். இவ்வாறு பல முக்கிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலத்திலே அரசாண்ட வாதாபிகொண்ட நரசிம்மவர்மனுடைய வரலாற்றையும் அக்காலத்து ஏனைய வரலாற்றையும் நம்மவர் அனைவரும் அறியவேண்டும் என்னும் நோக்கத்தோடு இந்நூலை எழுத முற்பட்டேன்.

ஏறக்குறைய கி.பி. 4 - ஆம் நூற்றாண்டிலிருந்து 10 - ஆம் நூற்றாண்டு வரையில், பல்லவ அரசர்கள் சோழநாட்டையும் தொண்டை நாட்டையும் அரசாண்டார்கள். 10 - ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, பல்லவருக்குக் கீழடங்கியிருந்த சோழர்கள், மீண்டும் முதன்மைபெற்றுப் பல்லவ அரசரை வீழ்த்திய பிறகு, பல்லவ அரசர் வரலாறு முழுவதும் மறக்கப்பட்டு மறைந்து கிடந்தது. கர்ணபரம்பரையாகவும் இலக்கிய நூல்கள் வாயிலாகவும் சிறிதளவாவது சேர சோழ பாண்டியர்களின் பெயர் அறியப்பட்டதுபோன்ற அளவு கூட பல்லவ அரசரின் பெயர் அறியப்படாமல் முழுவதும் மறைந்துகிடந்தது.

தமிழ்நாட்டிலும் பாரத தேசத்திலும் ஆதிகாலம் முதல் சரித்திரம் எழுதும் வழக்கம் இருந்ததில்லை. ஆங்கிலேயர் தொடர்பு ஏற்பட்ட பின்னரே, சரித்திரமும் வரலாறும் எழுதும்முறை கற்பிக்கப்பட்டது என்பதை நாம் நேர்மையோடு ஒப்புக்கொள்ள வேண்டும். நமது நாட்டை அரசாண்ட ஆங்கிலேயர் நமது நாட்டு வரலாற்றை அறிய விரும்பினார்கள். சரித்திர நூல்கள் இல்லாததை அறிந்தார்கள். சரித்திரச் செய்திகளைச் சிறிதளவு கொண்டுள்ள கல்வெட்டுச் சாசனங்களும் செப்பேட்டுச் சாசனங்களும் பற்பல இடங்களில் வெவ்வேறு ஊர்களில் சிதறிக்கிடந்து மறைந்து ஒளிந்து இருளடைந்திருந்தன. அம்மட்டோ? பழைய எழுத்துக்கள் மறைந்து புதிய எழுத்துக்கள் தோன்றிவிட்டபடியால், பழைய கல்வெட்டெழுத்துக்களும் செப்பேட்டு எழுத்துக்களும் மறக்கப்பட்டுப் படிக்க முடியாமற்போயின. இவ்வாறு வரலாற்றுச் செய்திகள் இருளடைந்து கிடந்த காலத்தில், சென்ற 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலே, ஆங்கில அரசாங்கத்தார் ஆர்க்கியாலஜி என்னும் பழம்பொருளாராய்ச்சித் துறையையும், எபிகிராபி

என்னும் சாசன ஆராய்ச்சித் துறையையும் ஏற்படுத்திச் சிதறிக்கிடந்த சாசனங்களைத் தொகுத்துப் படிக்க முடியாமற் கிடந்த சாசனங்களைப் படித்து அவற்றை இக்காலத்து எழுத்துக்களில் எழுதி அச்சிட்டு வெளிப் படுத்தினார்கள். இதனாலே நமது நாட்டுப் பழைய வரலாறுகளும் சரித்திரங் களும் சிறிதளவாவது வெளிப்படலாயின. இவ்வாறு நமக்குக் கிடைத்த வரலாறுகளை ஏனைய சான்றுகளுடன் ஒத்திட்டு ஆராய்ந்து பார்த்து, நமது நாட்டைப் பொறுத்த வரையில், சேர சோழ பாண்டியர் சிற்றரசர் வரலாறுகளையும் அக்காலத்து நாகரிகம் வாழ்க்கை முதலியவற்றைப் பற்றியும் இப்போது தெரிந்துகொள்கிறோம். ஆயினும் இந்தச் சாசனங்கள், வரலாற்றை ஓரளவுதான் அறிவிக்கின்றனவேயன்றி முழு வரலாற்றயும் தெரிவிக்கவில்லை. ஏனென்றால், அவை எழுதப்பட்டதன் நோக்கம் வரலாற்றைத் தெரிவிப்பதற்கன்று. எனினும், இந்த அளவாகிலும் பழைய வரலாற்றை அறிய முடிகிறதே என்று நினைக்கும் போது சிறிது ஆறுதல் ஏற்படுகிறது.

தமிழிலே சரித்திர நூல்கள் இன்னும் சரியாக வெளிவரவில்லை. எழுதப்படவேண்டிய வரலாற்று நூல்கள் இன்னும் பலப்பல உள்ளன. நமது நாட்டு வரலாறு இன்னும் முழுவதும் வெளிவராமலும், மக்களுக்குத் தெரியாமலும் இருக்கின்றன. பழைய அரசியல், சமூக இயல், சமய இயல், கலை இயல், இலக்கிய இயல் முதலியவற்றின் வரலாறுகளை நாம் அறிய வில்லையானால், நாகரிகத்தில் நாம் வளர்ச்சியடைய முடியாது. பழைய வரலாறுகள் எதிர்கால வாழ்விற்கு வழிகாட்டும் விளக்குப்போன்றவை. ஆகவே, நமது நாட்டைப்பற்றிய பலதுறை வரலாறுகள் நமக்கு மிகமிகத் தேவையாயுள்ளன.

நான் சரித்திரத்துறையில் பயின்றவன் அல்லன். ஆயினும், நமது நாட்டுப் பழைய் வரலாறுகளை அறிய வேண்டும் என்னும் ஆர்வம் இந் நூலை எழுதத் தூண்டியது. காய்தல் உவத்தல் இல்லாமல், விருப்பு வெறுப்பு களை அகற்றி, நடுநிலைநின்று என்னால் இயன்றவரையில் ஆராய்ந்து எழுதியிருக்கிறேன். ஆதாரங்களையும் சான்றுகளையும் ஆங்காங்கே

காட்டியுள்ளேன். சிற்சில இடங்களில் ஒரே செய்தியை மீண்டும் கூறியுள்ளேன். இதனைக் கூறியது கூறல் என்னும் குற்றமாகக் கொள்ளாமல் தெளிவுபடுத்தும் பொருட்டு அநுவாதமாகக் கூறியதாகக் கொள்ள வேண்டும். இச் சிறுநூல், நமது நாட்டு வரலாற்றின் ஒரு பகுதியையறிவதற்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்நூலை நல்லமுறையில் அச்சியற்றி வெளியிட்ட திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கு எனது நன்றியுரியது.

மயிலாப்பூர், இங்ஙனம்,
சென்னை - 4. சீனி. வேங்கடசாமி

# இந்நூலில் மேற்கோள் காட்டப்பட்ட நூல்கள்

1. ஆழ்வார்கள் கால நிலை - மு. இராகவையங்கார்
2. கலிங்கத்துப் பரணி - கவிசக்கரவர்த்தி சயங்கொண்டார்.
3. காமிகாகமம், தமிழுரையுடன்
- மயிலை, அழகப்ப முதலியார் பதிப்பு.
4. சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரையுடன்
- டாக்டர். உ.வே. சாமிநாதையர் பதிப்பு
5. தக்கயாகப் பரணி, பழைய உரையுடன்
- டாக்டர். உ.வே. சாமிநாதையர் பதிப்பு.
6. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்
- மயிலை சீனி. வேங்கடசாமி.
7. தேவாரம் - திருநாவுக்கரசு சுவாமிகள்
தேவாரம் - திருஞானசம்பந்த சுவாமிகள்
தேவாரம் - சுந்தரமூர்த்தி சுவாமிகள்
8. நாலாயிரப் பிரபந்தம் - ஆழ்வார்கள் அருளியது.
9. பெரிய புராணம் - சேக்கிழார் சுவாமிகள்
10. மகேந்திரவர்மன் - மயிலை. சீனி. வேங்கடசாமி
11. யானைக் கோயில்கள் - மயிலை, சீனி, வேங்கடசாமி
(கையெழுத்துப் பிரதி)

# BIBLIOGRAPHY

*1. Administration and social life under the Pallavas, -c.Minakshi.*

*2. Age of Tirugnana Sambandar - P. Sundaram Pillai.*

*3. Ancient geography of India - General Cunningham.*

*4. Badami stone Inscription - Ind. Ant. Vol. IX p.99. Copper plate grants from Sinnamanur, p. 463. S.I.I. Vol.III*

*5. Culavamsa - Translated by Wilhelm Geiger.*

*6. Early History of the Vellar Basin - M. Arokiaswami.*

*7. Gadval Plates of Vikramaditya - Epi. Ind. Vol. X p.101.*

*8. History of Sri Vaishnavas - T.A. Gopinatha Rao.*

*9. History of the Pallavas of Kanchi - R. Gopalan.*

*10. Kasakudi Plates of Nandivarman Pallavamalla. S.I.I. Vol. II p. 342-361.*

*11. Karnul plates of the third year of king Vikramaditya I. J.B.B.R.A.S. Vol. XVI, p.228.*

*12. Karnul Plates of the tenth year of king Vikramaditya I. J.B.B.R.A.S. Vol. XVI. p. 228.*

*13. On Yuan Chuang's Travels in India, Vol. II, Thomas Watters.*

*14. Pallava Antiquities Vol. I - G. Jouveau Dubreuil.*

*15. Pallava Architecture part, II - A. H. Longhurst, M.A.S.I. No.33*

16. *Tamil Studies - M. Srinivasa Aiyengar.*

17. *The Pandian Kingdom - K.A. Nilakanta Sastri.*

18. *The Pallavas - G. Jouveau Dubreuil.*

19. *The date of Bhuti Vikramakeswari, J.R.A.S. 1935. pp. 475-481.*

20. *The victory of Bhuti Vikramakesari over the Pallavas. J.R.A.S. 1984. p. 53-44.*

21. *Two Statues of Pallava Kings and five Pallava Inscriptions in a Rock-cut Temple at Mahabalipuram. H. Krishna Sastri, M.A.S.I. No.26.*

22. *Udayendram plates of Nandi- S.I.I. Vol. II Varman Pallava Malla. pp. 361-371.*

23. *Velvikudi grant of Nedunjadayan. Epi. Ind. Vol. XVII p.291-309.*

24. *Velurpalayam plates of Nandivarman. S.I.I. Vol. II. pp. 501-517.*

# ABBREVIATIONS

*Epi. Indi - Epigraphia Indica.*

*Ep. Rep. - Epigraphy Report, Madras.*

*E.Z. Epigraphia Zeylanica.*

*Ind. Anti. - Indian Antiquary.*

*S.I.I. South Indian Inscriptions.*

*J.R.A.S. - Journal of Royal Asiatic Society of Great Britain and Ireland.*


*B.B.R.A.S - Journal of Bombay Branch of Royal J.B.B.R.A.S Asiatic Society.*

*J.O.R J.O.R.M. - Journal of oriental Research, Madras,*


*M.A.S.I. - Memoris of the Archaeological Survey of India.*

*Ins. Pudu. State - Inscriptions (Texts) of the Pudukkottai State.*

*Chro - Ins - Pudu. State. - Chronological list of Pudukkottai State.*



1. "பஞ்சபாண்டவர் இரதம்"
தருமராசர், பீமன், அர்ச்சுனன், திரௌபதி இரதங்கள்



2. திரிமூர்த்தி குகைக்கோயில்




3. வராக மண்டபம்



4. மகிஷாசுர மண்டப உட்புறம்




5. “திரௌபதை இரதம்”




6. "அர்ச்சுனன் இரதம்"



7. "தருமராசர் இரதம்"



8. "பீமன் இரதம்"




9. "நகுல சகாதேவ இரதம்"




10. திரிவிக்கிரம மூர்த்தி (உலகளந்த பெருமாள்)




11. போர் மடந்தை



12. அநந்தசயன மூர்த்தி




13. வராகப் பெருமாள்




14. திருமகள் (கஜலக்ஷ்மி)



15. "அர்ச்சுனன் இரதம்"—கிழக்குச்சுவர் சிற்பங்கள்
நடுவில் இந்திரன், பக்கத்தில் முனிவர், இராணிகள் துவாரபாலகர்




16. "அர்ச்சுனன் இரதம்"—தெற்குச்சுவர் சிற்பங்கள்
நடுவில் இடபாரூடர், பக்கங்களில் அரசன், அரசியர், துவாரபாலகர்




17. கணேச இரதம்



18. இளங்கோயில் கொற்றவை



**19.** கருடவாகனப் பெருமாள்



**20.** மாமல்லன் நரசிம்மவர்மன்

# நரசிம்மவர்மன்

## 1. அரசியல்

**மாமல்லன்** என்னும் இயற் பெயரையுடைய நரசிம்மவர்மன் மகேந்திரவர்மனுடைய மகன். இவனை **முதலாம் நரசிம்மவர்மன்** என்று சரித்திரம் கூறுகிறது. மாமல்லன் நரசிம்மவர்மன், சளுக்கிய அரசரின் தலை நகரமான வாதாபி நகரத்தை வென்று கொண்டபடியினாலே **வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்** என்று பெயர்பெற்றான். இவன், பல்லவ இராச்சியத்தை கி.பி. 630 முதல் 668 வரையில் அரசாண்டான். இவனுடைய தலைநகரம் காஞ்சிபுரம்.

வாதாபிகொண்ட நரசிம்மவர்மன், தன் தந்தையாகிய மகேந்திர வர்மன் காலத்தில் **மாமல்லன்** என்னும் பெயருடன் இளவரசனாக இருந்த போது, கடல்மல்லை என்னும் துறைமுகப்பட்டினத்தில் வாழ்ந்திருந்தான். சோழர்களுக்குக் காவிரிப்பூம்பட்டினமும், பாண்டியருக்குக் கொற்கையும், சேரருக்கு முசிரியும் துறைமுகப்பட்டினமாக இருந்ததுபோல, பல்லவ அரசர்களுக்குக் **கடல்மல்லை** துறைமுகப்பட்டினமாக இருந்தது. மாமல்லன் அரசனான பிறகு, இத் துறைமுகப்பட்டினத்துக்குத் தன் பெயராகிய மாமல்லன் என்னும் பெயரைச்சூட்டி **மாமல்லபுரம்** என்று புதுப்பெயர் கொடுத்தான். இப்பட்டினத்தைப் புத்தம் புதிதாக உண்டாக்கி னான் என்று சிலர் கருதுகின்றனர். இது தவறு. இவ்வூர் நீர்ப்பெயற்று என்றும் மல்லை என்றும் கடல்மல்லை என்றும் பண்டைக்காலத்தில் பெயர் பெற்றிருந்தது. இந்தப் பழைய பெயரை மாற்றித் தன் பெயரைச் சூட்டி மாமல்லபுரம் என்று வழங்கினான். மாமல்லபுரம் என்னும் பெயர் பிற்காலத்திலே மகாபலிபுரம் என்று மருவி வழங்கப்பட்டது. பாமரமக்கள் இப்போது இதனை மாவலிவரம் என்று கூறுகின்றனர்.

மாமல்லன் முடிசூட்டிக் கொண்டபோது நரசிம்மவர்மன் என்னும் பட்டப்பெயரைப் பெற்றான்.

மாமல்லன் நரசிம்மவர்மன், மாமல்ல புரத்திலே சில குகைக்கோயில் களை அமைத்தான். அன்றியும், ''இரதங்கள்'' என்று இப்போது பெயர் வழங்கப்படுகிற பாறைக் கோயில்களையும் அமைத்தான். அழகான சிற்ப உருவங்கள் சிலவற்றையும் அமைத்தான். இவற்றைப்பற்றி இந் நூலின் வேறு இடத்தில் கூறுவோம்.

நரசிம்மவர்மன் இளவரசனாக இருந்தபோது, இவனுடைய தந்தை யாகிய மகேந்திரவர்மன் ஆட்சியில், சளுக்கிய அரசனான இரண்டாம் புலிகேசி, பல்லவ நாட்டின் மேல் படை எடுத்து வந்து அதன் வடபகுதி யாகிய ஆந்திர நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டான்.[1] அன்றியும், தலைநகரமான காஞ்சிபுரத்தின் மேல் புலிகேசி படையெடுத்து வந்தான். மகேந்திரவர்மன் புள்ளலூர் என்னும் இடத்தில் எதிர்த்துப் போர்செய்து அவனை முறியடித்தான். இந்தப் போரில் இளவரசனாகிய நரசிம்ம வர்மனும் போர் செய்திருக்கக்கூடும்.

மகேந்திரவர்மனுக்குப் பிறகு நரசிம்மவர்மன் அரசனான். நரசிம்ம வர்மன் காலத்தில், இலங்கையரசுக்குரிய மானவம்மா (மானவர்மன்) என்பவன் அரசு இழந்து காஞ்சிபுரத்துக்கு வந்து நரசிம்மவர்மனிடத்தில் அடைக்கலம் புகுந்தான். மானவர்மன் நெடுங்காலம் இவன் ஆதரவில் இருந்தான். காஞ்சியின்மேல் சளுக்கிய அரசன் புலிகேசி படையெடுத்து வந்த காலங்களில் மானவர்மன் நரசிம்மனுடன் சேர்ந்து புலிகேசியை எதிர்த்துப் போரிட்டான். நரசிம்மன் வாதாபியை வென்றபிறகு, தன் சேனையை மானவர்மனுடன் இலங்கைக்கு அனுப்பி இலங்கையை வென்று மானவர்மன் அந்நாட்டுக்கு அரசனாக்கினான்.

நரசிம்மவர்மன் காலத்திலும் புலிகேசி, மீண்டும் பலமுறை காஞ்சி புரத்தின்மேல் படையெடுத்து வந்தான். படையெடுத்து வந்த புலிகேசியை நரசிம்மவர்மன் பரியளம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய இடங்களில் எதிர்த்துப் போர்செய்து முறியடித்தான். போர் நடந்த சூரமாரம், பரியளம் என்னும் ஊர்கள் எவை என்பது இப்போது தெரியவில்லை. மணிமங்கலம் என்பது, செங்கல்பட்டு மாவட்டத்தில் செங்கல்பட்டு தாலுகாவில் உள்ள மணிமங்கலம் என்னும் கிராமம் ஆகும். இது பல்லவரின் தலைநகரமான காஞ்சிபுரத்திற்கு இருபது மைல் தூரத்தில் இருக்கிறது.

---

[1] இந்நூலாசிரியர் எழுதியுள்ள மகேந்திரவர்மன் என்னும் நூல் காண்க.

மாமல்லன் புலிகேசியைத் துரத்தியதோடு நிற்கவில்லை. தன் தந்தை காலத்தில், பல்லவர்களுக்குரிய ஆந்திரநாடுகளைக் கவர்ந்துகொண்ட புலிகேசி காஞ்சிபுரத்தின் மேல் படையெடுத்து வந்ததையும், பின்னர் தன் காலத்தில் மீண்டும் பலமுறை காஞ்சியின் மேல் படையெடுத்து வந்ததையும் மாமல்லன் மறக்கவில்லை. பல்லவரின் பிறவிப் பகைவனாய் அடிக்கடி பல்லவ அரசருடன் போர்தொடுக்கிற புலிகேசியை அடியோடு அழிக்க வேண்டும் என்னும் எண்ணம் இவனுக்கு உண்டாயிற்று. இதற்காக இவன் சமயம் பார்த்திருந்தான். தக்க சமயமும் வாய்ந்தது. புலிகேசி, நரசிம்ம வர்மன் மேல் மீண்டும் படையெடுத்து வந்தான். அப்போது நரசிம்மவர்மன் அவனை எதிர்த்துப் போர் செய்து அவனைக் கொன்றான். பிறகு, புலிகேசியின் தலைநகரமான வாதாபியின் மேல் படையெடுத்துச் சென்று அந்த நகரத்தையும் கைப்பற்றினான். இதனால் இவனுக்கு **வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்** என்னும் பெயரும் உண்டாயிற்று.

கூரம் செப்பேட்டுச் சாசனம் இவனுடைய வெற்றியை இவ்வாறு கூறுகிறது:- ''நரசிம்மவர்மனுடைய (சிம்ம விஷ்ணுவினுடைய) பேரன், உதயகிரியிலே சூரியனும் சந்திரனும் தோன்றியதுபோல இந்த அரச குடும்பத்திலே தோன்றி, இந்த அரசகுடும்பத்தின் தலைவணங்கியறியாத மன்னர்களின் மணிமுடியில் சூடாமணி போன்று விளங்கிப் பகை மன்ன ராகிய யானைகளுக்கு அரிமா போன்று, நரசிங்க மூர்த்தியே மண்ணு லகத்தில் அரசகுமாரனாக அவதரித்தாற் போலப் பிறந்தான். இவன் சோழர் கேரளர் களபரர் பாண்டியர்களைப் பலமுறை வென்று நூற்றுக்கணக்கான போர்களைச் செய்து ஆயிரங்கை படைத்தவனை (கார்த்த வீரியார்ச் சுனனைப்) போன்று விளங்கினான். மேலும் பரியளம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய இடங்களில் நடந்த போர்களில் புறங்காட்டி யோடிய புலிகேசியின் முதுகிலே விஜயம் (வெற்றி) என்னும் சொல்லைச் செம்புப் பட்டயத்தில் எழுதுவதுபோல எழுதினான். பிறகு, கும்பமுனி (அகத்தியர்) வாதாபியை (வாதாபி என்னும் அசுரனை) அழித்தது போல, வாதாபியை (வாதாபி நகரத்தை) அழித்தான்.''[1]

உதயேந்திரச் செப்புப் பட்டயம் இவ்வாறு கூறுகிறது:- ''பரியள மணி மங்கல சூரமார முதலான இடங்களில் வல்லப ராஜனைப் பலமுறை

---

[1] A Pallava grant from kuram. P. 144-155. S.I.I. Vol. I

வென்று, வாதாபியை அழித்த அகத்தியரைப் போல வாதாபியை யழித்த நரசிம்மவர்மன், அவனுக்கு (மகேந்திரவர்மனுக்கு) மகனாகப் பிறந்தான்.''[1]

வேலூர்ப்பாளைய சாசனம் இவ்வாறு எழுதுகிறது:- ''உபேந்திரனை (விஷ்ணுவைப்போன்று புகழ்படைத்தவனும் பகைவர் கூட்டங்களை வென்று வாதாபி நகரத்தின் நடுவில் வெற்றித் தூணைக் கைக்கொண்டவனு மாகிய நரசிம்மவர்மன், மகேந்திரவர்மனுக்கு மகனாகப் பிறந்தான்.''[2]

காசாகுடி செப்பேட்டுச் சாசனம் இவ்வாறு புகழ்கிறது:- ''அவனுக்கு (மகேந்திரவர்மனுக்கு) வெற்றி வீரனாகிய நரசிம்மவர்மன் பிறந்தான். இவன், இலங்கையை வென்று, இராமனுடைய வீரப்புகழுக்கு மேம்பட்ட புகழையடைந்து, பகைவர்களுக்குத் தூமகேதுவைப் போல இருந்து, குடமுனியைப் போல வாதாபியை வென்றான்.''[3] (குடமுனியாகிய அகத்தியர் வாதாபி என்னும் அசுரனை வென்றதுபோல இவனும் சளுக்கியரின் வாதாபி நகரத்தை வென்றான் என்பது கருத்து.)

புலிகேசியின் மகனான முதலாம் விக்ரமாதித்தியனுடைய கர் நூல் செப்பேட்டுச் சாசனம், ''மூன்று அரசர்கள் சேர்ந்து புலிகேசியை வென்றார்கள் என்று கூறுகிறது.''[4] புலிகேசியை வென்ற மூன்று அரசர்களில் மாமல்லனாகிய நரசிம்மவர்மன் ஒருவன். மற்ற இருவரில் **மானவம்மா** என்பவன் ஒருவன். இவன் இலங்கையரசுக்கு உரியவனாய் அரசு இழந்து நரசிம்மவர்மனிடம் வந்து அடைக்கலம் புகுந்து காஞ்சிபுரத்திலேயே நெடுங்காலம் இருந்தவன். இவன் நரசிம்மவர்மனுடன் சேர்ந்து புலிகேசி யுடன் போர்செய்தான் என்று சூலவம்சம் (47-ஆம் அதிகாரம்) என்னும் நூல் கூறுகிறது.[5] நரசிம்மவர்மனுக்கு உதவியாக இருந்த இன்னொரு அரசன் புதுக்கோட்டையைச் சேர்ந்த கொடும்பாளூரில் இருந்த **சமராபிராமன்** என்பவன். இந்தச் சமராபிராமன், சளுக்கிய அரசனை அதிராஜமங்கலம் என்னும் ஊரில் கொன்றான் என்றும், இவனுடைய தகப்பனான

---

1. Udayendram Plates of Nandivarman Pallava Malla. S.I.I. Vol. II. P. 361-371.
2. Velurpalayam Plates of Vijaya Nandivarman S.I.I. Vol II. P. 501-517.
3. Kasakudi Plates of Nandivarman Pallava Malla. S.I.I. Vol.II. P. 342-361.
4. Karnul Plates of Vikramaditya I, B.B.R.A.S. XV.I.P.226.

1. பின்னிணைப்புக் காண்க.

**பரதுர்க்கமர்த்தனன்** வாதாபி நகரத்தை வென்றான் என்றும் கொடும்பாளூரில் உள்ள மூவர் கோவில் சாசனம் கூறுகிறது.[1]

இதில், சளுக்கிய அரசனை அதிராஜமங்கலத்தில் சமராபி ராமன் கொன்றான் என்பதை, சளுக்கிய அரசனான புலிகேசியை அதிராஜமங்கலம் என்னும் மணிமங்கலத்தில், சமராபிராமன் கொன்றான் என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள். போர்க்களத்திலே புலிகேசி இறந்த பிறகு, அவனுடைய வாதாபி நகரத்தின்மேல் நரசிம்மவர்மன் படையெடுத்துச் சென்றபோது, சமராபிராமனுடைய தகப்பனான பரதுர்க்கமர்த்தனனும் அவனுடன் போய் வாதாபியை அழித்தான் என்பது தெரிகிறது.''[2]

இவ்வாறு நரசிம்மவர்மன், மானவர்மன், கொடும்பாளூர் சிற்றரசன் (தந்தை மகன் இருவரும்) ஆகிய மூன்று அரசர்களும் சேர்ந்து புலிகேசியை வென்றார்கள் என்பது தெரிகிறது.

நரசிம்மவர்மனுடைய படைத்தலைவராக இருந்தவர் பரஞ்சோதியார் என்பவர். இவருக்குச் சிறுத்தொண்டர் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. இவர் நரசிம்மவர்மனுடைய யானைப் படைத்தலைவராக இருந்து வாதாபி நகரை வென்றார். இவர் வாதாபி நகரத்தை வென்ற செய்தியைப் பெரியபுராணம் இவ்வாறு கூறுகிறது:

**''மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்**
**தொன்னகரைத் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்**
**பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்**
**இன்னனவெண் ணில கவர்ந்தேயிகலரசன்முன்கொணர்ந்தார்.''**[3]

வாதாபியை (வாதாபி எனினும் வாதாவி எனினும் ஒன்றே.) வென்ற பிறகு சிறுத்தொண்டராகிய பரஞ்சோதியார் அரச ஊழியத்தைவிட்டு, பக்தியில் ஈடுபட்டு, இவர் காலத்தில் சமயத்தொண்டு செய்துவந்த திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்னும் சைவ நாயன்மார்களுடன் நட்புக் கொண்டிருந்தார். பெரியபுராணத்தில் கூறப்படுகிற சிறுத்தொண்ட நாயனார் என்பவர் இவரே.

---

1. No. 14.P.9-10. Inscriptions (Texts) of the Pudukkottai State. No.14. Chronological List of Inscriptions of the Pudukkottai State.

2. பின்னிணைப்பு காண்க.

3. *சிறுத்தொண்ட நாயனார் புராணம்: 6.*

நரசிம்மவர்மன் வாதாபியை வென்றது கி.பி. 642-இல் ஆகும் புலிகேசியைக் கொன்று வாதாபியைக் கைப்பற்றியதனால், மகேந்திர வர்மன் காலத்தில் புலிகேசி கவர்ந்து கொண்ட பல்லவ அரசின் ஆந்திரப் பகுதி, மீண்டும் பல்லவர் வசம் ஆயிற்று என்று கருதலாம். அஃதாவது, நரசிம்மவர்மன் தன் தந்தையார் இழந்த ஆந்திர நாடுகளை மீட்டுக் கொண்டான். ஆனால் மீட்கப்பட்ட அந்நாடுகள் நெடுங்காலம் இவனிடத்தில் இருக்கவில்லை; ஏறக்குறைய 16 ஆண்டுகளுக்குப் பிறகு அப் பகுதிகள் மீண்டும் சளுக்கிய வசம் ஆயின.

வாதாபி நகரத்தை வென்ற நரசிம்மவர்மன் அந் நகரத்திலே வெற்றிக் கம்பம் ஒன்றை நாட்டினான். இந்த வெற்றிக் கம்பம் பிற்காலத்தில் உடைக்கப்பட்டது. இந்தக் கம்பத்தின் உடைபட்ட ஒரு பகுதி இன்றும் அந் நகரத்தில் காணப்படுகிறது. சிதைந்துபோன சாசன எழுத்துக்களும் இதில் காணப்படுகின்றன. இதில் ''மாமல்லன்'' ''க்ஷிதி புஜாங்கரேஸர பல்லவ'' ''(நர)சிம்ம விஷ்ணு'' என்னும் சொற்கள் பல்லவக் கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன.[1]


நரசிம்மவர்மன் வாதாபி நகரத்தை வென்ற பிறகு, அந்நகரம் பதின்மூன்று ஆண்டுவரையில் அரசன் இல்லாமல் இருந்தது. இதற்குக் காரணம், புலிகேசியின் மக்கள் அரசுரிமைக்காகத் தம்முள் கலகஞ் செய்து போரிட்டுக் கொண்டதேயாகும். பிறகு கி.பி. 655-இல் புலிகேசியின் பிள்ளைகளில் ஒருவனான விக்கிரமாதித்தியன் (முதலாவன்) சளுக்கிய நாட்டின் அரசனானான். இவன் அரசனானவுடன் சேனையைத் திரட்டிக் கொண்டு பல்லவ நாட்டின்மேல் படையெடுத்து வந்தான். இவன் கி.பி. 655-முதல் 681- வரையில் அரசாண்டான். ஆகவே, நரசிம்மவர்மனும் அவனுடைய மகனும் பேரனும் விக்கிரமாதித்தியனுடன் அடிக்கடி போர் செய்ய நேரிட்டது. விக்கிரமாதித்தியன், நரசிம்மவர்மன் மீட்டுக்கொண்ட ஆந்திரப்பகுதி நாடுகளை மீண்டும் கைப்பற்றிக் கொண்டான்.

நரசிம்மவர்மனுக்கு மாமல்லன், வாதாபி கொண்ட நரசிம்மவர்மன் என்னும் சிறப்புப் பெயர்கள் உண்டு. மகாபலிபுரத்துத் திரிமூர்த்திக் குகைக் கோயிலில் மல்ல என்னும் பல்லவக் கிரந்த எழுத்துச் சாசனமும், திருக்கழுக்குன்றத்து ஒற்றைக்கல் மண்டபம் என்னும் குகைக்கோயிலிலே

---

[1] Ind. Atni Vol. Ix P. 199.

''வாதாபிகொண்ட நரசிங்கப் போத்தரசர்'' என்னும் தமிழ் எழுத்துச் சாசனமும் காணப்படுகின்றன.




'வாதாபிகொண்ட நரசிங்கப் போத்தரசர்' என்பது இதன் வாசகம் 7-ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்து

தன் தந்தையாகிய மகேந்திரவர்மனைப் போலவே நரசிம்மவர்மனும் பல சிறப்புப் பெயர்களைக் கொண்டிருந்தான்.

மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில் பல்லவ இராச்சியம், வடக்கே வடபெண்ணை ஆறு முதல் தெற்கே வெள்ளாறு வரையில் பரவியிருந்தது. அஃதாவது தொண்டைநாடு சோழநாடு ஆகிய இரண்டு நாடுகளைக் கொண்டிருந்தது.

மகாபலிபுரம் என்று இப்போது பெயர் வழங்கப்படுகிற மாமல்லபுரத்திலே, தர்மராசரதம் என்று வழங்கப்படுகிற கற்கோயிலில் இவனுடைய சிறப்புப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்தக் கற்பாறைக் கோயிலில் காணப்படுகிற இவனுடைய சிறப்புப் பெயர்களாவன:



'ஸ்ரீநரசிம்ம'என்பது இதன் வாசகம். வடமொழி எழுத்து.

**ஸ்ரீநரசிம்ம**. (இப்பெயர் இரண்டு இடங்களில் எழுதப்பட்டுள்ளது), பிருதிவீசார. (உலகத்தின் சாரமாகவுள்ளவன்), **ஸ்ரீபர** (செல்வத்தைத் தாங்கியுள்ளவன்), **புவனபாஜன** (உலகத்தை உரிமையாகக் கொண்டவன்), **ஸ்ரீமேக** (செல்வக் கொண்டல்), **திரைலோக்ய வர்த்தன** (மூவுலகத்தையும் வளர்ப்பவன்), **விதி** (உலக ஒழுக்கத்தை அமைப்பவன்),

**அநேகோபாய** (பல சூழ்ச்சியறிந்தவன்), **ஸ்திரபக்தி** (நிலைத்த பக்தியுள்ளவன்), **மதனாபிராம** (மன்மதன் போன்ற அழகுள்ளவன், **அப்ரதிஹத ஸாஸன** (மறுக்கமுடியாத ஆணையையுடையவன்), **காம லலித** (காமனைப் போன்ற அழகன்), **அமேய மாய** (காணமுடியாத சூழ்ச்சிகளையுடையவன்), **சகல கல்யாண** (எல்லா நன்மைகளையும் உடையவன்), **நயன மனோகர** (காட்சிக்கு இனியன்), **வாம** (அழகன்), **அதிமான** (மிகுந்த மான முள்ளவன்), **பராபர** (ஆற்றல் வாய்ந்தவன்), **அநுபம** (நிகரற்றவன்), நயாங்குர (அறிவுக் கொழுந்து), **லலித** (இனியன்), **சர்வதோபத்ர** (அகில புனிதன்), **ஸ்ரீநிதி** (செல்வமுடைய வன்), **நிருத்தர** (நிகரற்றவன்), **விப்ராந்த** (மனவெழுச்சியுள்ளவன்), **சத்ய பராக்ரமன்** (உண்மை வீரன்), **ரணஜெய** (போரில் வெற்றி கொள்பவன்).[1]

நரசிம்மவர்மன் காலத்தில் ஹியூங் சுவாங்[2] என்னும் சீன நாட்டுப் பௌத்த யாத்திரிகர் கி.பி. 640-இல் காஞ்சிபுரத்துக்கு வந்து சிலகாலம் தங்கி யிருந்தார்; இவன் காலத்திலே சைவ சமயாசாரியர்களாக திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சிறுத்தொண்ட நாயனார், நெடுமாற நாயனார், மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனார், திருநீலகண்டப் பெரும்பாணர், திருநீலநக்கர், முருக நாயனார் முதலியோரும், முதலாழ்வார் மூவரும், திருமழிசை ஆழ்வாரும் வாழ்ந்திருந்தார்கள்.

நரசிம்மவர்மன் சைவ சமயத்தைச் சார்ந்தவன். இவன் தன் வாழ் நாட்க ளில் பெரும்பாகத்தைச் சளுக்கிய அரசனுடனும் மற்ற அரசர்களுடனும் போர் செய்வதிலே கழித்தான். ஆயினும், மாமல்லபுரத்திலே ''இரதங்கள்'' என்று கூறப்படுகிற பாறைக் கோயில்களையும் சில குகைக் கோயில்களை யும் அமைத்தான். தர்மராச ரதம் என்று இப்போது வழங்கப்படுகிற அத்யந்த காம பல்லவேசுவரம் என்னும் மாடக் கோயிலிலே பாறைச் சுவரிலே இவனுடைய உருவம்[3] புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

---

[1] *S.I.I. Vol. I.* குறிப்பு: இந்தச் சிறப்புப் பெயர்களுடன் இந்தக் கற்கோயிலில் அத்யந்த காம என்னும் இன்னொரு பெயரும் இன்னொரு வகையான எழுத்தில் எழுதப் பட்டுள்ளது. இந்தப் பெயர் நரசிம்மவர்மனுடைய பேரனான பரமேஸ்வரவர்மனைக் குறிக்கும்.


[1] பின்னிணைப்பு: 3-காண்க.

[3] புடைப்புச் சிற்பம் - *Bas relief.*

இந்த உருவத்தில் நரசிம்மவர்மன் (மாமல்லன்) நீண்ட கிரீடம் அணிந்து, காதுகளில் அணிந்த குண்டலங்கள் தோள்களிலே புரள, கழுத்தில் மணிமாலை விளங்க, மார்பிலே தடித்த பூணூலை அணிந்திருக் கிறான். இடக் கையை இடுப்பில் ஊன்றி வலக் கையைத் தொங்கவிட்டிருக் கிறான். அரையில் மட்டும் பட்டாடை அணிந்திருக்கிறான். அந்தக் காலத்து வழக்கப்படி (போர்வை சட்டை முதலியன அணியாமல்) வெற்றுடம்பாக இருக்கிறான். அகன்று பரந்த முகத்தில் அமைதியும் மன உறுதியும் ஆழ்ந்த சிந்தனையும் தோன்றுகின்றன. பாதங்கள் முற்றுப்பெறாமல் பாறையோடு பாறையாகக் காணப்படுகின்றன. இந்தச் சிற்பத்தை அமைத்த சிற்பி எக்காரணத்தினாலோ பாதங்களை முற்றும் அமைக்காமல் அரைகுறையாக விட்டுவிட்டான்.

நரசிம்மவர்மனுடைய இந்தச் சிற்ப உருவம் பட்ட மகிஷியில்லாமல் தனியாக அமைக்கப்பட்டுள்ளது. பல்லவ அரசர்களின் உருவச் சிலைகள் எல்லாம் பட்டமகிஷியோடு அமைக்கப்பட்டுள்ளன. மாமல்லபுரத்து வராகப் பெருமாள் குகைக்கோயிலில் இருக்கிற மகேந்திரவர்மனுடைய உருவச்சிற்பம் பட்ட மகிஷியரோடு அமைந்துள்ளது. அங்கேயுள்ள இன்னொரு சிற்பமும் (சிம்மவிஷ்ணுவின் சிற்பம்) பட்டமகிஷியரோடு அமைக்கப்பட்டிருக்கிறது. மாமல்லபுரத்து அர்ச்சுன இரதத்தில் இருக்கிற பல்லவ அரசரின் சிற்ப உருவமும், உத்தரமேரூர் மாடக் கோயிலில் இருக்கிற மற்றொரு பல்லவ அரசனுடைய சிற்ப உருவமும் பட்ட மகிஷியாருடன் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த நரசிம்மவர்மனுடைய உருவச்சிற்பம் மட்டும் பட்டமகிஷியில்லாமல் தனியாக அமைக்கப் பட்டுள்ளது. இச் சிற்ப உருவம் அமைக்கப்பட்ட காலத்தில் பட்ட மகிஷி இறந்துவிட்டாள் போலும்.

*



நரசிம்மவர்மன் காலத்தில்
தென்னிந்தியா
கோதாவரி
கிருஷ்ணை
வெங்கி
கிருஷ்ணை
வாதாபி
வட பெண்ணை
கங்கவாடி
காஞ்சி
பாலாறு
மாமல்லபுரம்
கொங்கு
காவேரி
உறையூர்
கொடும்பாளூர்
மதுரை
பாண்டி நாடு
கொற்கை
குமரி
அநுரை
இலங்கை

# 2. வேறு அரசர்கள்

மாமல்லன் ஆன நரசிம்மவர்மன் காலத்திலே, பல்லவ தேசத்தைச் சூழ்ந்திருந்த இராச்சியங்களைப் பற்றியும் அவற்றை அரசாண்ட அரசர்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும்.

## வடநாடு

அக்காலத்தில் வடஇந்தியாவை அரசாண்ட மன்னன் ஹர்ஷவர்த்தனன் என்பவன். இவனுடைய இராச்சியம் வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே நருமதை ஆறுவரையிலும் பரவியிருந்தது. அக்காலத்தில் பரத கண்டத்து அரசர்களில் பேரரசனாக விளங்கியவன் ஹர்ஷவர்த்தனனே. இவன் கி.பி. 606 முதல் 647 வரையில் அரசாண்டான். இவன் இறந்தபிறகு இவனுடைய பேரரசு சிறு சிறு நாடுகளாகச் சிதறுண்டு போயிற்று. ஹர்ஷனுக்கு மக்கட்பேறு இல்லை. ஆகவே, அவனுடைய இராச்சியத்தை அவனுக்குக் கீழடங்கியிருந்த அரசர்கள் சுயேச்சையாக அரசாளத் தொடங்கினார்கள். ஹர்ஷனுடைய அமைச்சனான அருணாஸ்வன் (அர்ச்சுனன்) என்பவனும் இராச்சியத்தின் ஒரு பகுதியைத் தன் வயப்படுத்திக் கொண்டான்.

சீனநாட்டு அரசன், ஹர்ஷவர்த்தனனிடம் தன் தூதர்களை அனுப்பினான். அத்தூதர்கள் இந்தியாவுக்கு வந்தபோது ஹர்ஷன் இறந்துபோய், அவன் மந்திரி அருணாஸ்வன், ஆட்சி செய்து கொண்டிருந்தான். இவன் சீனத் தூதர்களைக் கொன்றுவிட்டான். ஆனால், தூதர்களின் தலைவனாகிய வாங் - ஹுன் - த்வி[1] என்பவன் தப்பி ஓடித் திபெத்து நாடு சென்றான். திபெத்து நாட்டரசன் சீன மன்னனின் உறவினனாகையால், அவன் சீனத்தூதுவனுக்குத் தன் சேனையைக் கொடுத்து உதவினான். தூதுவன், சேனையுடன் வந்து அருணாஸ்வனுடன் போர் செய்து வென்று அவனைச் சிறைப்பிடித்துச் சென்றான். நரசிம்மவர்மன் காலத்தில் வட இந்தியாவில் நிகழ்ந்த செய்தி இது.

---

[1] Wang - Hiuen - tse.

**தக்கிணநாடு**

ஹர்ஷ இராச்சியத்திற்குத் தெற்கே தக்கிண இந்தியாவைச் சளுக்கியர் அரசாண்டனர். சளுக்கிய இராச்சியம், வடக்கே நருமதை ஆறுமுதல் தெற்கே வட பெண்ணை ஆறு வரையிலும், மேற்கே அரபிக்கடல் முதல் கிழக்கே வங்காளக் குடாக்கடல் வரையிலும் பரவியிருந்தது. இந்தப் பெரிய இராச்சியத்தை நரசிம்மவர்மன் காலத்தில் அரசாண்டவன் **புலிகேசி** என்பவன். இவனை இரண்டாம் புலிகேசி என்பர். புலிகேசியைப் புளகேசி என்றும் கூறுவர்.

புலிகேசிக்கு சத்யாஸ்ரயன், வல்லபன், வல்லபராசன், பிருதுவிவல்லபவன், பரமேசுவரன் என்னும் சிறப்புப் பெயர்கள் உண்டு. புலிகேசியின் தலைநகரம் **வாதாபி** என்பது. இதனைப் பாதாமி என்றுங் கூறுவர். புலிகேசி, தன்மேல் படையெடுத்து வந்த ஹர்ஷவர்த்தனனை வென்று புகழ்பெற்றவன. இவன் புகழ் உலகமெங்கும் பரவியிருந்தது.

புலிகேசி, தன்னுடைய இராச்சியத்திற்குத் தெற்கேயிருந்த பல்லவ இராச்சியத்தையும் தன்னுடைய இராச்சியத்துடன் சேர்த்துக்கொள்ள விரும்பி, அடிக்கடி பல்லவ நாட்டின்மேல் படையெடுத்து வந்தான். மண்ணாசை கொண்டு பல்லவநாட்டின்மேல் படையெடுத்து வந்தபோதெல்லாம், இவன் பல்லவர்களால் முறியடிக்கப்பட்டான். கடைசியாகக் காஞ்சிபுரத்துக்கு அடுத்த மணிமங்கலத்தில் நடந்த போரில் புலிகேசி, கொல்லப்பட்டான் என்பதையும், பிறகு நரசிம்மவர்மன் புலிகேசியின் தலைநகரமான வாதாபியைக் கைப்பற்றி அதில் வெற்றிக்கம்பம் நாட்டினான் என்பதையும் முன்னமே கூறினோம்.

நரசிம்மவர்மன் புலிகேசியைக் கொன்று வாதாபி நகரத்தைக் கைப்பற்றியது கி.பி. 642 - ஆம் ஆண்டிலாகும். பிறகு வாதாபி நகரம் 13 ஆண்டுகள் அரசனில்லாமல் இருந்தது. பிறகு கி.பி. 655 - இல் புலிகேசியின் இளைய மகனான விக்கிரமாதித்தியன், சளுக்கிய இராச்சியத்தின் அரசனானான். இவனை முதலாம் விக்கிரமாதித்யன் என்பர். இவன் கி.பி. 655 முதல் 681 வரையில் அரசாண்டான்.

இவனுக்குச் சத்தியாஸ்ரயன், ரணரசிகன், அநிவாரிதன், ராஜமல்லன், வல்லபன், ஸ்ரீ பிருதுவி வல்லபன், மகாராஜாதிராஜ பரமேஸ்வரன், பட்டாரகன் முதலிய சிறப்புப் பெயர்கள் உண்டு.

இவன் அரசனானவுடன், நரசிம்மவர்மன் கைப்பற்றிக் கொண்ட சளுக்கிய நாட்டின் தென்பகுதிகளை மீட்டுக் கொண்டான். இரண்டாம் புலி கேசியை நரசிம்மவர்மன் வென்று புலிகேசியின் சில நாடுகளைக் கைப் பற்றிக்கொண்டதையும், சில ஆண்டுகளுக்குப் பிறகு விக்ரமாதித்யன் நரசிம் மன் மேல் படையெடுத்துச் சென்று அவனை வென்று, புலிகேசி இழந்த நாடுகளை மீட்டுக்கொண்டதையும் கர்னூல் சாசனம் இவ்வாறு கூறுகிறது:

''திருமகளுக்கும் மண்மகளுக்கும் மணாளனும், சிறந்த போர் வீரனாய் வடநாடு முழுவதையும் அரசாண்ட ஹர்ஷவர்தனை வென்று பரமேசுவரன் என்று பெயர் படைத்தவனுமான பரமேசுவர சத்யாஸ்ரய மகாராசன் (புலிகேசி *II*) உடைய அருமை மகனான விக்கிரமாதித்திய சத்யாஸ்ரயன், மூன்று அரசர்களால் தன் தந்தையிடமிருந்து கைப்பற்றிக் கொள்ளப்பட்ட பூமியைத் தன்னுடைய சித்தகண்டம் என்னும் குதிரையின் உதவியினாலும் வாளாயுதத்தின் கூர்மையினாலும் அநேக போர்களை வென்று கைப்பற்றினான்.'' இவ்வாறு சாசனம் கூறுகிறபடியினாலே, நரசிம்மவர்மன் புலிகேசியிடமிருந்து கைப்பற்றிய ஆந்திரப் பகுதிகளைப் பிற்காலத்தில் விக்கரமாதித்தியன் மீண்டும் கைப்பற்றிக்கொண்டான் என்பது தெரிகிறது.[1]

அன்றியும் தன் தந்தையைப் போலவே விக்கிரமாதித்தியனும், பல்லவ நாட்டின் மேல் பலமுறை படையெடுத்து வந்தான். ஆகவே, பல்லவ மன்னனாகிய நரசிம்மவர்மன் இவனுடன் போரிடவேண்டியதாயிற்று.

புலிகேசி, சளுக்கிய இராச்சியத்தின் கிழக்குப் பகுதியைத் தன் தம்பி யாகிய விஷ்ணுவர்த்தனனுக்குக் கொடுத்தான் விஷ்ணுவர்த்தனன் சுயேச்சையரசனானான். இவன் வெங்கியைத் தலைநகரமாகக் கொண்டு அரசாண்டான். ஆகவே, சளுக்கிய இராச்சியம், மேலைச்சளுக்கிய இராச் சியம் என்றும், கீழைச்சளுக்கிய இராச்சியம் என்றும் இருபிரிவாகப் பிரிந் தது. மேலைச்சளுக்கிய இராச்சியத்தை மேலே கூறியபடி இரண்டாம் புலி கேசியும் அவன் மகன் முதலாம் விக்கிரமாதித்தியனும் அரசாண்டார்கள்.

கிழைச்சளுக்கிய இராச்சியம் வடக்கே விசாகப்பட்டணம் ஜில்லா விலிருந்து தெற்கே வடபெண்ணையாறு வரையில் பரவியிருந்தது. இதனை யரசாண்ட விஷ்ணு வர்த்தனனுக்கு, குப்ஜ விஷ்ணுவர்த்தனன் மகரத்து

---

[1] PP. 226 and 228 J.B.B.R.A.S. Vol. XVI 1883-85.

வஜன், விஷமசித்தி, பிட்டரசன் என்னும் சிறப்புப் பெயர்கள் உண்டு. இவன் எப்போது காலமானான் என்று திட்டமாகக் கூறமுடியவில்லை.

விஷ்ணுவர்த்தனனுக்குப் பிறகு இவன் மகன் மகாராஜ ஜயசிம்மன் என்பவனும் அவனுக்குப் பிறகு அவன் தம்பி இந்திரவர்மனும் அவனுக்குப் பிறகு அவன் மகன் இரண்டாம் விஷ்ணுவர்த்தனனும் அரசாண்டனர். நரசிம்மவர்ம பல்லவன், மேலைச்சளுக்கிய அரசனான புலிகேசியை வென்று அவனுடைய வாதாபி நகரத்தைக் கைப்பற்றியபோது, இந்தக் கீழைச் சளுக்கிய அரசர்கள் தங்கள் உறவினரான மேலைச் சளுக்கியர்களுக்கு உதவி செய்யவில்லை.

மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில் தக்கிண தேசத்தின் நிலைமை இது.

**ரேணாடு ஏழாயிரம்**

சளுக்கிய இராச்சியத்துக்கும் பல்லவ இராச்சியத்திற்கும் இடையிலே **ரேணாடு ஏழாயிரம்** என்னும் பெயருள்ள சிறு இராச்சியம் இருந்தது. இது இப்போது ஆந்திர நாட்டில் அடங்கியுள்ள கடப்பை, கர்நூல் மாவட்டங்களைக் கொண்டிருந்தது. நரசிம்மவர்மன் காலத்தில் இச் சிறு நாட்டை அரசாண்டவன் சோழர் பரம்பரையைச் சேர்ந்த புண்ணிய குமாரன் என்பவன். இவன் சோழ மகாராசன் என்னும் சிறப்புப்பெயர் பெற்றிருந்தான்.

இவன், தன்னைக் கரிகாற் சோழன் வழிவந்தவன் என்றும் நான்கு தலைமுறையாக இவன் முன்னோர் இந்த ரேணாட்டை யரசாண்டு வருகின்றனர் என்றும் மலெபாடு செப்புப் பட்டயத்தில் கூறிக்கொள்கிறான். கடப்பை மாவட்டத்தைச் சேர்ந்த மதனபல்லிக்கு அருகில் உள்ள சிப்பிலி என்னும் ஊரில் இருக்கிற விரகல் சாசனம் ஒன்று **புண்ணிய குமாரன்** என்னும் அரசனைக் கூறுகிறது.[1]

மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில் பாரததேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த ஹியூங்சுவாங் என்னும் சீன நாட்டு யாத்திரிகர் கி.பி. 640 - இல் காஞ்சிபுரத்துக்கு வந்து சிலநாள் தங்கியிருந்தார் என்று முன்னமே கூறினோம். இந்த யாத்திரிகர் எழுதியுள்ள யாத்திரைக் குறிப்பில், சளுக்கிய இராச்சியத்திற்குப் பிறகு **சுலியெ** என்னும் இராச்சியத்தையும் அதற்குத் தெற்கே திராவிட (பல்லவ) தேசத்தையும் குறிப்பிடுகிறார்.[2] திராவிட

---

1. Ep. Rep. 1904-5. p. 48, Epi. Ind. Vol XI. p. 337.

2. பின்னிணைப்பு. 4. காண்க.

நாட்டிற்குப் பிறகு, சோழ நாட்டைக் குறிப்பிடாமல் மலய (பாண்டிய) நாட்டைக் குறிப்பிடுகிறார். திராவிட (பல்லவ) நாட்டிற்கும் மலய (பாண்டிய) நாட்டிற்கும் இடையே சோழ நாட்டை ஏன் இவர் குறிப்பிட வில்லை என்றால், அந்தக் காலத்தில் சோழநாடு பல்லவ இராச்சியத்துடன் சேர்ந்திருந்தது. சோழ அரசர் பல்லவருக்குக் கீழடங்கிச் சிற்றரசராய் இருந்தனர்.

ஆனால், சளுக்கிய நாட்டுக்கும் பல்லவ நாட்டுக்கும் இடையே இருந்ததாக இவர் கூறுகிற சுலியெ என்னும் நாடு, ரேணாட்டைக் குறிக்கிறது என்று சில சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுவர். இவர்கள் கூறுவது பொருத்தமாகவும் சரியாகவும் இருக்கிறது. சுலியெ என்பது சோழியர் (சோழர்) என்பதன் மரூஉ. ரேணாட்டையாண்ட அரசர் தம்மைச் சோழர் வழிவந்தவர் என்று கூறிக் கொண்டது கருதத்தக்கது.

**கொடும்பாளூர் நாடு**

ரேணாட்டுக்குத் தெற்கே திராவிடநாடு இருந்ததென்று ஹியூங் - சுவாங் கூறுகிறார். இவர் கூறுகிற திராவிட தேசம் என்பது தொண்ட மண்டலத்தையும் சோழமண்டலத்தையும் கொண்டிருந்தது. இதனைப் பல்லவ அரசர் ஆட்சி புரிந்தனர். பல்லவ இராச்சியத்திற்குத் தெற்கே சீன யாத்திரிகர் கூறுகிற மலயநாடு, அஃதாவது பாண்டிய நாடு இருந்தது.

பல்லவ இராச்சியத்துக்கும் பாண்டிய இராச்சியத்துக்கும் இடையிலே கொடும்பாளூர் நாடு என்னும் சிறு நாடு இருந்தது. அது இப்போது புதுக்கோட்டை என்று வழங்குகிறது கொடும்பாளூர் நாட்டின் தலைநகரம் கொடும்பாளூர் என்பது. கொடும்பாளூர் சிற்றரசர்கள் சுயேச்சையரசராக இருந்தனர் என்பது கொடும்பூளூரிலுள்ள மூவர் கோவில் சாசனத்தினால் தெரிகிறது.[1]

சுயேச்சை யரசர்களாக இருந்தபோதிலும் இவர்கள் சில சமயங்களில் பல்லவ அரசர்களுக்கு நண்பர்களாக இருந்தார்கள்.

மூவர் கோயில் சாசனத்தில் கூறப்படுகிற அரசர்களில் **நிருபகேசரி, பரதுர்க்கமர்த்தனன், சமராபிராமன்** என்னும் அரசர்கள் மூவரும் பல்லவ அரசர்களுக்கு நண்பர்களாக இருந்தார்கள் என்பது இச் சாசனத்தினால் தெரிகிறது.

---

1. Ins. Pudu. State No, 14., Chro. Ins. Pudu. State. No. 14

முதலில் நிருபகேசரி என்னும் அரசனைப்பற்றி ஆராய வேண்டும். ஏனென்றால், மூவர் கோயில் சாசனத்தை இது வரையில் ஆராய்ந்த எல்லா சரித்திர ஆசிரியர்களும் இவனைப்பற்றி ஆராயாமலே விட்டுவிட்டார்கள். நிருபகேசரி தனது இளமைப் பருவத்தில் பாம்புகளோடு வளர்ந்தான் என்று இந்தச் சாசனம் கூறுகிறது. பாம்புகளோடு வளர்ந்தான் என்றால் பொருள் என்ன? மனிதனாகிய இவன் பாம்புகளுடன் வளர்ந்தான் என்று கூறுவது பொருந்தாது. பாம்பு என்பதற்கு வேறு பொருள் இருக்க வேண்டும். பாம்பு என்பது நாகம் என்றும் பெயர்பெறும். ஆகவே, பாம்புகளோடு வளர்ந்தான் என்றால் நாகர் என்னும் வகுப்பாருடன் வளர்ந்தான் என்பது கருத்து. அப்படியானால் நாகர் என்பவர் யார்?

நாகர் என்பது பல்லவ அரசரைக் குறிக்கும். எப்படி என்றால், பல்லவ அரசர்களின் மூதாதை ஒருவன், நாக அரசன் மகளை மணஞ் செய்து கொண்டு, நாக அரசனிடமிருந்து அரசாட்சி உரிமையைப் பெற்றான் என்று கூறப்படுகிறான். அவன் மரபு நாகர் மரபு எனப்பட்டது. பல்லவர் பாம்பு (நாக) மரபைச் சேர்ந்தவராகையினாலே, பாம்புக்கொடியையும் பெற்றிருந்தனர்.

சூது என்றால் நாகம் என்பது பொருள். வேலூர்ப் பாளைய சாசனம், பல்லவ அரசர் பரம்பரையைக் கூறும் இடத்தில் **சூதுபல்லவன்** என்னும் அரசன் பெயரைக் கூறுகிறது. மேலும், வீர கூர்ச்சன் என்னும் பல்லவ அரசன் நாக அரசகுமாரியை மணஞ்செய்துகொண்டு நாக அரசனுடைய அரசாட்சி உரிமைகளைக் கவர்ந்து கொண்டான் என்றும் கூறுகிறது.

காஞ்சிபுரத்துப் பரமேச்சுரவிண்ணகரத்தை (வைகுண்ட பெருமாள் கோயிலைக் கட்டிய பரமேசுவரவர்மன் என்னும் பல்லவ மன்னனைத் திருமங்கையாழ்வார் பாம்புக் கொடியையுடையவன் என்று கூறுகிறார்:

**''தேம்பொழில் குன்றெயில் தென்னவனைத்**
**திசைப்பச் செருமேல் வியந்து அன்றுசென்ற**
**பாம்புடைப் பல்லவர்கோன் பணிந்த**
**பரமேச்சுர விண்ணகர மதுவே.''**[1]

என்று அவர் கூறியது காண்க.

---

[1] பெரிய திருமொழி. 2-ஆம் பத்து. 9-ஆம் திருமொழி - 5

உத்திரமேரூரில் உள்ள சுந்தரவரதப் பெருமாள் கோயில் பல்லவ அரசர் கட்டிய மாடக் கோயிலாகும். இக் கோயிலில் துவாரபாலகர் உருவங்கள் முடிதரித்த அரசர் உருவங்கள்போல் இருக்கின்றன. இத் துவாரபாலகருக்கு இரண்டு கைகள் உள்ளன. இந்தத் துவாரபாலகரின் கிரீடத்துக்கு மேலே பாம்புப் படம் எடுத்தது போன்ற உருவம் அமைக்கப் பட்டிருக்கிறது. இத் துவாரபாலகருக்குச் சூது ராஜன் என்று பெயர் கூறுகிறார்கள். சூது என்பதற்கும் பாம்பு, நாகம் என்னும் பொருள் கூறப்படுகிறது. சூதுராஜன் என்று கூறப்படுகிற இந்தத் துவாரபாலகரின் உருவம் பல்லவ அரசரின் உருவம்போலும். பல்லவ அரசன் கட்டிய கோயிலில், நாகப்பாம்பு படத்துடன் பல்லவ அரசர் உருவம் துவார பாலகராக அமைக்கப்பட்டிருப்பது பொருத்தமானதுதான்.

எனவே, கொடும்பாளூர் சிற்றரசன் நிருபகேசரி தனது இளமை வயதில் பாம்புகளோடு வளர்ந்தான் என்று மூவர் கோயில் சாசனம் கூறும் கருத்து என்னவென்ன வென்றால் அவன் நாக பரம்பரையினரான பல்லவ அரசர்களோடு வளர்ந்தான் என்பதே. இந்த நிருபகேசரி, சிம்மவிஷ்ணு என்னும் பல்லவ அரசன் காலத்திலும் அவன் மகன் முதலாம் மகேந்திரவர்மன் காலத்திலும் இருந்தவன் என்று தெரிகிறான்.

நிருபகேசரியின் மகன் **பரதுர்க்க மர்த்தனன்** என்பவன் இவனுக்கு **வாதாபிஜித்** என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. வாதாபிஜித் என்றால், வாதாபி நகரத்தை வென்றவர் என்பது பொருள். பரதுர்க்கமர்த்தனனுடைய மகன் **சமராபிராமன்** என்பவன். இவன், யதுவம்சகேது என்றும், சோழன் மகளான அநுபாமை என்பவளை மணந்தவன் என்றும் கூறப்படுகிறான். அன்றியும் அதிராசமங்கலத்தில் **சளுக்கியனை வென்றவன்** என்றும் கூறப்படுகிறான்.

கொடும்பாளூர் அரசர்களாகிய பரதுர்க்க மர்த்தனனும், அவன் மகன் சமராபிராமனும் மாமல்லனான நரசிம்மவர்ம பல்லவன் காலத்தில் இருந்தவர்கள். அன்றியும் அவனுக்கு நண்பராகவும் இருந்தவர்கள். நரசிம்மவர்மன் மீது சளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசி படையெடுத்து வந்தபோது, அவனை நரசிம்மவர்மன் போரில் கொன்று, பிறகு அவனுடைய வாதாபி நகரத்தின்மேல் படையெடுத்துச் சென்று அந்நகரைக் கைப்பற்றிக்கொண்டு, வாதாபி கொண்ட நரசிம்மவர்மன் என்று பெயர்பெற்றான் என்று சரித்திரம் கூறுகிறது. புலிகேசியுடன் நரசிம்மவர்மன்

போர்செய்தபோது, கொடும்பாளூர் அரசனான சமராபிராமனும் பல்லவனுடன் சேர்ந்து சளுக்கியனான புலிகேசியை வென்றான் போலும். ஆகவே, இவன் சளுக்கியனை வென்றவன் என்று பெயர்பெற்றான்.

இவனுடைய தந்தையாகிய பரதுர்க்கமர்த்தனன், நரசிம்மவர்மன் சார்பாக வாதாபி நகரப்போரில் கலந்து கொண்டு வாதாபி நகரத்தை வென்று ''வாதாபிஜித்'' என்னும் பெயரையும் பெற்றான். இதனால், கொடும்பாளூர் அரசர்களாகிய இவர்கள், நரசிம்மவர்மன், புலிகேசியை வெல்வதற்குத் துணையாக இருந்தார்கள் என்பது தெரிகிறது.

இது இன்னொரு விதத்திலும் உறுதிப்படுகிறது. புலிகேசியின் மகனான முதலாம் விக்ரமாதித்தியன், தன் தந்தையான புலிகேசியின் இராச்சியத்தின் தென்பகுதியை மூன்று அரசர்கள் சேர்த்து கைப்பற்றி னார்கள் என்று தன் சாசனம் ஒன்றில் கூறுகிறான். அப்படியானால் புலிகேசியை வென்றவர் மூன்று அரசர்கள் என்று தெரிகிறது. அம்மூவர் யாவர்? மாமல்லனா நரசிம்மவர்மன் ஒருவன். அவனுக்கு உதவியாக இருந்த இலங்கை மன்னன் மானவம்மா என்னும் மானவர்மன் மற்றொரு வன். புலிகேசியை எதிர்த்த மூன்றாவது அரசன் யார்? இதற்கு விடை, கொடும்பாளூர் மூவர் கோவில் சாசனம் கூறுகிறது: புலிகேசியை எதிர்த்து வென்ற மூன்றாவது அரசன். (அரசர்) கொடும்பாளூர் மன்னன் பரதுர்க்க மர்த்தனனும் அவன் மகன் சமராபிராமனும் ஆவர்.

எனவே, மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில், கொடும்பாளூர் நாட்டை யரசாண்ட கொடும்பாளூர் வேளிரான சிற்றரசர்கள், பல்லவருக்கு உதவியாக இருந்தார்கள் என்பது தெளிவாகிறது.

மூவர் கோயில் சாசனத்தை ஆராய்ந்த சில சரித்திர ஆசிரியர்கள், பரதுர்க்க மர்த்தனனும் சமராபிராமனும், மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தவர் அல்லர் என்றும் பிற்காலத்தவர் என்றும் கூறுகிறார்கள். அவர்கள் கூற்று ஆராய்ச்சிக்குப் பொருந்தவில்லை;[1]

**பாண்டிய நாடு**

கொடும்பாளூருக்குத் தெற்கே பாண்டிய நாடு இருந்தது. நரசிம்ம வர்மன் காலத்திலே, பாண்டிய நாட்டை அரசாண்டவன் **நெடுமாறன்**

---

[1] பின்னிணைப்பு 5 - காண்க.

என்னும் பாண்டியன். இவன் சைவ அடியார்கள் அறுபத்து மூவரில் ஒருவன். ''நிறைக் கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடு மாறன்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் போற்றப்பட்டவன் இவனே. பெரியபுராணத்தில் கூன்பாண்டியன் என்னும் நெடுமாறன் என்றும் இவன் கூறப்படுகிறான். வேள்விக்குடி செப்பேட்டுச் சாசனம் அரிகேசரி, அசமசமன், மாறவர்மன் என்று இவனைக் கூறுகிறது. சின்னமனூர் சிறிய செப்பேட்டுச் சாசனம் அரிகேசரி, அசமசமன், அலங்க்யவிக்ரமன், அகாலகாலன், மாரவர்மன் என்று இவன் பெயர்களைக் கூறுகிறது.

பாழி, திருநெல்வேலி, செந்நிலம், புலியூர் முதலிய இடங்களில் நடைபெற்ற போர்களில் இவன் வெற்றி கண்டான்; பலமுறை கேரள (சேர) அரசனை வென்றான் என்று சாசனங்கள் இவனைப் புகழ்கின்றன. இறையனார் அகப்பொருள் உரையின் இடையிடையே மேற்கோள் காட்டப்படுகிற கோவைச் செய்யுள்கள் (பாண்டிக் கோவை) இவன்மீது பாடப்பட்டன என்பர்.

பாண்டியன் நெடுமாறன் முதலில் சமண சமயத்தவனாக இருந்தான். பின்னர், திருஞானசம்பந்தரால் சைவனாக மாற்றப்பட்டான். இவன் அரசியார் மங்கையர்க்கரசியார். இவர், பல்லவ அரசரின் கீழ் சிற்றரசராக இருந்த சோழ அரசனுடைய மகளார். குலச்சிறையார் என்பவர் இவ்வர சனின் அமைச்சர். இவ்வரசன், அரசி, அமைச்சன் ஆகிய மூவரும், திரு நாவுக்கரசு சுவாமிகள் பாண்டிய நாட்டில் தலயாத்திரை செய்தபோது அவரை வரவேற்று உபசரித்தார்கள்.[1] இம் மூவரும் சைவநாயன்மார் திருக் கூட்டத்தில் சேர்க்கப்பட்டனர். இவர்கள் வரலாற்றைப் பெரியபுராணத்தில் காணலாம்.

இவ்வரசனை, வேள்விக்குடிச் செப்பேட்டுச் சாசனம் இவ்வாறு கூறுகிறது:

51. ''.... மற்றவற்குப் பழிப்பின்றி வழித்தோன்றி உதயகிரி மத்யம
52. த்துறு சுடர்போலத் தெற்றென்று திசை நடுங்க மற்றவன் வெளிற்பட்டுச்சூ
53. ழியானை செலவுந்திப் **பாழி**வாய் அமர்கடந்து வில்வேலிக் கடற்றானையை

---

[1] பின்னிணைப்பு: 6 - காண்க.

54. **நெல்வேலிச்** செறுவென்றும் விரவிவந்தணையாத **பரவரைப்** பாழ்படுத்

55. துமறு காலினம் புடை திளைக் குங் குறுநாட்டவர் குலங் கெடுத்து

56. ங் கைந்நலத்த களிறுந்திச **செந்நிலத்துச்** செறுவென் றும் பாரளவுந்

57. தனிச் செங்கோற் **கேரளனைப்** பலமுறையு முரிமைச் சுற்றமோடவர் யானை

58. யும் புரிசைம்மதிற் **புலியூர்ப்** பகனாழிகை இறவாமை இகலா

59. ழியுள் வென்று கொடும் வேலாழியும் வியன் பரம்புமே லாமை சென்

60. றெறிந் தழித்தும் ஹிரண்ய கர்ப்பமுந் துலாபாரமுந் தரணிமிசைப் பலசெய்து

61. அந்தணற்கும் அசக்தற்கும் வந்தணைக என்றீத்தளித்த மகரிகை அணிமணி

62. நெடுமுடி **அரிகேசரி அசமசமன்ஸ்ரீமாறவர்மன்**''....[1]

இந்தச் சாசனத்தின் வட மொழிப்பகுதி இவ்வாறு கூறுகிறது:

''கும்பசம்பவன் (அகத்திய முனிவர்) கையினால் பட்டாபிஷேகம் செய்யப்பட்ட மன்னர்கள் அரசாண்டு கழிந்த பின்னர், மூவுலகத்தாலும் போற்றப்பட்ட நற்குணங்களையும் புகழையும் உடைய மாரவர்மன் என்னும் அரசன் பிறந்தான். இவன், ஆதிசேஷன் போன்ற தனது பெருந்தோளினால் பூபாரத்தை நெடுங்காலந் தாங்கிக் கொண்டு, ஆதிசேஷனுடைய இளைப்பை மாற்றினான். புலவரைக் காத்த இவன் போர்க்களத்தில் பகைவர் கூட்டத்தை வென்று அமிர்த கர்ப்பத்தில் பிறந்து (இரணிய கர்ப்பம் புகுந்து) முறைப்படி பொற்குவியலைத் தானம் செய்தான்.''[2]

சின்னமனூர் சிறிய செப்பேட்டுச் சாசனம் இவனை இவ்வாறு கூறுகிறது:

15. ''பகைப் பூபர் தலைபனிப்பப் பரமேஸ்வரன் வெளிற்பட்டு அரிகேச

16. ரி அஸமஸமன் அலங்க்யவிக்ரமன் அகாலகாலன் னெனத்தன

---

1. Velvikudi grant of Nedunjedaiyan, PP. 291-309. Epigraphia Indica: Vol. X-VII.

2. do do do

17. க்குரியன பலகுண நாமமுலகுமுழு துகந்தேத்தப் பரா
18. வனிபகுல மிறைஞ்சப் பாரகலம் பொதுநீக்கித் தராசுரா
19. திடரகலத் தனவர்ஷம் பொழிதற்கு வலாஹத்தின் விரதம்கொண்
20. டு துலாபார மினிதேறி ஸரண்யனா யுலகளித்து ஹிரண்ய
21. கர்ப்ப மிருகால் புக்கு கோஸஹஸ்ரத் துடக்கத்துக் குருதா
22. னம் பல செய்து வாசவன்போல வீற்றிருந்தனன் வஸு
23. தாபதி **மாரவர்மன்**''..................[1]

மாரவர்மன், பல அரசர்களைப்போரில் வென்றதோடு சேர அரசனையும் வென்று அந்நாட்டைத் தன் பாண்டிய நாட்டுடன் சேர்த்துக் கொண்டான். ஆகையால் இவன் பரமேசுவரன் என்றும் கூறப்படுகிறான்.

**சேரநாடு**

பாண்டிய நாட்டிற்கு மேற்கே சேரநாடு இருந்தது. இந்தக் காலத்தில் சேரநாட்டில் இருந்த சேர அரசன் பெயர் தெரியவில்லை. ஆனால், இந்தச் சேரனைப் பாண்டியன் நெடுமாறன் பலமுறை வென்றான் என்று சின்ன மனூர்ச் சாசனம் கூறுகிறது. இதனால், சேரநாடு பாண்டிய அரசுக்குக் கீழடங்கியிருந்தது என்பது தெரிகிறது.

**இலங்கைத் தீவு**

தமிழ்நாட்டின் அருகிலேயுள்ளது இலங்கைத் தீவு. இதற்குச் சிங்களத்தீவு என்றும் பெயர் உண்டு. இது தமிழ் நாட்டுடன் நெருங்கிய தொடர்புடையது. மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில், இலங்கைத் தீவின் அரசியல் நிலை எவ்வாறு இருந்தது என்பதைப் பார்ப்போம்.

இக்காலத்தில் சிங்களத்தீவை அரசாண்ட மன்னன் கஸ்ஸபன் என்பவன். இவனை இரண்டாங் கஸ்ஸபன் என்பர். கஸ்ஸபனுக்குப் பகைவனாக இருந்து அரசாட்சியைக் கைப்பற்றுவதற்காக அவனுடன் போராடியவன் தாட்டோபதிஸ்ஸன் என்பவன். இவ்விருவருக்கும் நடந்த போரிலே கஸ்ஸபன் வெற்றியடைந்தான். தோல்வியடைந்த தாட்டோ பதிஸ்ஸன், முடி முதலிய அரச சின்னங்களைத் தன்னுடன் எடுத்துக் கொண்டு தமிழ்நாட்டிற்கு வந்து விட்டான். ஆகவே, கஸ்ஸபன் முடிதரிக்

[1] Copper Plate grants from Sinnamanur. P. 463. South Indian Inscriptions: Vol III, Part IV.

காமலே இலங்கையை அரசாண்டான். தமிழ்நாட்டிற்கு வந்த தாட்டோ பதிஸ்ஸன் படை திரட்டிக்கொண்டு இலங்கைக்குச் சென்று மறுபடியும் கஸ்ஸபனுடன் போர் செய்தான். அந்தப் போரிலே தாட்டோ பதிஸ்ஸன் உயிர் துறந்தான், ஆனால், அவனுடன் இருந்த அவன் மருகனான ஹத்ததாட்டன் தமிழ்நாட்டில் வந்து அடைக்கலம் புகுந்தான்.

கஸ்ஸபன் பல ஆண்டுகள் அரசாண்டான் இவனுக்குப் பல மக்கள் இருந்தார்கள். ஆனால், எல்லோரும் வயது நிரம்பாத சிறுவர்கள். இவர்களில் மானகன் (மானா) என்பவன் மூத்தவன். கஸ்ஸபன் நோய்வாய்ப்பட்டு, தான் உயிர் பிழைக்க முடியாதென்று அறிந்து, உரோகண நாட்டிலிருந்த தன் தங்கைமகனான மானா என்பவனை அழைத்து, அவனிடம் தன் மக்களை ஒப்படைத்து, அவர்கள் வயது அடையும் வரையில் அரசாட்சியை நடாத்தும்படி அவனை நியமித்தான். அவ்வாறே, மருகனான மானா, கஸ்ஸபனுடைய மூத்தமகனான மானாவையும் அவன் தம்பியரையும் தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டான். கஸ்ஸபன் நோயினால் இறந்தான்.


பிறகு மானா, உரோகண நாட்டிலிருந்த தன் தந்தையாகிய **தப்புலன்** என்பவனை அநுராதபுரத்திற்கு அழைத்து அவனை இலங்கைக்கு அரசனாக்கினான். இந்தப் தப்புலன் என்பவன், காலஞ்சென்ற கஸ்ஸபனுடைய தங்கையின் கணவன். தப்புலன் இலங்கைக்கு மன்னன் ஆக்கப்பட்டதை அநுராதபுரத்திலிருந்த தமிழர்கள் விரும்பவில்லை. இக்காலத்தில் இலங்கையின் தலைநகரமான அநுராதபுரத்தில் தமிழர்கள் அதிகமாக இருந்தனர். தமிழரின் செல்வாக்கும் அதிகமாக இருந்தது. ஆகவே தமிழர்கள் தலைநகரமாகிய அநுரையைக், கைப்பற்றிக்கொண்டு, தமிழ் நாட்டில் புகல் அடைந்திருந்த ஹத்ததாட்டனை இலங்கைக்கு வரும்படி அழைத்தார்கள். ஹத்ததாட்டன் உடனே தமிழ்ச் சேனையுடன் புறப்பட்டு அநுரைக்கு வந்தான். இதையறிந்த தப்புலன், அரண்மனையிலிருந்த பொன்னையும் பொருளையும் எடுத்துக்கொண்டு அநுரையை விட்டுத் தனது உரோகண நாட்டிற்கு போய்விட்டான். அவன் மகனான மானாவும் கிழக்கு மாகாணத்திற்குப் போய்விட்டான். ஆகவே, அநுரைக்கு வந்து சேர்ந்த ஹத்ததாட்டான் எதிர்ப்பு இல்லாமல் அரசனானான். ஆனால், கிழக்கு மாகாணத்தில் இருந்த மானா, படையெடுத்து வந்து ஹத்த தாட்டனுடன் போர் செய்தான். அப்போரிலே மானா இறந்தான். தன் மகன்

மானா இறந்த செய்தியைக் கேட்டு உரோகணை நாட்டிலிருந்து தப்புலன் துயரமடைந்து இறந்து போனான் இந்தத் தப்புலன் இலங்கை மன்னனாக ஆறுநாட்கள் மட்டும் இருந்தான்.

மானாவைக் கொன்று இலங்கையின் மன்னன் ஆன ஹத்ததாட்டன் தன் பெயரைத் தாட்டோபதிஸ்ஸன் என்று மாற்றிக் கொண்டான். இவனைத் தட்டோபதிஸ்ஸன் இரண்டாமவன் என்று சரித்திர நூலோர் கூறுவர். இவன் தன் சிற்றப்பன் மகனான அக்கபோதி என்பவனைத் தக்கிண தேசத்திற்கு இளவரசனாக்கினான்.

மானா என்பவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த கஸ்ஸப அரசனுடைய மூத்த மகனான மானா என்பவன், இப்போது வயது நிரம்பப்பெற்று, மலையநாட்டை அரசாண்ட ஒரு சிற்றரசனுடைய மகளான சங்கை என்பவளை மணஞ் செய்துகொண்டு, உத்தர தேசத்தில் (இலங்கையின் வட பகுதியில்) ஒருவரும் அறியாமல் மறைந்து வசித்திருந்தான். கஸ்ஸப அரசன் மகனான மானா தன் நாட்டிலே மறைந்து வாழ்கிறான் என்பதையும் அவன் என்றைக்காவது தன்னை எதிர்த்து அரசாட்சியைக் கைப்பற்றுவான் என்பதையும் ஒற்றரால் அறிந்த தட்டோபதிஸ்ஸன் அவன்மேல் கண் வைத்திருந்தான். தாட்டோபதிஸ்ஸன் தன்னைத் தெரிந்து கொண்டான் என்பதை யுணர்ந்த மானா, உடனே புறப்பட்டுக் காஞ்சிபுரம் வந்து, நரசீகன் (நரசிம்மவர்மன்) இடத்தில் தான் இன்னான் என்பதையும் தன் வரலாற்றையும் கூறி, அவனிடம் அடைக்கலம் புகுந்தான். நரசிம்மவர்மன் மானாவுக்கு அடைக்கலங் கொடுத்து ஆதரித்தான். பிறகு மானா இலங்கையிலிருந்த தன் மனைவியைக் காஞ்சிபுரத்திற்கு அழைத்துக் கொண்டு அவளுடன் வாழ்ந்து வந்தான். இவன் பல்லவர்களைப் போலவே வர்மன் என்னும் பட்டத்தைத் தன் பெயருடன் சேர்த்து மானவர்மன் என்று வைத்துக்கொண்டான். இலங்கை நூல்கள் மாணவர்மன் என்பதை மான வம்மா என்று கூறுகின்றன. மானவர்மன் பல ஆண்டுகள் நரசிம்மவர்மன் ஆதரவில் இருந்தான். சளுக்கியவேந்தன் புலிகேசி, பல்லவ நாட்டின் மேல் படையெடுத்து வந்தபோது, மானவர்மன் நரசிம்மவர்மனுக்கு உதவியாகப் போர் செய்தான்.

சில ஆண்டு கழிந்தபிறகு நரசிம்மவர்மன், மானவர்மனுக்குத் தன் சேனையைக் கொடுத்து இலங்கையரசைக் கைப்பற்றிக் கொள்ளும்படி


இலங்கை
பழைய பிரிவுகள்
யாழ்ப்பாணம்
அநுரை
புலத்தி
மாவலிகங்கை
உரோகணம்
கதிர்காமம்

அனுப்பினான். மானவர்மன் சேனையுடன் இலங்கைக்குச் சென்று அந் நாட்டின் வடபகுதியைப் பிடித்துக்கொண்டு அநுராதபுரத்தின்மேல் சென்றான். இதையறிந்த தட்டோபதிஸ்ஸன் அநுரையை விட்டு ஓடினான். மானவர்மன் அநுரையைக் கைப்பற்றிக் கொண்டான். அவ் வமயத்தில், நரசிம்மவர்மன் காஞ்சிபுரத்தில் நோயாய்க் கிடக்கிறான் என்று ஒரு வதந்தி பரவிற்று. அதைக்கேட்ட பல்லவச் சேனை வீரர்கள் உடனே காஞ்சி புரத் திற்குப் போய்விட்டார்கள். மானவம்மா சேனைப் பலமில்லாமல் இருப்பதை யறிந்து, தாட்டோபதிஸ்ஸன் அநுரையின்மேல் படையெடுத்து வந்தான். சேனைப் பலமில்லாத நிலையில், தாட்டோபதிஸ்ஸனுடன் போர்செய்து அறியாமையால் உயிரை இழப்பதைவிட, தப்பி ஓடி உயிர்பிழைத்து மற்றொருமுறை வந்து அரசாட்சியைக் கைப்பற்றலாம் என்று எண்ணி மானவர்மனும் அநுரையைவிட்டுக் காஞ்சிபுரம் போய்விட்டான். ஆகவே, தாட்டோபதிஸ்ஸன் பழையபடியே இலங்கையை அரசாண்டான்.

தாட்டோபதிஸ்ஸன் 12 ஆண்டு அரசாண்டு காலமான பிறகு, இளவர சனாயிருந்த அக்கபோதி அரசனானான். இவனை அக்கபோதி நாலாமவன் என்று சரித்திரக்காரர்கள் கூறுவார்கள். இவனுக்கு ஸ்ரீ சங்கபோதி என்னும் சிறப்புப் பெயரும் உண்டு.

இக்காலத்தில் அநுரையில் தமிழரின் செல்வாக்கு அதிகமாக இருந்ததென்று முன்னமே கூறினோம் அல்லவா? அக்கபோதியின் காலத்தில் தமிழரின் செல்வாக்கு உச்சநிலையில் இருந்தது. **பொத்த குட்டன், மகாகந்தகன்** என்னும் இரண்டு தமிழ்த் தலைவர்கள் இலங்கை அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகத்தில் அமர்ந்து அதிகாரபலம் பெற்றிருந்தார்கள். தமிழர்களாகிய இவர்கள் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் பொத்தகுட்டன் பெருஞ் செல்வனாகவும் அரசாங்கத்தில் அதிக பலம் உள்ளவனாகவும் இருந்தான். இலங்கையின் மன்னர்களை அரச பதவியிலிருந்து விலக்கவும் நியமிக்கவும் வல்லமையுடையவனாக இருந்தான். பௌத்தச் சமயத்திற்கு இவன் பல தான தருமங்களைச் செய்தான். மாடம்பிய பரிவேணை என்னும் பௌத்தக் கலாசாலையைக் கட்டி அதற்குப் பல ஊழியர்களைத் தானமாகக் கொடுத்ததோடு தந்தவாயிக சாட்டிகா, நித்திலவெட்டி என்னும் கிராமங்களையும் நில புலங்களையும்

அம்பலவாபி என்னும் ஏரியையும் அந்தச் சாலைக்குத் தானம் செய்தான்.[1] மேலும், அபயகிரி விகாரையைச் சேர்ந்த கப்பூர பரிவேணையிலும், குருண் டபில்லக விகாரையிலும் மகாராஜகர விகாரையிலும் பாசாடைகளை இவன் கட்டினான். விகாரைகளுக்கு மூன்று கிராமங்களைத் தானம் செய்தான்.

மற்றொரு தமிழ்த் தலைவனான மகா கந்தகனும் பௌத்த மதத்திற்குத் தான தருமங்களைச் செய்தான். இவன் தன் பெயரினால் கந்தக பரிவேணை என்னும் பௌத்தப் பள்ளியைக் கட்டினான்.

இவ்விரு தமிழர்களை அரசியல் தலைவர்களாகக் கொண்டு இலங்கையை யரசாண்ட அக்கபோதி, பதினாறு ஆண்டு அரசாண்டான். பிறகு இவன் பொலநுவரா என்னும் புலத்திநகரத்தில் காலமானான்.

தமிழ்த் தலைவனாகிய பொத்தகுட்டன், இளவரசனாக இருந்த தாட்டாசிவன் என்பவனைச் சிறையில் அடைத்துவிட்டு, **தத்தன்** என்பவனை அழைத்து வந்து அவனுக்கு முடிசூட்டி இலங்கைக்கு அரசனாக்கினான். இந்தத் தத்தன் இலங்கை யரசரின் பரம்பரையைச் சேர்ந்தவன்; தனபிட்டி என்னும் ஊரில் இருந்தவன். இரண்டு ஆண்டுகள் அரசாண்ட பிறகு இந்தத் தத்தன் காலமானான். ஆகவே பொத்தகுட்டன், உணாநகரத்தில் இருந்த **ஹத்ததாட்டன்** என்பவனை அழைத்து அவனுக்கு முடிசூட்டி அவனை இலங்கைக்கு அரசனாக்கினான்.

ஹத்ததாட்டன் அரசாட்சியை ஏற்றுக்கொண்ட ஆறாம் திங்களில், நரசிம்மவர்மனிடம் அடைக்கலம் புகுந்திருந்த மானவர்மன், பல்லவச் சேனையுடன் இரண்டாம் முறையாக இலங்கையின்மேல் படையெடுத்து வந்தான். ஹத்ததாட்டன், பொத்தகுட்டன் உதவியுடன் மானவர்மனை எதிர்த்துப் போரிட வந்தான். இருவர் சேனையும் ஒன்று சேர்ந்தால் எதிர்த்துப் போரிட முடியாதென்பதையறிந்த மானவர்மன், பொத்தகுட்டன் சேனையையும் ஹத்ததாட்டன் சேனையையும் ஒன்று சேராதபடி பிரித்துவைத்து ஹத்ததாட்டனுடன் போர்செய்து வெற்றியடைந்தான். ஹத்ததாட்டன் போர்க்களத்திலே உயிர் இழந்தான். மானவர்மன் இலங்கைக்கு அரசனானான்.

மானவர்மன் வெற்றியடைந்த படியினாலே, பொத்தகுட்டன் மலைய நாட்டிலுள்ள மேருகுண்டம் என்னும் ஊருக்குப் போனான். மேருகுண்

---

[1] E.Z.II, P.10.Note 5.

டரத்தை யரசாண்ட சிற்றரசன், பொத்த குட்டனுடைய உயிர் நண்பன். இவன் இப்போது தர்மசங்கடமான நிலையை யடைந்தான். எப்படியென்றால், மானவர்மன் இப்போது இலங்கைக்கு மன்னனாய்விட்டான். அவனுக்குப் பகைவனாகிய பொத்தகுட்டனோ தன்னுடைய உயிர் நண்பன். பொத்த குட்டனுக்கு அடைக்கலங்கொடுத்து ஆதரித்தால் அது அரசத் துரோக மாகும். அவனை ஆபத்துக்காலத்தில் ஆதரிக்காவிட்டால், அது நண்ப னுக்குத் துரோகம் செய்ததாகும். இந்தத் தர்மசங்கட நிலையில் அகப்பட்ட இந்த உத்தமன், தன் நண்பனுக்கும் துரோகம் செய்யாமல், அரச துரோகத்துக்கும் உட்படாமல், தன் உயிரையே மாய்த்துக் கொள்ளத் துணிந்தான். தன் நண்பனான பொத்தகுட்டனை வரவேற்றுத் தன் இல்லத்தில் இடங்கொடுத்தான். பிறகு, நஞ்சு இடப்பட்ட அப்பத்தைத் தின்று தன் உயிரை விட்டான்.

இவன் இவ்வாறு செய்ததைப் பின்னர் அறிந்த பொத்தகுட்டன், தானும் நஞ்சு கலந்த அப்பத்தை உண்டு உயிர்நீத்தான். தான் விரும்பியபடி யெல்லாம் இலங்கையரசர்களை அமைத்து இலங்கை ஆட்சியை நடாத்திவந்த பொத்தகுட்டனுடைய வாழ்வு கடைசியில் இவ்வாறு முடிவுற்றது.

நாடுவிட்டோடி நரசிம்மவர்மனிடம் அடைக்கலம் புகுந்திருந்த மானவர்மன் நெடுங்காலத்திற்குப்பிறகு, நரசிம்மவர்மன் உதவியினாலே இலங்கையின் மன்னனானான். இவன் அரசனானது நரசிம்மவர்மனுடைய இறுதிக் காலத்தில் ஆகும்.[1]

மானவர்மனை முதலாம் மானவர்மன் என்பர் வரலாற்றாசிரியர். இவன் கி.பி. 668 முதல் 703 - வரையில் இலங்கையை அரசாண்டான்.[2]

*

---

[1] J.R.A.S.1913, P. 523.

[2] பின்னிணைப்பு: 7 காண்க.

# சமயம்

## 1. சமண சாக்கிய மதங்கள்

கி.பி. 5,6,7-ஆம் நூற்றாண்டுகளில் சமண சமயமும் சாக்கிய (பௌத்த) சமயமும் தமிழ்நாட்டிலே பெரிதும் செழித்து வளர்ந்திருந்தன. முக்கியமாக 7-ஆம் நூற்றாண்டில் இந்த மதங்களின் செல்வாக்கும், ஆதிக்கமும் மிக உச்சநிலையில் இருந்தன. சைவ வைணவ சமயங்கள் மங்கிக் கிடந்தன. மக்கள் பெரிதும் சமணராகவும் பௌத்தராகவும் இருந்தனர். ஏன்? அரசருங்கூட சமண மதத்தைத் தழுவியிருந்தனர். கி.பி.600 முதல் 630 வரையில் அரசாண்ட மகேந்திரவர்மன் என்னும் பல்லவ மன்னன் சமண சமயத்தவனாக இருந்தான். அவனைத் திருநாவுக்கரசர் சைவசமயத்தில் சேர்த்தார். திருநாவுக்கரசரே முதலில் சமண சமயத்தில் இருந்தவர்; பிறகுதான் சைவரானார். பாண்டிநாட்டை அரசாண்டு வந்த நெடுமாறன் என்னும் பாண்டிய அரசனும் சமண சமயத்தவனே. அவனைத் திருஞானசம்பந்தர் சைவராக்கினார்.

இந்த 7-ஆம் நூற்றாண்டிலே சைவ அடியார்களான நாயன்மார்களும் வைணவ அடியார்களான ஆழ்வார்களும் ''பக்தி'' இயக்கத்தை ஆயுத மாகக்கொண்டு சமணசாக்கிய சமயங்களை அழிக்கவும், சைவ வைணவ சமயம் வளர்க்கவும் முற்பட்டார்கள்.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலே சமணசமயமும் பௌத்த மதமும் தமிழ்நாட்டிலே செழித்திருந்தது என்பதற்குச் சைவ நூல்களே சான்று கூறுகின்றன. இந் நூற்றாண்டின் தொடக்கத்திலே வாழ்ந்திருந்த சிவபாத இருதயர், சமணசாக்கிய மதங்கள் மிகுந்திருந்ததைக் கண்டு துன்பம் அடைந் தார் என்று பெரியபுராணம் கூறுகிறது.

*''மேதினிமேல் சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே*
*ஆதிஅரு மறைவழக்கம் அருகிஅரன் அடியார்பால்*
*பூதிசா தனவிளக்கம் போற்றல்பெறா தொழியக்கண்டு*
*ஏதமில்சீர்ச் சிவபாத இருதயர்தாம் இடருழந்தார்.''[1]*

*''செய்வகை இடையேதப்பும் தென்னவன் பாண்டிநாட்டு*
*மெய்வகை நெறியில்நில்லா வினை அமண் சமயம் மிக்குக்*
*கைவகை முறைமைத் தன்மை கழியமுன் கலங்குங்காலை.''*

*''தென்னவன் தானும்முன்செய் தீவினைப் பயத்தினாலே*
*அந்நெறிச் சார்வுதன்னை அறமென நினைந்துநிற்ப*
*மன்னிய சைவவாய்மை வைதிக வழக்க மாகும்*
*நன்னெறி திரிந்துமாறி நவைநெறி நடந்ததன்றே.''*

*''பூழியர் தமிழ்நாட்டுள்ள பொருவில்சீர்ப் பதிகள்எல்லாம்*
*பாழியும் அருகர்மேவும் பள்ளிகள் பலவுமாகிச்*
*சூழிருட் குழுக்கள் போலத் தொடைமயிற் பீலியோடு*
*மூழிநீர் கையிற்பற்றி அமணரே யாகிமொய்ப்ப.''*

*''பறிமயிர்த் தலையும்பாயும் பீலியும் தடுக்கும்மேனிச்*
*செறியுமுக் குடையுமாகித் திரிபவர் எங்குமாகி*
*அறியுமச் சமய நூலின் அளவினில் அடங்கிச்சைவ*
*நெறியினிற் சித்தஞ்செல்லா நிலைமையில் நிகழுங்காலை.''[2]*

பாண்டிநாட்டு ஆனைமலை முதலிய எட்டுக் குன்றுகளிலே சமண முனிவர்கள் வசித்தார்கள் என்று பெரிய புராணமும், ஞானசம்பந்தரின் ஆலவாய்ப் பதிகமும் கூறுகின்றன. இம் மலைகளில் உள்ள சாசனங்களும் இதற்குச் சான்றாக இருக்கின்றன. இதற்கு ஒப்பவே, நரசிம்மவர்மன் காலத்தில் (கி.பி. 640-இல்) தமிழ் நாட்டிற்கு வந்த ஹியூங் சுவாங் என்னும் சீனநாட்டுப் பௌத்த யாத்திரிகரின் யாத்திரைக் குறிப்பும் கூறுகிறது. காஞ்சிபுரத்தில் 100க்கு மேற்பட்ட பௌத்தப்பள்ளிகள் இருந்தன என்றும்,

---

[1] திருஞான சம்பந்தர் - 18.

[2] திருஞானசம்பந்தர். 599, 600, 601, 602.

அவற்றில் 1000க்கு மேற்பட்ட பௌத்தபிக்குகள் இருந்தனர் என்றும் கூறுகிறார். 80க்கு மேற்பட்ட ஆலயங்கள் இருந்தன என்றும் அவைகளில் பெரும்பாலும் திகம்பரர்களுக்கு (சமணர்களுக்கு) உரியது என்றும் எழுதுகிறார். இங்கு அசோக சக்கரவர்த்தியாற் கட்டப்பட்ட ஒரு பௌத்தப்பள்ளி இருந்ததையுங் கூறுகிறார். இலங்கைத் தீவிலிருந்து 300 பௌத்த பிக்குகள் காஞ்சிபுரத்திற்கு வந்ததையும் அவர்களுடன் இந்த யாத்திரிகர் உரையாடியதையும் குறிப்பிடுகிறார்.

பாண்டிநாட்டின் தலைநகரத்தில் அசோக சக்கரவர்த்தியின் தம்பியாகிய மகேந்திரன் கட்டிய பௌத்தவிகாரை இருந்ததென்றும் இங்குப் பௌத்தர்கள் சிறுபான்மையோராகவும் திகம்பரர் (சமணர்) பெரும் பான்மையோராகவும் இருந்தனர் என்றும் எழுதுகிறார்.[1]

தமிழ்நாட்டில் மட்டும் பௌத்த சமண சமயங்கள் செழித்திருந்தன வென்று கருதவேண்டா; வடநாட்டிலும் இந்த மதங்கள் பெரிதும் பரவி யிருந்தன. சைவ வைணவ மதங்கள் (இந்துமதங்கள்) குன்றி மறைந்திருந்தன.

தமிழ்நாட்டிலே இந் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே நாயன் மார்களும் ஆழ்வார்களும் சமண பௌத்த சமயங்களை அழிக்கச் சமயப் போர் தொடுத்துவிட்டார்கள். இவர்களுக்குக் கிடைத்த தகுந்த வாய்ப்பான ஆயுதம் **பக்திக்** கொள்கையே. இவர்கள் நாடெங்கும் சென்று, சமண பௌத்த சமயங்கள் பயனற்றவை என்றும், சைவ வைணவ சமயங்கள் சிறந்தவை என்றும் கூறிப் பிரசாரம் செய்தனர். நாயன்மார்கள் சென்று திருப் பதிகம் பாடிய ஊர்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், அந்த ஊர்களில் அக்காலத்தில் பௌத்தரும் சமணரும் பெரும்பான்மையோராக இருந்ததைக் காணலாம்.

இனி, நரசிம்மவர்மன் காலத்தில் இருந்த சைவ அடியார்களும் வைணவ அடியார்களும் யார் யார் என்பதை ஆராய்வோம்.

---

[1] பின்னிணைப்பு: 3 காண்க.

# 2. சைவசமய அடியார்கள்

நரசிம்மவர்மன் காலத்தில் இருந்த சைவ சமய அடியார்களை ஆராய்வோம். திருநாவுக்கரசர், அப்பூதியடிகள், சிறுத்தொண்டர், திருஞானசம்பந்தர், திருநீலகண்டயாழ்ப்பாணர், நெடுமாற நாயனார், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், திருநீல நக்கர், முருக நாயனார், குங்கிலியக்கலயர் முதலாலன சைவ அடியார்கள் நரசிம்மவர்மன் காலத்தில் இருந்தவர்கள். இவர்களுடைய வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுவோம்.

**திருநாவுக்கரசர்**

இவர், திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வாழ்ந்திருந்த புகழனாருக்கும் மாதினியாருக்கும் மகனாகப் பிறந்து மருணீக்கியார் என்னும் பெயருடன் வளர்ந்து இளமையிலேயே பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். பிறகு அக்காலத்திலே செழித்து வளர்ந்திருந்த சமண சமய நூல் களைக் கற்று அச் சமயத்தை மேற்கொண்டார். இவருடைய கல்வி அறிவு ஒழுக்கங்களைக் கண்ட சமணர், இவருக்குத் தருமசேனர் என்னும் பெயர் கொடுத்துச் சமணசமயத் தலைவராக்கிப் பாடலிபுரத்தில் இருந்த சமண சமய மடத்தின் தலைவராக அமர்த்தினார்கள் நெடுங்காலமாக இவர் சமண சமயத் தலைவராக இருந்தார்.

தருமசேனருடைய முதுமை வயதில் இவருக்குச் சூலைநோய் உண்டாயிற்று. மணிமந்திர ஔஷதங்களினாலும் அந் நோய் தீராதபடி யினாலே, அவர் பெரிதும் வருந்தினார். பிறகு, இவருடைய தமக்கை யாரான திலகவதியாரால் சைவசமயத்தில் சேர்க்கப்பட்டார். பிறகு, இவரு டைய சூலைநோய் தீர்ந்தது. அதுமுதல் பக்தி இயக்கத்தையும் சைவ சமயத்தையும் பரவச் செய்யும் பணியில் இறங்கித் தமது ஆயுள்காலம் வரை யிலும் அவற்றைச் செய்துகொண்டிருந்தார். சைவசமயத்தில் சேர்ந்தபிறகு இவருக்குத் திருநாவுக்கரசர் என்னும் பெயர் உண்டாயிற்று. பல்லவ

அரசனான குணபரன் என்னும் மகேந்திரவர்மன் (கி.பி. 600-630) சமண சமயத்தவனாக இருந்தான். அவ் வரசனைத் திருநாவுக்கரசர் சைவ சமயத்தில் சேர்ந்தார். அந்த அரசன் இறந்தபிறகு அவன் மகனான மாமல்லன் நரசிம்மவர்மன் அரசனானான். இவ் வரசன் காலத்திலும் இவர் வாழ்ந்திருந்தார்.

இவர் மிகுந்த வயதுசென்ற ''தொண்டு'' கிழவராக இருந்தபோது, சீகாழியில் இருந்த ஐந்து வயது சிறுவராகிய திருஞானசம்பந்தரைக் கண்டார். அதுமுதல் இவ்விரு நாயன்மார்களும் நண்பராக இருந்தனர். அப்பூதியடிகள், சிறுத்தொண்டர், திருநீலநக்கர், முருக நாயனார், குங்கிலியக் கலயர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நெடுமாறநாயனார், மங்கையர்க்கரசியார், குலச்சிறைநாயனார் முதலியவர்கள் இவருடன் பழகிய நாயன்மார்களாவர்.

பாண்டியநாட்டிலே அரசுபுரிந்த பாண்டியன் நெடுமாறன் சமணனாக இருந்தான். அவனைத் திருஞானசம்பந்தர் சைவசமயத்தில் சேர்த்தபிறகு, திருநாவுக்கரசர் பாண்டிநாட்டில் தலயாத்திரை செய்தார். அப்போது பாண்டியன் நெடுமாறனும் அரசி பாண்டிமா தேவியாரும் அமைச்சர் குலச் சிறையாரும் இவரை வரவேற்றார்கள். பாண்டிநாட்டு யாத்திரைக்குப் பிறகு திருநாவுக்கரசர் தமது எண்பத்தொன்றாவது வயதில் சிவபதம் அடைந்தார். இவர் உத்தேசம் கி.பி. 569 முதல் 650 வரையில் வாழ்ந்திருந்தார்.[1]

**திருஞானசம்பந்தர்**

சீகாழியிலே சிவபாதவிருதயருக்கும் பகவதியாருக்கும் மகனாகப் பிறந்தவர் திருஞானசம்பந்தர். மூன்றாவது வயதிலே திருவருள் பெற்று, சிவபெருமானை இனிய பாடல்களினாலே பாடித் துதிக்கும் ஆற்றல் அடைந்தார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்னும் பாணர் இவர் பாடிய இசைப்பாட்டுகளை யாழில் அமைத்து வாசித்துக்கொண்டிருந்தார். இவருக்கு முன்பே பக்தியியக்கத்தையும் சைவ சமயத்தையும் பரப்பிவந்த மிக வயோதிகரான திருநாவுக்கரசர், மிக இளையவரான ஞானசம்பந்தரைச் சீகாழிக்கு வந்து கண்டுமகிழ்ந்தார். முதிர்ந்த வயதினரான திருநாவுக்

[1] இந்நூலாசிரியர் எழுதிய மகேந்திரவர்மன் என்னும் நூலைக் காண்க.

கரசரைக் கண்ட இளைஞரான ஞானசம்பந்தர், அவரை அப்பா என்று அழைத்தார் ஆதலினாலே, திருநாவுக்கரசருக்கு அப்பர் என்னும் பெயரும் வழங்கலாயிற்று.

திருஞானசம்பந்தர், பௌத்த ஜைன சமயங்களை யழித்துப் பக்தி இயக்கத்தையும் சைவ சமயத்தையும் நிலைநாட்டுவதில் தமது வாழ்நாளைக் கழித்தார். இவருடன் சிறுத்தொண்டர், திருநீல நக்கர், முருகநாயனார், குங்கிலியக் கலயர் முதலியவர்கள் நண்பராக இருந்தனர். திருநாவுக்கரசு சுவாமிகள், குணபரன் என்னும் மகேந்திரவர்ம பல்லவ அரசனைச் சமணத் திலிருந்து சைவத்திற்கு மாற்றியது போலவே, திருஞானசம்பந்தரும் கூன் பாண்டியன் என்னும் பாண்டியன் நெடுமாறனைச் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்துக்கு மாற்றினார். பின்னர்,

ஞானசம்பந்தரின் பதினாறாவது வயதில் அவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. அத் திருமணத்தின் முடிவில் தோன்றிய ஒளியிலே, ஞான சம்பந்தரும் அத் திருமணத்திலிருந்த மற்ற எல்லோரும் புகுந்து மறைந்தனர் என்று பெரியபுராணம் கூறுகிறது. இவருடைய விரிவான வரலாற்றினைத் திருத்தொண்டர் புராணத்தில் திருஞானசம்பந்த நாயனார் புராணத்தில் காண்க.

## நெடுமாறர்

பாண்டிய மன்னனாகிய இவருக்கு நெடுமாறன் என்று பெயர். கூன்பாண்டியன் என்றுங் கூறுவர். வேள்விக் குடிச் செப்பேட்டுச் சாசனம் இவ்வரசனை அரிகேசரி, அசம சமன், மாறவர்மன் என்று கூறுகிறது. சின்னமனூர்ச் சிறிய செப்பேட்டுச் சாசனம் அரிகேசரி, அசமசமன், அலங்கிய விக்ரமன், அகாலகாலன், மாறவர்மன் என்னும் பெயர்களைக் கூறுகிறது. எனவே இவனுக்கு இப்பெயர்கள் எல்லாம் வழங்கியதாக அறிகிறோம். பாண்டிக்கோவை இவ்வரசன் மீது பாடப்பட்டதென்பர். இவன் வாதாபி கொண்ட நரசிம்மவர்மன் என்னும் அரசன் காலத்தில் இருந்தவன். இவன் காலத்தில், தமிழ்நாடு எங்கும் சமண சமயம் சிறப்பாக இருந்ததுபோலவே, இவனுடைய பாண்டிய நாட்டிலும் சிறந்திருந்தது. இந்த அரசனும் சமண சமயத்தவாக இருந்தான்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாண்டிநாடு சென்று சமண சமயத்தவனாக இருந்த இந்தப் பாண்டியனைச் சைவனாக்கினார்.[1] இவன் சைவ னானாவுடனே 80 வயதுடையவரான திருநாவுக்கரசு நாயனார் பாண்டிய நாட்டில் தலயாத்திரை செய்தார். அப்போது, இப் பாண்டியனும் இவன் அரசியான மங்கையர்க்கரசியாரும் அமைச்சரான குலச்சிறை நாயனாரும் நாவுக்கரசரை வரவேற்றார்கள். இப்பாண்டியன் வரலாற்றைப் பெரியபுராணம் நெடுமாற நாயனார் புராணத்தில் காண்க.

பிரம சூத்திரத்தின் பூர்வ மீமாம்சைக்கு ஆசாரிய சுந்தர பாண்டியர் என்பவர் ஒரு விரிவுரை யெழுதியிருக்கிறார். அந்த உரையை, ஆதி சங்கராச்சாரியாரும் குமாரில பட்டரும் தங்களுடைய பிரமசூத்திர பாடியத்திலே போற்றிப் புகழ்ந்திருப்பதோடு, அந்த உரைப் பகுதிகளையும் மேற்கோள் காட்டுகிறார்கள். இவ்வாறு இவர்களால் போற்றப்படுகிற ஆசாரிய சுந்தரபாண்டியர் என்பவர் நெடுமாற நாயனாராக இருக்கக்கூடும் என்று சிலர் கருதுகின்றனர். அரிகேசரி மாறவர்மன், கூன்பாண்டியன், நெடுமாறன், சுந்தரபாண்டியன் என்று கூறப்படுகிற இவ்வரசனே ஆசாரிய சுந்தரபாண்டியனாக இருக்கக்கூடும் என்று கருதுகிறார்கள்.[2]

---

[1] திருஞானசம்பந்த நாயனாரைவிட இப் பாண்டியன் வயதில் இளைஞன் என்று ஒரு சரித்திரப் பேராசிரியர் கூறுகிறார். *(The Pandian Kingdom by K.A. Nilakanta Sastri)* ஞான சம்பந்தர் தமது 16-ஆவது வயதில் இறைவனை அடைந்தார். அவர் பாண்டியனைச் சைவனாக்கியபோது ஏறக்குறைய 14-வயது இருக்கும். பாண்டியன் அவருக்கு வயதினால் சிறியவனாக இருந்தால், பாண்டி யனுக்கு 13 அல்லது 12 வயதாக இருக்கவேண்டும். இவ்வளவு சிறுவயதில் நெடு மாறன் அரசாட்சிக்கு வந்தான் என்பதற்கு இலக்கியம், சாசனம் முதலிய யாதொரு சான்றும் கிடையாது. ஆகவே சரித்திர ஆசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் கூறுவது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல.

[2] *J.O.R.M. 1927. P.5-15.* சுந்தரபாண்டியன், நெடுமாற நாயனார் அல்லர். நெடுமாறனுக்கு முன்பிருந்தவராகக் கூடும் என்று வேறு சிலர் கருதுகிறார்கள்.

J.O.R.M. 1927. P. 179-180. Problems of identity in the Cultural History of Ancient India. by prof. S. Kyppuswami Sastri. P.5.-15. Journal of Oriental Research Madras 1927. A Note on Acarya Suadra Pandya by K.A. Nilakanta Sastri. P.179-180. Journal of Oriental Research Madras 1927.

**அப்பூதியடிகள்**

இவர், சோழநாட்டுத் திங்களூரிலே இருந்த பிராமணர். திருநாவுக்கரசர், நாடெங்கும் தலயாத்திரை செய்து பக்தி இயக்கத்தையும் சைவ சமயத்தையும் பரப்பி வருவதைக் கேள்விப்பட்ட இவர், அவர்பால் பெருமதிப்பும் பேரன்பும் கொண்டார். ஆகவே, தமது பிள்ளைகளுக்குத் திருநாவுக்கரசு என்னும் பெயரைச் சூட்டினார். திருநாவுக்கரசர் பெயரால் பல தண்ணீர்ப் பந்தல்களையும் அறச்சாலைகளையும் ஏற்படுத்தினார். திருநாவுக்கரசரை நேரில் காணாமலே இவ்வாறெல்லாம் செய்து சிறந்த சிவனடியாராக விளங்கினார் அப்பூதியடிகள்.

திருநாவுக்கரசர், சோழநாட்டுத் தலயாத்திரை செய்த போது திங்களூருக்குச் சென்றார். அப்பூதியடிகள் அவரை வரவேற்றுத் தமது மனையில் உபசரித்தார். இவரது விரிவான வரலாற்றைப் பெரியபுராணம், அப்பூதியடிகள் நாயனார் புராணத்தில் காண்க.

**முருகநாயனார்**

சோழநாட்டுத் திருப்புகலூரில் இருந்தவர். அவ்வூர் வர்த்தமானீச்சுவரம் என்னும் சிவன் கோயிலில் வழிபாடு செய்துகொண்டிருந்தார். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சிறுத்தொண்டர் (பரஞ்சோதியார்) இவர்களின் நண்பராக இருந்தார். திருஞானசம்பந்தரின் திருமணத்திற்குச் சென்று, அவர் சோதியில் கலந்தபோது இவரும் சோதியில் கலந்தார். இவருடைய வரலாற்றைப் பெரியபுராணம் முருகநயனார் புராணத்தில் காண்க.

**குங்கிலியக் கலயர்**

சோழநாட்டுத் திருக்கடவூரில் இருந்தவர். அவ்வூர்ச் சிவன் கோயிலில் குங்கிலியத் தூபம் இடுகிற திருத்தொண்டினைச் செய்துவந்தார். திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் திருக்கடவூருக்குத் தலயாத்திரையாகச் சென்ற போது அவர்களை வரவேற்று உபசரித்தார். இவருடைய முழுவரலாற்றினைத் திருத்தொண்டர் புராணம் குங்கிலியக் கலயநாயனார் புராணத்தில் கண்டுகொள்க.

**திருநீலநக்கர்**

சோழநாட்டுச் சாத்தமங்கை என்னும் ஊரில் இருந்தவர். திருஞானசம்பந்தரிடம் மிகுந்த அன்புள்ள நண்பர் திருஞானசம்பந்தருக்குத்

திருமணம் நடந்தபோது இவர் புரோகிதராக இருந்தார். பிறகு, அத் திருமணத்தின் போது திருஞானசம்பந்தருடன் சோதியில் கலந்தார். இவர் வரலாற்றினைத் திருத்தொண்டர் புராணம் திருநீலநக்க நாயனார் புராணத்தில் காண்க.

**சிறுத்தொண்டர்**

இவருக்குப் பரஞ்சோதியார் என்றும் பெயர் உண்டு. சோழநாட்டுத் திருச்செங்காட்டங்குடியில் இருந்தவர். பல்லவ அரசனிடம் (மாமல்லன் நரசிம்மவர்மனிடம்) சேனைத்தலைவராக இருந்தவர். அவ்வரசன் கட்டளைப்படி வாதாவி (வாதாபி) என்னும் நகரத்தின்மேல் படை யெடுத்துச் சென்று அந்நகரை (கி.பி, 642-இல்) வென்றார். பிறகு சேனைத் தலைவர் பதவியிலிருந்து நீங்கிக் கணபதீச்சரத்துச் சிவன்கோயிலில் திருத்தொண்டு செய்துகொண்டிருந்தார். அப்போது சீராளன் என்னும் மகன் இவருக்குப் பிறந்தான். இவர் திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மாருடன் நண்பராக இருந்தார். இவர் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருமணத்திற்கு முன்பே இறைவன் அடியைச் சேர்ந்தார். இவருடைய விரிவான வரலாற்றைப் பெரியபுராணம் சிறுத் தொண்ட நாயனார் புராணத்தில் காண்க.

**பாண்டிமா தேவியார்**

இவருக்கு மங்கையர்க்கரசியார் என்னும் பெயர் உண்டு. சோழ அரசனுடைய மகளார். இவருடைய தந்தையான சோழ அரசன், பல்லவ அரசனுக்குத் கீழ்ப்பட்ட சிற்றரசனாக இருந்தவன். பாண்டியன் நெடு மாறனுக்கு வாழ்க்கைப்பட்ட மங்கையர்க்கரசியார், சைவ சமயப் பற்றுடை யவர். திருஞானசம்பந்தரை பாண்டி நாட்டிற்கு அழைத்துப் பாண்டியனைச் சைவனாக்கிப் பாண்டி நாட்டில் சைவமதத்தைத் தழைக்கச் செய்வதற்கு முதற்காரணமாக இருந்தவர். திருநாவுக்கரசர் பாண்டிநாட்டில் தலயாத்திரை செய்தபோது அவரை வரவேற்று உபசரித்தார். இவரது வரலாற்றினைப் பெரியபுராணத்தில் காண்க.

**குலச்சிறை நாயனார்**

பாண்டி நாட்டிலே மணமேற்குடி என்னும் ஊரிலே பிறந்தவர். பாண்டியன் நெடுமாறனிடம் அமைச்சராக இருந்தவர். சைவசமயத்தில்

பற்றுள்ள இவர், பாண்டி நாட்டில் சமண சமயம் செழித்துச் சைவசமயம் குன்றியிருந்ததைக் கண்டு, சைவசமயத்தை வளர்க்கவும் சமணனாக இருந்த பாண்டியனைச் சைவனாக மாற்றவும் எண்ணங் கொண்டார். அதற்காகப் பாண்டிமா தேவியாருடன் சேர்ந்து ஞானசம்பந்தரைப் பாண்டியநாட்டிற்கு அழைத்தார். திருநாவுக்கரசர் பாண்டிய நாட்டில் தலயாத்திரை செய்தபோது அவரை வரவேற்றார். இவரது வரலாற்றைப் பெரியபுராணத்தில் காண்க.

**திருநீலகண்ட யாழ்ப்பாணர்**

நடுநாட்டில் திருஎருக்கத்தம்புலியூரில் பிறந்தவர். பாணர் மரபைச் சேர்ந்தவர். பாணர்கள் இசைப்பாட்டிலும் யாழ் வாசிப்பதிலும் தொன்று தொட்டுப் பேர்போனவர்கள். சங்ககாலத்திலே (கி.பி.300க்கு முன்பு) பாணர்கள் தாழ்த்தப்பட்டவராகக் கருதப்படவில்லை. அவர்கள் சமுதாயத்தில் மற்றவர்களுக்குச் சமநிலையில் இருந்தார்கள். ஆனால், பிற்காலத்திலே தாழ்த்தப்பட்டுத் தீண்டப்படாதவராகக் கருதப்பட்டனர். இந்த நிலையில் தான் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலே நீலகண்டயாழ்ப்பாணர் இருந்தார்.

யாழ் வாசிப்பதில் தேர்ந்தவராகிய இவர். சிவபெருமான் மீது பக்தி யுள்ளவராய், திருக்கோயில்களுக்குச் சென்று சிவபெருமானைப் பாடி யாழ் வாசித்துக் கொண்டிருந்தார். தீண்டப்படாதவர் என்னும் நிலையில் கோயிலுக்கு வெளியிலேயிருந்து இப் பணியைச் செய்துவந்தார். மதுரைச் சொக்கநாதர் ஆலயத்தில் இவர் இசைபாடியபோது, இவருடைய பக்திக்கும் இன்னிசைக்கும் மனமுருகி அடியார்கள் இவரைக் கோயிலுக்குள் அழைத்துச் சென்று இசை வாசிக்கச் செய்தனர். அதுமட்டுமன்றி பொற்பலகை இட்டு அதன்மேல் இருந்து வாசிக்கச் செய்தனர். திருவாரூரிலும் அவ்வாறே கோயிலுக்குள் அழைத்துச் சென்று இவரை இசைபாடச் செய்தனர்.

இவ்வாறு நெடுங்காலம் யாழ்வசித்த இவர், இளைஞராகிய திருஞானசம்பந்தர் இனிய இசைப்பாடல்களைப் பாடுவதை யறிந்து சீகாழிக்கு வந்து அவருடைய பாடல்களை யாழில் இட்டு வாசித்தார். அது முதல் ஞானசம்பந்தருடனே தங்கியிருந்து அவருடைய பதிகங்களை யாழில் வாசித்துக்கொண்டிருந்தார். கடைசியில், ஞானசம்பந்தரின் திருமணத்தில் அவருடன் ஒளியில் கலந்தார். இவர் வரலாற்றைப் பெரியபுராணத்தில் காண்க.

# 3. வைணவ ஆழ்வார்கள்

இக்காலத்தில் பக்தி இயக்கம் தோன்றியிருந்ததை முன்னரே கூறினோம். நரசிம்மவர்மனான மாமல்லன் காலத்தில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சிறுத்தொண்டர், அப்பூதியடிகள், முருகநாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலிய நாயன்மார்கள் இருந்தார்கள் என்பதையும், அவர்களில் அப்பரும், சம்பந்தரும் தமிழ்நாடெங்கும் சுற்றுப்பிராயணம் செய்து பௌத்த மதத்தையும் சமண சமயத்தையும் கண்டித்துச் சைவசமயப் பிரசாரம் செய்தார்கள் என்பதையும் கூறினோம்.

இக்காலத்திலேயே வைணவ சமயத்து ஆழ்வார்கள் சிலர் இருந்தார்கள். இவ் ஆழ்வார்களும் பக்தி இயக்கத்தையும் வைணவ சமயத்தையும் தமிழ்நாட்டில் பரப்புவதற்குப் பாடுபட்டார்கள். இவர்கள் காலத்தில் இருந்த ஆழ்வார்கள் நால்வர். இவர்களில் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் என்பவர் மூவரும் முதலாழ்வார் என்று கூறப்படுவார்கள். திருமழிசை ஆழ்வார் என்பன முதலாழ்வார்கள் காலத்திலே இருந்தவர். ஆனால், வயதினால் அவர்களுக்கு இளையவர்.

இந்த நான்கு வைணவ ஆழ்வார்களும் நரசிம்மவர்மனான மாமல்லன் காலத்தில் இருந்தவர்கள்.[1] இவர்களில் முதலாழ்வார் மூவரும் பக்திநிலையில் நின்று யோகிகளாக இருந்தவர்கள். ஆகவே இவர்கள் சமண பௌத்த சமயங்களைத் தாக்காமலே தமது கொள்கையை மட்டும் நிலை நிறுவினார்கள். இவர்களுக்கு இளையரான திருமழிசை யாழ்வார், பக்தி இயக்கத்தையும் வைணவ சமயத்தையும் நிலைநாட்டுவதில் அதிக ஊக்க முடையவராயிருந்தார். இவர் சமண பௌத்த மதங்களைமட்டு மல்லாமல் சைவ மதத்தையும் கண்டித்துப் பிரசாரம் செய்தார். இவர்கள் வரலாற்றினைச் சுருக்கமாக ஆராய்வோம்.

---

[1] இந்த ஆழ்வார்களின் கால ஆராய்ச்சியை இந்நூலின் பின்னிணைப்பு: 5 காண்க.

### பொய்கையாழ்வார்

காஞ்சீபுரத்திலே திருவெஃகா என்னும் திருக்கோயிலுக்கு அருகிலே இவர் பிறந்தவர் என்று வைணவ வரலாறு கூறுகிறது. பொய்கையிலே (குளத்திலே) பிறந்தபடியினாலே இவருக்குப் பொய்கையாழ்வார் என்று பெயர் வழங்கியதாகக் கூறப்படுகிறது. பொய்கையூர் அல்லது பொய்கை நாட்டைச் சேர்ந்தவர் ஆகையினால் பொய்கையார் என்னும் பெயர் பெற்றார் என்று கருதுவது தவறாகாது. பொய்கையார் என்னும் பெயருடைய புலவர்கள் சிலர் இருந்திருக்கிறார்கள். கடைச்சங்க காலத்திலே இருந்த களவழி நாற்பது பாடிய பொய்கையாரும் இந்தப் பொய்கையாழ்வாரும் ஒருவரே என்று சிலர் கூறுவர். கி.பி. 4 அல்லது 5 - ஆம் நூற்றாண்டில் இருந்த பொய்கையாழ்வார் வேறு.[1]

திருமாலிடத்தில் பக்தியுடையவரான இவர் யோகியாய்த் தியானத்தில் அமர்ந்து தம் வாழ்நாளைக் கழித்தார். உலகப்பற்றை அறவே ஒழித்த இவர், தமது காலத்தில் நிகழ்ந்த பௌத்த சமண சமயக் கலகங்களிலும் கருத்தைச் செலுத்தாமல் ஒதுங்கியிருந்தார். ஆகையினால் தான் இவருடைய பாடல்களில் பௌத்த சமண சமயங்களைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படவில்லை.

இவர், இயற்பா முதல் திருவந்தாதியை இயற்றினார். இது அந்தாதித் தொடரில் நூறு வெண்பாக்களையுடையது.

இவர், பேயாழ்வார் பூதத்தாழ்வார் ஆகிய இருவரையும் திருக்கோவிலூரில் சந்தித்தார் என்றும், திருமழிசையாழ்வாருடனும் பழகியவர் என்றும் இவர் வரலாறு கூறுகிறது.

### பூதத்தாழ்வார்

இவர் கடல்மல்லை என்னும் மாமல்லபுரத்திலே பிறந்தவர். இவரும் திருமால் பக்தராக இருந்தவர் உலகப்பற்றை அறவே நீத்தவர். பௌத்த சமண சமயக் கலகங்களில் தலையிடாமல் யோகியாக வாழ்ந்தவர். பொய்

[1] பின்னிணைப்பு : 5 காண்க.

கையாழ்வார் பூதத்தாழ்வார் என்னும் ஆழ்வார்களுடனும் திருமழிசை யாழ்வாருடனும் நட்புடையவர். இவர் இயற்றிய இயற்பா - இரண்டாந் திருவந்தாதி, நூறு வெண்பாக்களாலான அந்தாதித் தொடையால் அமைந்தது.

**பேயாழ்வார்**

இவர் சென்னைப்பட்டினத்துக்கு அடுத்த மயிலாப்பூரில் பிறந்தவர் இவரும் திருமால் பக்தராயும் யோகியாயும் இருந்தவர். மற்றச் சமயப் பூசல்களில் தலையிடாதவர். பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் இவர் களுடன் நட்புடையவர். இவர் இயற்றிய இயற்பா - மூன்றாந்திருவந்தாதி, அந்தாதித் தொடையில் நூறு வெண்பாக்களாலானது.

சைவ சமயத்தவராக இருந்த திருமழிசையாழ்வாரை வைணவ சமயத்தில் சேர்த்துத் திருமாலடியாராகத் திகழச் செய்தவர் பேயாழ்வார். அதுபற்றி,

> **"பெருக்க முடன் திருமிழிசைப்**
> **பிரான் தொழுவோன் வாழியே."**

என்று வைணவர்கள் இவரை வாழ்த்துவது வழக்கம்.

**திருமழிசையாழ்வார்**

தொண்டை நாட்டிலே திருமிழிசை என்னும் ஊரில் பிறந்தவர். ஆகையினாலே இவருக்குத் திருமழிசையாழ்வார் என்று பெயர் அமைந்தது. இளமையில் கல்விகற்றுத் தேர்ந்து, திருநாவுக்கரசரைப் போலவே, பல சமயங்களை ஆராய்ந்தவர். அதன் பயனாகச் சிலகாலம் பௌத்தராகவும் சில காலம் சமணராகவும் இருந்து பிறகு சைவ சமயத்தில் சேர்ந்து சிவவாக்கியர்[1] என்னும் பெயர் பூண்டிருந்தார்.

இவர் சைவ சமயத்தவராக இருந்த காலத்தில், பேயாழ்வார் இவரை வைணவராக்கித் திருமால் பக்தராகச் செய்தார் என்றும், வைணவராகி

[1] சிவவாக்கியர் என்று ஒரு சித்தர் இருந்திக்கிறார். அவர் பாடியது சிவவாக்கியர் பாடல என்பது. அந்தச் சிவவாக்கியர் வேறு; இந்தச் சிவவாக்கியர் வேறு.

இவர் யோகத்தில் அமர்ந்திருந்த போது முதலாழ்வார்கள் மூவரும் வந்து இவருடன் சிலகாலம் தங்கியிருந்தார்கள் என்றும் இவருடைய வரலாறு கூறுகிறது. இவருக்குப் பக்திசாரர் என்று வேறு பெயரும் உண்டு.

இவர் காஞ்சீபுரம் சென்று திருவெஃகா என்னும் திருப்பதியில் தங்கியிருந்து பெருமாளை வழிபட்டிருந்தார். அக்காலத்தில், கணிகண்ணன் என்பவர் இவரிடம் வந்து சீடராக அமர்ந்து இவருக்குத் தொண்டு செய்திருந்தார். காஞ்சி நகரத்திலிருந்த பல்லவ அரசனுடைய அரண் மனைக்குக் கணிகண்ணர் பிச்சைக்காகச் செல்வதுண்டு. ஒரு நாள் அரசன், கணிகண்ணரை யழைத்துத் தன்மேல் ஒரு செய்யுள் பாடச் சொன்னான். அவர் அரசனைப் பாடாமல் காஞ்சி நகரத்தைப் பாடினார். அதனால் சினங்கொண்ட பல்லவ மன்னன் அவரை ஊரைவிட்டுப் போகும்படி சொன்னான்.

அவரும் ஆழ்வாரிடம் வந்து நடந்ததைக் கூறித்தனக்கு விடை கொடுக்க வேண்டும் என்று கேட்டார். ஆழ்வார், தாமும் அவருடன் வருவதாகக் கூறிக் கோயிலிலிருந்த பெருமாளையும் அழைத்துக் கொண்டு மூவருமாகப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். பெருமாள் போய்விட்டதை யறிந்த அரசன், அவர்களை மீண்டும் நகரத்துக்கு வரும்படி அழைத்தான். அதற்கு உடன்பட்டு ஆழ்வாரும் கணிகண்ணரும் பெருமாளுடன் காஞ்சிக்குத் திரும்பி வந்தனர் என்று இவருடைய வரலாறு கூறுகிறது. காஞ்சியை விட்டுப்போய் இவர்கள் ஓர் இரவு தங்கியிருந்த ஊருக்கு ஓரிரவிருக்கை என்று பெயர் உண்டாயிற்று. இவ்வூர் காஞ்சிக்குத் தெற்கே இரண்டு மைலுக்கப்பால் இருக்கிறது.

கணிகண்ணரை அரசன் நகரம் கடத்தியதும் அவருடன் திருமழிசை யாழ்வார் சென்றதும், அரசனைப் பாடாததற்காகக் கொடுக்கப்பட்ட தண்டனையன்று. சமய சம்பந்தமாகக் காஞ்சியில் ஏதோ கலகம் ஏற்பட்டிருக்கலாம்; அக் காலத்தில் கணிகண்ணரும், மறைமுகமாக ஆழ் வாரும் தொடர்பு கொண்டிருக்கலாம். இதனால்தான் இவர்கள் நகரத் தினின்று வெளியேற்றப்பட்டனர் என்று கருதுவது தவறாகாது. பின்னர், அக் கலகம் சமாதான முறையில் அடக்கப்பட்ட பிறகு இவர்கள் நகரத்திற்கு அழைக்கப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு திருமழிசையாழ்வார், காஞ்சிமா நகரத்தைவிட்டுக் குடந்தை என்னும் கும்பகோணத்திற்குப் போய் அங்கே கடைசிவரையில் தங்கியிருந்தார். குடந்தைக்குப்போகிற வழியில், பெரும்புலியூர் எனப்படும் சிதம்பரத்தில் தங்கினார். சிதம்பரத்தில் தங்கிய இவர், தில்லைத் திருச்சித்ர கூடத்தைப் பாடவில்லை. ஏனென்றால் இவர் காலத்தில் தில்லைக் கோவிந்தராசப் பெருமாளுக்குத் திருக்கோயில் அமைக்கப்படவில்லை. இவருக்குப்பின் வந்தவரான திருமங்கையாழ்வார் காலத்தில் தில்லைக் கோவிந்தராசனுக்குத் திருக்கோயில் அமைக்கப் பட்டிருந்தபடியால், திருமங்கையாழ்வார் தில்லைத் திருச்சித்ர கூடத்தைப் பாடியிருக்கிறார்.

திருமழிசையாழ்வார் தமது பாடல்களில் பௌத்தர் சமணர், சைவர் ஆகிய மூன்று சமயத்தவரையும் கண்டிக்கிறார். இவர் இயற்றிய இயற்பா - நான்முகன் திருவந்தாதி, அந்தாதித் தொடையாக அமைந்த தொண் ணூற்றாறு வெண்பாக்களையுடையது. இவர் பாடிய திருச்சந்த விருத்தம் நூற்றிருபது ஆசிரிய விருத்தத்தைக் கொண்டது. ''அன்புடன் அந்தாதி தொண்ணூற்றா றுரைத்தான் வாழியே'' என்றும், ''எழிற் சந்த விருத்தம் நூற்றிருபதீந்தான் வாழியே'' என்றும் வைணவர் இவரைப் போற்று கிறார்கள்.

இந்த ஆழ்வார்கள் இயற்றிய பாசுரங்கள் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் தொகுக்கப்பட்டுள்ளன.

*

# 4. தமிழ் இலக்கியம்

நரசிம்மவர்மன் காலத்தில் தமிழ் இலக்கியம் எவ்வாறு இருந்தது என்பதை ஆராய்வோம். அக்காலத்தில் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் பல்லாயிரக் கணக்கான பாடல்களைப் பாடினார்கள். அப்பாடல்கள் இசைத் தமிழ் ஆக இருந்தாலும் அவை இயற்றமிழாகவும் விளங்குகின்றன. நாவுக்கரசர் நாற்பத்தொன்பதாயிரம் பதிகங்களைப் பாடினார். ''இணைகொள் ஏழெழுநூறு இரும்பனுவல் ஈன்றவன் திருநாவுக்கரையன்'' என்று சுந்தரமூர்த்திகள் கூறியுள்ளார். ஞானசம்பந்தர் பதினாறாயிரம் பதிகங்களைப் பாடினார். இவர்கள் பாடிய பாடல்கள் பனையேடுகளில் எழுதப்பட்டுச் சிதம்பரத் திருக்கோயிலிலுள்ள ஓர் அறையில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தன. இவை கையாளப்படாமலும் அவ்வப்போது துப்புரவு செய்யப்படாமலும் இருந்தபடியால், நானூறு ஆண்டுகளுக்குப் பிறகு அபய குலசேகர சோழ மகாராசன் இவ் வறைகளைத் திறந்து பார்த்தபொழுது ஏடுகள் கறையான் அரித்து மண்தின்று கிடந்தன. அழியாமல் எஞ்சிநின்றவை, அப்பர் பாடல்கள் முன்னூற்றுப் பன்னிரண்டு பதிகங்களும், ஞானசம்பந்தர் பாடல்கள் முன்னூற்று எண்பத்துநான்கு பதிகங்களும் ஆகும். எனவே அப்பர் சம்பந்தர் பாக்களில் பெரும்பகுதிகள் இப்போது மறைந்துவிட்டன.

இவையல்லாமல், பொய்கையாழ்வார் இயற்றிய முதல் திருவந்தாதி நூறு வெண்பாக்களும், பூதத்தாழ்வார் இயற்றிய இரண்டாந் திருவந்தாதி நூறு வெண்பாக்களும், பேயாழ்வார் இயற்றிய மூன்றாந் திருவந்தாதி நூறு வெண்பாக்களும், திருமழிசையாழ்வார் இயற்றிய நான்முகன் திருவந்தாதி தொண்ணூற்றாறு வெண்பாக்களும், திருச்சந்த விருத்தம் நூற்றிருபது விருத்தப் பாக்களும் அக்காலத்தில் இயற்றப்பட்ட தமிழ் இலக்கியங்களாகும். மேலும், கூன்பாண்டியன் என்னும் நெடுமாறன் மீது இயற்றப்பட்ட (இறையனார் அகப்பொருள் உரையில் மேற்கோள் காட்டப்பட்ட) பாண்டிக்கோவையும் அக் காலத்தில் தோன்றிய இலக்கியம் ஆகும்.

தமது காலத்தில், செல்வர்கள் புலவர்களை ஆதரித்தார்கள் என்பதை ஞானசம்பந்தர் தமது பாடல்களில் கூறுகிறார்:

***''கலை நிலவிய புலவர்களிடர் களைதரு***
***கொடை பயில்பவர் மிகு***
***சிலைமலி மதில்புடை தழுவிய பொழில்***
***வளர்தரு மிழலையே.''[1]***

என்றும்,

***''உரவார் கலையின் கவிதைப்***
***புலவர்க் கொருநாளும்***
***கரவா வண்கைக் கற்றவர்***
***சேருங் கலிக்காழி.''[2]***

என்றும்,

***''வையம் விலைமாறிடனும் ஏறும்புகழ் மிக்கு***
***இழிவிலாத வகையார்***
***வெய்ய மொழிதான் புலவருக்கு உரை***
***செய்யாதவர் வேதி குடியே.''[3]***

என்றும் அவர் கூறியிருப்பது காண்க.

சிவபெருமான் மதுரையில் தொகை நூலைத் தொகுத்தார் என்னும் கதையை ஞானசம்பந்தர் கூறுகிறார்:

***''அற்றன்றி யந்தண் மதுரைத் தொகை யாக்கினானுந்***
***தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்***
***பற்றின்றிப் பாங்கெதிர் விரவும் பண்பு நோக்கிற்***
***பெற்றன் றுயர்ந்த பெருமான் பெருமானு மன்றே''[4]***

---

[1] சம்பந்தர் *I* திருவீழிமிழலை 3

[2] சம்பந்தர் *II* சீகாழி 1

[3] சம்பந்தர் *III* திவேதிகுடி 6

[4] சம்பந்தர் *III* திருப்பாசுரம் 11

இப்பாட்டுக்கு உரை கூறுவதுபோல, சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் இவ்வாறு பாடியுள்ளார்:

**''ஆன அற்றன்றி என்ற அத்திருப்பாட்டிற் கூடல்**
**மாநகரத்துச் சங்கம் வைத்தவன் தேற்றத்தேறா**
**ஈனர்கள் எல்லைக்கிட்ட ஏடுநீர் எதிர்ந்து செல்லில்**
**ஞானம்ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார்.''[1]**

நாவுக்கரசர் கூறுவதையும் இதனுடன் ஒத்திட்டுப் பார்ப்போம்.

**''மேய்ந்தான் வியனுல கேழும் விளங்க விழுமியநூல்**
**ஆய்ந்தான் அ;டிநிழற் கீழதன் றோவென் னாருயிரே.''[2]**

**''அளவு கண்டிலள் ஆவடு தண்டுறைக்**
**களவு கண்டனள் ஒத்தனள் கன்னியே.''[3]**

**''விரிக்கு மரும்பதம் வேதங்க ளோதும் விழுமியநூல்**
**உரைக்கி லரும்பொரு ளுள்ளவா கேட்கில் உலகமுற்றும்.''[4]**

சம்பந்தர், மதுரைத் தொகையாக்கினான் என்று கூறுவதும், அப்பர், விழுமியநூல் ஆய்ந்தான், கனவுகண்டனள் என்று கூறுவதும் இறையனார் அகப்பொருள் என்னும் நூலை கருத்தில்கொண்டு கூறியதாகத் தோன்றுகின்றது.

சம்பந்தர் தமது காலத்தில் வழங்கிய கிளிவிருத்தம் எலிவிருத்தம் என்னும் நூல்களைக் கூறுகிறார். இந் நூல்களைச் சமணர் இயற்றினர்.

**''கூட்டினார் கிளியின் விருத்த முரைத்ததோ**
**ரெலியின்தொழில்**
**பாட்டு மெய்சொலிப் பக்கமே செலும் எக்கர் தங்களை...''[5]**

அப்பர் சுவாமிகள் **நரிவிருத்தத்தைக்** கூறுகிறார்.

---

[1] சம்பந்தர் புராணம்

[2] அப்பர் I ஆருயிர்த் திருவிருத்தம் 6

[3] அப்பர் II திருவாவடுதுறை 2

[4] அப்பர் I திருக்கழுமலம் 4

[5] திருவாலவாய்ப் பதிகம் 5

''அரியயற் கரியானை அயர்த்துப் போய்
நரிவிருத்தம தாகுவர் நாடரே.''[1]

பிற்காலத்தில், 11-ஆம் நூற்றாண்டிலே உண்டான வீரசோழியம் என்னும் இலக்கண நூலின் உரையிலே, அந்நூல் உரையாசிரியர் கிளி விருத்தம், எலிவிருத்தம், நரிவிருத்தம் என்னும் நூல்களைக் கூறுகிறார். அவர் கூறுவது: ''குண்டலகேசி விருத்தம் கிளிவிருத்தம் எலிவிருத்தம் நரிவிருத்தம் முதலியவற்றுள் கலித்துறைகளுமுளவாம்.'' என்பது.


சம்பந்தர் கூறிய கிளிவிருத்தம் எலிவிருத்தம் என்னும் நூல்கள் இப்போது மறைந்துவிட்டன. அப்பர் கூறிய நரிவிருத்தம் என்னும் நூல் இப்போதும் இருக்கிறது.

நரிவிருத்தம், சீவகசிந்தாமணியை இயற்றிய திருத்தக்கதேவர் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. சீவக சிந்தாமணியை இயற்றுவதற்கு முன்னர் நரிவிருத்தத்தைத் திருத்தக்கதேவர் இயற்றித் தமது ஆசிரியரிடம் காட்டினார் என்றும் அதனைக் கண்ட ஆசிரியர், சீவகசிந்தாமணியை இயற்ற அனுமதியளித்தார் என்றும் வரலாறு கூறப்படுகிறது. அப்பர் சுவாமிகள் நரிவிருத்தத்தைக் கூறுகிறபடியினாலே, அக் காலத்திலேயே சீவக சிந்தாமணியும் இயற்றப்பட்டிருக்கவேண்டும் என்பது தெரிகிறது.

மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில் சாசனங்களும் செப்பேடு களும் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவன் காலத்தில் எழுதப்பட்ட சாசனங்களும் செப்பேடுகளும் இதுகாறும் கிடைக்கவில்லை. அவன் காலத்தில் எழுதப்பட்ட ஒரே ஒரு தமிழ்ச்சாசனம் மட்டும் நமக்குக் கிடைத்திருக்கிறது. அது, திருக்கழுக்குன்றத்து மலைமேல் உள்ள ஒற்றைக் கல் மண்டபம் என்று கூறப்படுகிற குகைக்கோயிலில் எழுதப்பட்டுள்ள சாசனம் ஆகும். அச் சாசனத்தின் அமைப்பைக் கீழே காண்க. அதிலிருந்து அக் காலத்துத் தமிழ் எழுத்து எப்படியிருந்தது என்பதை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

---

[1] ஆதிபூரணக் குறுந்தொகை



''ஸ்ரீரி திருக்கழுக்குன்றத்து பெருமான்னடிகளுக்கு களத்தூர் கோட்டத்து... திருக்கழுக்குன்றத்து ஸ்ரீமலைமேல் மூலட்டானத்து பெருமானடிகளுக்கு வழிபாட்டுப்புறமாக வாதாபி கொண்ட நரசிங்கப் போத்தரசர் (ை)வத்தது.''

என்பது இதன் வாசகம். இதில் சில எழுத்துக்கள் மறைந்தும், சில எழுத்துக்கள் மழுங்கியும் காணப்படுகின்றன.

*

## 5. வற்கடம்

நரசிம்மவர்மன் காலத்தில் பல போர்கள் நடந்தன. சளுக்கிய அரசனான இரண்டாம் புலிகேசி, பலமுறை பல்லவநாட்டில் படையெடுத்து வந்தான். அந்தப் போர்களில் அவனை எதிர்த்து நரசிம்மவர்மன் போராடி வெற்றிபெற்றான். அல்லாமலும், நரசிம்மவர்மன் புலிகேசியின் தலைநகர மான வாதாபிநகரைத் தாக்குவதற்குச் சேனையைத் திரட்டி அந் நகரத்தைத் தாக்கி வெற்றிபெற்றான். சளுக்கியருடன் நிகழ்ந்த போர்கள் அல்லாமல் சோழர், பாண்டியர், சேரர், களபரருடனும் போர்செய்து வென்றான் என்று கூறப்படுகிறான். போரினால் நாட்டிற்கு வறுமையும் துன்பமும் உண்டாகும். அடிக்கடி பல்லவ நாட்டில் நடை பெற்ற போரின் காரணமாகப் பொருள் நெருக்கடி ஏற்பட்டிருக்கவேண்டும். அதனுடன் மழை பெய்யாமல் வற்கடமும் உண்டாயிற்று. இதனால், நாட்டில் விளைவு குறைந்து பஞ்சம் ஏற்பட்டது. நரசிம்மவர்மன் காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைப்பற்றி, இவன் காலத்தில் இருந்த திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் தமது தேவாரங்களில் குறிப்பிடுகிறார்கள்.

**கன்னெடுங் காலம் வெதும்பிக் கருங்கடல் நீர்சுருங்கிப்**
**பன்னெடுங் காலம் மழைதான் மறக்கினும் பஞ்சமுண்டெடன்**
**றென்னொடும் சூளறும் அஞ்சல்நெஞ்சே! இமையாத முக்கண்**
**பொன்னெடுங் குன்றம் ஒன்றுண்டு கண்டீர்! இப்புகலிடத்தே**

என்றும்,

**''தப்பில் வானம் தரணி கம்பிக்கி லென்**
**ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்**
**செப்பமாஞ் சேறைச் செந்நெறி மேவிய**
**அப்பனாருளர்; அஞ்சுவ தென்னுக்கே!''**

என்றும் திருநாவுக்கரசர், நாட்டில் அரசர்கள் சீறிப் போர் செய்ததையும் மழைபெய்யாமல் பஞ்சம் உண்டானதையும் குறிப்பிடுகிறார். திருஞானசம்பந்தர்,

**''விலங்கலமர் புயல் மறந்து மீன்சனிபுக்கு**
**ஊன் சலிக்கும் காலந்தானும்**
**கலங்கலிலா மனப் பெருவண்மை யுடைய**
**மெய்யர் வாழ் கழுமலமே.''**

என்று, வானத்தில் கோள் மாறியபடியினால் மழை பெய்யாமல் வற்கடம் ஏற்பட்டதைக் குறிப்பாகக் கூறுகிறார்.

இவ் விரு நாயன்மார்களின் வரலாற்றைக்கூறும் பெரியபுராணம், இவ்விருவரும் திருவீழிமிழலையில் தங்கியிருந்த போது வற்கடம் நேரிட்டதென்றும், அதற்காக நாயன்மார்கள் இருவரும் கவலைகொள்ள சிவபெருமான் இவர்களுக்குப் பொற்காசு நாள்தோறும் கொடுத்து வந்தார் என்றும், அக்காசைக் கொண்டு இருவரும் தத்தம் மடங்களில் நாள்தோறும் அடியார்களுக்கு அமுதளித்தார்கள் என்றும், பஞ்சம் நீங்கும் வரையில் சிவ பெருமான் இவர்களுக்குப் பொற்காசு அளித்து வந்தார் என்றும் கூறுகிறது:

**''சீரின் விளங்கும் திருத்தொண்டர் இருந்து**
**சிலநாட் சென்றதற் பின்**
**மாரிசுருங்கி வளம் பொன்னி நதியும்**
**பருவம் மாறுதலும்**
**நீரின் இயன்ற உணவருகி நிலவும்**
**பலமன் னுயிர்க ளெலாம்**
**பாரின் மலிந்த இலம்பாட்டில் படர்கூர்**
**வறுமை பரந்ததால்.''**

**''வையம் எங்கும் வற்கடமாய்ச்**
**செல்ல உலகோர் வருத்தமுற**
**நையும் நாளில் பிள்ளையார்**
**தமக்கும், நாவுக்கரசருக்கும்**
**கையில் மானும் மழுவுமுடன்**
**காணக் கனவில் எழுந்தருளிச்**

*செய்ய சடையார் திருவீழி*
*மிழலையுடையார் அருள்செய்வார்.''*

*''கால நிலைமை யால் உங்கள்*
*கருத்தில் வாட்டமுறீர் எனினும்*
*ஏல உம்மை வழிபடுவார்க்*
*களிக்க அளிக்கின் றோம்என்று*
*கோலங் காண எழுந்தருளிக்*
*குலவும் பெருமை இருவர்க்கும்*
*ஞாலம் அறியப் படிக்காசு*
*வைத்தார் மிழலை நாயனார்.''*

*''விண்ணின் றிழிந்த விமானத்தின்*
*கிழக்கும் மேற்கும் பீடத்தில்*
*அண்ணல் புகலி ஆண்டகையார்*
*தமக்கும் ஆண்ட அரசினுக்கும்*
*நண்ணும் நாள்கள் தொறுங்காசு*
*படிவைத் தருள நானிலத்தில்*
*எண்ணில் அடியார் உடன் அமுது*
*செய்தங் கிருந்தார் இருவர்களும்.''* [1]

*''மண்ணின்மிசை வான்பொய்த்து நதிகள் தப்பி*
*மன்னுயிர்கள் கண்சாம்பி உணவு மாறி*
*விண்ணவர்க்குஞ் சிறப்பில்வரும் பூசை யாற்றா*
*மிக்கபெரும் பசிஉலகில் விரவக்கண்டு*
*பண்ணமரும் மொழியுமையாள் முலையின் ஞானப்*
*பாலறா வாயருடன் அரசும் பார்மேல்*
*கண்ணுதலான் திருநீற்றுச் சார்வினோர்க்குங்*
*கவலைவருமோ என்று கருத்திற் கொண்டார்.''* [2]

அப்போது சிவபெருமான் இவர்கள் கனவில் தோன்றி இவ்வாறு உரைத்தாராம்:

---

[1] திருநாவுக்கரசர்: 255, 256, 257, 258

[2] திருஞானசம்பந்தர் புராணம்: 562.

''உலகியல்பு நிகழ்ச்சியால் அணைந்த தீய
உறுபசிநோய் உமையடையா தெனினும் உம்பால்
நிலவுசிவ நெறிசார்ந்தோர் தம்மைவாட்டம்
நீங்குவதற்கு உத்தமமோர் காசு நீடும்
இலகுமணிப்பீடத்துக் குணக்கு மேற்கும்
யாமளித்தோம் உமக்கிந்தக் காலத் தீர்ந்தால்
அலகில் புகழீர்! தவிர்வதாகும் என்றே
அருள்புரிந்தார் திருவீழிமிழலை ஐயர்.'' [1]

அடுத்தநாள் காலையில் கோவிலுக்குச் சென்றபோது இரண்டு பொற்காசுகள் பலிபீடத்தில் இருப்பதை இருவரும் கண்டார்கள். அக் காசைக்கொண்டு இருவரும் தத்தம் மடத்தில் சிவனடியார்களுக்கு அமுது ஊட்டுவித்தனர். இவ்வாறு பஞ்சம் நீங்கும் வரையில் நாள்தோறும் இவர்களுக்குப் பொற்காசு கிடைத்து வந்தது.

இந்த வற்கடமும் பஞ்சமும் கி.பி. 640க்கு 650க்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்திருக்கவேண்டும்.

சம்பந்தரும் அப்பரும் குறிப்பிடுகிற பஞ்சம் இரண்டாம் நரசிம்ம வர்மனான இராஜசிம்மன் காலத்தில் ஏற்பட்டது என்று சிலர் கூறுவர்.[2] இவர்கள், அப்பரும் சம்பந்தரும் இராஜசிம்ம பல்லவன் காலத்தில், கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்று கருதுகிறார்கள். இராஜசிம்மன் காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தையே இவர்கள் தமது தேவாரத்தில் குறிப்பிடுவதாக இவர்கள் கருதிக்கொண்டு, அப்பரும் சம்பந்தரும் இவ்வரசன் காலத்தில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்று கூறுகிறார்கள். ஆனால் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் முதலாம் மகேந்திரவர்மன் முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் அப்பரும் சம்பந்தரும் இருந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் இருப்பதனால் இவர்கள் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. பஞ்சங்கள் பல காலங்களில் ஏற்படக்கூடும். இராஜசிம்மன்

---

1. திருஞானசம்: 564
2. C. Minakshi: Administration and Social life under the Pallavas. PP. 117, 118., K.A.N. Sastri. Pandian Kingdom.

காலத்துப் பஞ்சத்தை இவர்கள் தேவாரத்தில் குறிப்பிடுகிறார்கள் என்றும் ஆகவே இவர்கள் இராஜசிம்மன் காலத்தவர் என்றும் முடிவுகட்டுவது, ஏனைய சான்றுகளுக்கு மாறுபட்ட கருத்தாகும்.

அக் காலத்தில் பஞ்சங்கள் அடிக்கடி ஏற்பட்டதற்குக் காரணம் சில உண்டு. அடிக்கடி அரசர்கள் போர் செய்த படியினாலே, பயிர்த்தொழில் கவனிக்கப்படாமல், குடியானவர் சேனையில் சேர்ந்திருக்கக்கூடும். போரினால், உணவுப் பொருள்கள் மக்களுக்குப் போதிய அளவு கிடைக்காமல் சேனைகளுக்கு அதிகப்பகுதி செலவாயிருக்கும்; மழை பெய்யாமலும் விளைச்சல் குன்றியிருக்கும். பௌத்த மதமும் சமண சமயமும் பெருகியிருந்தபடியினாலே, இந்த மதங்களில் துறவிகள் அதிகமாக இருந்தபடியால், உணவுப்பண்டங்களை உண்டாக்கும் தொழிலில் ஆட்கள் குறைந்து உணவுப்பண்டங்கள் உற்பத்திசெய்ய முடியாமலிருக்கலாம். அதுபோல, பிராமணர்கள் உழவுத்தொழில் முதலிய முக்கியத் தொழில்களில் ஈடுபடாமல் இருந்தனர். வேறு நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களைக் கொண்டுவரப் போக்குவரவு சாதனங்கள் குறைவாகவும் தாமதமாகவும் இருந்தது மற்றொரு காரணமாகும். போர்களினாலே நிலங்கள் அழிக்கப்பட்டதும் ஒரு காரணமாகும் இவ்வாறு பல காரணங்களினாலே அக் காலத்தில் பஞ்சம் உண்டாயிருக்கக் கூடும்.

# 6. கோயில்கள்

மாமல்லனான நரசிம்மவர்மன் காலத்துக்கட்டிடக் கலையைப்பற்றி ஆராய்வோம். கட்டிடக்கலை என்று கூறுவது கோயில் கட்டிடக் கலையையே. கி.பி. 600க்கு முன்னே, கோயில் கட்டிடங்கள் மரத்தினாலும், செங்கல் சுண்ணாம்பு முதலியவற்றினாலும் அமைக்கப்பட்டன. கி.பி. 700க்குப் பிறகு, கோயில் கட்டிடங்கள் கருங்கற்களினால் கற்றளிகளாகக் கட்டப்பட்டன. அஃதாவது, கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. கி.பி. 600க்கும் 700க்கும் இடைப்பட்ட காலத்திலே, இந்த இரண்டு வகையிலும் சேராத புதியமாதிரிக் கோயில்கள் அமைக்கப்பட்டன அவை குகைக்கோயில்களும் பாறைக்கோயில்களும் ஆகும். குகைக்கோயில் என்பது, பாறையைக் குடைந்து முன் மண்டபத்தையும் கருவறையையும் அமைப்பது. குகைக்கோயில்களை முதன்முதலாக அமைத்தவன், மாமல்லனுடைய தந்தையான முதலாம் மகேந்திரவர்மன்.

மகேந்திரவர்மனைப் பின்பற்றி அவன் மகனான மாமல்லனும் சில குகைக்கோயில்கள் அமைத்தான். அக் குகைக்கோயில், இப்போது நாம் அறிந்த வரையில், திருச்சிராப்பள்ளி மலையில் ஒன்றும், மாமல்லபுரத்தில் உள்ள மும்மூர்த்தி குகைக்கோயில், மகிஷாசுரமர்த்தினி குகைக் கோயில், வராகப்பெருமாள் மண்டபம், வராகப் பெருமாள் குகைக்கோயில்களும் ஆகும்.


இந்தக் குகைக்கோயில்கள் அல்லாமல், நரசிம்மவர்மன் **இரதங்கள்** என்று தவறாகப் பெயர் கூறப்படுகிற **பாறைக் கோயில்களையும்** புத்தம் புதிதாக அமைத்தான்.

நரசிம்மவர்மன் அமைத்த குகைக்கோயில்களையும் பாறைக்கோயில்களையும் இங்கு ஆராய்வோம். முதலில் குகைக்கோயில்களைப் பார்ப்போம்.

# குகைக்கோயில்கள்

***திரிமூர்த்தி குகைக்கோயில்***: மகாபலிபுரத்தில் உள்ள இது, ஒரே கற்பாறையில் மேற்குப்பார்த்தபடி அமைக்கப்பட்டிருக்கிறது. பிரம்மன், சிவன், திருமால் ஆகிய மூவருக்கும் இக் குகைக்கோயில் அமைக்கப் பட்டது. ஆகவே, மும்மூர்த்தி கோயில் என்றும் திரிமூர்த்தி கோயில் என்றும் கூறப்படுகிறது. வடக்குப்புறத்தில் பிரமனுக்கும் தெற்குப்புறத்தில் திருமாலுக்கும் நடுவில் சிவபெருமானுக்கும் இதில் கருவறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இக் குகைக் கோயிலின் கருவறைகள், தரைமட்டத்திற்கு மேலே மூன்றடி உயரத்தில் அமைக்கப்பட்டிருப்பதனால், உள்ளே செல்ல படிகள் அமைந்துள்ளன. பிரமாவின் கருவறை வாயிற்படியின்மேலே, பல்லவக் கிரந்த எழுத்தினாலே மல்ல என்னும் சொற்கள் எழுதப்பட்டிருக்கிற படியினால் இக்குகைக்கோயிலை அமைத்தவன் மாமல்லனான நரசிம்மவர்மன் என்பது தெரிகிறது.[1]




***திரிமூர்த்தி குகைககோயில்: தரையமைப்புப் படம்***

ஏனைய குகைக்கோயில்களுக்கு உள்ளதுபோல இதற்கு முக மண்டபம் இல்லை. கோயிலின் மேற்புறத்தின் முகப்பில், பல்லவர்கால முறைப்படி, கர்ணகூடு பஞ்சரம் சாலை முதலியவை அழகாக அமைக்கப் பட்டுள்ளன. இங்குள்ள சிற்ப உருவங்களைப்பற்றிப் பின்னர்க் கூறுவோம். இக் குகைக்கோயிலைச் சேர்ந்தாற்போல, இதன் தெற்குப்புறத்தில், கற்பாறையிலே கொற்றவையின் உருவம் புடைப்புச் சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளது. இதைப்பற்றியும் பின்னர்க் கூறுவோம்.

---

[1] இந்த எழுத்தைக் கண்டுபிடித்தவர், பிரெஞ்சுக்காரரான மூவோதுப்ராய் அவர்கள்.

***வராகமண்டபம்***: இந்த மண்டபமும் ஒரே பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டிருக்கிறது. மேற்குப்பார்த்த இந்த மண்டபத்தைச் சிங்கத்தூண்கள் தாக்குகின்றன. இந்த மண்டபம் 20 1/2 அடி நீளமும் 8 1/2 அடி அகலமும் 10 1/2 அடி உயரமும் உடையது. மண்டபத்தின் பின்புறத்தில், திருவுண்ணாழிகை அமைந்திருக்கிறது. திருவுண்ணாழிகை வாயிற்புறத்தில் துவார பாலகர் உருவங்கள் அமைந்திருக்கின்றன. பாறைச் சுவர்களில், வராகப்பெருமாள், கஜலக்ஷ்மி, கொற்றவை, திரிவிக்ரமமூர்த்தி இவர்களின் உருவங்கள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. மண்டபத்தின மேல் விதானத்தில் தாமரைப் பூக்களின் சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்தச் சிற்பங்களைப்பற்றி இந்நூலின் மற்றோர் இடத்தில் காண்க.



கருவறையில் இப்போது மூர்த்தி இல்லை. ஆகையால், இந்தக் கோயில் எந்தக் கடவுளுக்கு அமைக்கப்பட்டது என்பது தெரியவில்லை. ஆனால், வைணவ சம்பந்தமான சிற்பங்கள் இங்குக் காணப்படுவதனாலே, இக் கோயில் திருமாலுக்கு அமைக்கப்பட்டதென்று கருதலாம்.

***இராமாநுச மண்டபம்***: ''இராமாநுச மண்டபம்'' என்று இப்போது பெயர் கூறப்படுகிற இக் குகைக்கோயில், மாமல்லபுரத்துக் கலங்கரை விளக்கு[1] உத்தியோகஸ்தரின் விடுதிக்குப் பின்புறத்தில் இருக்கிறது.

---

[1] Light house.

வைணவ ஆசாரியரான இராமாநுசர் பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்னே, கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலே, மாமல்லன் நரசிம்ம வர்மனால் அமைக்கப்பட்ட இக் குகைக்கோயிலுக்கு, இராமாநுச மண்டபம் என்று பிற்காலத்து வைணவர்கள் பெயர் சூட்டியிருப்பது வியப்பாக இருக்கிறது.

கிழக்குப்பார்த்தபடி ஒரே பெரும் பாறையைக் குடைந்து அமைக்கப் பட்ட இக் குகைக்கோயில் ஒரு பெரிய முகமண்டபத்தையும் அதற்குப் பின்னால் மூன்று கருவறைகளையும் உடையது. முகமண்டபத்தின் தூண்களை நிமிர்ந்து உட்கார்ந்துள்ள சிங்கங்கள் தாங்கிக்கொண்டிருக் கின்றன. இந்தச் சிங்கங்களின் கம்பீரமும் அழகும் இறுமாந்து உட்கார்ந் துள்ள நிலையும் இந்த மண்டபத்திற்கு அழகைத் தருகின்றன. இக்கோயிலின் முகமண்டபத்தின் இரண்டு கோடியிலும் இளங்கோயில் என்னும் கோயிலின் சிற்ப அமைப்புக்கள் பாறையில் செதுக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற இளங்கோயில் உருவம், மாமல்லபுரத்திலேயே அர்ச்சுனன் தபசு என்று தவறாகப் பெயர் கூறப்படுகிற சகரசாகரர் சிற்ப உருவத்திலும் காணப்படுகிறது.

இக் குகைக்கோயில் தனித்தனியாக இருந்த மூன்று கருவறைகளும் பிற்காலத்தில் சமய வெறியர்களினால் சிதைக்கப்பட்டுள்ளன. அன்றியும் இங்கிருந்த சிற்ப உருவங்களை உளிகொண்டு செதுக்கி அழித்துவிட்டனர். கருவறைகளில் இருந்த சிவலிங்கங்களைப் பெயர்த்தெடுத்துப் போட்டு விட்டனர். இங்கிருந்து அழிக்கப்பட்ட சிற்பங்களைப்பற்றி இந் நூலில் வேறு இடத்தில் காண்க.

இங்குள்ள முகமண்டபத்தின் தரைப்பாறையில், அழகு வாய்ந்த பல்லவக்கிரந்த எழுத்தினால் எழுதப்பட்ட வடமொழிச் சுலோகம் ஒன்று காணப்படுகிறது. இது தருமராஜ மண்டபத்திலும், கணேச இரதத்திலும் எழுதப்பட்டுள்ள வடமொழிச் சுலோகங்களின் கடைசி சுலோகமாகக் காணப்படுகிறது. இந்தச் சுலோகத்தின் கருத்து இது:-

''தீயவழியில் செல்லாமல் தடுத்தருளுகிற உருத்திரன் எழுந்தருளப் பெறாத மனத்தையுடையவர்கள் ஆறுமடங்கு சபிக்கத்தக்கவர் ஆவர்.''[1]

---

[1] Epi. Indi. Vol X. P.II


இந்தச் சுலோகம், இங்கிருந்த சிற்பங்களை அழித்து, சிவலிங்கங் களைப் பெயர்த்தெறிந்து, கருவறைகளைச் சிதைத்து அழிவு செய்தவர் களைச் சபித்துக் கொண்டிருப்பதுபோலத் தோன்றுகிறதல்லவா?

## மகிஷாசுரமண்டபம்

மகிஷாசுர மண்டபம் என்று பெயர் கூறப்படுகிற இக்கோயிலை மாமல்லபுரத்துக் கிராமத்தார் கயிலாசநாதர் கோயில் என்று கூறுகிறார்கள். மாமல்லபுரத்துக் கலங்கரை விளக்குக்கு அருகில் இருக்கிற இக் குகைக் கோயில் வெகு அழகாகவும் கம்பீரமாகவும் காட்சியளிக்கிறது. இதன் சில பகுதிகள் முற்றுப்பெற அமைக்கப்படாமல் அறைகுறையாக விடப் பட்டுள்ளன. முற்றுப்பெற்ற பகுதிகள் வெகு அழகாகக் கண்ணுக்கினிய காட்சியாக இருக்கின்றன. தரைமட்டத்துக்கு நான்குஅடி உயரத்துக்கு மேலே அமைக்கப்பட்டுள்ள இக்குகைக்கோயில், முகமண்டபத்தையும் அதற்குப்பின்னால் மூன்று கருவறைகளையும் கொண்டிருக்கிறது. முகமண்டபம் 32 அடி நீளமும் 15 அடி அகலமும் 12 1/2 அடி உயரமும் உள்ளது. மண்டபத்தைத் தாங்கும் தூண்கள் உருண்டு திரண்டு பதினாறு பட்டையுடையனவாக உள்ளன. இத் தூண்களில் ஒன்றை எடுத்துக் கொண்டுபோய், இதற்குப் பின்புறத்தில் இருக்கிற வராகப் பெருமாள் குகைக்கோயிலில் பிற்காலத்தவர் யாரோ வைத்திருக்கிறார்கள். மற்றொரு தூணையும் பெயர்த்துக் கொண்டுபோக முயற்சி செய்ததை அத்தூணின் உச்சியில் உளியினால் செதுக்கியிருப்பது கொண்டு அறியலாம். ஆனால் நற்காலமாக அத்தூணை எடுக்க முடியவில்லை. பெயர்த்துக் கொண்டு போகப்பட்ட தூண் இருந்த இடத்தில் இப்போது, ஆர்க்கியாலஜி இலாகாவால் விகாரமான ஒரு நீண்ட கல்தூண் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது.

இந்த மண்டபத்தின் பின்புறத்தில் மூன்று கருவறைகள் உள்ளன. நடுவில் உள்ள கருவறை நன்கு அமைந்து முன் பக்கத்தில் சிறு மண்டபத்தைக் கொண்டிருக்கிறது. இந்த மண்டபத்தை இரண்டு அழகிய சிங்கத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. இந்தச் சிங்கத் தூண்கள் பார்வைக்கு இனிய காட்சியாக இருக்கின்றன. கருவறையின் தரையில் சிவலிங்கம்

இருந்த துளையொன்று காணப்படுகிறது. இந்தக் கருவறைக்கு இரு புறத்திலும் இரண்டு கருவறைகள் சற்று உள்ளடங்கியுள்ளன. இவை முற்றுப் பெறாமல் அறைகுறையாக உள்ளன. நடுகருவறையின் பின்புறச்சுவரில் சோமஸ் கந்தர் உருவம் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டிருக்கிறது.



"மகிஷாசுர மண்டபம்" என்னும் கயிலாசநாதர் குகைக்கோயிலின் தரையமைப்புப் படம்

முகமண்டபத்தின் தென்புற வடபுறச் சுவர்களில் பாறையைச் செதுக்கியமைக்கப்பட்ட இரண்டு சிற்ப உருவக்காட்சிகள், காண்பவரின் கண்ணையும் மனத்தையும் கவர்ந்து அழகிய இனிய காட்சியாக விளங்கு கின்றன. இவற்றில் தெற்கிலிருப்பது அநந்தசயனமூர்த்தி; வடக்கிலிருப்பது கொற்றவையின் மகிஷாசுரப்போர். இச் சிற்பக் கலைகளைப்பற்றி இந் நூலில் வேறு இடத்தில் காண்க.

### வராகப்பெருமாள் குகைக்கோயில்

மகாபலிபுரத்தில் உள்ள பல்லவர் காலத்துக் கோயில்களில் இப் போதும் வழிபாட்டில் உள்ள கோயில் இவ் வராகப்பெருமாள் குகைக் கோயில் ஒன்றே. இக்குகைக் கோயிலை இடைக்காலத்தில் வைணவர்கள் கைப்பற்றிக் கொண்டு இன்றும் வழிபாடுசெய்து வருகிறார்கள்.

இக்குகைக்கோயில் இருப்பது பலருக்குத் தெரியாது. வழிபாட்டில் உள்ளபடி யினால், ''இந்துக்களை'த் தவிர மற்றவர்கள் இதனுள் செல்வதில்லை.

இக் குகைக்கோயிலில், முதலாம் மகேந்திரவர்மன் உருவமும் அவன் தந்தையான சிம்மவிஷ்ணுவின் உருவமும் பாறைக்கல்லில் புடைப்புச்சிற்ப மாக அமைக்கப்பட்டிருப்பதனாலே, இக் குகைக்கோயில் சிறப்புடையது.

இது வராகமண்டபத்தைப் போன்ற அமைப்புடையது. பெரிய மண்டபமும், மண்டபத்தின் பின்புறச் சுவரின் மத்தியில் சிறிய மாடம் போன்ற கருவறையும் உடையது. மண்டபத்தை இரண்டு வரிசைத் தூண்கள் தாங்குகின்றன. முன் வரிசையில் உள்ளவை சிங்கத் தூண்கள். பின் வரிசையில் உள்ளவை சாதாரணத் தூண்கள். இக் குகைக் கோயில் மண்டபம் 33 அடி நீளமும் 14 அடி அகலமும் 11 1/2 அடி உயரமும் உள்ளது. ஒரே பாறைக்கல்லைக் குடைந்து அமைக்கப்பட்ட இக் குகைக்கோயில் மேற்குப்புறம் பார்த்திருக்கிறது.

வராக மண்டபம் போன்றே இக் குகைக்கோயிலும் முன்புறம் அடைபடாமல் திறந்த வெளியாக இருந்தது. ஆனால், வைணவர்கள் கைப்பற்றிக்கொண்ட பிற்காலத்தில் (விஜயநகர அரசர் காலத்தில்) இக் கோயிலின் முன்புறத்தைக் கற்களினால் அடைத்து மூடி உள்ளே செல்ல சிறு கதவு ஒன்றை வைத்திருக்கிறார்கள். ஆகையினாலே இப்போது இக் குகைக்கோயிலில் இருள் சூழ்ந்திருக்கிறது.

மண்டபத்தின் பின்புறச்சுவரின் மத்தியில் உள்ள சிறிய கருவறையில் வராகப்பெருமாள் திருவுருவம் சுதை மூர்த்தியாக அமைக்கப்பட்டிருக் கிறது. இக் கருவறை, வராக மண்டபத்தின் கருவறையைப் போன்று சற்று முன் வளர்ந்திருக்கிறது. கருவறை தரைமட்டத்திற்கு மேல் இரண்டடி உயரத்தில் இருக்கிறது.

வராகப் பெருமாள் கருவறைக்கு இடது புறத்திலும் வலது புறத்திலும் சுவரில் பெரிய உருவங்களாக கஜலக்குமி, கொற்றவை முதலிய உருவங்கள் சிற்பவுருவமாகச் செய்யப்பட்டுள்ளன.

மண்டபத்தின் வடபுறச் சுவரில், மாமல்லனுடைய பாட்டனான சிம்மவிஷ்ணுவின் உருவமும் தென்புறச் சுவரில், மாமல்லனுடைய

தந்தையான மகேந்திரவர்மன் உருவமும் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

இச் சிற்பங்களைப்பற்றி இந்நூலில் சிற்பக்கலை என்னும் பகுதியில் காண்க.

**திருச்சிராப்பள்ளி குகைக்கோயில்**

திருச்சிராப்பள்ளி மலையிலே இரண்டு குகைக்கோயில்கள் இருக்கின்றன. அவை மேல் குகைக்கோயில் கீழ்க் குகைக்கோயில் என்பன. மேல் குகைக்கோயில், மாமல்லன் நரசிம்மவர்மனுடைய தகப்பனான மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது கீழ்க் குகைக் கோயில், மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது. ஆனால், இக் குகைக்கோயில் முழுவதும் சரிவர அமைக்கப்படாமல் அறைகுறையாக விடப்பட்டிருக்கிறது.

## 2. பாறைக் கோயில்கள்

மாமல்லன் நரசிம்மவர்மனுடைய குகைக்கோயில்களைப்பற்றி இதுகாறும் கூறினோம். இனி, அவன் அமைத்த இரதங்கள் என்று தவறாகப் பெயர் கூறப்படுகிற பாறைக் கோயில்களைப் பற்றி ஆராய்வோம். மாமல்ல புரத்தில் ஒன்பது பாறைக் கோயில்கள் உள்ளன. அவையாவன:- பஞ்ச பாண்டவர் இரதம் என்று தவறாகக் கூறப்படுகிற ஐந்து பாறைக் கோயில் களும், கணேச இரதம் என்று கூறப்படுகிற அத்தியந்தகாம பல்லவேசுரக் கோயிலும், ஊருக்கு அருகில் பக்கிங்காம் கால்வாய்ப் பக்கத்தில் வலயங் குட்டைக்கு அருகில் இருக்கின்ற மூன்று பாறைக் கோயில்களும் ஆகும். இந்தப் பாறைக் கோயில்கள் எல்லாம் மாமல்லன் காலத்திலே அமைக்கப் பட்டவை. இவைகளில் திரௌபதை இரதம் என்னும் கொற்றவைக் கோயிலும் கணேசர் இரதம் என்னும் அத்யந்தகாம ஈசுவரக் கோயிலும் முழுக் கோயில்கள் ஆகும். அஃதாவது, கருவறையும் கூட கோஷ்ட பஞ்சரங்களும் விமானமும் ஆகிய கோயிலின் எல்லா உறுப்புகளும் முறைப்படி அமைந்த கோயில்களாகும். மற்றப் பாறைக்கோயில்கள் எல்லாம், கருவறைகள் அமைக்கப்பெறாத வெளிப்புறத்தோற்றம் மட்டும் நன்கு அமைந்த கோயில்கள் ஆகும்.

இந்தப் பாறைக்கோயில்களை அமைத்த நோக்கம் என்ன? இதுபற்றி இதுவரையில் ஒருவரும் ஆராயவில்லை. முதன்முதலாக இக் கேள்விக்கு விடையை ஆராய்வோம்.

மாமல்லனுடைய தந்தையாகிய மகேந்திரவர்மன் முதன்முதலாகப் பாறைகளைக் குடைந்து முகமண்டபத்தையும் கருவறையையும் மட்டும் உடைய குகைக்கோயில்களை அமைத்தான். ஆனால், அக் குகைக்கோயில் களுக்குமேலே விமானங்களை அவன் அமைக்கவில்லை. விமானங்கள் இல்லாத, கருவறையை மட்டும் உடைய குகைக்கோயில்களாக அவை அமைக்கப்பட்டன.

அவன் மகனான நரசிம்மவர்மன், பாறைகளைக் குடைந்து மண்ட பத்தையும் கருவறையையும் உண்டாக்கி, அதனுடன் அவற்றின் மேல் புறத்தில் விமானங்களையும் அமைத்து வைத்தான். அஃதாவது, தொன்று தொட்டு செங்கல் மரம் சுண்ணம் முதலியவைகளினாலே அமைக்கப்பட்ட கோயில்களின் முழு உருவத்தையும் - விமானம், கருவறை ஆகிய உட்புற அமைப்பு வெளிப்புற அமைப்பு இரண்டையும், பாறைக்கல்லிலே அமைத்து வைத்தான்.

தமிழ்நாட்டிலே நெடுங்காலமாகச் செங்கல்லினால் கோயில் கட்டிடங்கள் அமைக்கப்பட்டுவந்தன. அக் கட்டிடங்களின் விமானங்கள் வெவ்வேறு தோற்றத்துடன் அமைக்கப்பட்டன. அந்த விமான அமைப்பு களை யெல்லாம் பாறைகளிலே அமைத்துக்காட்ட நரசிம்மவர்மன் எண்ணி னான். எண்ணியபடியே முயன்றான். அந்த முயற்சியில் ஒரு பகுதி வெற்றியையும் ஒருபகுதி தோல்வியையும் கண்டான். அஃதாவது, பழைய செங்கற் கோயில்களின் விதவிதமான விமான அமைப்பின் வெளிப்புறத் தோற்றத்தைப் பாறைக்கல்லில் அமைத்துக் காட்டியதில் வெற்றி கண்டான். ஆனால், உள்புறத்தில் கருவறைகளை அமைப்பதில் முழு வெற்றி காண வில்லை. ஏனென்றால், பாறையைக் குடைந்து கருவறையை அமைத்தால், மேலேயுள்ள கல் விமானத்தின் பாரம் தாங்க முடியாமல், பாறைக்கோயில் சிதைந்து போகும். ஆகவே, ''திரௌபதை இரதம்'' ''கணேசர் இரதம்'' என்னும் பாறைக்கோயில்களில் கருவறைகளையும் அமைத்ததுபோல மற்ற பாறைக் கோயில்களில் கருவறைகளை அமைக்காமல், விமானங்களின் வெளிப்புறத் தோற்றத்தை மட்டும் அமைத்து வைத்தான்.

பாறைக் கோயில்களை அமைத்த நோக்கம் இதுவாகத்தான் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டிலே செங்கற் கட்டிடங்களாக இருந்த கோயில்களில் உருவ அமைப்புகளின் மாதிரிகளை, நரசிம்மவர்மன் கருங்கற்பாறைகளில் அமைத்து வைத்ததை நாம் பெரிதும் பாராட்ட வேண்டும். அக் காலத்துச் செங்கல் கட்டிடக் கோயில்கள் நெடுங்காலம் நிலைபெறாமல் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அழிந்துவிட்டன. ஆனால், அவற்றின் மாதிரிகளாக அமைந்த இந்தக் கற்பாறைக் கோயில்கள் அழியாமல் அவற்றின் பழைய உருவ அமைப்புகளை இன்றும் காட்டிக் கொண்டிருக்கின்றன.

மற்றொரு சிறப்பு என்னவென்றால், இப் பாறைக் கோயில்கள் எல்லாம் ஓர் இடத்திலேயே - மகாபலிபுரத்திலேயே - அமைந்திருப்பது தான். ஒரே இடத்திலே அமைந்திருப்பதனாலே, இந்த விமானங்களின் வெவ்வேறுவிதமான அமைப்பை, ஒருமிக்க ஒரே இடத்தில் காணக்கூடியதாக இருக்கிறது.

பழைய செங்கற் கட்டிடங்களின் மாதிரி அமைப்பான இந்தப் பாறைக் கோயில்களை நம்மால் இயன்றவரையில் ஆராய்வோம்.

இப் பாறைக் கோயில்களை, **மாடக்கோயில்கள்** என்றும் **சாதாரணக் கோயில்கள்** என்றும் இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். மீண்டும் இவற்றைத் **திராவிடக் கோயில்கள்** என்றும் வேசரக் கோயில்கள் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இவற்றை விளக்குவோம்.

''அர்ச்சுனன் இரதம்,'' ''தர்மராச இரதம்,'' ''சகாதேவ இரதம்'' என்னும் பாறைக் கோயில்கள் மாடக் கோயில்களின் அமைப்பாகும். மற்றவை எல்லாம் சாதாரணக் கோயில்களின் அமைப்பாகும்.

''அர்ச்சுனன் இரதம்'' என்னும் பாறைக் கோயில், இரண்டு நிலை உடைய மாடக்கோயில். ''தர்மராச இரதம்'' என்னும் பாறைக்கோயில் மூன்று நிலைகளையுடைய மாடக்கோயில். ''சகாதேவ இரதம்'' என்பதும் மூன்று நிலையுடைய மாடக் கோயிலாகும். ''அர்ச்சுனன் இரதம்,'' ''தர்மராச இரதம்'' என்னும் கோயில்கள் **திராவிட** வகையைச் சேர்ந்த மாடக் கோயில்கள். ''சகாதேவ இரதம்'' என்பது வேசர வகையைச் சேர்ந்த மாடக் கோயில்.

நரசிம்மவர்மன் மாடக் கோயில்களைக் கற்பாறைகளில் அமைப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, பல மாடக் கோயில்கள் நமது நாட்டில் இருந்தன. ஆனால், அம் மாடக் கோயில்கள் ஏனைய சாதாரணக் கோயில்களைப் போலவே, செங்கல் மரம் சுண்ணம் முதலிய பொருள்களினால் கட்டப்பட்டவை. நரசிம்மவர்மன் காலத்தில் இருந்த திருநாவுக்கரசு சுவாமிகளும், திருஞான சம்பந்தரும், இவர்களுக்குப் பின்னர் இருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருமங்கை ஆழ்வாரும், தமது பாசுரங்களிலே சில மாடக் கோயில்களைக் கூறுகிறார்கள்.

**திருவைகல் மாடக் கோயிலைச்** சைவ நாயன்மார்களும், **திருமணி மாடக் கோயிலைத்** திருமங்கை யாழ்வாரும் தமது பாசுரங்களில் கூறுகிறார்கள். இந்த மாடக் கோயில்கள் பல்லவர் காலத்துக்கு முன்னரே, சோழன் செங்கணான் என்னும் அரசனால் கட்டப்பட்ட செங்கற் கட்டிடங்கள்.

செங்கற் கட்டிடங்களாக இருந்த மாடக்கோயில் அமைப்புக்களைப் பின்பற்றி, நரசிம்மவர்மன் மாமல்லபுரத்திலே பாறைகளிலே இம் மாடக்கோயில்களை அமைத்தான் என்பதில் சற்றும் ஐயமில்லை.

''பீம ரதம்,'' ''சகாதேவ ரதம்.'' ''கணேச ரதம்'' என்னும் மூன்று பாறைக் கோயில்களும் **வேசரம்** என்னும் பிரிவைச் சேர்ந்த கோயில்கள். மற்றப் பாறைக்கோயில்கள் எல்லாம் திராவிடம் என்னும் பிரிவைச் சேர்ந்தவை.

கோயில் கட்டிடங்களின் மேலேயுள்ள விமான அமைப்புக்களைப் பற்றிக் கோயில்களுக்கு வெவ்வேறே பெயர்கள் உண்டு. தமிழிலே வழங்கிவந்த சில பெயர்களைத் திருநாவுக்கரசு சுவாமிகள் தமது தேவாரத்தில் கூறுகிறார். அப் பெயர்களாவன:- கரக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக் கோயில் என்பன.[1] இவற்றின் விளக்கத்தை இந் நூலாசிரிர் எழுதிய ''தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்'' என்னும் நூலில் கண்டுகொள்க.

---

[1] திரு அடைவு திருத்தாண்டகம் - 5.

வடமொழி சிற்ப நூல்களும் திராவிட விமானக் கோயில்களுக்குச் சில பெயர்களை வடமொழியில் கூறுகின்றன. அவை: விஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிசாலம், ஸ்கந்தகாந்தம், ஸ்ரீகரம், ஹஸ்திபிருஷ்டம், கேசரம் என்பன.[2]

**''திரௌபதை இரதம்''**


இனி, மாமல்லனால் மாமல்லபுரத்திலே அமைக்கப்பட்ட இந்தப் பாறைக் கோயில்களின் அமைப்பை விளக்குவோம். முதலில் திரௌபதை ''இரதம்'' என்னும் கோயிலை எடுத்துக் கொள்வோம். திரௌபதை இரதம் என்று இப்போது பெயர் வழங்கப்படுகிற இக் கோயில் உண்மையில் திரௌபதிக்காக ஏற்பட்ட கோயில் அல்ல. துர்க்கை என்னும் கொற்றவைக்காக ஏற்பட்ட கோயில் இது?

ஒரே பாறைக்கல்லைச் செதுக்கி யமைக்கப்பட்ட அழகிய, சிறிய, கச்சிதமான, காட்சிக்கினியது இக் கோயில் அமைப்பு. 1300 ஆண்டு ஆகியும் இனியும் புத்தம் புதிதாகக் காணப்படுகிறது. ஒன்றின் மேல் ஒன்றாக அமைந்த இரண்டு மேடைகளின் மேலே இந்தக் கோயில் எழில்பெற விளங்குகிறது. அடிப்புறத்து மேடையைச் சிங்கங்களும் யானைகளும் தாங்குவது போலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மேடையி லிருந்து மேல் மேடைக்குப் போக மூன்று படிகள் அமைத்துள்ளன. விசால மாலன இரண்டாவது மேடையின்மேல் இக் கோயில் அமைத்திருக்கிறது. இது மேற்குப் பார்த்த கோயில். கோயிலுக்குள் போக மூன்று படிகள் கச்சிதமாக அமைந்திருக்கின்றன.

இக்கோயிலுக்கு அர்த்த மண்டபமும் முகமண்டபமும் இல்லை; கருவறை மட்டும் அமைந்துள்ளன. கருவறை சதுர அமைப்புள்ளது. கோயிலின் வாயில் 6 அடி 7 அங்குலம் உயரமும் 2 அடி 10 அங்குலம் அகலமும் உள்ளது. வாயிலுக்கு மேலே இரண்டு வளைவுள்ள மகர தோரணம் இருக்கிறது? வாயிலின் இரண்டு பக்கங்களிலும் துவார பாலிகை யர் உருவங்கள் உள்ளன. கோயிலுக்குள் இப்போது கொற்றவையின் உருவம் இல்லை. கருவறைச் சுவரில் கொற்றவையின் உருவம் புடைப்புச்

---

[2] காமிகாகமம் 60-ஆவது, ஏகபூமியாதி விதிபடலம்.



" ஸ்ரீவத்ஸ இரதம் " என்னும் இளங்கோயில் தரையமைப்புப் படம்

சிற்பமாகப் பாறையில் செதுக்கப்பட்டிருக்கிறது. சுவரின் வெளிப்புறத்தில் மூன்று பக்கங்களிலும் கொற்றவையின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன இச் சிற்ப உருவங்களின் விளக்கத்தை இந்நூலின் மற்றோர் இடத்தில் காண்க.

இந்தக் கோயிலின் விமானம் நான்கு பட்டையாக அமைந்திருக்கிறது. விமானத்தின் நான்கு மூலைகளிலும் சுருள் கொடி சித்திரிக்கப்பட்டிருக் கிறது. மற்றப்படி இவ்விமானத்தில் கர்ணகூடு, பஞ்சரம், காலை முதலிய உறுப்புகள் இல்லை. விமானத்தின் உச்சியில் இருக்க வேண்டிய கும்ப கலசம், இக் கோயிலுக்கு அருகாமையில் மேடையின் மேல் இருக்கிறது. இந்தக் கலசத்தை வேறு தனிக் கல்லினால் செய்து இதன் உச்சியில் வைக்க எண்ணினார் போலும் இக் கோயிலை அமைத்த சிற்பாசாரி.

இந்தக் கட்டிடத்திற்குத் தமிழில் இளங்கோயில் என்றும் வடமொழியில் ஸ்ரீகரக்கோயில் என்றும் பெயர்.[1] இது திராவிட கட்டிடப் பிரிவைச் சேர்ந்தது.

சிலர், இளங்கோயில் என்பதைப் பாலாலயம் என்று மொழி பெயர்த்துக் கொண்டு, பழைய கோயிலைப் புதுப்பிக்கும்போது, அந்த

[1] இந் நூலாசிரியர் எழுதிய தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் என்னும் நூலைக் காண்க.

வேலை முடியும் வரையில் தற்காலிகமாகக் கோயில் மூர்த்தியை வைத்திருக்கும் இடத்திற்குப் பாலாலயம் என்பது பெயர் என்று கூறு கிறார்கள். இவர்கள் கூற்று தவறானது. பாலாலயம் வேறு; இளங்கோயில் வேறு. திருநாவுக்கரசர் தமது தேவாரத்தில் இளங்கோயிலைக் குறிக்கிறார். மீயச்சூர் கோயிலை இளங்கோயில் என்று கூறுகிறார். திருவேங்கடத்துக்கு அருகில் உள்ள திருச்சானூர் (திருச்சோகினூர்) பத்மாவதி அம்மனுக்கு முற்காலத்தில் இருந்த கோயில் இளங்கோயில் என்று ஒரு கல்வெட்டுச் சாசனம் கூறுகிறது.

திராவிடக் கோயில் விமான வகையில் சேர்ந்தது இளங்கோயில். இளங்கோயில் உருவங்கள், மகாபலிபுரத்திலேயே வேறு இடங்களில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன. அவை, அருச்சுனன் தபசு என்று இப்போது தவறாகப் பெயர் கூறப்படுகிற சகரசாகரர் கதைச் சிற்பத்திலும், இராமாநுச மண்டபம் என்னும் குகைக் கோயிலின் முன்புறத்து இரு கோடியிலும் காணப்படுகின்றன. இளங்கோயில் அமைப்புள்ள வேறு கட்டிடங்கள் கொடும்பாளூர் முதலிய பல இடங்களிலும் உள்ளன. மகாபலிபுரத்தில் வலயங்குட்டைக்கருகில் உள்ள "இரதம்" என்னும் கோயிலும், பிடாரி கோயிலுக்கு அருகில் இருக்கிற இன்னொரு "இரதம்" என்னும் கோயிலும் இளங்கோயில் விமானங்களையுடையன.

எனவே, "திரௌபதை இரதம்" என்று பெயர் கூறப்படுகிற கோயில், திராவிடப் பிரிவைச் சேர்ந்த கோயில் வகைகளில் ஒன்று என்பதும், இது தமிழ்நாட்டில் மிகப் பழையகாலந்தொட்டு இருந்து வருகிறதென்பதும், பழைமையான இக்கோயில் அமைப்பை மாமல்லன் பாறைக்கல்லில் செதுக்கி வைத்தான் என்பதும் அறியத்தக்கன.

***"அர்ச்சுனன் இரதம்"***


இது, "திரௌபதி இரதம்" எனப்படும் கொற்றவைக் கோயிலாகிய இளங்கோயிலுக்கு அருகில் தெற்குப் பக்கத்தில் இருக்கிறது. அர்ச்சுனன் இரதம் என்பது தவறான பெயர். இதற்கும் அர்ச்சுனனுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. உண்மையில் இது இரண்டு நிலைமாடக் கோயிலாகும். இதற்குப் பக்கத்தில் இருக்கிற "தர்மராஜ இரதம்" எனப்படும் அத்தியந்த காம பல்லவேச்சரம் மூன்று நிலைமாடக் கோயிலாகும். பண்டைக் காலத்தில், பல்லவர் காலத்துக்கு முன்னரே, இரண்டுநிலை, மூன்று

நிலையுடைய மாடக்கோயில்கள் தமிழ்நாட்டில் இருந்தன. அவை மரத்தினாலும் செங்கல்லினாலும் அமைக்கப்பட்டிருந்தன. அந்த மாடக் கோயில்களின் உருவ அமைப்புதான் மாமல்லபுரத்து ''அர்ச்சுனன் இரதமும்'' ''தர்மராஜ இரதமும்.''

அர்ச்சுனன் இரதம் எனப்படும் இந்த இரண்டுநிலை மாடக் கோயில், சதுரமான அமைப்புடையது. இந்தக் கோயிலைச் சிங்கங்களும் யானை களும் சுமப்பதுபோல, சிங்க உருவங்களும், யானை உருவங்களும் இதன் அடிப்புறத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இக் கோயிலின் முன்புறத்தில் சிறு அர்த்த மண்டபம் இரண்டு சிங்கத் தூண்களுடன் இருந்தது. அந்தத் தூண்களைப் பிற்காலத்தில் நிகழ்ந்த சைவ வைணவ சமயச் சச்சரவு காலத்தில், உடைத்து அழித்து விட்டார்கள். ஆகவே இப்போது, ஆர்க்கியாலஜி இலாகா அந்தத் தூண்களுக்குப் பதிலாக இரண்டு கல்லை நாட்டி வைத்திருக்கிறார்கள். கருவறையில் இப்போது மூர்த்தி இல்லை. முற்காலத்தில் இருந்ததைப் பிற்காலத்தவர் எடுத்தெறிந்து விட்டார்கள். இக் கோயிலின் வெளிப்புறச் சுவர்களில், வடக்கு கிழக்கு தெற்குப் புறங்களில், அழகான தூண்கள் அமைந்துள்ளன. இத் தூண்கள் மரத்தூண்களின் அமைப்பை ஒத்திருக்கின்றன. தூண்களுக்கு இடையே யுள்ள கோஷ்ட பஞ்சரங்களில் வெகு அழகான சிற்ப உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக அமைந்திருக்கின்றன. இச் சிற்பங்களைப்பற்றி வேறு இடத்தில் விளக்கமாகக் கூறியுள்ளேன்.

''அர்ச்சுனன் இரதம்'' என்னும் கோயிலில் தரையமைப்புப் படம்



இந்த நிலைக்கு மேலே, கர்ண கூடுகளும் சாலைகளும் பஞ்சரங் களும் பல்லவர்காலச் சிற்ப முறைப்படி அமைந்துள்ளது. அதற்கு மேலே, சற்று உள்ளடங்கி இரண்டாவது நிலை இருக்கிறது. இந்த நிலைக்குச் செல்ல படிகள் இல்லை. இரண்டாவது நிலையில் கருவறையும் இல்லை. ஆயினும் கருவறை வாயில் போல நாற்புறத்திலும் வாயில்கள் சிற்ப உருவமாகக் காட்டப்பட்டுள்ளன. இரண்டாவது நிலைக்கு மேலே, கர்ணகூடு சாலை பஞ்சரங்களும், அதற்கு மேலே கழுத்தும், அதன் மேல் எட்டுப்பட்டையுள்ள விமானமும் சிற்ப அழகுடன் அமைக்கப்பட்டுள்ளன. விமாத்தின் மேலே இருந்த கல்லால் அமைத்த கும்பகலசம் கீழே விழுந்து தரையில் கிடக்கிறது.

இந்த அழகான கோயிலின் மேலிருக்கும், விமானத்தைப், பிறகாலத் தில் நிகழ்ந்த சமயப் போரில், யாரோ உடைத்துப் பின்னப்படுத்தி விட்டார்கள். இப்போது, அந்த உடைப்பைப் பழுது தீர்த்து முழு உருவமாக அமைத்திருக்கிறது ஆர்க்கியாலஜி இலாகா. எழிலோடு கச்சிதமாக அமைந்துள்ள இந்த இரண்டு நிலைமாடக் கோயில், இப்போதும் வெகு அழகாகக் காணப்படுகிறது. அடிமுதல் முடிவரையில் ஒரே பாறைக்கல்லைச் செதுக்கி யமைக்கப்பட்டுள்ள இந்தக் கோயிலும், இதிலுள்ள சிற்ப உருவங் களும், மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்துச் சிற்பிகளின் கைவல்ல மையைக் காட்டுகின்றன.


**''பீமன் இரதம்''**

''அர்ச்சுனன் இரதம்'' என வழங்கப்படும் இரண்டு நிலை மாடக் கோயிலுக்குத் தெற்கில் ''பீம ரதம்'' எனப்படும் நீண்ட சதுரமுள்ள பெரிய கோயில் ஒரே பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டிருக்கிறது. இது, சிதம்பரம் நடராசப் பெருமானின் கோயில் அமைப்பைக் கொண்டது. நீண்ட சதுரமான மண்டபத்தையும், அதன்மேல் படகைக் கவிழ்த்து வைத்தது போன்ற கூரையையும் (விமானத்தையும்), நான்கு புறத்திலும் தாழ் வாரத்தையும் உடையது. இதன் தூண்கள் நரசிம்மவர்மன் காலத்துச் சிங்கத்தூண்கள்.

இந்தக் கட்டிடத்தின் விமானமும், கர்ணகூட கோஷ்ட பஞ்சரங்களும் ஆகிய மேல்பகுதி மட்டும் நன்றாக அமைக்கப்பட்டுள்ளன. கட்டிடத்தின் கீழ்ப்பகுதிகள் முற்றுப்பெறாமல் அறைகுறையாகவே விடப்பட்டிருக்

கின்றன. இது முற்றுப்பெறுவதற்குள் பாறை வெடித்துவிட்டபடியால் இப்பகுதிகள் முற்றுப்பெற அமைக்கப்படவில்லை.

இது வேசரம் என்னும் சிற்பப்பகுதியைச் சேர்ந்த கட்டிடம். இவ்விதக் கட்டிடத்தை ஆதியில் பௌத்தர்கள் அமைத்தார்கள். பிறகு, இத்தகைய கட்டிடங்கள், தமிழ்நாட்டிலும் இடம்பெற்றன. பௌத்தர்களின் விகாரைகள் (பௌத்தமடங்கள்) இந்த அமைப்பில் அமைக்கப்பட்டன. ஆதியில், இந்தக் கட்டிடங்கள் மரத்தினால் அமைக்கப்பட்டன. சிதம்பரத்திலே இந்தக் கட்டிட அமைப்பு இருப்பதையும், அது இன்றும் மரத்தினால் அமைந்திருப்பதையும் இன்றும் காணலாம். மகாபலிபுரத்திலுள்ள இந்த ''பீமரதம்'',



“பீமரதம்” என்னும் பாறைக்கோயிலின் முகசாலையில் உள்ள சேதிய சிற்பம்

பண்டைக் காலத்தில் மரத்தினால் அமைக்கப்பட்ட விகாரையின் (அம்பலத்தின்) அமைப்பைக், கல்லில் செதுக்கிக் காட்டப்பட்டிருக்கிறது இந்தக் கட்டிடத்தில் துவாரபாலகர், தோரணங்கள், தெய்வ உருவங்கள் முதலிய சிற்பங்கள் இல்லை.

இதன் விமானத்தில் (கூரையில்) கலசங்கள் காணப்படவில்லை. ஆனால், அவை வைக்கப்பட்டிருந்த அடையாளங்கள் காணப்படுகின்றன. கூரைபோன்ற இந்த விமானத்தின் முகசாலைகளில் பௌத்த சேதியங்கள் போன்ற சிற்ப உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சகாதேவ இரதம் எனப்படும் யானைக் கோயில் விமானத்தின் நெற்றி முகத்திலும், கணேச இரதம் எனப்படும் கோயில் விமானத்தின் நெற்றி முகத்திலும் உள்ளது போன்ற தேசிய அமைப்புப் போல இவைக் காணப்படுகின்றன.

### ''தர்மராஜ இரதம்''

''தர்மராஜ இரதம்'' என்று கூறப்படுகிற இந்தப் பாறைக்கோயிலின் பழைய பெயர் ''அத்யந்தகாம பல்லவேசுவரக்கிருகம்'' என்பது. இது மூன்று நிலையுள்ள மாடக்கோயில். இதன் தரையமைப்பு, அகலமும் நீளமும் 28 அடியுள்ள சதுர அமைப்பாகும். உயரம் 39 அடி அதன் உச்சியில் இருக்கவேண்டிய கும்பகலசம் இக் கோயிலின் அருகே தரையில் இருக்கிறது. இக் கலசம் உச்சியில் இருக்குமானால், இக் கோயிலின் உயரம் ஏறக்குறைய 41 அடி இருக்கும்.

மேற்குப்புறம் பார்த்த இக் கோயிலின் முன்புறத்தில் சிங்கத்தூண்கள் உள்ளன. அர்த்த மண்டபமும் இருக்கிறது. இரண்டாவது நிலைக்குப்போகப் படிகள் இல்லை. ஆகவே மரப்படி அமைத்திருக்கிறார்கள். இரண்டாவது நிலையிலிருந்து மூன்றாவது நிலைக்குப்போகப் பாறையிலேயே கற்படிகள் உள்ளன. மூன்றாம் நிலைக்குமேலே எட்டுப்பட்டையுள்ள விமானம் இருக்கிறது. அர்ச்சுன இரதம் என்னும் கோயிலிலும் இதுபோன்ற எட்டுப் பட்டையுள்ள விமானத்தைக் கண்டோம். ஆகவே இது திராவிட வகையைச் சேர்ந்த கட்டிடம் என்பது தெரிகிறது. இப்படிப்பட்ட விமானத்தையுடைய கோயிலுக்கு ஸ்கந்தகாந்தம் என்று காமிகாகமம் பெயர் கூறுகிறது. எட்டுப்பட்டையுள்ள இந்த விமானத்தின்மேலே கலசம் இல்லை. இங்கு வைப்பதற்காக அமைக்கப்பட்ட கலசம், மேலே வைக்கப்படாமலேயே இக்கோயிலின் பக்கத்தில் தரையில் இருக்கிறது.

இந்தக் கோயிலின் சுவர்களிலே, மூன்று நிலைகளிலும் பல சிற்ப உருவங்கள் புடைப்புச் சிற்பமாக[1] அமைக்கப்பட்டுள்ளன. அன்றியும், நரசிம்மவர்மனுடைய சிறப்புப் பெயர்களும் பல்லவக்கிரந்த எழுத்தினால் பொறிக்கப்பட்டுள்ளன. இப் பெயர்களை இந் நூலில் முதல் அத்தியாயத்தில் கூறியுள்ளேன். இங்குள்ள சிற்பங்களைப்பற்றி இந்நூலில் சிற்பக்கலை என்னும் பகுதியில் காண்க. இக் கோயிலில் ''ஸ்ரீ அத்யந்த காம பல்லவே சுவரக் கிருகம்'' என்னும் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது.

இதுபோன்று மூன்று நிலையுள்ள மாடக்கோயில், கருங்கல் கட்டிடமாக அமைக்கப்பட்டது வேறு ஒன்று உண்டு. அது காஞ்சீபுரத்து வைகுந்தப் பெருமாள் கோயில் ஆகும். காஞ்சீபுரத்து வைகுந்தப்பெருமாள் கோயிலுக்கு பரமேச்சுர விண்ணகரம் என்பது பழைய பெயர். அதனைக் கட்டியவன் பிற்காலத்தவனான பல்லவமல்லன் நந்திவர்மன் என்பவன்.

**''சகாதேவ இரதம்''**

''சகாதேவ இரதம்'' என்று பாமரமக்களால் பெயர் கூறப்படுகிற இந்தக்கோயில், உண்மையில் யானைக்கோயில் ஆகும். யானைக் கோயிலை ஆலக்கோயில் என்றும் கூறுவர். வடமொழியில் கஜபிருஷ்ட விமானம் என்பர். இந்தக் கோயிலின் மேற்புறமுள்ள விமானம், யானை முதுகுபோன்று அமைந்திருப்பதனாலே, இதற்கு யானைக் கோயில் என்று பெயர் கூறப்படுகிறது.[2]

தெற்குமுகமாக நோக்கியமைந்துள்ள இந்த யானைக் கோயில் மூன்று நிலையுள்ள மாடக்கோயில் ஆகும். மாமல்லன் காலத்திலும் அவன் காலத்துக்கு முன்பும் செங்கல், மரம், சுண்ணம் முதலியவைகளினால் அமைக்கப்பட்டிருந்த யானைக்கோயிலின் அமைப்பைக் கருங்கல்லினால் அமைத்துக் காட்டுவது இக்கோயில். மூன்று நிலையுள்ள யானைக் கோயிலின் வெளிப்புறத்தோற்றம், எப்படிப் பண்டைக் காலத்தில் அமைந்திருந்தது என்பதை, இந்தப் பாறைக் கோயிலின் அமைப்பிலிருந்து

---

1. Bas relief.

2. இத்தகைய அமைப்புள்ள கோயில் கட்டிடங்களைப்பற்றிய வரலாற்றை இந் நூலாசிரியர் எழுதியுள்ள யானைக்கோயில்கள் என்னும் நூலில் காண்க.

தெரிந்துகொள்ள லாம். இந்தக் கோயிலின் உட்புறமாகிய கருவறைகள் அமைக்கப்படாமல் வெறும் பாறையாகவே இருக்கிறது.

இந்த யானைக்கோயிலின் தரையமைப்பு 18 அடி நீளமும் 11 அடி அகலமும் உள்ளது. அடிமுதல் உச்சிவரையில் பதினாறடி உயரம் உள்ளது. இக்கோயிலின் முன்புறத்தில் சிறிய அர்த்த மண்டபம் அழகுற அமைத்திருக் கிறது. அர்த்தமண்டபத்தை இரண்டு சிங்கத்தூண்கள் தாங்குகின்றன. அர்த்த மண்டபத்துக்குப் பின்னால் கருவறையின் வாயில் அமைந்திருக்கிறது. வாயிலின் இரண்டு பக்கத்திலும், யானையின் முன்புற உருவம் (தலையும் தும்பிக்கையும்) சிற்ப உருவமாக அமைக்கப்பட்டுள்ளன. வாயிலுக்குள் கருவறை அமைக்கப்படவில்லை.

கோயிலின் அமைப்பு, நீண்ட அரைவட்டமாக இருக்கிறது. சுவருக்கு இடையிடையே தூண்கள் அமைந்து கட்டிடத்தை அழகு செய்கின்றன. இவ்வாறமைந்த சுவருக்குமேலே, மஞ்சம் (பிரஸ்தரம்) இருக்கிறது. மஞ்சத்தில் கூடு என்னும் உறுப்புகள் அமைந்திருக்கின்றன. மஞ்சத் திற்குமேலே கர்ணகூடு, கூடம், கோஷடம், பஞ்சரம் என்னும் உறுப்புகளும் பல்லவர்கால முறைப்படி அமைந்துள்ளன.

மஞ்சத்தின்மேல் இரண்டாவது நிலையிருக்கிறது. இரண்டாவது நிலையின் சுவர்கள் சற்று உள்ளடங்கி, முதல் நிலையைப்போலவே நீண்ட அரைவட்டமாக அமைந்திருக்கின்றன. இந்தச் சுவர்களிலும் இடை யிடையே தூண்கள் அமைந்துள்ளன. இச் சுவருக்குமேலே கூடுகள் அமைந்த மஞ்சமும், மஞ்சத்துக்குமேலே கூட கோஷ்ட பஞ்சர கர்ண கூடுகளும் உள்ளன.

இரண்டாவது நிலைக்குமேலே மூன்றாவது நிலை இருக்கிறது. இது, இரண்டாவது நிலையைவிடச் சற்று உள்ளடங்கியிருக்கிறது. மூன்றாவது நிலையும் அரைவட்ட வடிவமாகவும், இடையிடையே தூண்களையுடைய தாகவும் அமைந்திருக்கிறது.

மூன்றாவது நிலைக்குமேலே விமானம், யானை முதுகு போன்ற வடிவமாக அமைந்திருக்கிறது. விமானத்தின் உச்சியில் ஐந்து கும்ப கலசங்கள் முற்காலத்தில் இருந்திருக்க வேண்டும். அவை இப்போது காணப்படவில்லை. ஆனால், அவை இருந்த அடையாளங்கள் தெரி கின்றன. விமானத்தின் பின்பக்கம், யானையின் பின்பககம் போன்று, வட்ட

மாக இருக்கிறது. விமானத்தின் முன்பக்கமாகிய ''நெற்றிமுகம்'' அரச இலைவடிவமாக அமைந்திருக்கிறது.

நெற்றி முகத்தின்மேலே, மூன்று கொம்புள்ள மனிதன் தலையுருவம் முற்காலத்தில் இருந்தது. இப்போது அந்தத்தலை உடைந்து விழுந்துவிட்ட படியால், மொட்டையாகத் தெரிகிறது. நெற்றி முகத்தில் பௌத்த சைத்தியம் போன்ற உருவங்கள் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சைத்திய உருவங்களும் மூன்று கொம்புள்ள மனிதமுக உருவமும் கணேச இரதம், பீம இரதங்களின் நெற்றிமுகங்களில் உள்ளதுபோல அமைந்துள்ளன.


இந்த யானைக்கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு யானை நின்று கொண்டிருப்பதுபோன்று ஓர் உருவம் பாறையில் செதுக்கப்பட்டிருக்கிறது. யானையின் உருவம் பக்கத்தில் இருப்பதனால், இக் கோயில் இந்திரனுக்காக அமைக்கப்பட்ட கோயில் என்று லாங்ஹர்ஸ்ட் முதலிய சிலர் கருதுகிறார் கள். ஐராவதம் என்னும் யானையின் உருவத்தை அமைத்து இந்திரனை வழி படுவது கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு இருந்த வழக்கம் என்றாலும், அவ் வழக்கம், மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்துக்கு முன்பே வழக் கொழிந்துவிட்டது. ஆகவே, இக் கோயில் இந்திரனுக்காக ஏற்பட்டதல்ல. இந்த யானைக்கோயில், யானையின் உருவம் போன்று அமைக்கப்பட்டது என்பதைக் காட்டுவதற்காகவே இங்கு இவ் யானையின் உருவம் அமைக்கப்பட்டது போலும். இக் கட்டிட அமைப்பில் வேறு சிற்ப உருவங்கள் இல்லை.

**''கணேச இரதம்''**

''கணேச ரதம்'' என்று கூறப்படுகிற இஃது உண்மையில் இரதமும் அன்று; கணேசருக்காக ஏற்பட்டதும் அன்று. இங்கு எழுதப்பட்டிருக்கிற சாசனத்தின்படி, அத்யந்தகாம பல்லவேச்சுரம் என்பது இதன் பெயர். எனவே, இது சிவபெருமானுக்காக அமைக்கப்பட்ட கோயிலாகும். அத்யந்தகாமன் என்பது முதலாம் பரமேசுவரவர்மனுடைய சிறப்புப் பெயர். இவன், மாமல்லன் நரசிம்மவர்மனுடைய பேரன். மாமல்லன் காலத்தில் தொடங்கப்பட்ட இந்தக் கோயில், அவனுடைய பேரன் காலத்தில் முற்றுப்பெற்று, அவன் பெயர் சூட்டப்பட்டது போலும்.

இக் கோயிலில் இருந்த சிவலிங்கம் பிற்காலத்தில் எக்காரணத்தினாலோ எடுபட்டுப் போயிற்று. பின்னர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், செங்கல்பட்டு மாவட்டத்துக் கலெக்டருடைய உத்தரவு பெற்று, இவ்வூரார் இக்கோயிலில் கணேசர் உருவம் ஒன்றை வைத்திருக்கிறார்கள். இந்தக் கணேசர் பெயரினால்தான் இப் பாறைக்கோயில் இப்போது ''கணேச ரதம்'' என்று பாமரர்களால் பெயர் கூறப்படுகிறது. ஆர்க்கியாலஜி இலாகாக்காரரும் இக் கோயிலுக்குக் ''கணேச ரதம்'' என்றே பெயர் எழுதி வைத்திருக்கிறார்கள்.

அத்யந்தகாம பல்லவேச்சுரம் என்னும் பழைய பெயரையுடைய இப் பாறைக்கோயில் 20 அடி நீளமும், 11 1/2 அடி அகலமும், 28 அடி உயரமும் உள்ளது. மேற்குப் பக்கம் பார்த்த இந்தக் கோயிலின் முன்பக்கத்தில் ஏறக்குறைய 20 அடி நீளமுள்ள அர்த்த மண்டபம் இருக்கிறது. அர்த்த மண்டபத்தில் அர்த்த மண்டபத்தின் இரண்டுகோடியிலும் இரண்டு சிங்கத் தூண்களும் ஆக நான்கு தூண்கள் இந்த மண்டபத்தைத் தாங்குகின்றன. மண்டபத்தின் இருகோடியிலும் இரண்டு மனித உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக *(Bas relief)* அமைக்கப்பட்டுள்ளன. இவை துவாரபாலகர் உருவங்கள் அல்ல. அரசர் உருவம் போலக் காணப்படுகின்றன. அர்த்த மண்டபத்தின் நடுவில், திருவுண்ணாழிகை (கருவறை) அமைத்திருக்கிறது. இக் கருவறை 6 அடி 11 அங்குலம் நீளமும், 3 அடி 9 அங்குலம் அகலமும், 6 அடி 8 அங்குலம் உயரமும் உடையது.



" கணேச ரதம் " என்னும் பாறைக் கோயிலின்
தரை அமைப்புப் படம்

இப் பாறைக்கோயிலின் வெளிப்புறச் சுவர், இடையிடையே தூண்களைப் பெற்று அழகாகக் காணப்படுகிறது. சுவருக்கு மேலே மஞ்சமும் (பிரஸதரம்), அதன் மேல் கூட கோஷ்ட பஞ்சரம் கர்ணகூடு முதலான உறுப்புகளும் பல்லவர்கால முறைப்படி அமைந்துள்ளன. மஞ்சத்திற்கு மேல் சற்று உள்ளடங்கி இரண்டாவது பூமி (நிலை) இருக்கிறது. இரண் டாவது நிலைக்குமேல் ''கழுத்து'' என்னும் உறுப்பும் அதற்குமேல் படகைக் கவிழ்த்து வைத்தது போன்ற **சாலாகார** விமானமும் இருக்கின்றன. இந்த விமானம் ''பீமரதம்'' என்னும் கோயிலின் விமானம் போன்றது. நீண்டு கிடக்கும் இந்தச் சாலாகார விமானத்தின் உச்சியில் ஒன்பது கும்பகலசங்கள் உள்ளன. விமானத்தின் இரண்டு கோடியிலும், அஃதாவது வடக்குத் தெற்குப் புறங்களில், முக சாலைகள் (நெற்றிமுகம்) உள்ளன. இம் முகசாலைகளில், ''பீமரதத்தின்'' முகசாலைகளில் காணப்படுவது போன்று, பௌத்தச் சேதியச் சிற்ப உருவங்கள் புடைப்புச் சிற்பமாக அமைந்துள்ளன.

இந்தச் சாலாகார விமானக் கோயில், கோயில் கட்டிடப் பிரிவுகளில் **வேசரம்** என்னும் பிரிவைச் சேர்ந்தது. பீமரதம் என்னும் கோயிலும் வேசரப் பிரிவைச் சேர்ந்த சாலாகாரக் கோயிலே. பீமரதம், நான்கு பக்கங்களிலும் வாயில்களையும் தாழ்வாரம் போன்ற அர்த்த மண்டபங்களையும் உடையது. கணேச ரதமோ ஒரே அர்த்த மண்டபத்தையும் ஒரே வாயி லையும் உடையது. கணேச ரதமாகிய சாலாகார விமானக் கோயிலைப் போல் பிற்காலத்தில் கற்றளியாக அமைக்கப்பட்ட கோயில், காஞ்சீபுரத்துக் க்யிலாச நாதர்கோயில் முற்றத்தில் உள்ள **மகேந்திரவர்மேசுவரக் கிருகம்** என்னும் கோயில் அது மூன்றாம் மகேந்திரவர்மனால் அமைக்கப்பட்டது.

கணேசரதம் என்னும் அத்யந்தகாம பல்லவேச்சுரக் கிருகத்தின் அர்த்த மண்டபத்தில், தென்புறச் சுவரில், பல்லவக்கிரந்த எழுத்தினால் எழுதப்பட்ட வடமொழிச் சுலோகங்கள் காணப்படுகின்றன. அந்தச் சுலோகங்கள் மாமல்லனுடைய பேரனான பரமேசுவரவர்மன் காலத்தில் எழுதப்பட்டன. அச் சுலோகங்களின் தமிழாக்கம் வருமாறு:

1. ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் முச் செயல்களுக்கும் காரணராகவும், ஆதிநாயகராகவும் இருக்கிற காமாந்தக மூர்த்தி மானிடரின் அத்தியந்த காமங்களை (விருப்பங்களை) நிறைவேற்றி யருள்வாராக.

2. மாயையோடு கலந்திருந்தும் மாயையில்லாமலும், பல குணங் களைக் கொண்டிருந்தும் குணமில்லாமலும், தமக்குத்தாமே காரணராகவும், எல்லோருக்கும் தலைவராகவும், தமக்கோர் இறைவன் இன்றித் தாமே இறைவனாகவும் இருக்கிற அவருடைய வெற்றி வாழ்வதாக.

3. கயிலாய மலையையும் அதனைத் தூக்கிய தசமுகனையும் (இராவணனையும்) பாதகலத்தில் அழுந்தும்படி கால்விரலால் அழுத்திய, அத்தகைய ஆற்றலையுடைய பிறப்பிலியாகிய சிவபெருமானை ஸ்ரீநிதி தமது தலையில் தாங்கியிருக்கிறார்.

4. நிலமகளைக் காதலோடு கைகளில் அணைத்துக் கொண்டு, பக்தி நிறைந்த உள்ளத்தில் பவனை (சிவனை) வைத்துக்கொண்டு இருக்கிற ஸ்ரீபரன், வெற்றியுடன் நெடுங்காலம் வாழ்வானாக.

5. பகை மன்னரின் நாடுகளைத் தனக்கு அடிப்படுத்தி ரணஜயன் என்று பெயர்படைத்த அத்யந்தகாம அரசன், சம்புவுக்கு (சிவனுக்கு) இந்த இல்லத்தை அமைத்தான்.

6. காற்றுந்தீயுமாயும் பீமனும் சிவனுமாயும் சங்கரனும் காமாந்த கனாயும் உள்ள அவன் வெற்றியுடன் விளங்குவானாக.

7. மகாராஜனுக்கு (குபேரனுக்கு) மகாராஜனும், ஆனால் குரூபியா யில்லாதவனும், மக்களைத் துன்புறுத்தாமல் அருளுடன் காக்கும் சக்கரவர்த்தியும், சந்திரனைப் போன்றவனும், ஆனால் நலிந்த உடம்பு இல்லாமல் நல்லுடம்பு பெற்றவனும் ஆகிய தருணாங்குரன் வெற்றி பெறுவானாக.

8,9. பகை மன்னரின் ஆற்றலை அழித்தவனும் திருமகள் தங்குவதற்கு இடமாகவுள்ளவனும் காமனைப்போன்று அழகுள்ளவனும் அரனை (சிவனை) எப்போதும் வணங்கிக் கொண்டிருப்பவனுமாகிய அத்யந்த காமனுடைய, தாமரை மலர்கள் மலரப்பெற்று நீராடுதற்கு ஏற்ற நறுநீர்ப் பொய்கை போன்று பட்டாபிஷேக நீரினாலும் இரத்தின மணிமுடியினாலும் விளங்குகின்ற திருமுடியில், சங்கரன் எழுந்தருளியிருக்கிறான்.

10. தன் குடிமக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவும், சங்கரனுடைய அருளைப் பெறுவதற்காகவும் தூர்ஜதி (சிவன்) எழுந் தருளும் பொருட்டு இந்தப் பெரிய தளியை அவன் அமைத்தான்.

*11.* தீய வழியில் ஒழுகாமல் தடுக்கிற உருத்திரன் எழுந்தருளப் பெறாத மனமுடையவர்கள் ஆறுமடங்கு சபிக்கத்தக்கவர் ஆவார்கள்.

அத்யந்தகாம பல்லவேசுவரக் கிருகம்.[1]

**''வலயன் குட்டை இரதம்.''**

இது மகாபலிபுரத்து ஊருக்கு அருகே, பக்கிங்காம் கால்வாய்க்குக் கிழக்குப் பக்கத்தில் (பாலத்துக்கு அருகில்) இருக்கிறது. வலயன் குட்டை என்னும் குட்டைக்கு அருகில் இருப்பதனால் இதற்கு இப் பெயர் வழங்குகிறது.

''இரதங்கள்'' என்று கூறப்படுகிற மற்றப் பாறைக் கோயில்களைப் போலவே இதுவும் ஒரே பாறையில் அமைக்கப்பட்ட கோயில். இதனையும் இதற்கு அடுத்துள்ள ''பிடாரி இரதங்களையும்'' மாமல்லபுரத்துச் சிற்பங் களைக் காண வருகிறவர்கள் பெரும்பாலோர் பார்ப்பதில்லை காரணம், இவை தனியே ஒருபுறமாக ஒதுங்கியிருப்பதுதான்.

வலயன் குட்டைப் பாறைக்கோயிலின் அடிப்புறமும் கருவறையும் நன்கு அமைக்கப்படாமல் வெறும் பாதையாகவே விடப்பட்டிருக்கின்றன. இக் கோயிலின் மேற்பகுதிகள் மட்டும் செம்மையாகவும் ஒழுங்காகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கோயிலின் மேற்புற அமைப்பை மட்டும் காட்டுதற்காக இப் பாறைக்கோயில் அமைக்கப்பட்ட தென்பது நன்கு தெரிகிறது.

கிழக்கு நோக்கியுள்ள இந்தப் பாறைக்கோயில், அர்த்த மண்டப முடையது. ஆனால், மேலே கூறியபடி அர்த்த மண்டபம், கருவறை முதலிய பகுதிகள் இதில் நன்கு அமைக்கப்படவில்லை. மேல் பகுதிகளாகிய மஞ்சமும் கழுத்தும் விமானமும் செம்மையாகவும் ஒழுங்காகவும் அமைந்து கண்ணுக்கினிய காட்சியாக இருக்கிறது.

இது இளங்கோயிலின் மற்றொரு அமைப்பு. திரௌபதை இரதம் என்னும் இளங்கோயிலின் விமான அமைப்பு நான்கு பட்டையுள்ள

---

1. S.I.I. Vol.I, P.6., Epi. Indi. Vol.X.

தென்பதை முன்னமே அறிந்தோம். அதே இளங்கோயில் விமானந்தான் இந்தப் பாறைக்கோயிலுக்கும் அமைந்திருக்கிறது. திரௌபதை இரதத்திற்கு மஞ்சம், கழுத்து, கூட கோஷ்ட பஞ்சரம் முதலிய உறுப்புகள் இல்லை இந்த இளங்கோயில், அவ்வுறுப்புகள் எல்லாம் அமையப்பெற்ற மூன்று நிலை (பூமி) யுள்ள இளங்கோயில்.

கருவறைக்கு மேலேயுள்ள மஞ்சம் (தோள்) என்னும் உறுப்பில் கூடுகள் அமைந்துள்ளன. மஞ்சத்தின் மேலே கூட கோஷ்ட பஞ்சரங்களும் மூலைகளில் கர்ணகூடுகளும் பல்லவர் காலத்து அமைப்புப்படி செம்மை யாக அமைக்கப்பட்டுள்ளன. இதற்குமேலே சற்று உள்ளடங்கி இரண்டாவது நிலை பூமி), கூட கோஷ்ட பஞ்சரம் முதலிய உறுப்புகளுடன் அமைக்கப் பட்டு அதற்குமேலே, சற்று உள்ளடங்கி மூன்றாவது நிலை (பூமி) மேற்படி உறுப்புகளோடு அமைந்திருக்கிறது. இதற்கு மேல் இளங்கோயில் விமானம் நான்கு பட்டையாக அமைந்து இனிது விளங்குகிறது. இந்த விமானத்தின் மேலே இருக்கவேண்டிய கலசம் காணப்படவில்லை.

**''பிடாரி இரதங்கள்''**

வலயங்குட்டை இரதத்திற்கு வடக்கே சிறிது தூரத்தில் வேறு இரண்டு பாறைக் கோயில்கள் இருக்கின்றன. இவற்றிற்கும் பிடாரி இரதங்கள் என்று பெயர் கூறப்படுகிறது. மகாபலிபுரத்தின் கிராம தேவதையாகிய பிடாரியின் கோயில் அருகியல் இருப்பதனாலே, பிடாரி இரதங்கள் என்று பெயர் கூறப்படுகிறது.[1]

இவ்விரண்டு பாறைக் கோயில்களில் வடக்கு நோக்கிய பாறைக் கோயில், வலயங்குட்டைப் பாறைக்கோயிலைப் போலவே மூன்று நிலை யுள்ள இளங்கோயில் ஆகும். இக் கோயிலும், அடிப்பக்கமும் கருவறையும் அமைக்கப்படாமல், மேல் பகுதிகள் மட்டும் செம்மையாகவும் ஒழுங்

---

[1] இந்தக் கிராமதேவதைக்குக் கருக்காத்தாள் என்றும் கருக்கிலமர்ந்தாள் என்றும் பெயர் கூறுவர். கருக்கிலமர்ந்தாள், வீரர்களின் தெய்வமாகிய கொற்றவை. இத் தெய்வத்தின் அழகிய உருவ அமைப்பையும் அதனைப்பற்றிய விபரத்தையும் இந்நூலாசிரியர் எழுதியுள்ள மகேந்திரவர்மன் என்னும் நூலில் காணலாம்.

காகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில், மூன்றுநிலை (பூமி)களும் ஒன்றுக்குள் ஒன்றாக அமைந்து, கூடகோஷ்ட பஞ்சாரம் முதலிய உறுப்புகள் அமையப்பெற்று, உச்சியில் நான்கு பட்டையான இளங்கோயில் விமானத்தைக் கொண்டிருக்கிறது. வலயங்குட்டைக் கோயிலும், பிடாரி கோயிலும் மூன்று நிலையுள்ள இளங்கோயில்களே, என்றாலும் கழுத்து முதலிய உறுப்புகளில் இவற்றிற்குச் சிறு வேறுபாடுகள் உண்டு.

சிற்ப நூல்களில் கூறப்படுகிற இளங் கோயில்களில் மூன்று விதமாக அமைப்புகள், மாமல்லரபுரத்தில் அமைந்துள்ளன.

''பிடாரி இரத'ங்களில் மற்றொன்று, கிழக்கு நோக்கியிருக்கிறது. இதுவும் கருவறைப் பகுதிவரையில் செம்மையாக அமைக்கப்படாமல், மேல்புறம் மட்டும் நன்கு அமைக்கப்பட்டிருக்கிறது. மற்றப் பாறைக் கோயில் களைப் போலவே இதுவும், மேற்புறம் மட்டும் செம்மையாக அமைக்கப் பட்டிருப்பதால் இக் கோயில்களின் விமானங்களை மட்டும் காட்டுவதற்காக இவை அமைக்கப்பட்டன என்று தோன்றுகிறது.

இந்தக் கோயிலின் விமானம் ''அர்ச்சுனன் இரதம்,'' ''தருமராசன் இரதம்'' என்னும் கோயில்களின் விமானத்தைப்போலவே எட்டுப்பட்டை யுள்ள ஸ்கந்தகாந்தம் என்னும் விமானம் ஆகும். ஆனால், அர்ச்சுனன் இரதமும், தருமராசன் இரதமும் முறையே இரண்டு மூன்று கருவறை களையுடைய மாடக் கோயிகள். இந்தக்கோயிலோ, மாடக் கோயில் அல்லாத ஒரே கருவறையுள்ள சாதாரணக் கோயில். ஆனால், இதன் விமானம் மூன்றுநிலை (பூமி)களுடன் அமைந்திருக்கிறது. மஞ்சத்தின் மேல் கூட கோஷ்ட பஞ்சரங்களும், அதற்கு மேலே உள்ளடங்கிய மற்றொரு நிலையில் கூட கோஷ்ட பஞ்சரங்களும், அதற்கும் உள்ளடங்கி மற்றொரு நிலையில் கூட கோஷ்ட பஞ்சரங்களும் அதற்குமேல் கழுத்தும் அதற்கு மேல் எண்கோண விமானமும் அமைந்து இந்தக் கோயில் எழில்பெற விளங்குகிறது.

மாடக் கோயிலாகவும் சாதாரணக் கோயிலாகவும் எவ்வாறெல்லாம் எண்கோண விமானமாகிய ஸ்கந்தகாந்தக் கோயில்களை அமைக்கலாம்

என்பதைக் காட்டுவதற்காகவே சிற்பிகள் மாமல்லபுரத்தில் இந்த மூன்று கோயில்களையும் அமைத்தார்கள் போலும்.

**ஒருமுறை**: சிற்ப நூல்களிலே கூறப்பட்ட திராவிட அமைப்புக் கோயில்கள் மாமல்லபுரத்தில் பாறையில் அமைத்துக் காட்டப்பட்டுள்ளன. ஆனால், ஸ்ரீ விஜயம் என்னும் பெயருள்ள வட்டவடிவமான விமானக் கோயில் அமைப்பு மாமல்லபுரத்தில் காணப்படவில்லை. ஏன் அந்தக் கோயிலின் அமைப்பு இங்கு அமைத்துக் காட்டப்படவில்லை என்பது தெரியவில்லை. அந்தக் கோயிலின் அமைப்பும் இங்கிருக்குமானால், திராவிடக்கோயில் அமைப்புகளையெல்லாம் மாமல்லபுரத்திலே ஒருசேரக் காணக்கூடியதாக இருக்கும்.

*

# 7. சிற்பக்கலை

மாமல்லன் நரசிம்மவர்மன் அமைத்த குகைக்கோயில்களையும் பாறைக்கோயில்களையும் சில அடையாளங்களைக் கொண்டு நன்கு தெரிந்துகொள்ளலாம். அந்த அடையாளங்களைக் கீழே தருகிறேன்.

1. **தூண்கள்**: மாமல்லன் காலத்துக் குகைகளிலும், பாறைக் கோயில்களிலும் தூண்கள் உயரமாகவும், சற்று மெலிந்தும் இருக்கும். இன்னொரு முக்கியமான அடையாளம் என்னவென்றால், மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்துத் தூண்கள் சிங்கத்தூண்கள். அஃதாவது நிமர்ந்து உட்கார்ந்த சிங்கங்கள் தூண்களைத் தாங்குவதுபோல இருக்கும். சிங்கத்தூண்களை முதன்முதல் உண்டாக்கினவன் மாமல்லன் நரசிம்மவர்மனே. இவனுக்குப் பிறகு வந்த பல்லவ அரசர்களும், சோழ அரசர்களுங்கூட, இவ்விதச் சிங்கத் தூண்களைத் தமது கோயில் கட்டிடங்களில் உபயோகித்திருக்கிறார்கள். ஆனால், நிமிர்ந்து உட்கார்ந்த சிங்கத்தூண்களை முதன் முதலாக அமைத்தவன் மாமல்லன் நரசிம்மவர்மனே. சிங்கத் தூண்களைத் தவிர சாதாரணத் தூண்களையும் மாமல்லன் உபயோகித்தான். இத் தூண்களைப் படத்தில் காண்க.

2. **துவாரபாலகர்** : கருவறை வாயிலுக்கு இருபுறத்திலும் துவார பாலகர் உருவம் அமைப்பது வழக்கம். மாமல்லனுடைய தந்தையான மகேந்திரவர்மன் காலத்துக் குகைக்கோயில்களில் துவார பாலகரின் உருவங்கள் உள்ளன. அவை முன்புறப் பார்வையாக (எதிர் நோக்கிய வண்ணம்) அமைக்கப்பட்டிருக்கு. அன்றியும் துவார பாலகருக்கு இரண்டு கைகள் மட்டும் இருக்கும்.

மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்துக் குகைக்கோயில்களிலும், பாறைக்கோயில்களிலும் துவார பாலகருக்கு இரண்டு கைகள்தான் உள்ளன. ஆனால், துவார பாலகர் எதிர் பார்வையாக இராமல், கருவறை வாயிலை நோக்கியபடி பக்கவாட்டமாகத் திரும்பி நிற்கிறார்கள். இவர்கள் உருவங்களைப் படத்தில் காண்க.

**3. சோமஸ்கந்தர் உருவம்** : மகேந்திர வர்மனுடைய குகைக்கோயில் கருவறைச் சுவரில் சோமஸ்கந்த உருவம் இராமல் வெறுஞ் சுவராக இருக்கும் அவன் மகனான மாமல்லன் நரசிம்மவர்மன் அமைத்த குகைக் கோயில்களிலும், பாறைக் கோயில்களிலும் கருவறையின் பின்புறச் சுவரில் சோமஸ்கந்தர் திருவுருவம் பொறிக்கப்பட்டிருக்கும். கருவறைச் சுவரில் சோமஸ்கந்தர் திருவுருவத்தை முதன்முதலாக அமைத்தவன் மாமல்லனே. இவனுக்குப் பிறகு வந்த அரசர்களும் இந்த வழக்கத்தைப் பின்பற்றிச் சோமஸ்கந்தர் உருவத்தைக் கருவறைச்சுவரில் அமைத்தார்கள்.

சோமஸ்கந்த மூர்த்தத்தின் அமைப்பு இது: கட்டில் போன்ற ஓர் ஆசனத்தில் சிவபெருமானும் பார்வதியம்மையாரும் சுகாசனமூர்த்தமாக அமர்ந்திருக்கிறார்கள். சிவபெருமான் நீண்ட சடாமுடியுடன் வலது காலை மடக்கி இடதுகாலைத் தொங்கவிட்டுச் சுகாசனமாக அமர்ந்திருக்கிறார். அவருடைய நான்கு கைகளில் இரண்டு கைகளைத் தொடையின்மேல் வைத்திருக்கிறார். மற்ற இரண்டு கைகளில் மான்மழு ஏந்தியிருக்கிறார்.

சிவபெருமானுக்கு இடது புறத்தில் பார்வதியம்மையார் அதே ஆசனத்தில் சுகாசனமாக அமர்ந்திருக்கிறார். அவர் இடதுகாலைத் தொங்கவிட்டு வலதுகாலை மடக்கி அமர்ந்திருக்கிறார். இடதுகையை ஊன்றியிருக்கிறார். தலையில் கரண்டக மகுடம் தரித்துக் காதுகளில் குழைகளை அணிந்திருக்கிறார். இவர்களுக்கு இடையில் சிறு குழந்தை உருவமாக கந்தப்பெருமான் காட்சியளிக்கிறார். இவர்களுக்குமேலே கொற்றக்குடை காணப்படுகிறது.

சோமஸ்கந்த மூர்த்தத்தின் பின்புறத்தில் வலதுபுறம் பிரமனின் உருவமும் இடதுபுறம் திருமால் திருவுருவமும் காணப்படுகின்றன.

சில சோமஸ்கந்த மூர்த்தத்தின் காலடியில் ஏறு (எருது) படுத்திருப்பது போல் அமைக்கப்படுவதும் உண்டு. மாமல்லபுரத்து கயிலாசநாதர் குகைக் கோயிலில் (இதை இப்போது மகிஷாசுரக் குகைக்கோயில் என்கிறார்கள்) உள்ள சோமஸ்கந்த மூர்த்தத்தின் காலடியில் நந்தி (எருது) உருவம் காணப்படுகிறது.

இனி, மாமல்லன் நரசிம்மவர்மன் அமைத்த குகைக்கோயில்களிலும் பாறைக் கோயில்களிலும் அமைக்கப்பட்டுள்ள சிற்ப உருவங்களை விளக்குவோம்.

**4. கொற்றவை** : வீரத்துக்கும் வெற்றிக்கும் தெய்வம் கொற்றவை. கொற்றம் - வெற்றி. அவ்வை - உயர்ந்தவள். கொற்றவை வணக்கம் தமிழ் நாட்டிலே மிகப் பழைய காலந்தொட்டு நடைபெற்று வந்தது. பல்லவ அரசர்களும் கொற்றவையை வழிபட்டனர். கொற்றவைக்குக் கோயில் அமைத்தும், கொற்றவை உருவத்தைச் சிற்பங்களாக அமைத்தும் சிறப்புச் செய்தார்கள். பல்லவர் காலத்துக் கொற்றவை உருவங்கள் அழகுள்ளவை.

மாமல்லன் நரசிம்மவர்மனுடைய தந்தையான மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்ட கொற்றவைத் திருவுருவங்களுக்கும், மாமல்லன் காலத்துக் கொற்றவைத் திருவுருவங்களுக்கும் சிறிது வேறுபாடுகள் உள்ளன மகேந்திரவர்மன் காலத்துக் கொற்றவைத் திருவுருவங்களைப் பற்றிய விபரங்களை எனது மகேந்திரவர்மன் என்னும் நூலில் கூறியுள்ளேன். அக் காலத்துச் சிற்ப உருவப் படங்களையும் அந் நூலில் வெளியிட்டுள்ளேன்.

**5. திரிமூர்த்தி கொற்றவை** : இங்கு மாமல்லன் காலத்துக் கொற்றவை உருவங்களை விளக்குவேன். மாமல்லபுரத்தில் திரிமூர்த்தி குகைக்கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்ட கொற்றவையின் உருவம் ஒன்று உண்டு. இந்த உருவத்தைத் துர்க்கா லக்ஷ்மி என்றுங் கூறுவர். இக் கொற்றவையின் திருவுருவம், எருமைத் தலையின் மேலே நின்ற கோலமாக அமைந்துள்ளது.

தலையில் மகுடம் மிளிர்கிறது. காதுகளில் பத்திர குண்டலங்கள் மின்னுகின்றன. எட்டுக் கைகள் உள்ளன. இரண்டு கைகளில் சங்கு சக்கரம் ஏந்தியுள்ளார். இரண்டுகைகள் அபயவரத முத்திரை காட்டுகின்றன. மற்றக் கைகள் கேடயம், வில், அம்பு, மணி முதலிய ஆயுதங்களைத் தாங்கியுள்ளன. அரையில் மணிமேகலை அணிந்துள்ளார். காலடியில் இரண்டு வீரர்கள் மண்டியிட்டு அமர்ந்திருக்கின்றனர்.

**6. வராகமண்டபக் கொற்றவை** : கொற்றவையின் இன்னொரு சிற்ப உருவம், மாமல்லபுரத்து வராக மண்டபத்தின் சுவரில் புடைப்புச் சிற்பமாக இருக்கிறது. இந்தக் கொற்றவை ஒரு பீடத்தின்மேல் நின்றவண்ணமாகக் காட்சியளிக்கிறார். தலையில் மணிமுடியணிந்து காதுகளில் பொற்குழைகள் மின்ன, வீரமும் வெற்றியும் முகத்தில் விளங்கக் கொற்றவை எழுந்தருளியிருக்கிறார். இவருக்கு நான்கு கைகள் உள்ளன. இரண்டு கைகளில் சங்கு சக்கரங்கள் ஏந்தி ஓர் இடது கையைத் தொடையின்மேல் ஊன்றி ஒரு


வலக்கையில் அபய முத்திரை காட்டுகிறார். கழுத்து கை கால்களில் அணி கலன்கள் அலங்கரிக்கின்றன. தலைக்கு மேல் கொற்றக் குடை காட்சி யளிக்கிறது. வலப்புறத்திலும் இடப்புறத்திலும், கொற்றவையின் ஊர்தி களான சிங்கமும் மானும் காணப்படுகின்றன. ஏவற்றொழில் புரியும் நான்கு பூதங்களின் குறள் உருவங்கள், கொற்றவையின் இருபுறத்திலும் அந்தரத்தில் இருப்பதுபோலக் காட்சியளிக்கின்றன. காலடியில், இருபுறத்திலும் இரண்டு ஆட்கள் மண்டியிட்டு அமர்ந்திருக்கின்றனர். கொற்றவைக்கு வலப்புறத்தில் இருப்பவன் இடது கையினால் தன் தலைமுடியை பிடித்துக் கொண்டு வலக்கையினால் தன் கழுத்தை அரிந்து கொள்கிறான்.

**7. இளங்கோயில் கொற்றவை** : மாமல்லபுரத்திலே, இப்போது ''துரௌபதை இரதம்'' என்று பெயர் கூறப்படுகிற பாறைக்கோயில் கொற்றவைக் கோயிலாகும். இளங்கோயில் அமைப்பாக உள்ள இக் கோயிலின் சுவர்களில் கொற்றவையின் உருவங்கள் புடைப்புச்சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன.

இக் கோயிலின் திருவுண்ணாழிகை (கருவறை)யின் சுவரில் கொற்ற வையின் திருவுருவம் தாமரைப் பூவின்மேல் நின்றவண்ணம் காட்சி யளிக்கிறது. தலையில் கரண்டக மகுடமும் காதுகளில் பத்திர குண்டலங் களும் கழுத்திலும் மார்பிலும் கை கால்களிலும் அணிகலன்களும் அணிந்து, அரையில் மணிமேகலை விளங்கக் கொற்றவை காட்சியளிக்கிறார். மேல் இரண்டு கைகளில் சங்கு சக்கரங்களை ஏந்தி ஒரு வலது கையை அபய முத்திரையாகவும் ஒரு இடது கையைத் தொடைமீது சார்த்தியும் கம்பீரகமாக எழுந்தருளியிருக்கிறார். குறள் உருவமுள்ள நான்கு பூதகணங்கள் ஆகாயத்தில் நிற்பதுபோல இருக்கின்றன. காலடியில், தரையின்மேலே இரண்டு ஆட்கள் மண்டியிட்டு அமர்ந்திருக்கிறார்கள். வலதுபுறத்தில் உள்ள ஆள், தன் இடது கையினால் தன்னுடைய தலைமுடியைப் பிடித்துக்கொண்டு வலது கையினால் கத்தியைக்கொண்டு தலையை அறுக்கிறான். மற்ற ஆள், கைகூப்பி வணங்கிக்கொண்டே தியானம் செய்கிறான்.

8. துவார பாலிகை: கருவறையின் வாயிலின் வெளிப்புறத்தில் துவாரபாலிகையர் உருவங்கள் புடைப்புச் சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளன. வலதுபுரத்துத் துவாரபாலிகை எதிர்பார்வையாக நிற்கிறாள். தலையில் மகுடமணிந்து, காதுகளில் பெரியபத்திர குண்டலங்கள் அணிந்து, இடதுகையை இடுப்பில் ஊன்றி, வலதுகையில் வாளேந்தி நிற்கிறாள். பக்கத்தில் கேடயம் இருக்கிறது.


இடதுபுறத்துத் துவாரபாலிகை சற்றுப் பக்கவாட்டமாக நிற்கிறாள். தலையில் மகுடமணிந்து, காதுகளில் பத்திர குண்டலங்கள் மின்ன, இடது கையை இடுப்பில் ஊன்றி வலது கையில் பிடித்த வில்லைத் தரையில் ஊன்றி இருக்கிறாள். இடதுகாலை ஊன்றி வலதுகாலை மடக்கி நிற்கும் காட்சி காணத்தக்கது. வாயிலின் மேலே மகரதோரணம் சித்திரிக்கப் பட்டிருக்கிறது.



வராக மண்டபத்து மேற்புறத்தில் உள்ள தாமரைப்பூ சிற்பம்


இந்தக் கோயிலின் வெளிப்புறத்திலும் சுவர்களில் இதுபோன்ற கொற்றவையின் சிற்ப உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப் பட்டுள்ளன. கருவறையின் பின்புறச் சுவரில் (வெளிப்பக்கத்தில்) செதுக்கி யமைக்கப்பட்டுள்ள கொற்றவை எருமைத்தலையின்மேல் நிற்பது போன்று அமைந்திருக்கின்றது.

இன்னொரு கொற்றவையின் சிற்ப உருவம் மாமல்லபுரத்து வராகப் பெருமாள் குகைக்கோயிலின் சுவரில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளது. இந்தச் சிற்ப உருவம், மாமல்லபுரத்து வராக மண்டபத்துக் கொற்றவை சிற்பம்போலவே (மேலே கூறப்பட்டது போலவே) உள்ளது. எட்டுக் கைகளுள்ள இந்தச் சிற்பம், எருமைத் தலையின்மேல் (மகிடாசுரன் தலை) நிற்பது போல அமைந்துள்ளது. இரண்டு புறத்திலும் இரண்டு பூத கணங்கள் அந்தரத்தில் நிற்கின்றனர். அவற்றிற்கு மேலே இரண்டு மூலை யிலும் ஊர்திகளான சிங்கமும் கலைமானும் நிற்கின்றன. கொற்றவையின் காலடியில் இரண்டு ஆட்கள் மண்டியிட்டு அமர்ந்துள்ளனர்.



வராக மண்டபத்தின்மேல் உள்ள தாமரைப்பூ சிற்பம்

**9. திருச்சி கொற்றவை** : மாமல்லன் காலத்தில் அமைக்கப்பட்ட மற்றொரு கொற்றவையின் திருவுருவம், திருச்சிராப்பள்ளி மலையில் உள்ள குகைக்கோயில் சிற்பமாகும். திருச்சிராப்பள்ளி மலையில் இரண்டு குகைக்கோயில்கள் உள்ளன. மேல் குகைக்கோயில் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது. கீழ்க் குகைக்கோயில் மாமல்லன் காலத்தில் அமைக்கப்பட்டது. ஆனால், இந்தக் குகைக்கோயில் முழுதும் செம்மையாக அமைக்கப்படவில்லை. இக் குகைக்கோயிலின் சுவரில் புடைப்புச் சிற்பமாகக் கொற்றவையின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இதுவும் நான்கு கைகளுள்ள சிற்பம். பீடத்தின் மேல் கொற்றவை நிற்பது போல அமைக்கப்



வராக மண்டபத்தின்மேல் உள்ள தாமரைப்பூ சிற்பம்

பட்டுள்ளது. கொற்றவையின் காலடியில் இரண்டு மனிதர் தரைமேல் மண்டியிட்டமர்ந்து இருக்கின்றனர். அவர்களில் வலப்புறத்தில் இருப்பவன், வழக்கம் போலத் தன் தலையைத் தானே வாளினால் அறுத்துக் கொள் கிறான். இந்தச் சிற்ப உருவம், முக்கியமாக அடிப்பகுதி, செம்மையாகப் பூர்த்தி செய்யப்படாமலே விடப்பட்டிருக்கிறது.

மேலே கூறப்பட்ட கொற்றவைகளின் சிற்ப உருவங்களில், ஒரு ஆள் தன் கையினாலே தன் தலையை வாள் கொண்டு அரிந்துகொள்கிறதுபோல அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இதன் கருத்து என்ன?

வீரன் ஒருவன் தன் வழிபடு தெய்வமாகிய கொற்றவைக்குத் தன் தலையைப் பலியிடுவதை இச் சிற்பங்கள் காட்டுகின்றன. உயிரைப்

பொருளென மதியாமல், வெற்றியையே உயிராகக் கருதும் வீரர்கள், கொற்றவைக் கோயிலில் சென்று, தங்கள் அரசன் வெற்றிபெறுவானாக என்று வரம் கேட்டுத் தங்கள் தலையைத் தாங்களே அறுத்துக் கொற்றவையின் திருவடிகளில் வைப்பது பண்டைக் காலத்து வழக்கம். இதனை,

***''மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்***
***பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்***
***முந்தச் சென்று முழுப்பலி பீடிகை***
***வெந்திறன் மன்னற் குற்றதை யொழிக்கெனப்***
***பலிக்கொடை புரிந்தோர் வலிக்குவரம் பாகெனக்***
***கல்லுமிழ் கவணினர் கழிப்பிணிக் கறைத்தோற்***
***பல்வேற் பரப்பினர் மெய்யுறத் தீண்டி***
***யார்த்துக் களங்கொண்டோர் ஆரம ரழுவத்துச்***
***சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை***
***வெற்றிவேந்தன் கொற்றங் கொள்கென***
***நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்கு***
***உயிர்ப்பலி யுண்ணும் உருமுக்குரன் முழக்கத்து***
***மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி''***

என்னும் சிலப்பதிகாரச் செய்யுளால் அறியலாம்.[1] கலிங்கத்துப் பரணியும் இதனைக் கூறுகிறது:

***''அடிக்கழுத்தி னுடன்சிரத்தை அரிவ ராலோ***
***அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்பராலோ***
***கொடுத்தசிரங் கொற்றவையைத் துதிக்கு மாலோ***
***குறையுடலங் கும்பிட்டு நிற்கு மாலோ.''***

என்னும் செய்யுள்,[2] வீரர்கள் கொற்றவைக்குத் தலைப்பலி கொடுக்கும் வழக்கத்தை நன்கு விளக்குகிறது. தக்கயாகப் பரணியிலும் இச் செய்தி கூறப்படுகிறது.

எனவே, கொற்றவையின் உருவச் சிற்பங்களில் காணப்படுகிற தலையை அறுக்கும் உருவம், வீரர்களின் உருவம் என்பதும் அவ் வீரர்கள் தமது அரசன் வெற்றி பெறுவதற்காகத் தமது தலையைத் தாங்களே அறுத்துக் கொற்றவைக்குப் பலி கொடுக்கிறார்கள் என்பதும் அறியத் தக்கன.

---

[1] *சிலம்பு காதை. 5. ஆம் காதை 76-88* [2] *க. பரணி. கோயில்: 15*

***10. போர் மடந்தை*** : மாமல்லன் காலத்தில் அமைக்கப்பட்ட கொற்றவையின் மற்றொரு உருவச்சிற்பம் மகிஷாசுரமர்த்தினி குகைக்கோயிலில் இருக்கிறது. பாறைச் சுவரில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ள இந்த அழகிய சிற்பம், கொற்றவை மகிஷாசுரனுடன் போர் செய்வது போல அமைந்திருக்கிறது.

இதில், வெற்றி மடந்தையாகிய கொற்றவை மகிஷாசுரனுடன் போர் செய்கிற போர்க்களக் காட்சி சிற்ப உருவமாக அமைக்கப்பட்டிருக்கிறது. கொற்றவை, தன் ஊர்தியாகிய சிங்கத்தின் முதுகில் அமர்ந்து வில்லை வளைத்து நாணை வலித்து அம்பு எய்கிறார். இக் கொற்றவைக்கு எட்டுக் கைகள் உள்ளன. இடது கையில் வில்லைப் பிடித்து வலதுகையில் நாணைவலித்து அம்பு எய்கிறார். மற்ற ஆறு கைகளில் கேடயம், கட்டாரி, வாள், சங்கு, சக்கரம், பாசம், மணி முதலிய ஆயுதங்களைத் தாங்கியுள்ளார். தலையில் மகுடமும், காதில் குண்டலங்களும் மின்னுகின்றன. முகத்தில் வீரமும் வெற்றியும் உறுதியும் மிளிர்கின்றன. ஊர்தியாகிய சிங்கம், மகிஷாசுரன் பக்கமாகப் பாய்கிறது. கொற்றவையின் பரிவாரங்களாகிய குறள் உருவம் உள்ள பூதகணங்கள் கத்தி கேடயம் முதலிய ஆயுதங் களைத் தாங்கி மகிஷாசுரனுடைய படையுடன் போர் செய்கின்றன. ஒரு பூதம் கொற்றவைக்குக் குடை பிடிக்கிறது. கொற்றவையின் தோழியாகிய ஒரு பெண்தெய்வம், மண்டியிட்ட வண்ணம் பகைவனை உடைவாளினால் ஓங்கி வெட்டுகிறது.

கொற்றவைக்கு எதிரே எருமை முகம் உள்ள மகிஷாசுரன் கனமுள்ள தண்டாயுதத்தை ஏந்தி இரண்டு கைகளினாலும் ஓங்கி அடிக்கப் பார்க்கிறான். ஆனால், கொற்றவைக்கு முன் அவன் ஆற்றல் நிற்கமுடியவில்லை. அவன் மனந் தளர்ந்து பின்னடைகிறான். அவன் தலைக்கு மேலே காணப்படுகிற குடை அவன் அசுரர்களின் அரசன் என்பதைக் காட்டுகிறது.

மகிஷாசுரனுடைய கால்களுக்குக் கீழே ஒரு வீரன் கொல்லப்பட்டு இறந்து கிடக்கிறான். ஒரு வீரன் சிங்கத்துக்கு எதிரில் தலை கீழாகக் குதிக்கிறான். இரண்டு அசுரர்கள் கத்தியும் கேடயமும் தாங்கி நிற்கிறார்கள். ஒரு அசுரன் ஒரு பூதத்துடன் போர் செய்கிறான். காதில் குண்டலங்களை யணிந்து சடைமுடியுடன் ஒருவர் (முனிவர்?) தரையிலே மண்டியிட்டு உட்கார்ந்து இடது கையைத் தரையில் ஊன்றி வலது கை விரலினால் மகிஷாசுரனைச் சுட்டிக் காட்டுகிறர்.

போர்க்களக் காட்சி நம் கண்முன்னே நிற்கிறது. போரின் கடைசி கட்டம்; அடுத்த நிமிஷத்தில் முடியப் போகிற போரிலே, கொற்றவையின் வெற்றியும் மகிஷாசுரனின் தோல்வியும் இப்போதே காணக் கிடக்கின்றன! இந்தச் சிற்பத்தின் அழகும் செவ்வியும் என்னே, என்னே! இந்தச் சிற்ப உருவத்தை அமைத்து வைத்த கலைச் செல்வன் யாரோ? அவன் பெயர் மறைந்துவிட்டது. ஆனால், அவன் அமைத்து வைத்த இச்சிற்பக்கலை அவன் புகழைப் பாடிக் கொண்டிருக்கிறது! இச்சிற்பத்தில் செவ்விய அமைப்பைக் காணும்போது நம்முடைய மனம் பெருமைகொண்டு இறுமாப்புடன் துள்ளிக் குதிக்கிறது. தமிழ்நாடு, காவியப் புலவரைப் பெற்றிருந்தது போலவே சிறந்த சிற்பக் கலைஞரையும் பெற்றிருந்தது என்பதை நினைக்கும்போது நம்மை யறியாமலே நமக்குப் பெருமிதம் தோன்றுகிறது.

**11. வராகப்பெருமாள்** : வராகப் பெருமாள் என்பது திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றாகிய பன்றியின் உருவம், வராகப் பெரு மாளைத் திருப்பன்றி யாழ்வார் என்றும் கூறுவர். திருமால் காட்டுப் பன்றியாகத் திருவவதாரம் செய்து, நீரிலே மூழ்கிக்கிடந்த நிலமகளை வெளியில் கொண்டுவந்தார் என்பது புராணக் கதை. வராகப் பெரு மாளுக்குப் பண்டைக் காலத்திலே தமிழ் நாட்டிலே பல இடங்களில் கோவில்கள் இருந்தன. ஆமை, மீன், பன்றி, நரசிங்கம் முதலிய திருமாலின் அவதாரங்களில் ஆமைக்கும் மீனுக்கும் தனியே கோயில்கள் கிடையா. நரசிங்க மூர்த்திக்குப் பிற்காலத்திலே கோயில்கள் தனியாக ஏற்பட்டன. ஆனால், நரசிங்கமூர்த்திக்குக் கோயில் உண்டாவதற்கு முன்னரே, மிகப் பழைய காலத்திலேயே வராகப் பெருமாளுக்குக் கோயில்கள் ஏற்பட்டிருந்தன.

திருமால் அடியாரான ஆழ்வார்களும், திருமால் திருவவதாரங்கள் எல்லாவற்றையும் போற்றுகிறார்களானாலும், வராகப் பெருமாளைச் சிறப்பாகப் போற்றியிருக்கிறார்கள்.

மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்திலே வராகப் பெருமாளின் திருவுருவங்கள் மாமல்லபுரத்துக் குகைக் கோயில்களிலே புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டன. அவை, வராக மண்டபம் என்று வழங்கப் படுகிற குகைக்கோயிலின் சுவரில் உள்ள சிற்பமும், வராகப் பெருமாள் குகைக் கோயிலில் உள்ள சிற்பமும் ஆகும்.

வராக மண்டபத்தில் பாறைச் சுவரில் உள்ள புடைப்புச்சிற்பம் வெகு அழகானது. இதில், வராகப் பெருமாள் இடது காலை ஊன்றி வலது காலை மடக்கித் தூக்கியிருக்கிறார். அவரது தூக்கிய பாதம் நாக அரசனின் தலைமேல் வைக்கப்பட்டிருக்கிறது. நாகராசன் மனைவி கைகூப்பி வணங்குகிறார். நாகராசனும் அவன் மனைவியும் தலைக்குமேல் பாம்பின் உருவம் உடையவர்களாய் உள்ளனர். அவர்களின் இடுப்புக்குக் கீழே தண்ணீர் இருக்கிறது. வராகப் பெருமாளின் மடக்கிய காலின் தொடையின் மேலே, நீரிலிருந்து எடுத்த நிலமகளை உட்கார வைத்திருக்கிறார். தொடையின்மேல் அமர்ந்த நிலமகள் கரண்டக மகுடம் தலையில் அணிந்து, காதில் பத்திர குண்டலங்கள் விளங்க, அழகிய தோற்றத்தோடு காணப் படுகிறார். தொடைமேல் அமர்ந்திருக்கும் நிலமகளின் (பூதேவின்) கால் களை வராகப் பெருமாள் இடது கைகளால் பிடித்துக்கொண்டு வலது கை யினால் அவர் முதுகைத் தாங்கிக் கொண்டிருக்கிறார். வராகப் பெருமாளின் மற்ற இரண்டு கைகளில் சங்கு சக்கரங்கள் இருக்கின்றன. வராகப் பெருமாளின் திருமுகம் காட்டுப் பன்றியின் உருவமாக அமைந்து ஒற்றை மருப்புடன் காணப்படுகிறது. தலையில் கிரீடமகுடம் விளங்குகிறது. நீரிலே அழுந்திக் கிடந்த நிலமகளைத் திருமால், வராகப் பெருமாள் உருவங் கொண்டு வெளியே எடுத்துத் தொடையின்மேல் வைத்த வண்ணம் நிற் கிறார். அவருடைய காலின்கீழ் நீரும் நீரில் வாழும் நாகனும் காணப்படு கின்றனர். நாரதர் வீணை வாசித்துத் திருமாலைப் புகழ்ந்து பாடுகிறார். தேவர்களும் துதித்துப் போற்றுகிறார்கள்.

''சிலம்புமுதல் கலனணிந்தோர் செங்கற்குன்றம்
திகழ்ந்ததெனத் திருவுருவம் பன்றியாகி
இலங்குபுவி மடந்தைதனை இடத்துப் புல்கி
எயிற்றினிட வைத்தருளிய எம்ஈசன் காண்மின்''

என்று திருமங்கை யாழ்வார் பாடியதற்கேற்ப, வராகப் பெருமாள் இச் சிற்பத்தில் காட்சியளிக்கிறார்.

வராகப்பெருமாள் குகைக்கோயிலில் இருக்கிற வராகப் பெருமாள் உருவமும் மேலே கூறப்பட்ட உருவம் போன்றதே. ஆனால், இது கருங்கல் சிற்பம் அன்று; சுதையினால் அமைந்த உருவம். இது இன்றும் வழிபடப் படுகிறது. இந்த வராக மூர்த்தியின் பக்கத்தில் முனிவர் தேவர்கள் முதலிய வர்களின் உருவங்கள் காணப்படவில்லை.

***12. திருமகள் (கஜலக்ஷ்மி)*** : வராக மண்டபத்தில் உள்ள இன்னொரு சிற்ப உருவம் திருமகளின் உருவமாகும். இச் சிற்ப உருவத்தில், திருமகள் தாமரைப் பூவின்மேல் அமர்ந்திருக்கிறார். திருமகளுக்குச் சற்றுப் பின்னால் இரண்டு யானைகள் நிற்கின்றன. வலப்புறத்தில் இருக்கிற யானை, தன் தும்பிக்கையினால் பொற்குடத்திலிருந்து திருமஞ்சன நீரைத் திருமகளின் திருமுடிமேல் பொழிகிறது. திருமகளுக்கு முன்புறத்தில், பக்கத்திற்கு இருவராக நான்கு தெய்வ மகளிர் நிற்கின்றனர். இவர்களில் இருவர், தமது தோளின்மேல் நீர்க்குடத்தை ஏந்தி நிற்கின்றனர்.

இதே மாதிரி, திருமகளின் மற்றொரு சிற்ப உருவம் மகாபலிபுரத்து வராகப் பெருமாள் குகைக் கோயிலிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சிற்பத்திலும் இந்தச் சிற்பம் போன்றே எல்லா அமைப்புக்களும் காணப் படுகின்றன.

***13. கங்காதரமூர்த்தி*** : கங்காதர மூர்த்தியின் உருவம் வராகப் பெருமாள் குகைக் கோயிலின் சுவரில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப் பட்டிருக்கிறது. சிவபெருமான் சடாமுடியுடன் இடதுகையை இடுப்பில் ஊன்றி, வலது கையை அபயம் காட்டி நிற்கிறார். மற்றொரு இடது கையில் மணிமாலை (?) வைத்திருக்கிறார். மற்றொரு வலது கையில் சடை முடியிலிருந்து ஒரு புரிசடையைப் பிரித்துப் பிடித்திருக்கிறார். அந்தப் புரிசடையில் கங்கை, பெண்மகள் உருவமாக வந்து தங்குகிறாள்.

> ***''வையக நெளியப்பாய்வான் வந்திழி கங்கையென்னும்***
> ***தையலைச் சடையிலேற்றார் சாய்க்காடு மேலினாரே''***

என்றும்,

> ***''வெஞ்சின முகங்களாகி விசையொடு பாயுங் கங்கை***
> ***செஞ்சடை யேற்றார் சேற்றைச் சென்னெறிச் செல்வனாரே''***

என்றும்,

> ***''கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை***
> ***ஆயிரமா முகத்தினொடு வானிற்றோன்றும்***
> ***புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்***
> ***பொழில் திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே''***

என்றும் திருநாவுக்கரசர் கூறியதற்கேற்ப, இந்தச் சிற்பம் எழில்பெற அமைக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று இன்னொரு கங்காதார மூர்த்தியின் உருவம், ''தர்மராஜரதத்தின்'' சுவரில் இருக்கிறது.

***14. நான்முகன்***: வராகப் பெருமாள் குகைக்கோயிலிலும் நான்முகனாகிய பிரமனுடைய உருவம் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதில், பிரமனுக்கு மூன்று முகங்கள் காட்டப்பட்டுள்ளன மற்றொரு முகம் பின்புறம் இருப்பதாகக் கருதவேண்டும். தருமராஜன் இரதத்திலும் நான்முகனுடைய ஒரு சிற்ப உருவம் இருக்கிறது.

***15. திரிவிக்கிரம மூர்த்தி (உலகளந்த பெருமாள்)***: வராக மண்படத்துத் தென்புறச் சுவரில் திரிவிக்கிரமனின் உருவச் சிற்பம் காணப்படுகிறது. திரிவிக்கிரமன் நீண்டு நிமிர்ந்த உருவத்தோடு வலதுகாலைத் தரையில் ஊன்றி நின்று, இடதுகாலைத் தாள்வரையில் உயர்த்தித் தூக்கி நிற்கிறார். தலையில் நீண்டடி தரித்திருக்கிறார். பக்கத்துக்கு நான்காக எட்டுக் கைகள் உள்ளன. வலது பக்கத்து நான்கு கைகளில், வாள் குற்றுடைவாள் சக்கரம் ஆகிய ஆயுதங்களை ஏந்திக்கொண்டு ஒரு கையைத் தலைக்குமேல் தூக்கி ஆகாயத்தைத் தாங்குவது போலக் காணப்படுகிறார். இடது பக்கத்து நான்கு கைகளில், ஒரு கையில் வில்லை ஏந்தி மார்போடு சேர்த்து வைத்திருக்கிறார். மற்றக் கைகளில் கேடயமும் சங்கும் ஏந்தியிருக்கிறார். ஒரு கையை நீட்டி அந்தத் திசையை இரண்டு விரல்களினால் சுட்டிக் காட்டுகிறார்.

நிலங்கடந்த நெடுமுடி யண்ணலாகிய இவரின் தோற்றம் கம்பீரத்துடன் காணப்படுகிறது. இவருக்கு வலப் பக்கத்தின் மேல் புறத்தில், நாய்த் தலையுடைய ஒரு ஆள் அந்தரத்தில் நிற்பதுபோல இருக்கிறான். இது எதைக் குறிக்கிறது என்பது தெரியவில்லை. இவ் வுருவத்துக்குப் பக்கத்தில் பிரமன் தாமரைப் பூவில் அமர்ந்து இருக்கிறார். வலது பக்கத்தின் மேல் புறத்தில் ஒரு தேவன் உட்கார்ந்திருக்கிறான். திருமாலின் தோளுக்குக் கீழே, வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் சூரிய சந்திரர்கள் ஆகாயத்தில் நின்ற வண்ணமாகத் தமது கைகளினாலே திருமாலைச் சுட்டிக் காட்டுகிறார்கள். சந்திரனுக்குப் பக்கத்தில், ஒரு ஆள் கையில் கட்டாரி ஏந்திக் குனிந்த வண்ணம் ஆகாயத்தில் பறப்பது போலக் காணப்படுகிறான்.

திருமாலின் காலடியில் தரையிலே பக்கத்துக்கு இரண்டு பேராக நான்கு ஆட்கள் தலையில் மகுடம் அணிந்து உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்களில் ஒருவர் பலிச்சக்கரவர்த்தி; ஒருவர் சுக்கிராசாரியார். மற்ற இருவரும் அமைச்சரும் சேனாபதியும் போலும். கம்பீரமாகவும் மிடுக்காகவும் உள்ள இந்தச் சிற்ப உருவம், பலிச்சக்கரவர்த்தியிடம் திருமால் வாமனன்

(குள்ளன்) உருவமாகச் சென்று மூன்றடி மண் கேட்டுப் பெற்று, திரிவிக்கிரம மூர்த்தியாக ஓங்கி வளர்ந்து நிலமளந்த கதையைத் தெரிவிக்கிறது.

**''பொருமா நீள்படை ஆழி சங்கத்தொடு**
**திருமா நீள்கழல் ஏழுலகும் தொழ**
**ஒருமாணிக் குறளாகி நிமிர்ந்த அக்**
**கருமாணிக்கம் என்கண் ணுளதாகுமே''**

என்று நம்மாழ்வாரும்,

**''கண்டவர்தம் மனம்மகிழ மாவலிதன் வேள்விக்**
**களவின்மிகு சிறுகுறளாய் மூவடியென்று இரந்திட்டு**
**அண்டமும் இவ்வலைகடலும் அவனிகளு மெல்லாம்**
**அளந்தபிரான் அமரும்இடம் அரிமேய விண்ணகரம்''**

என்று திருமங்கையாழ்வாரும் அருளியபடி, இந்தச் சிற்ப உருவம் மிக எழில்பட அமைந்திருக்கிறது.

16. ***அநந்தசயனமூர்த்தி***: அநந்தசயன மூர்த்தியின் கம்பீரமான அழகிய சிற்பம், மகிஷாசுரமண்டபம் என்னும் குகைக்கோயிலின் பாறைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

உயரமான மஞ்சம்போல அமைந்திருக்கிற ஆதிசேஷன்மேல் திருமால் காலைநீட்டி மல்லாந்துபடுத்து அறிதுயில் (யோகநித்திரை) செய்கிறார். ஆதிசேஷனுடைய ஐந்து தலையுடைய படம் குடைபோல நிழல் செய்கிறது. அறிதுயில் கொள்ளும் திருமால் இரண்டு கைகளுடன் காணப் படுகிறார். வலது கையைப் படுக்கைமேல் நீட்டி இடது கையின் முழங் கையைத் தூக்கி, பாம்புப்பாயின்மேல் சுகமாகப் படுத்திருக்கும் செவ்வி அழகாயிருக்கிறது. மணிமகுடம் தரித்த திருமுடியும் ஆழ்ந்த சிந்தனையுடன் அமைதியாக இருக்கிற முகமும் இனிய காட்சியாக இருக்கின்றன. அரையில் வேட்டி தரித்துக் கால்களை நீட்டிப் படுத்திருக்கிறார். இவ்விதமாக அறிதுயில் கொள்ளும் மாயோனுடைய சிற்ப உருவம் பார்ப்பவர் மனத்தைக் கவர்கிறது.

இவருடைய கால்பக்கத்தில் இரண்டு வீரர்கள் கனமான ஆயுதத்தைக் கையில் தாங்கி நிற்கிறார்கள். அவர்கள் மிடுக்கும் முரட்டுத்தனமும் வன்கண்மையும் உடையவராகத் தோன்றுகின்றனர். இவர்கள் கனமான கதா யுதத்தைத் தமது இரண்டு கைகளாலும் தூக்கி, திருமாலை அடித்துக் கொல் லப்பார்க்கிறார்கள். இந்த வீரர்கள் மது, கைடபன் என்னும் பெயருள்ள

அசுரர்கள். திருமால் துயில் கொண்டிருக்கும்போது, அவருடைய காதுகளிலிருந்து இவர்கள் தோன்றினார்கள் என்று புராணக்கதை கூறுகிறது.

பள்ளிகொண்டிருக்கிற திருமாலுக்குமேலே, ஆகாயத்தில் இரண்டு உருவங்கள் பறந்து செல்வதுபோன்று காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று அழகான உடலையுடைய பெண் உருவம். இது துர்க்கையின் உருவம். இத் தெய்வம், திருமாலுடைய உடம்பின் ஒளி யிலிருந்து உண்டாயிற்று என்று புராணக்கதை கூறுகிறது. இதற்குப் பக்கத்தில் உள்ள உருவம் பருத்துக் குறுகிய உடலையுடையது. இது துர்க்கையின் பரிவாரமாகிய பூதகணமாகும்.

திருமாலின் கால்பக்கத்தில், ஆதிசேஷ மஞ்சத்துக்குக் கீழே, திருமகள் மண்டியிட்டுத் திருமாலை நோக்கிக் கைகூப்பித்தலை வணங்குகிறார். திருமகள் உருவச் சிற்பம் அழகாக இருக்கிறது.

திருமகள் உருவத்துக்கு அருகில், ஒரு தேவன் மண்டியிட்டு உட்கார்ந்திருக்கிறார். மற்றொரு தெய்வ உருவம் நின்று கொண்டிருக்கிறது. இந்த உருவத்தின் தொடைக்குக் கீழ்ப்பகுதி தண்ணீரில் மறைந்திருப்பது போலத் தோன்றுகிறது. இந்த இரண்டு தெய்வ உருவங்களும் யார் என்பது தெரியவில்லை.

**''காய்ந்திருளை மாற்றிக் கதிரிலகு மாமணிகள்**
**எய்ந்த பணக்கதிர்மேல் வெவ்வுயிர்ப்ப - வாய்ந்த**
**மதுகை டவரும் வயிறுருகி மாண்டார்**
**அதுகே டவர்க்கிறுதி யாங்கு''[1]**

என்று பேயாழ்வார் கூறுவதுபோன்று, திருமால் காதுகளிலிருந்து தோன்றிய மது கைடபர்கள், அவரைக் கொல்ல முயன்று கடைசியில் அவர்களே இறந்து அழிந்தார்கள் என்னும் புராணக்கதை இந்தச் சிற்பத்தில் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. (படம் காண்க)

***17. திரிமூர்த்தி குகைக்கோயில் சிற்பங்கள்***: திரிமூர்த்தி குகைக் கோயிலில், வடபுறத்தில் உள்ளது பிரமனுக்கு ஏற்பட்ட கோயில். இங்குள்ள துவாரபாலகர் தாடிமீசையுடையவர்களாகிய முனிவர்களைப்போன்று காணப்படுகிறார்கள். கருவறைக்குள் பிரமன் உருவம் சுவரில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இச் சிற்பத்தின் சிறப்பு என்னவென்றால், பிரமனுக்கு ஒரே முகம் இருப்பதுதான. தர்மராஜ இரதத்திலும்

---

*இயற்பா 3: ஆந்திரு வந்தாதி, 66.*

வராகப்பெருமாள் குகைக்கோயிலிலும் உள்ள பிரமன் உருவத்தில் மூன்று முகம் காணப்படுகிறது. நான்காவது முகம் பின்புறத்தில் மறைந்திருக்கிற தாகக் கருதவேண்டும். இவ்வாறு நான்கு முகமுடைய பிராமனை, இந்த மும்மூர்த்தி குகைக்கோயிலில் ஒரே முகமுடையவராக அமைந்திருப்பது கருதத்தக்கது. மேலும், இவ்வுருவம் இளமைபொருந்திய உருவமாகக் காணப்படுகிறது. குமரக்கடவுள் பிரமனைச் சிறையிட்டுத் தாமே பிரமனுடைய படைப்புத் தொழிலை நடத்தினார் என்று புராணம் கூறுகிறது. அந்தக் கதையை யுட்கொண்டு, இந்தப் பிரமனுடைய உருவம் குமரக்கடவுள் உருவம் போன்று அமைத்தனர்போலும்.

நின்ற கோலமாகக் காணப்படுகிற இவ்வுருவம், நான்கு கைகளை யுடையது. வலது மேல்கையில் வட்டமான ஒரு பொருளை (கிண்டி?) ஏந்தி, இடது மேல்கையில் உருத்திராக்கமாலை பிடித்திருக்கிறார். வலது கீழ்க்கை அபயமுத்திரைகாட்ட, இடது கீழ்க்கை இடுப்பில் ஊன்றி யிருக்கிறது.

பிரமனுக்கு இருபக்கத்திலும், காலடியில், இரண்டு பேர் மண்டியிட்டு அமர்ந்து கையைத் தூக்கி பிரமனைக் காட்டிய வண்ணம் தோத்திரம் செய் கிறார்கள். இவர்களுக்குமேலே, குறள் உருவமுள்ள இரண்டு பூதகணங்கள் ஆகாயத்தில் நின்று கையை உயர்த்திக்காட்டித் தோத்திரம் செய்கின்றன.

***18. சிவன்***: பிரமன் கோயிலுக்கு அடுத்து நடுக்கோயிலாக அமைந் திருப்பது சிவபெருமான்கோயில். இக்கோயில் மற்ற இரண்டு கோயில் களைவிடச் சற்று முன் வளர்ந்திருப்பதனால், சிவபெருமானுக்கு முதன்மை யளிக்கிறது. இந்தக் கோயிலுக்குள் செல்ல படிகள் உள்ளன. வாயி லில் துவார பாலகர் உருவங்கள் உள்ளன. கருவறைச் சுவரில் புடைப்புச் சிற்ப மாகச் சிவபெருமான் உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. சிவபெருமானுக் குள்ள-நான்கு கைகளில், மேல் வலது கையில் பரசு (கோடரி) தாங்கி, மேல் இடது கையில் ஜபமாலை ஏந்தியிருக்கிறார். கீழ் வலது கையை அபய முத்திரையாகவும் கீழ் இடது கையை இடுப்பில் ஊன்றியும் இருக்கிறார்.

சிவபெருமானுக்கு இருபுறத்திலும் காலடியில் இரண்டு பேர் மண்டியிட் டமர்ந்திருக்கிறார்கள். சிவனுக்கு வலது புறத்திலுள்ளவர் இடது கையைத் தொடையில் ஊன்றி வலது கையை மார்பில் வைத்துத் தியானத் தில் இருக்கிறார். இடதுபக்கத்தில் இருப்பவர் இரண்டு கையையும் சேர்த்துக் கூப்பி மார்பில் வைத்துக்கொண்டு தியானிக்கிறார்.

இவர்களுக்குமேலே, குறள் உருவம் உள்ள இரண்டு பூதகணங்கள், ஆகாயத்தில் நின்று சிவபெருமானைச் சுட்டிக் காட்டித் தோத்திரம் செய்கிறார்கள்.

**19. திருமால்**: இக் கோயிலுக்கு இடதுபக்கத்தில் இருப்பது, திருமால் கோயில். இக் கோயில் வாயிலிலும் துவார பாலகர் உள்ளனர். கருவறைக் குள்ளே சுவரில் புடைப்புச் சிற்பமாக நிற்கும் திருமால், தமதுமேல் இரண்டு கைகளில் சங்குசக்கரம் ஏந்தியிருக்கிறார். கீழ் வலதுகையை அபய முத்திரையாகவும் கீழ் இடது கையை இடுப்பில் தாங்கியும் காட்சி யளிக்கிறார்.

இவருக்குக் காலடியில் இரண்டு பக்கத்திலும் இரண்டு பேர், மண்டியிட்டு அமர்ந்து கையை உயர்த்திக்காட்டித் தோத்திரம் செய் கிறார்கள். இவர்களுக்குமேலே, குறள் உருவமுடைய இரண்டு பூதகணங் கள் ஆகாயத்தில் நின்று கையை நீட்டிக் காட்டித் தோத்திரம் செய்கிறார்கள்.

**மும்மூர்த்தி வணக்கம்**

மும்மூர்த்தி வணக்கம் தமிழ்நாட்டில் அக்காலத்தில் இருந்தது. சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் மும்மூர்த்தியைத் தம்முடைய பாசுரங்களில் கூறுகிறார்கள். சைவர்கள் மும்மூர்த்திகளில் சிவபெருமானை முதல்வராகக் கூறுவார்கள். வைணவர்கள், திருமாலை முதல்வராகக் கூறுவார்கள்.

**அவரிவ ரென்றில்லை அரவணையான் பாதம்**
**எவர்வணங்கி ஏத்தாதா ரெண்ணில் - பவரும்**
**செழுங்க திரோன் ஒண்மலரோன் கண்ணுதலோ னன்றே**
**தொழுந்தகையார் நாளும் தொடர்ந்து.** [1]

என்றும்,

**தேவராய் நிற்கும் அத் தேவும் அத் தேவரில்**
**மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும் - யாவராய்**
**நிற்கின்ற தெல்லாம் நெடுமாலென் றோராதார்**
**கற்கின்ற தெல்லாம் கடை..** [2]

என்றும் ஆழ்வார்கள் பாடுகின்றனர்.

---

[1] பூதத்தாழ்வார்: ஆந்திருவந்தாதி

[2] திருமழிசை. நான்முகன் திருவந்தாதி:

**''கண்ணியனைக் கடியநடை விடையொன் றேறுங்**
**காரணனை நாரணனைக் கமலத் தோங்கும்**
**புண்ணியனைப் புள்ளிருக்கும் வேளூ ரானைப்**
**போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே''** [1]

என்றும்,

**''மாவாய்ப் பிளந்துகந்த மாலுஞ் செய்ய**
**மலரவனுந் தாமேயாய் நின்றார் போலும்**
**மூவாத மேனி முதல்வர் போலும்**
**முதுகுன்ற மூதூ ருடையார் போலும்.''** [2]

என்றும்,

**''மூவன்காண் மூவர்க்கும் முதலா னான்காண்**
**முன்னுமாய்ப் பின்னுமாய் முடிவா னான்காண்.''** [3]

என்றும் சைவ அடியார் கூறுவது காண்க.

மும்மூர்த்தி குகைக் கோயிலைச் சார்ந்து, அதன் பக்கத்தில் உள்ள பாறையில் கொற்றவையின் (துர்க்கையின்) உருவம் அழகான புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிக் ''கொற்றவை'' என்னும் தலைப்பில் எழுதியுள்ளேன்.

**''அர்ச்சுனன் இரத'த்தில் உள்ள சிற்பங்கள்**

மேற்குப்புறம் பார்த்த இந்தக் கோயிலின் திருவுண்ணாழிகையில் (கருவறையில்) சிற்ப உருவங்கள் இல்லை. வெளிப்புறச் சுவரில் அழகான சிற்ப உருவங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. வடக்கு கிழக்கு தெற்குப் புறச்சுவர்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து கோட்டங்கள் வகுக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டத்திலும் ஒவ்வொரு உருவங்கள் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்களைப் பார்ப்போம்.

**20. கருடவாகனப் பெருமாள்**: வடபுறச் சுவரில் நடுநாயகமாக இருக்கும் சிற்ப உருவம் கருடவாகனப் பெருமாள். இந்தச் சிற்பம் அழகாகவும் புதுமையாகவும் இருக்கிறது. கருடாழ்வான் குனிந்து நின்று பெருமாளைத் தாங்குகிறான். வலது காலைப் பின்னால் மடக்கி, இடது காலை முன் புறம் ஊன்றி, இடதுகையை இடது கால் முட்டி மேல் தாங்கிக்

---

1. அப்பர் புள்ளிருக்கும்வேளூர்: 2. அப்பர். திருச்சாய்க்காடு
3. அப்பர். திருமுண்டிச்சுரம்:

குனிந்து நின்று, வலக்கை விரலால் வாயைப் பொத்திக்கொண்டு பய பக்தியோடு தாழ்ந்து நிற்கும் கருடாழ்வானின் காட்சி இனிய காட்சியே. பிற்காலத்துக் கருடாழ்வான் உருவச் சிற்பத்தை இக்காலத்தில் பார்க்கிறோம். மனித உடம்பும் கருடப் பறவையின் வளைந்த கூர்மையான மூக்கும் இரண்டு இறக்கைகளும் உடைய கருடாழ்வான் உருவத்தைப் பெருமாள் கோயில்களில் நாம் கண்டிருக்கிறோம்.

ஆனால், இந்தக் கருடாழ்வானைப் பாருங்கள். இவனுக்குச் சிறகுகள் இல்லை; கருடப்பறவையின் கூரிய வளைந்த மூக்கும் இல்லை. முழுவதும் மனித உருவம் உடைய கருடாழ்வான். இந்தக் கருடன், பெருமாளுக்குப் பின் புறம் அடக்க ஒடுக்கமாகப் பயபக்தியோடு நிற்கிற அமைப்பை வேறு எந்தச் சிற்பத்திலும் நீங்கள் கண்டிருக்க முடியாது. பயபக்தியையும் அடக்க ஒடுக்கத்தையும் இந்தக் கருடாழ்வான் உருவத்தில் அமைத்துக் காட்டிய அந்தச் சிற்பியின் திறனே திறன்!

கருடாழ்வானுக்கு அருகில் பெருமாள் நிற்கிறார். நீண்ட முடிதரித்து அரையிலிருந்து கணுக்கால் வரையில் வேட்டியணிந்து குண்டலம் முதலிய ஆபரணங்கள் விளங்கத் திருமால் காட்சியளிக்கிறார். அவரது வலதுகை அபயங் கொடுக்கிறது. இடது கையைக் கருடாழ்வான் தோளின் மேல் தாங்கியிருக்கிறார். மற்ற வலதுகை இடது கைகளில் சக்கரமும் சங்கும் ஏந்தியிருக்கிறார். (படம் காண்க.)

*21. **அரசனும் அரசியும்***: நடுநாயகமாக அமைந்துள்ள கருட வாகனப் பெருமாளுக்கு வலதுபுறத்துக் கோட்டத்தில், ஒரு அரசனும் அரசி யும் நிற்பது போன்ற சிற்பம் காணப்படுகிறது. இந்தச் சிற்பம் பல்லவ அரசனும் அவன் மனைவியாகிய அரசியும் என்று கருதப்படுகிறது. இவர்களின் உருவ அமைப்பு காட்சிக்கு இன்பமளிக்கிறது. இதற்குப் பக்கத்துக் கோட்டத்தில் துவாரபாலகன் உருவம் அமைந்திருக்கிறது.

**அழிந்த சிற்பம்**

கருடவாகனப் பெருமாளுக்கு இட பக்கத்தில் உள்ள கோட்டத்திலும் ஆதிகாலத்தில் அரசன் அரசியின் உருவச் சிற்பம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இப்போது இந்தக் கோட்டத்தில் சிற்ப உருவம் இல்லை. இருந்த சிற்ப உருவங்கள் முழுவதும் செதுக்கி அழிக்கப்பட்டுள்ளன. இந்தக் கோட்டத்தின் அடிப்புறத்தில், கருவறையிலிருந்து அபிஷேக நீர் வெளி வருவதற்காக ஒரு துளை அமைக்கப்பட்டிருக்கிறது. துளை அமைக்கப்

பட்டதும் இந்தக் கோட்டத்துச் சிற்பங்கள் அழிக்கப்பட்டதும் பிற்காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளாகும். யாரால் எப்போது ஏன் அழிக்கப்பட்டது என்பது தெரியவில்லை.

இதற்கு அடுத்த கோட்டத்தில் துவார பாலகரின் உருவச் சிற்பம் அமைக்கப்பட்டிருக்கிறது. (படம் காண்க.)

*22.* ***இந்திரன்***: இனி, இதை யடுத்துள்ள கிழக்குப் புறச் சுவருக்குப் போவோம். இந்தச் சுவரிலும் ஐந்து கோட்டம் வகுக்கப்பட்டு ஒவ்வொரு கோட்டத்திலும் சிற்ப உருவங்கள் புடைப்புச் சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளன. இந்தச் சிற்பங்களில் நடுநாயகமாக இருப்பது யானைமேல் அமர்ந்துள்ள இந்திரன் உருவம். இந்திரன் தன் வாகனமாகிய ஐராவதம் என்னும் யானையின் மேல் அமர்ந்திருக்கிறான். சிற்பத்தில் யானையின் முன்பக்கம் மட்டும் தெரிகிறது. முன் கால்கள் இரண்டும் நீண்டு தொங்கும் தும்பிக்கையும் தலையும் முகமும் அகன்ற காதுகளும் தெரிகின்றன. யானை நிற்கும் இயற்கைத் தோற்றம் நமக்கு எதிரில் காணப்படுகிறது. யானையின் கழுத்தின் மேல், இந்திரன் தலையில் மகுடம் அணிந்து காதுகளில் குழை விளங்க அமர்ந்திருக்கிறான். (படம் காண்க.)

*23.* ***முனிவர்***: இந்திரனுக்கு இடதுபுறக் கோட்டத்தில், தலையில் சடா முடியும் முகத்தில் தாடி மீசைகளும் உள்ள ஒரு முனிவர் நிற்பது போலச் சிற்பம் அமைந்திருக்கிறது. முனிவர் தனது வலது தோளின் மேல் எதையோ (வீணை?) வைத்துக் கொண்டிருக்கிறார். இந்த முனிவர் நாரதராக இருக்கக் கூடும். இவர் பக்கத்தில் ஒருவர் நிற்கிறார். (படம் காண்க.)

*24.* ***துவாரபாலகன்***: இதற்கு அடுத்த கோட்டத்தில் துவார பாலகன் உருவம் காணப்படுகிறது. இவன் இடது கையைத் தொடை மேல் வைத்து வலது கைவிரலால் முனிவரையும் இந்திரனையும் சுட்டிக் காட்டுகிறான். (படம் காண்க.)

*25.* ***இராணிகள்***: இந்திரனுக்கு வலது பக்கத்துக் கோட்டத்தில் இரண்டு இராணிகளின் உருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இதில், இராணி ஒருத்தி தலையில் மகுடம் தரித்து வலது காதில் பருத்த குழையை யும் இடது காதில் கனமான குண்டலத்தையும் அணிந்திருக்கிறாள். கழுத்தில் அணிந்த மணிமாலைகள் மார்பில் தொங்குகின்றன. வலது கையை இடுப்பில் ஊன்றி இடது கையை மடக்கித் தோளின் மேல் வைத்து, இடது புறமாகச் சிறிது தலைசாய்த்து எழில்பெற நிற்கிறாள். இவள் இந்திரன்

மனைவியான இந்திராணி போலும். இந்த அரசியின் பக்கத்தில் நின்று தனது இடது கையினால் இராணியின் வலது தோளைப் பிடித்துக்கொண்டு இன்னொருத்தி நிற்கிறாள். இவளும் தலையில் மகுடம் அணிந்து காதுகளில் பருத்த குழைகள் தொங்க எழிலுடன் நிற்கிறாள். இவள் அரசியின் தோழியோ?

இதற்கு அடுத்த கோட்டத்தில் உள்ளது துவார பாலகன் உருவம். இடது கையினால் வாயில் நிலையைப் பிடித்துக் கொண்டு வலது கையை இடுப்பில் ஊன்றிக்கொண்டு நிற்கிறான். (இந்த உருவங்களைப் படத்தில் காண்க.)

*26. **இடபாரூடர்**:* இனி, தெற்குப்புறச் சுவருக்கு வருவோம். இங்குள்ள ஐந்து கோட்டங்களில் நடுவில் உள்ள கோட்டத்தில் **இடபாரூட** மூர்த்தம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில், சிவபெருமான் எருதின் கழுத்தின் மேல் வலது கையை யூன்றி, முசுப்பின் மேல் சாய்ந்து நிற்கிறார். இடது கை அபயங்காட்டுகிறது. மற்ற இரண்டு கைகளில் ஏதோ (மான்மழு?) ஏந்தியிருக்கிறார். காலைக் கத்திரிபோலக் குறுக்காக வைத்து, சடாமகுட மணிந்த தலையைச் சற்றுச் சாய்த்து நிற்கும் இவர் அமைப்பு எழிலாக விளங்குகிறது. இவரைத் தாங்கி நிற்கும் காளை எருது இளமையுடையது என்பதை இதன் கொம்புகள் தெரிவிக்கின்றன. இதன் முன்கால்களும் கழுத்தும் முகமும் சிற்பத்தில் காணப்படுகின்றன. மற்றப் பகுதிகள் மறைந்துள்ளன.

*27. **அரசனும் அரசியும்**:* இடபாரூட மூர்த்திக்கு வலதுபுறக் கோட்டத்தில் அரசனும் அரசியும் நின்றிருப்பதுபோன்ற சிற்பம் அமைந் திருக்கிறது. அரசன் தன் கையினால் இடபாரூட மூர்த்தியைச் சுட்டிக்காட்டு கிறான். இவர்களின் உருவ அமைப்பு கண்ணையும் மனத்தையும் கவரும் மாண்புடையது. மன்னர் குலத்துப் பெருமிதம் இவர்களின் முகத்தில் நன்கு புலப்படுகிறது. இவை பல்லவ அரசன் அரசியின் தோற்றத்தையுடையன.

*28. **துவார்பாலகர்**:* இதற்கு அடுத்த கோட்டத்தில் உள்ளது துவார பாலகரின் உருவம். இவன் வலது கையை இடுப்பில் ஊன்றி நின்று, இடது கை விரலினால் அரசன் அரசியரையும் இடபாரூட மூர்த்தியையும் சுட்டிக் காட்டுகிறான்.

*29. **அரசன் அரசியர்**:* இடபாரூட மூர்த்திக்கு வலதுபுறக் கோட்டத் தில் இன்னொரு அரசன் அரசியர் நிற்பதுபோன்ற சிற்பம் அமைந்திருக்

கிறது. இவர்களின் உருவ அமைப்பும் எழில் பெற விளங்குகின்றன. அரசு குலத்துக் கம்பீரமும் பெருமிதமும் இவர்கள் முகத்தில் மிளர்கின்றன. இந்தச் சிற்பமும் பல்லவ அரசன் அரசியரின் தோற்றத்தைக் காட்டுகின்றன. இந்த அரசனும் தன் கையினால் சிவபெருமானைச் சுட்டிக் காட்டுகிறான்.

***30. துவாரபாலகன்:*** அடுத்த கோட்டத்தில் இருப்பது துவார பாலகன் உருவம். இவன் இடது கையை இடுப்பில் வைத்து நின்று வலது கையினால் அரசன் அரசியையும் சிவபெருமானையும் சுட்டிக் காட்டுகிறான். இவன் தோளின்மேல் சாமரையை வைத்திருக்கிறான். (இந்தச் சிற்ப உருவங் களைப் படத்தில் காண்க.)

இந்தக் கருவறைக்கு மேலே மாடியில் இருக்கவேண்டிய திரு வுண்ணாழிகை அறை, குடைந்து அமைக்கப்படவில்லை. ஆனால், அக் கருவறையின் வெளிப்புறச் சுவர்கள் நன்கு அமைக்கப்பட்டு வாயில்கள் நான்கு பக்கங்களிலும் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாயிலின் இரண்டு பக்கத்திலும் அரசன் அரசியரின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

***தர்மராச இரதத்துச் சிற்பங்கள்***

இது மூன்று நிலையுள்ள மாடக்கோயில். மேற்கு நோக்கியுள்ள இந்தக் கோயிலின் தரைப்பகுதியை முதலில் கவனிப்போம். திருவுண்ணாழிகை (கருவறை) அமைக்கப்படவில்லை. அர்த்த மண்டபம் அரைகுறையாக அமைக்கப்பட்டுள்ளது. கருவறையைச் சுற்றி வலம் வருவதற்கு அமைக்கப் படவேண்டிய இடைகழியும் அமைக்கப்படவில்லை. ஆனால், இடை கழியின் நான்கு பக்கங்களிலும் இருக்க வேண்டிய தூண்கள் - இவை சிங்கத் தூண்கள் - அறைகுறையாக அமைக்கப்பட்டுள்ளன. எனவே, இக் கோயிலின் அடிப்புறம் சரிவர அமைக்கப்படவில்லை. ஆனால், இப்பகுதி யின் நான்கு பக்கங்களின் கோடிகளிலும் கோஷ்ட பஞ்சரங்கள் அமைக்கப் பட்டு, அப் பஞ்சரங்களில் தெய்வ உருவங்கள் புடைப்புச் சிற்பமாக அழகாக அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பக்கத்தின் இருகோடியிலும் இரண்டு சிற்பம் வீதம் நான்கு பக்கத்துக்கு எட்டுச் சிற்ப உருவங்கள் உள்ளன. அவற்றை விளக்குவோம்.

***31. சிவபெருமான்:*** மேற்குப்புறத்து இருகோடியிலும் உள்ள சிற்பங்கள்:- தென்கோடியில் உள்ளது: சிவபெருமான் திருவுருவம்; நின்ற கோலம்; நான்கு கைகள்; வலது மேல் கை ஏதோ ஆயுதம் தாங்கியிருக்கிறது.

மற்றொரு வலதுகை பாம்பைப் பிடித்திருக்கிறது. இடது மேல் கை ஏதோ ஆயுதம் தாங்கியிருக்கிறது. மற்றொரு இடது கை இடுப்பில் தாங்கியிருக்கிறது.

வடகோடியில் உள்ள உருவம்: சிவபெருமான் உருவம்; நின்ற கோலம்; தலைமயிர் பின்புறம் தாழ்ந்து தொங்குகிறது. வலதுகை அபய முத்திரை, இடது கை இடுப்பில் ஊன்றியிருக்கிறது. மற்ற இரண்டு கைகளில் ஏதோ ஆயுதங்கள் இருக்கின்றன.

*32. **பிரமன்***: வடக்குப் பக்கத்து இருகோடியில் உள்ள சிற்பங்கள்:- மேற்குக் கோடியில் உள்ளது; பிரமன் நின்ற வண்ணம். எதிர்ப்புறத்திலும் இரண்டு பக்கங்களிலும் ஆக மூன்று முகங்கள். மற்றொரு முகம் பின்புறத்தில் இருப்பதாகக் கருதவேண்டும். வலதுகையில் அபய முத்திரை, இடதுகை இடுப்பில் தாங்குகிறது, மற்றொரு வலதுகையில் ஜெபமாலையும் இன்னொரு இடது கையில் கெண்டியும் உள்ளன.

*33. **சிவன்***: கீழ்க்கோடியில் உள்ளது: சிவபெருமான். நின்ற கோலம். காதுகளில் உள்ள குண்டலங்கள் தோள்மேல் தொங்குகின்றன. வலது கை அபய முத்திரை, இடதுகை இடுப்பின்மேல். இன்னொரு வலது கையில் மழு, மற்றொரு இடது கையில் ஏதோ ஆயுதம் ஏந்தியிருக்கிறார்.

*34. **அர்த்தநாரி***: கிழக்குப் பக்கத்தில் இருகோடிகளில் உள்ளவை: வடகோடிச் சிற்பம்:- அர்த்தநாரிசுவரர் எனப்படும் மாதொருபாகர். நின்ற கோலம். வலப்புறம் ஆண்டிவடிவமும் இடப்புறம் பெண் வடிவமும் உள்ள ஒரே உருவம்; இடது புறத்து மார்பில் ஒற்றைக் கொங்கையுள்ளது. வலது புறக்கைகள் இரண்டில் ஒன்று அபய முத்திரையும் மற்றொன்றில் மழு (கோடரி)வும் அமைந்துள்ளன. இடது புறக்கைகள் இரண்டில் ஒருகை எழில் பெறத் தொங்குகிறது. மற்றொரு கையில் பூச்செண்டு (கண்ணாடி ?) ஏந்தியிருக்கிறது. வலது காதில் குண்டலமும், இடது காதில் குழையும் விளங்குகின்றன. வலதுபுறத்து இடுப்பின்கீழ் பாம்பு ஒன்று படமெடுத்தாடுகிறது.

35. ***சிவன்***: தென்கோடிச் சிற்பம்: சிவபெருமான், நின்றகோலம். தலைப்பாகை போன்ற தலையணி. வலதுகை அபய முத்திரை, இடதுகை இடுப்பில் தாங்கியுள்ளது. மற்ற இரண்டு வலது இடது கைகள் ஏதோ ஆயுதங்களைத் தாங்கியிருக்கின்றன.

36. ***சிவபெருமான்***: தெற்குப் பக்கத்து இருகோடிகளிலும் உள்ளவை:- கிழக்குக் கோடி: சிவபெருமான், நின்ற கோலம். வலதுகை

அபய முத்திரை: இடதுகை இடுப்பில் ஊன்றியுள்ளது. மற்றொரு வலது கையில் மழுவும் இடதுகையில் மானும்(?) இருக்கின்றன. காதுகளில் அணிந்துள்ள குண்டலங்கள் தோள்களின்மேல் தாழ்ந்துள்ளன.

**37. நரசிம்மவர்மன்**: மேற்குக்கோடி: அரசன் உருவம்; நின்ற கோலம். மாமல்லன் நரசிம்மவர்மனுடைய உருவம் என்று கருதப்படுகிறது. கழுத்தில் மணிமாலைகள். தலையில் உயர்ந்து நீண்ட கிரீடம். இரண்டு கைகள். வலது கையைத் தொங்கவிட்டு இடதுகையை இடுப்பில் வைத்திருக்கிறது. இந்த உருவத்தைப் பற்றி 10-ஆம் பக்கத்தில் கூறியுள்ளேன். (படம் காண்க.)

### இரண்டாவது நிலை

இனி, இந்த மாடக்கோயிலின் இரண்டாவது நிலைக்குச் செல்வோம். மேலே ஏறிச் செல்லப் படிகள் இல்லை. ஆனால், ஆர்க்கியாலஜி இலாகா மரப்படிகளை அமைத்திருக்கிறது. இப்படிகளை ஏறி இரண்டாவது மாடியையடைவோம். முதலில் திருவுண்ணாழிகையாகிய கருவறைக்குச் செல்வோம்.

### கருவறை

இரண்டாவது மாடியில் மேற்குப்பார்த்த திருவுண்ணாழிகை (கருவறை) சிறியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. கருவறையில் சிவலிங்கம் இல்லை. கருவறைச் சுவரில் சோமஸ்கந்த மூர்த்தியின் உருவம் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டிருக்கிறது. கருவறைக்கு வெளியே துவார பாலகர் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இடதுபுறத்து உருவம் சரியாக அமையவில்லை. வலதுபுறத்து உருவம் நன்கு அமைந்திருக்கிறது. கருவறைக்கு வெளியே சிறிய அர்த்த மண்டபம் இருக்கிறது. இந்தக் கருவறையை வலமாகச் சுற்றி வருவதற்கு, ஒருவர் மட்டும் போகக்கூடிய குறுகிய இடம் இருக்கிறது.

திருவுண்ணாழிகையைச் சுற்றிலும் வெளிப்பக்கத்தில் பல சிற்ப உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனைச் சுற்றி வலம்வருவோர், மிகக் குறுகிய வழியாக வரவேண்டியிருப்பதால், இங்குள்ள சிற்ப உருவங்களைக் கருத்தூன்றிப் பார்ப்பது இல்லை. பார்ப்பார்களானால், பல தெய்வ உருவங்களின் இனிய காட்சியைக் கண்டு மகிழ்வார்கள். இங்குள்ள சிற்ப உருவங்களை விளக்கிக் கூறுவோம்.

கருவறையைச் சுற்றி வலமாக் வரும்போது முதலில் வடக்குப் பக்கச்சுவரில் உள்ள சிற்ப உருவங்களைக் காண்கிறோம். இந்தச் சுவரை ஏழு கோட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு கோட்டத்திலும் ஒவ்வொரு உருவம் புடைப்புச் சிற்பமாக [1] அமைக்கப்பட்டிருக்கிறது.

***38. கங்காதர மூர்த்தி***: இந்தச் சிற்பங்களில் நடுநாயகமாக இருப்பது கங்காதரமூர்த்தி. இதில், சிவபெருமான் நின்றவண்ணம் காட்சியளிக்கிறார். அவருடைய வலது கையில் ஏதோ ஆயுதந் தாங்கியிருக்கிறார். இடதுகையில், தமது சடா மகுடத்திலிருந்து ஒரு புரிசடையை எடுத்துப் பிடித்திருக்கிறார். அந்தச் சடையிலே வானத்திலிருந்து ஆகாயகங்கை வந்து தங்குகிறது. கங்கையின் உருவம் பெண்ணின் உருவம்போலச் சித்திரிக்கப் பட்டிருக்கிறது. இதுபோன்ற கங்காதர மூர்த்தியின் உருவம் வராகப் பெருமான் குகைக்கோயிலிலும் இருக்கிறது.

***39. கருடவாகனப் பெருமாள்***: கங்காதர மூர்த்திக்கு வலதுபுறக் கோட்டத்தில் இருப்பது கருடவாகனப்பெருமாள். இது ''அர்ச்சுனன் இரதம்'' என்னும் கோயிலின் வடபுறச் சுவரில் காணப்படுகிறது போன்ற உருவம். திருமால் நின்றவண்ணம் வலதுகையில் சக்கரத்தையும் இடது கையில் சங்கையும் ஏந்தியிருக்கிறார். மற்றொரு வலது கையை அபயங் காட்டி, இன்னொரு இடது கையைப் பக்கத்தில் தாழ்ந்து குனிந்து நிற்கும் கருடனுடைய தோளின் மேல் வைத்திருக்கிறார். கருடனுக்கு இறக்கை யில்லை. கருடப்பறவையின் அலகுபோன்ற மூக்கும் இல்லை. முழு மனித உருவத்தோடு திருமாலின் பக்கத்தில் பயபக்தியோடு தாழ்ந்து குனிந்து மண்டியிட்டு நின்று, இடதுகால் தொடையின்மேல் இடதுகையை யூன்றி நிற்கிறான்.

***40. காலசம்மார மூர்த்தி***: இதற்கு வலது பக்கத்துக் கோட்டத்தில் இருப்பது காலசம்மார மூர்த்தி. சிவபெருமானுடைய காலடியில் காலன் (எமன்) விழுந்து செயலற்றுக் கிடக்கிறான். சிவபெருமான் சடாமுடியில் மண்டையோட்டை அணிந்து, காலைத்தூக்கி நடனம் ஆடுகிறார். அவரு டைய வலதுகை, விரல்களை விரித்து வியப்புக்குறி காட்டுகிறது. இடதுகை விரல்களை நீட்டிக் காலனைச் சுட்டிக் காட்டுகிறது. மற்ற இரண்டு இடது வலது கைகளில் ஏதோ ஆயுதங்களை ஏந்தியிருக்கிறார்.

---

1. Bas Relief.

***41. இடபாரூடர்**: இதற்கு வலது பக்கத்தில் கடைசி கோட்டத்தில் உள்ளது இடபாரூடமூர்த்தி என்னும் ஏறுகந்த பெருமான். தலைதாழ்த்தி இயற்கை யழகுடன் நிற்கிற எருதின் பக்கத்தில் சிவபெருமான் சாய்ந்து நிற்கிறார். வலது கையை எருதின் முகப்பின்மேலும் இடதுகையை அதன் முதுகின்மேலும் வைத்துச் சாய்ந்து நிற்கும் எழில் அழகுடையது. அவருடைய மற்ற இரண்டு வலது இடது கைகளில் கோடரியையும் மானையும் ஏந்தியிருக்கிறார். அவருடைய புரிசடை, தலைப்பாகையைப் போலச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கிறது. வலது காதில் ஒன்றும் இல்லை. இடது காதில் குழை இருக்கிறது. இது, ''அர்ச்சுனன் இரதம்'' என்னும் கோயிலின் தென் புறச் சுவரில் காணப்படுகிற இடபாரூட மூர்த்தியின் உருவம் போன்றது.*

***42. பார்வதி பரமசிவன்** : மத்திய கோட்டமாகிய கங்காதர மூர்த்திக் கோட்டத்தின் இடது பக்கத்துக் கோட்டத்தில் இருப்பது சிவன் பார்வதி திருவுருவங்கள்.*

***43. பார்வதி நடனம்** : இதற்கு இடது புறத்துக் கோட்டத்தில் இருப்பது சிவன் பார்வதி திருவுருவங்கள். பார்வதி இடது காலைத் தூக்கி நடனம் ஆடுகிறார். சிவபெருமான், புரிசடையைத் தலைப்பாகை போன்று சுற்றிக் கட்டியிருக்கிறார். நான்கு கைகள். இரண்டு கைகளில் கோடரியையும் திரிசூலத்தையும் ஏந்தி நிற்கிறார்.*

***44. வீணாதர மூர்த்தி** : இதற்கு இடது புறத்தில் கடைசி கோட்டத்தில் வீணாதர மூர்த்தி உருவம் இருக்கிறது. நின்ற வண்ணம் இருக்கிற சிவ பெருமான், தண்டு என்னும் வீணையை வலது கையினாலும் இடது கையினாலும் இடது மார்பின் மேல் சாய்த்துபிடித்து வீணை வாசிக்கிறார். வீணையின் இசையில் ஈடுபட்டுச் செவிசாய்த்திருக்கிறார். இசையின்பத்தை வியப்பதுபோல, மற்றொரு வலது கையைத் தூக்கி விரல்களை விரித்து வியப்புக் குறியைக் காட்டுகிறார். இன்னொரு இடது கைவிரல்கள் தாளம் அமைப்பது போலக் காணப்படுகின்றன. சிவபெருமான் வீணை வாசித்துக் கொண்டு அந்த வீணை இன்பத்தில் முழுவதும் ஈடுபட்டிருக்கிற காட்சி இது.*

***45. முனிவர், அடியார்** : இனி கிழக்குப்புறச் சுவருக்குச் செல்வோம். கிழக்குச் சுவரின் மத்திய பகுதியில், மூன்றாம் மாடிக்குப் போகப் படிகள் அமைக்கப்பட்டிருப்பதனால் இந்தச் சுவரில் நான்கு சிற்ப உருவங்கள் மட்டும் உள்ளன. படிகளுக்கு வடக்குப் புறத்தில் உள்ளவை இரண்டு*

சிற்பங்கள். இவற்றில் ஒன்று துறவியின் உருவம். இந்த உருவம் ஆடை அணிகள் இல்லாமல் கோமணத்தோடு இருக்கிறது. தலைமயிர் பின்புறமாக அடர்த்தியாகத் தொங்குகிறது. இதற்கு அடுத்த சிற்பம், ஓர் ஆள் பூக்கூடையைத் தோளின்மேல் வைத்துக்கொண்டு வளைந்த கோல் ஒன்றை இடது கையில் தாங்கித் தோளின்மேல் வைத்திருப்பது போன்ற உருவம்.

படிகளுக்குத் தெற்குப் பக்கத்திலும் இரண்டு சிற்ப உருவங்கள் இருக்கின்றன. இவற்றில் ஒன்று மீசை தாடிகளுடைய ஒரு முனிவர் உருவம். இதற்கு அடுத்தது இன்னொரு ஆள் உருவம்.

கருவறையின் தெற்குப் பக்கத்துச் சுவருக்கு வருவோம்.

***46. திருமால்*** : இச் சுவரின் மத்தியில் உள்ள கோட்டத்தில் நடுநாயக மாக இருக்கிற சிற்பம் திருமால் திருவுருவம். நீண்ட மகுடம் தரித்த திருமால், நின்ற கோலமாகக் காட்சியளிக்கிறார். வலது கையில் சக்கரமும் இடது கையில் சங்கும் ஏந்தி, மற்றொரு வலது கையில் அபயமுத்திரை அளித்து இன்னொரு இடது கையை இடுப்பில் ஊன்றி இருக்கிறார்.

***47. சிவன்*** : இதற்கு இடது பக்கத்துக் கோட்டத்தில் சிவபெருமான் திருவுருவம் காணப்படுகிறது. நான்கு கைகள். ஓர் இடது கையை இடது பக்கத்தில் நிற்கும் குள்ளமான பூதகணத்தின் மேல் தாங்கி நிற்கிறார்.

***48. காலசம்மார மூர்த்தி*** : இதற்கு இடது பக்கத்துக் கோட்டத்தில் இருப்பது கால சம்மார மூர்த்தி. காலன் (எமன்), சிவபெருமான் காலடியில் சோர்ந்து உட்கார்ந்திருக்கிறான். சிவபெருமான், வலது கையில் கோடரி யையும் இடது கையில் பாம்பையும் ஏந்தியிருக்கிறார். மற்றொரு இடது கையில் சூலத்தைத் தலைகீழாகப் பிடித்திருக்கிறார். இன்னொரு வலதுகை உடையுண்டிருக்கிறது.

***49. சிவன்*** : இதற்கு இடது பக்கத்தில் கடைசிக் கோட்டத்தில் இருப்பது சிவபெருமான் திருவுருவம். நின்ற நிலை வலது கையில் செபமாலையும் இடது கையில் சாமரையும் ஏந்தியிருக்கிறார். மற்றொரு வலது கை உபதேச முத்திரை காட்டுகிறது. இன்னொரு இடது கையைத் தொங்க விட்டிருக்கிறார்.

***50. கருடவாகனன்*** : மத்திய கோட்டத்தில் உள்ள திருமால் உருவத் திற்கு வலது பக்கத்துக் கோட்டத்தில் இருப்பது கருடவாகன மூர்த்தி. முன்பு கூறிய வடக்குச் சுவரில் உள்ள கருடவாகன மூர்த்தி உருவம் போன்றது.

**51. காளிங்கமர்த்தனன்**: இதற்கு வலது பக்கத்தில் இருப்பது கண்ணன் காளிங்கமர்த்தனக் காட்சி. காளிங்கன் உருவம் இதில் புதுமையாக அமைக்கப்பட்டிருக்கிறது. மேல் பகுதி மனித உருவமும் வயிற்றுக்குக் கீழ்ப்பகுதி பாம்பின் உடலும் அமைந்து காளிங்கன் காணப்படுகிறான். காளிங்கன் தலைக்குமேல் மூன்றுதலை நாகம் படம் எடுத்து நிற்கிறது. வருத்தத்தைக் காட்டும் முகத்துடன் தரையில் கைகளையூன்றிக் காளிங்கன் களைப்புடன் காணப்படுகிறான். கண்ணன் அவன்மேல் ஒரு காலை யூன்றி நின்று, இரண்டு கைகளினாலும் அவனது நீண்ட பருத்த பாம்புடலைத் தூக்கிப் பிடித்திருக்கிறார். இவ்வளவு அழகான காளிங்கமர்த்தனச் சிற்பத்தை வேறு எங்கும் காணமுடியாது.

**52. சிவன்** : இதற்கு வலது பக்கத்தில் உள்ள கடைசி கோட்டத்தில் உள்ளது சிவபெருமான் உருவம். வலது கையில் கோடரியும் இடது கையில் சூலமும் ஏந்தி மற்றொரு வலது கையை அபயம் காட்டி இன்னொரு இடது கையில் பாம்பைப் பிடித்திருக்கிறார். சடையில் மண்டையோடும் நிலாப் பிறையும் அணிந்திருக்கிறார்.

**53. சோமஸ்கந்தர்** : இனி மூன்றாவது மாடிக்குச் செல்வோம். இங்கும், மேற்கு நோக்கிய சிறிய திருவுண்ணாழிகை இருக்கிறது. திருவுண்ணாழிகையில் முன்பு இருந்த சிவலிங்கத் திருவுருவம் இப்போது இல்லை. ஆனால், சுவரில் சோமஸ்கந்த உருவம் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இதில், சிவபெருமான் கட்டில் போன்ற ஆசனத்தில் சுகாசனமாக அமர்ந்திருக்கிறார். திருமுடியில் பிறைச் சந்திரனை அணிந் திருக்கிறார். நான்கு திருக்கைகள் உள்ளன. இவருக்கு இடது பக்கத்தில் பார்வதியும் சுகாசன மூர்த்தமாக அமர்ந்திருக்கிறார். பார்வதிக்கு இரண்டு கைகள் மட்டும் உள்ளன. இருவருக்கும் இடையில் கந்தப் பெருமான் குழந்தை உருவமாகக் காணப்படுகிறார். இவர்களுக்குப் பின்புறம் பூதகணங்கள் சாமரை வீசுகின்றன.

இந்தச் சோமஸ்கந்த உருவத்திற்கு வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் நான்முகன் திருமால் திருவுருவங்கள் நிற்பதுபோல அமைந்திருக்கின்றன. கருவறைக்கு வெளியே நான்கு துவாரபாலகர் உருவங்கள் புடைப்புச் சிற்பமாக உள்ளன. இவை இரண்டு கைகளையுடையவை. இவற்றில் ஒன்று அரசன் உருவம்போலக் காணப்படுகிறது.

**54. சூரியன்** : இந்தக் கருவறையின் வெளிப்புறச் சுவர்களில் மூன்று பக்கங்களிலும் சிற்ப உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப் பட்டுள்ளன. பக்கத்துக்கு ஐந்தாகப் பதினைந்து உருவங்கள் உள்ளன. வடபுறச் சுவரில் நடுநாயகமாக அமைந்திருப்பது சூரிய மூர்த்தியின் உருவம். நான்கு கைகளுடன் சூரியமூர்த்தி நின்றவண்ணம் காட்சி யளிக்கிறார். தலையைச் சுற்றி வட்டமான ஒளிப்பிழம்பு காணப்படுகிறது. காதுகளில் அணிந்துள்ள தோடுகள் தோள்களின்மேல் தொங்குகின்றன. இனிய முகத்துடன் கையில் பூ பிடித்து நிற்கிறார்.

சூரியனுக்கு வலது புறத்திலும் இடது புறத்ததிலும் நான்கு உருவங்கள், துவாரபாலகர் முனிவர் உருவம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

**55. சந்திரன்** : கருவறையின் தெற்குப் பக்கத்துச் சுவரிலும் ஐந்து உருவங்கள் புடைப்புச் சிற்பமாக அமைந்துள்ளன. இதில் நடுநாயகமாக நிற்பது சந்திரன் திருவுருவம். தலையின் இடது பக்கத்தில் அரைவட்டம் காணப்படுகிறது. நான்கு கைகளுடன் காதுகளில் குண்டலம் அணிந்து இருக்கிறார்.

சந்திரனுக்கு இடது புறத்தில் இரண்டும் வலது புறத்தில் இரண்டும் ஆக நான்கு துவாரபாலகர் முனிவர் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கருவறையின் பின்புறச் சுவராகிய கிழக்குப் பக்கத்துச் சுவரில் துவார பாலகர் தெய்வங்களின் உருவங்கள் ஐந்து புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

**வராகப்பெருமாள் குகைக்கோயில் சிற்பங்கள்**

இக் குகைக்கோயிலில் இரண்டு அரசரின் சிற்ப உருவங்கள் இருக்கின்றன. இக் கோயிலின் வலது பக்கத்துச் சுவரிலும் இடது பக்கத்துச் சுவரிலும் எதிரெதிராக இந்தச் சிற்ப உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மேற்புறத்தில் இந்த அரசர்களின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன.

**56. நரசிம்மவர்மன்** : முதலாவது சிற்பம், வடபுறச் சுவரில் தெற்கு நோக்கியிருப்பது. ஓர் அரசன் வட்டமான முக்காலிபோன்ற ஆசனத்தில் அமர்ந்திருக்கிறான். இடது காலை மடக்கி ஆசனத்தின்மேல் வைத்து, வலது காலைக் கீழே தொங்கவிட்டுச் சுகாசனமாக அமர்ந்திருக்கிறான். தலையில், நீண்ட குல்லாய்போன்ற மகுடம் அணிந்திருக்கிறான். காதுகளில் குண்டலங்களும் கழுத்தில் மணிமாலையும் அணிந்திருக்கிறான். அறையில்

மட்டும் வேட்டியணிந்து வெற்றுடம்போடு இருக்கிறான். இடதுகையை இடது தொடைமேல் வைத்து, வலதுகையில் ஏதோ (பூ) பிடித்திருப்பது போலக் காணப்படுகிறான். இவனுக்கு வலது இடது புறங்களில் இவனுடைய மனைவியரான இராணிகள் நிற்கிறார்கள். காதுகளில் மிகப்பெரிய பொற்குழைகளையும் தலையில் மகுடமும் அணிந்திருக்கிறார்கள். இந்த உருவத்துக்கு மேற்புறத்தில், பல்லவர்காலத்து எழுத்தினால் **ஸ்ரீ சிம்மவிண்ண போத்ராதிராஜன்** என்று கல்லில் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ சிம்மவிஷ்ணு போத்ராதிராஜன் என்னும் அரசன் இவன் என்பதை இந்த எழுத்துக்களினால் அறியலாம். போத்ராதிராஜன் என்றால் போத்தராசன் என்பது பொருள். பல்லவர்களுக்குப் போத்தராசன், போத்தரசன் என்னும் பொதுப் பெயர் உண்டு.

**57. மகேந்திரவர்மன்** : இதற்கு எதிர்ப்புறத்தில் வடக்கு நோக்கி யிருக்கும் சிற்ப உருவத்தில், ஓர் அரசன் தன்னுடைய இரண்டு மனைவி யரான இராணிகளுடன் நின்றுகொண்டிருக்கிறான். பக்கத்தில் நிற்கும் அரசியின் வலதுகையைத் தன்னுடைய இடது கையினால் பிடித்துக் கொண்டு, தனது வலது கைவிரலினால் (வராகப்பெருமாளைச்) சுட்டிக் காட்டுகிறான். இவன், தலையில் குல்லாய் போன்ற நீண்ட மகுடம் அணிந் திருக்கிறான். காதுகளில் அணிந்துள்ள பொற்குண்டலங்கள் தோள்களின் மேல் தொங்க, கழுத்தில் மணிமாலை தரித்திருக்கிறான். அறையில்மட்டும் வேட்டியுடுத்து வெற்றுடம்பாக இருக்கிறான். இவனுக்கு இடது பக்கத்தில் நிற்கிற இரண்டு இராணிகளும் தலையில் மகுடம் அணிந்து இருக்கிறார்கள். ஓர் இராணிக்கு வலதுகாதில் கனமானகுண்டலமும் இடதுகாதில் மிகப் பெரிய பொன் ஓலையும் காணப்படுகின்றன. மற்றோர் இராணியின் வலக் காதில் மிகப்பெரிய பொன் ஓலையும் இடதுகாதில் கனமான குண்டலமும் காணப்படுகின்றன. இந்தச் சிற்ப உருவத்துக்குமேலே பல்லவர் காலத்து எழுத்தினால் ஸ்ரீ மஹேந்த்ர போத்ராதிராஜன் என்று கல்லில் எழுதப் பட்டிருக்கிறது. அஃதாவது இந்த உருவம் மகேந்திரவர்மனுடைய உருவம் என்று எழுதப்பட்டிருக்கிறது.

எனவே, இந்தச் சிற்ப உருவங்கள் முறையே சிம்ம விஷ்ணுவையும் அவன் மகன் (முதலாம்) மகேந்திரவர்மனையும் குறிக்கின்றன என்பது தெரிகிறது.

***சில அபிப்பிராயங்கள்***

*ஆனால், அரசாங்கத்துச் சாசன இலாகாவில் இருந்த காலஞ்சென்ற ராவ்பகதூர் H. கிருஷ்ண சாஸ்திரி என்பவர் இச்சிற்பங்களைப்பற்றி வேறு விதமாகக் கூறிச் சென்றார். உட்கார்ந்திருக்கும் அரசன் நரசிம்மவர்மன் I (வாதாபி கொண்டவன்) என்றும், எதிரில் நிற்கும் அரசன், அவனுடைய தகப்பனான மகேந்திரவர்மன் I என்றும், எழுதினார். இதற்குக் காரணம், இந்த எழுத்துக்கள் நரசிம்மவர்மன் I மகனான பரமேசுவரவர்மன் I காலத்து எழுத்துக்களைப் போல இருக்கின்றனவாம். ஆகையால், பரமே சுவரவர்மன் தன் தகப்பனான நரசிம்மவர்மனையும், தன் பாட்டனான மகேந்திரவர்மனையும் சிற்ப உருவமாக அமைத்தானாம்.*

*இதில் இவர் பெரிய தவறு செய்கிறார். சிற்பத்தின் மேற்புறம் எழுதப்பட்டிருப்பது ஸ்ரீ சிம்மவிண்ணபோத்ராதி ராசன் என்பது. சிம்மவிஷ்ணு என்னும் பல்லவ அரசனை இது குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால், கிருஷ்ண சாஸ்திரி, சிம்மவிஷ்ணு என்னும் பெயரை நரசிம்மவிஷ்ணு என்று மாற்றுகிறார். மாமல்லனாகிய முதலாம் நரசிம்ம வர்மனுக்கும், ராஜசிம்மனாகிய இரண்டாம் நரசிம்மவர்மனுக்கும் நரசிம்ம விஷ்ணு என்னும் பெயர்கள் உண்டாம். நரசிம்மவிஷ்ணு என்னும் பெயர் சுருக்கமாக சிம்மவிஷ்ணு என்றும் கூறப்படுமாம். ஆகவே இந்தச் சிற்பத்தின் மேற்புறத்தில் எழுதப்பட்டுள்ள சிம்மவிஷ்ணு என்பது நரசிம்மவிஷ்ணு என்பவனை, அஃதாவது வாதாபிகொண்ட நரசிம்மவர்மனைக் குறிக்கிறது, என்று எழுதுகிறார். இவர், சிம்மவிஷ்ணுவை நரசிம்ம விஷ்ணுவாக்கு கிறார். பல்லவ சாசனங்களில் சிம்மவிஷ்ணுவை நரசிம்ம விஷ்ணு என்றும், நரசிம்மனை சிம்மவிஷ்ணு என்றும் கூறப்படவில்லை.*

*இந்தச் சிற்பத்துக்கு எதிரில் நிற்பதுபோல அமைத்துள்ள சிற்பம், வாதாபிகொண்ட நரசிம்மவர்மன் தந்தை முதலாம் மகேந்திரவர்மன் உருவம் என்றும் கூறுகிறார்* [1]

*வேறுசில ஆராய்ச்சிக்காரர்கள், உட்கார்ந்திருக்கும் சிற்பம் சிம்ம விஷ்ணு (வாதாபிகொண்ட நரசிம்மவர்மனுடைய பாட்டன்) என்றும், நிற்கும் உருவம் சிம்மவிஷ்ணுவின் மகன் முதலாம் மகேந்திரவர்மன்*

---

1. PP 3 and 4. Two Statues of Pallava Kings and Five Pallava Inscriptions in a Rock - temple at Mahabalipuram. H. Krishna Sastri, M.A.S. No.26.

என்றும் சான்று காட்டி எழுதினார்கள். கிருஷ்ணசாஸ்திரி சொல்வதுபோல, உட்கார்ந்திருக்கும் உருவம் நரசிம்மவர்மனும் நிற்கும் உருவம் அவன் தகப்பனான மகேந்திரவர்மனுமானால் மகனை உட்காரவைத்தும் தகப்பனை நிற்கவைத்தும் சிற்ப உருவங்க்ளை அமைக்கமாட்டார்கள்; அது இந்திய நாட்டு வழக்கம் அல்ல; ஆகவே, சாஸ்திரி கூறுவதுபோல உட்கார்ந்த உருவம் வாதாபிகொண்ட நரசிம்மவர்மன் உருவம் அல்ல, அவன் பாட்டனான சிம்மவிஷ்ணுவின் உருவம். நின்றுகொண்டிருப்பது சிம்மவிஷ்ணுவின் மகனான முதலாம் மகேந்திரவர்மன் உருவம் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். இதற்குள் கிருஷ்ணசாஸ்திரி காலஞ்சென்றுவிட்டார்.

பிறகு, அரசாங்கத்துச் சாசன இலாகாவைச் சேர்ந்த ராவ்பகதூர் சி.ஆர். கிருஷ்ணமாசார்லு அவர்களும் வி. வெங்கடசுப்ப அய்யர் அவர்களும் சேர்ந்து வெளியிட்ட தென்னிந்திய சாசனங்கள் பன்னிரண்டாம் பகுதியில் [1] இந்தச் சிற்பங்களைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். இவர்கள், உட்கார்ந்திருக்கும் சிற்ப உருவம் நரசிம்மவிஷ்ணு (நரசிம்மவர்மன் - I) என்றும், நிற்கும் உருவம் அவன்மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் (கிருஷ்ண சாஸ்திரி கூறுவதுபோல முதலாம் மகேந்திரவர்மன் அல்லன்) என்றும் எழுதியிருக்கிறார்கள். அஃதாவது, தகப்பனாகிய முதலாம் மகேந்திரவர்மனை நிற்பதுபோலவும், அவன் மகன் முதலாம் நரசிம்மவர்மனை உட்கார்ந்திருப்பதுபோலவும் சிற்பம் அமைத்திருக்கமாட்டார்கள் என்பதற்கு விடைகூறுவதுபோல இவர்கள், உட்கார்ந்திருப்பவன் வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்தான், ஆனால், நின்றுகொண்டிருப்பவன் அவன் தகப்பனான நரசிம்மவர்மன் அல்லன் அவன் மகனான இரண்டாம் நரசிம்மவர்மன் என்று எழுதியிருக்கிறார்கள்.[2] அன்றியும் நிற்பதுபோன்ற சிற்பத்தின் போட்டோ படத்தை இந் நூலில் அமைத்து அதன்கீழ் ''இரண்டாம் மகேந்திரவர்மனும் அவனுடைய இராணிகளும்'' என்று எழுதி வைத்துவிட்டார்கள்.

முடிவு என்ன?

வெறும் எழுத்துக்களை வைத்துக்கொண்டு காலத்தை ஆராய்வது பல தவறுகளுக்கு இடமாகிறது. சாசனத்தில் சிம்மவிஷ்ணு என்றிருப்பதை

[1] S.I.I. Vol. XII, The Pallavas.
[2] do. Introduction, Vol. III and Page 16.

இவர்கள் தங்கள் விருப்பம் போல நரசிம்மவிஷ்ணு என்று மாற்றுவது ஏன்? பிறகு நரசிம்மவிஷ்ணுவை நரசிம்மவர்மன் என்று மாற்றுவது ஏன்? இவர்களுக்கு முன்பு சிம்மவிஷ்ணு என்னும் அரசன் பல்லவ பரம்பரையில் இருந்ததை இவர்கள் ஏன் கருதவில்லை?

இந்தக் குகைக்கோயிலில் உள்ள இந்த உருவங்களில் உட்கார்ந் திருப்பது சிம்மவிஷ்ணுவையும் நின்றிருப்பது அவன் மகனான முதலாம் மகேந்திரவர்மனையும் காட்டுகின்றன என்பதே அறிஞர்கள் கண்ட முடிபு.

மேலும், இந்தக் குகைக்கோயிலை அமைத்தவன் முதலாம் பரமேசுவரவர்மன் என்றும், இதற்குச் சான்று பிற்காலத்துச் சோழனாகிய இராஜேந்திரதேவன் காலத்துச் சாசனம் இந்தக் குகைக்கோயிலை பரமேசுவர மகாவராக விஷ்ணுக்கிருகம் என்று கூறுவதையும் காட்டு கிறார்கள். பரமேசுவர மகாவராகம் என்பதற்குப் பரமேசுவரனாகிய மகாவராகம் என்று பொருள் கொள்ளவேண்டும். பரமேசுவரவர்மனால் ஏற்படுத்தப்பட்டதா யிருந்தால் பரமேசுவரவர்ம மகாவராக விஷ்ணுகிருகம் என்று பெயர் இருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு பெயர் இல்லை. எனவே ஐயத்திற்கும் மறுப்புக்கும் இடமான சிலவற்றை ஆதாரமாகக் கொண்டு இவர்கள் இவ்வாறு எல்லாம் எழுதுவது குழப்பத்துக்குக் காரணமே தவிர தெளிவையும் உண்மையையும் தெரிவிப்பதாக இல்லை.

இந்தக் கோயிலில் இருக்கிற ஏனைய சிற்ப உருவங்களைப்பற்றி (வராகப்பெருமாள், கொற்றவை, கஜலக்ஷ்மி, திருமால், நான்முகன், கங்காதரமூர்த்தி) முன்னமே கூறியுள்ளேன்.

*

# அ. தேவார ஆராய்ச்சி

## 1. இயற்கைக் காட்சிகள்

**ஞானசம்பந்தர்** தமது தேவாரப் பதிகங்களில் ஆங்காங்கே இயற்கைக் காட்சிகளைக் கூறுகிறார். ஒவ்வோர் ஊரிலும் இவர் கண்ட இயற்கைக் காட்சிகளைக் கண்டது கண்டபடியே கூறுகிறார். சில இடங்களில் அக் காட்சிகளை உருவகப்படுத்திக் கூறுகிறார். இவர் அமைத்துக் காட்டிய சொல் ஓவியங்களை வர்ண ஓவியங்களாகத் தீட்டினால் அவை, இயற்கை யழகு வாய்ந்த அழகுள்ள படங்களாக அமையும். அவர் கூறிய சொல் ஓவியச் சித்திரக் காட்சிகளைக் கீழே தருகிறோம். அவற்றைப் படித்து அப்படங்களை அகக் காட்சியிலே கண்டு களிக்கலாம்.

**''செய்யருகே புனல்பாய வோங்கிச்**
**செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்**
**கையருகே கனிவாழை யீன்று**
**காலெலாங் கமழ் காட்டுப்பள்ளி.''**

**''தளையவிழ் தண்ணிறநீலம் நெய்தல்**
**தாமரை செங்கழுநீரும் எலாம்**
**களையவிழுங் குழலார் கடியக்**
**காதலிக்கப்படுங் காட்டுப்பள்ளி.''**

**''பொன்னியல் தாமரை நீலம் நெய்தல்**
**போதுகளால் பொலிவெய்து பொய்கைக்**
**கன்னியர் தாங் குடை க்ாட்டுப் பள்ளி.''**

**''தெங்குயர் சோலைசேர் ஆலை சாலி**
**திளைக்கும் விளைவயல் சேரும் பொய்கை.''**

---

[1] இங்கு ஞானசம்பந்தர் தேவாரம் மட்டும் ஆராயப்படுகிறது. இவர்காலத்திலிருந்த நாவுக்கரசர் தேவாரம், இந்நூலாசிரியர் எழுதியுள்ள மகேந்திரவர்மன் என்னும் நூலில் ஆராயப்பட்டிருக்கிறது.

''வண்தாமரை மலர்மேல் மடஅன்னம் நடைபயில
வெண்தாமரை செந்தாது உதிர் வீழிமிழலை.''

''பங்கயங்கள் மலரும் பழனத்துச்
செங்கயல்கள் திளைக்கும் திருப்புன்கூர்.''

''நீருள் கயலும் வயல்வாளை வராலொடு
ஆரும் புனல் அன்பிலாலந் துறை.''

''குரவம் சுரபுன்னையும் வன்னி மருவும் மயிலாடுதுறை.''

''சங்கமதார் குறமாதர் தங்கையில் மைந்தர்கள் தாவிக்
கங்குலின் மாமதி பற்றுங் கற்குடி மாமலை.''

''மருங்களியார் பிடிவாயில் வால்வெதிரின் முளைவாரிக்
கருங்களியானை கொடுக்கும் கற்குடிமாமலை.''

''கார்க்கொள் கொடிமுல்லை குருந்தமேறிக்
கருந்தேன் மொய்த்து
ஆர்க்கும் பழையனூர்.''

''தவழுங் கொடி முல்லை
புறவம்சேர நறவம்பூத்து
அவிழும் பழையனூர்.''

''நடையடைந்த களைகளாகச் செழுங்கழுநீர் மலர்கள்
செய்யடைந்த வயல்கள் சூழ் சிரபுரம்.''

''அந்தலாய மல்லிகையும் புன்னை வளர்குரவின்
பந்தலாரும் பட்டினத்துப் பல்லவனீச்சரம்.''

''ஈளைப்படுகிலையார் தெங்கிற்குலையார் வாழையின்
பாளைக் கமுகின் பழம்வீழ் சோலைப் பழனநகர்.''

''வண்தாமரையின் மலர்மேல் நறவமது
வாய்மிக உண்டு
பண்தான் கெழும வண்டுயாழ் செய்யும்
பழனநகர்.''

''வெஞ்சொற் பேசும் வேடர் மடவார்
இதணமது வேறி
அஞ்சொற் கிளிகள் ஆயோவென்னும்
அண்ணாமலை.''

''கனைத்த மேதி காணாது ஆயன் கைமேல்குழல் ஊத
அனைத்துஞ் சென்று திரளும் சாரல் அண்ணாமலை.''

''பொன்தாழ் கொன்றை செருந்தி புன்னை பொருந்து
செண்பகம்
சென்றார் செல்வத் திருவார் நறையூர்ச் சித்தீச்சரம்.''

''குயில்ஆர் கோலமாதவிகள் குளிர்பூஞ் சுரபுன்னை
செயிலார் பொய்கை சேரும் நறையூர்ச் சித்தீச்சரம்.''

''பூவார் பொய்கை அலர்தாமரை செங்கழுநீர், புறவெலாம்
கூவார் குயில்கள் ஆலும்மயில்கள் இன்சொல்
கிளிப்பிள்ளை
காவார் பொழில் சூழ்ந்து அழகார் குடந்தைக் காரோணம்.''

''கானமான் வெருவுறக் கருவிரல் ஊகம் கடுவனொடு
உகளும்ஊர்,
கற்கடுஞ்சாரல் ஏனமான் உழிதரும் இலம்பையங்
கோட்டூர்.''

''மைச்செறி குவளை தவளைவாய் நிறைய
மதுமலர்ப் பொய்கையில் புதுமலர் கிழியப்
பச்சிறவு எறிவயல் வெறிகமழ் காழிப்பதி.''

''கருமைகொள் வடிவொடு சுனைவளர் குவளைக்
கயலினம் வயல்இள வாளைகள் இரிய
எருமைகள் படிதர இளவனமாலும் இடைச்சுரம்.''

''குரவம் சுரபுன்னை குளிர் கோங்கு இளவேங்கை
விரவும் பொழில் அந்தண் வீழிமிழலை.''

''செல்வமல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்
கொல்லை முல்லை மெல்லரும்பீனும் குற்றாலம்.''

''பெருந்தண் சாரல் வாழ் சிறைவண்டு, பெடைபுல்கிக்
குறுந்தம் ஏறிச் செவ்வழிபாடும் குற்றாலம்.''

''அள்ளல்விளை கழனி அழகார் விரைத்தாமரை மேலன்னம்
புள்ளினம் வைகி எழும் புகலிப்பதி.''

''மாதவி வான் வகுளமலர்ந்தும் விரைதோயவாய்ந்த
போதலர் சோலைகள் சூழ் புகலிப்பதி.''

''செங்கயல் நின்றுகளும்செறுவில் திகழ்கின்ற சோதிப்
பங்கயம் நின்றலரும் வயல்சூழ்ந்த பாதாளேச்சரம்.''

''இஞ்சாயல் இளந்தெங்கின் பழம்வீழ
இளமேதி யிரிந்தங் கோடிச்
செஞ்சாலிக் கதிர் உழக்கிச் செங்கமல
வயல்படியுந் திருவையாறு.''

''முத்தாறு,
வகையாரும் வரைப்பண்டம் கொண்டு இரண்டு
கரையருகும் மறிய மோதித்
தகையாரும் வரம்பிடறிச் சாலிகழுநீர்
குவளை சாயப் பாய்ந்து
முகையார் செந்தாமரைகள் முகமலர
வயல்தழுவும் முதுகுன்றம்.''

''குருந்தம் மல்லிகை கோங்குமாதவி நல்லகுராமாவிற்
திருந்து பைம்பொழில் கச்சி யேகம்பம்.''

''கோலமாய்க் கொழுந்து ஈன்று பவளம் திரண்டதோர் ஆலமரம்.''

''நீலம் நெய்தல் நிலவி மலரும் சுனை, நீடிய
சேலும் ஆலுங்கழனி வளம் மல்கிய சிக்கல்.''

''வாளையும் கயலும் மிளிர் பொய்கை
வார்புனற்கரை அருகெலாம் வயல்
பாளையொண் கமுகம் புறவார் பனங்காட்டூர்.''

''அந்தண்மாதவி புன்னை நல்லவசோகமும் அரவிந்தம் மல்லிகை
பைந்தண் நாழல்கள்சூழ் புறவார் பனங்காட்டூர்.''

''பாசித்தடமும் வயலும் சூழ்ந்த பாசூர்.''

''வெண்தாமரைமேல் கருவண்டுயாழ்செய் வெண்காடு.''

''கள்ளார் நெய்தல் கழுநீர் ஆம்பல் கமலங்கள்
புள்ளார் பொய்கைப் பூப்பல தோன்றும் புத்தூர்.''

''கொம்பார் குரவுகொகுடி முல்லை குவிந்தெங்கும்
மொய்ம்பார் சோலை வண்டுபாடும் முதுகுன்று.''

''கயல்வளாவிய கழனிக் கருநிறக் குவளை கண்மலரும்
வயல்வளாவிய புகலூர் வர்த்தமானீச்சுரம்.''

''செய்யில் வாளைகளோடு செங்கயல் குதிகொளும் புகலூர்.''

''சேறும் வாளையும் கயலும் செறிந்துதன் கிளையொடுமேய
ஆலுஞ்சாலி நற்கதிர்கள் அணிவயற்காழி நன்னகர்.''

''துள்ளிவாளை பாய்வயல், சுரும்புலவும் நெய்தல்வாய்,
அள்ளல் நாரை ஆரல் வாரும் அந்தண் ஆரூர்.''

''செருந்தி ஞாழல் புன்னை வன்னி செண்பகம் செழுங்குரா
அரும்பு சோலை வாசம் நாறும் அந்தண் ஆரூர்.''

''முறித்து மேதிகள் கரும்புதின்று வாவியின் மூழ்கிட
இனவாளை
வெறித்துப் பாய்வயல் சிரபுரம்.''

''செம்பொனார்தரு வேங்கையுநாழலுஞ் செருந்தி
செண்பகமானைக்
கொம்புமாரமு மாதவி சுரபுனை குருந்தலர்போந்துந்தி
அம்பொனேர்வரு காவிரிவடகரை மாந்துறை.''

''கோங்கு செண்பகம் குருந்தொடு பாதிரி குரவிடை மலருந்தி
ஓங்கி நீர் வரு காவிரிவடகரை மாந்துறை.''

''நறவ மல்லிகை முல்லையு. மௌவலு நாண்மலரவை வாரி
யிறவில் வந்தெறி காவிரி வடகரை மாந்துறை''

''மடையின் நெய்தல் கருங்குவளை செய்ய மலர்த்தாமரை
புடைகொள் செந்நெல் விளைகழனி மல்கும் புகலூர்.''

''கெண்டைபாய மடுவில் உயர் கேதகை மாதவி
புண்டரீக மலர்ப் பொய்கை நிலாவும் புகலி.''

''கண்டலும் ஞாழலும் நின்று பெருங்கடல் கானல்வாய்ப்
புண்டரீகம் மலர்ப் பொய்கை சூழ்ந்த புனவாயில்.''

''நாழலும் செருந்தியும் நறுமலர்ப் புன்னையும்
தாழை வெண்குருகு அயல் தயங்கு கானல்.''

''குரவமர் சுரபுன்னை கோங்கு வேங்கைகள்
விரவிய பொழிலணி விசய மங்கை.''

''கோங்கமே குரவமே கொன்றையும் பாதிரி
மூங்கில் வந்தணை தரும் முகலியின் கரை.''

''கரும்பும் செந்நெலும் காய்கமுகின் வளம்
நெருங்கு தண்டலை நீணெறி.''

''பாய்திமிலர் வலையோடு மீன்வாரிப் பயின்றெங்கும்
காசினியில் கொணர்ந்தட்டுங் கைதல்சூழ் கழிக்கானல்.''

''பானிலவும் பங்கயத்துப் பைங்கானல் வெண்குருகு
கானில்வும் மலர்ப் பொய்கை கைதல்சூழ்கழிக் கானல்.''

''கோங்கமே குரவமே கொழுமலர்ப்
புன்னையே கொகுடி முல்லை
வேங்கையே நாழலே விம்மு பாதிரி
களேவிரவி யெங்கும்

ஓங்குமா காவிரி வடகரை யடை
குரங்காடு துறை.''

''குருந்துயர் கோங்கு கொங்கு கொடிவிடு
முல்லை மல்லிகை செண்பகம் வேங்கை,
கருந்தடங் கண்ணின் மங்கைமார்
கொய்யும் கழுமல நகர்.''

''தேங்கொள் பூங்கமுகு தெங்கு இளங்கொடிமாச்
செண்பகம் வண்பலா இலுப்பை,
வேங்கை பூமகிழ் ஆல் வெயில்புகா வீழிமிழலை.''

''இஞ்சிக் கேகதலிக்கனி விழக் கமுகின்
குலையொடும் பழம் விழத் தெங்கின்,
மிஞ்சுக்கே மஞ்சுசேர் பொழில் வீழிமிழலை.''

''தேனார்ந்தெழு கதலிக்கனி உண்பான் திகழ்மந்தி
மேனோக்கி நின்றிரங்கும் பொழில்.''

''தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின் காய்கள்
கவணெறிகல்போற் சுனையின் கரைசேரப்
புள்ளிரியுங் கழுமலமே.''

## 2. உவமைகள்

ஞானசம்பந்தர் தம்முடைய பாடல்களில் சிற்சில இடங்களில் அழகான உவமைகளை நயமாகக் கூறுகிறார். அப் பகுதிகள் சில வருமாறு:

ஒரு பூம்பொழிலிலே வண்டு ரீங்காரஞ் செய்து இசை பாடிக் கொண்டிருக்க, அங்கு ஒரு மயில் தனது தோகையை விரித்து ஆடிக் கொண்டிருக்க, பொன்போன்ற தாதுகள் நிறைந்த மலரைப் புன்னை மரம் பூத்திருந்தது. இந்தக் காட்சி, அரங்கத்திலே இசைப்பாட்டிற்கு ஏற்ப நடன மாது ஒருத்தி நாட்டியம் ஆட, அதனைக் கண்டு மகிழ்ந்தவர் அவளுக்குப் பொன்னைத் தாராளமாக வழங்குவது போல இருந்தது என்று உவமை கூறுகிறார் ஞானசம்பந்தர்.

**''மாதவி மேய வண்டு இசைபாட மயில் ஆடப்**
**போது அவர் செம்பொன் புன்னைகொடுக்கும் புறவம்.''**

பொய்கைகளில் தாமரை குமுதம் குவளை நெய்தல் ஆகிய மலர்கள் பூத்து மலர்ந்திருப்பது, தாமரைப்பூ மகளிரின் முகம் போலவும் செங்குமுதம் வாய் போலவும் குவளையும் நெய்தலும் கண்கள் போலவும் காணப்பட்டன என்று உவமை கூறுகிறார்:

**''வாவி தொறும் வண்கமலம் முகங்காட்டச்**
**செங்குமுதம் வாய்கள் காட்டக்**
**காவியிருங் கருங்குவளை கருநெய்தல்**
**கண்காட்டும் கழுமலமே.''**

மகளிரின் முகத்துக்கும் வெண்ணகைக்கும் கருங் கண்ணுக்கும் செவ்வாய்க்கும் இன்னொரு உவமை கூறுகிறார்.

**''கொழுந் தரளம் நகைகாட்ட கோகனகம்**
**முகங்காட்டக் குதித்து நீர்மேல்**
**விழுந்த கயல் விழிகாட்ட விற்பவளம்**
**வாய்காட்டும் மிழலை யாமே.''**

வயலைச் சார்ந்த ஒரு நீர் நிலையிலே தாமரைப் பூ பூத்திருந்தது. அந்தப் பூவின்மேல் ஓர் இளம் அன்னப் பறவை அமர்ந்திருந்தது. பூவிற்கு மேலே, உயர்ந்து நீண்டு வளர்ந்திருந்த ஒரு தாமரை இலை குடைபிடிப்பது போல நின்றது. அருகிலே வளர்ந்திருந்த செந்நெற்கதிர் பூவின் அருகில் காற்றினாலே அசைந்து கொண்டிருந்தது. இந்தக் காட்சி, அரசிளங் குமரன் ஒருவன் கொற்றக் குடையின் கீழே பொன் ஆசனத்தில் அமர்ந்திருக்க, தாதிப் பெண்கள் சாமரை வீசிக்கொண்டிருப்பது போலக் காணப்பட்டது என்று உவமை கூறுகிறார்:

**''செறியிலைத் தாமரைத் தவிசில் திகழ்ந்தோங்கும்**
**இலைக்குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல்**
**வெறிகதிர்ச் சாமரை யிரட்ட இளவன்னம்**
**வீற்றிருக்கும் மிழலை யாமே.''**

கடற்கரையை யடுத்த ஒரு கானல் கழியின் ஓரத்திலே அடர்ந்து வளர்ந்த தாழம் புதரில் தாழம் பூ பூத்திருந்தது. அதன் அருகில் தண்ணீரிலே தாமரை மலர் அலர்ந்திருந்தது. அக் கழியில் வாழும் கெண்டைமீன் அவ்விடத்திற்கு வந்தபோது, தண்ணீரில் காணப்படுகிற தாழம்பூவின் நிழல் ஒரு பறவைபோல் தோன்ற அதைக் கண்டு கெண்டைமீன் அச்சங்கொண்டு தாமரைப் பூவின் கீழே ஓடி ஒளிந்தது. கெண்டை மீனின் அறியாமையைக் கண்ட கழிக்கரையில் கிடந்த முத்துகளும் சிப்பிகளும் நகைப்பது போலத் தோன்றின என்று கூறுகிறார்:

**''மடல் விண்ட முடத்தாழை**
**மலர் நிழலைக் குருகென்று**
**தடமண்டு துறைக் கெண்டை**
**தாமரையின் பூ மறையக்**
**கடல் விண்ட கதிர்முத்தம்**
**நகை காட்டுங் காட்சியதே.''**

குடவாயில் தோட்டத்தில் வாழை மரங்களின் மஞ்சள்நிறமாக வாழைப்பழங்கள் பொன் காய்த்தது போலவும், பாக்கு மரங்களின் செந்நிறமாகப் பழுத்த காய்கள் பவழம் காய்த்தது போலவும் தோன்றின என்பதை,

**''குலைவாழை கமுகம் பொன் பவளம் பழுக்கும் குடவாயில்''**

என்று கூறுகிறார்.

புங்கமரத்தின் பூக்கள் தரையில் உதிர்ந்து கிடப்பது நெல் பொறியைச் சிதறியிருப்பது போலத் தோன்றிற்று என்றும், கோங்கு மலர் பொன் பூத்தது போல மஞ்சள் நிறமாக இருந்தது என்றும், பசுமையான இலைகளுக்கு இடையில் செந்நிறமான ஆலங்காய்கள் காய்த்திருப்பது திரண்ட பவளங் களைப் போல இருந்தன என்றும் உவமை கூறுகிறார்:

**''பொரியேர் புன்கு சொரி பூஞ்சோலை.''**

**''பொன்போதலர் கோங்கோங்கு சோலை.''**

**''கோலமாய்க் கொழுந்து ஈன்று பவளம்**
**திரண்டதோர் ஆலமரம்''**

பாம்பின் வாயிலே அகப்பட்ட சிறு பறவை புதரிலேயுள்ள பூவின் தேனைச் சுவைத்து இன்புற்றதுபோல நோய், மூப்பு, சாக்காடு என்பவைகளினால் பிணிப்புண்டுள்ள இந்த உடம்பு சிற்றின்பத்தை விரும்புகிறது என்று கூறுகிறார்:

**''செடிகொள் நோயாக்கையைப் பாம்பின் வாய்த்**
**தேரைவாய்ச் சிறுபறவைக்**
**கடிகொள் பூந்தேன் சுவைத்தின் புறலாமென்று**
**கருதினாயே....''**

கழிக்கரையில் தாழம்புதரின் அருகே நின்றிருந்த ஒரு கொக்கு, தாழைமடல் தொங்குவதைத் தன் மனைவியாகிய கொக்கு என்று கருதி அதைத் தழுவிற்றாம்!

**''ஏழை வெண் குருகயலே யிளம்பெடை தனதெனக் கருதித்**
**தாழை வெண் மடல்புல்குந் தண்மறைக் காடு.''**

ஆண் அன்னப் பறவை பெண் அன்னத்துடன் தாமரைப் பூவின் மேலே அமர்ந்திருப்பதும் அருகிலே நின்ற நெற்கதிர்கள் காற்றில் அசைவதும் ஆன காட்சி, அரசனும் அரசியும் சிம்மாசனத்தில் வீற்றிருக்க அவர்களுக்கு இருபுறத்திலும் மங்கையர் சாமரை வீசுவதுபோலிருந்தது என்று கூறுகிறார்:

**''தளையவிழ் கமலத் தவிசின்மேல் அன்னம்தன்**
**இளம்பெடை யொடும் புல்கி**
**விளைகதிர் கவரிவீச வீற்றிருக்கும்.''**

## 3. சிறுத்தொண்டர்

ஞானசம்பந்தர் ''சிறுத்தொண்டரை'க் குறிப்பிடுகிறார். சிறுத்தொண்டர் என்பது சிறுத்தொண்ட நாயனாராகிய பரஞ்சோதியாரை அன்று. அவரைத் தவிர்த்து வேறு சிறுத்தொண்டரையும் குறிப்பிடுகிறார்.

செங்காட்டங் குடியில் கணபதீச்சரம் அமைத்துத் திருத்தொண்டு செய்து வந்த பரஞ்சோதியாராகிய சிறுத்தொண்ட நாயனாரை ஞானசம்பந்தர் தமது தேவாரப் பதிகத்தில் கூறுவது யாவரும் அறிவர். அந்தச் சிறுத்தொண்டர் நரசிம்மவர்மனின் யானைப் படைத்தலைவராக இருந்து, வாதாவி நகரத்திற்குச் சென்று போர்புரிந்தார் என்றும், பின்னர் அரசரது ஊழியத்தை விட்டுப் பக்தியில் ஈடுபட்டு இருந்தார் என்றும், அவருடன் ஞான சம்பந்தரும் அப்பரும் நட்புக் கொண்டிருந்தனர் என்றும் முன்னமே கூறி யுள்ளோம். ஞானசம்பந்தர் அவரைத் தமது திருப்பதிகங்களில் இவ்வாறு கூறுகிறார்:

***''பொடிநுகரும் சிறுத்தொண்டர்க் கருள் செய்யும்***
***பொருட்டாகக்***
***கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே.''***

என்றும்,

***''செங்காட்டங்குடி மேய சிறுத்தொண்டன்.''***

என்றும்,

***''செருவடிதோட் சிறுத்தொண்டன்.''***

என்றும்

***''சீராளன் சிறுத்தொண்டன்.''***

என்றும்,

***''சிறப்புலவன் சிறுத்தொண்டன்.''***

என்றும்,

***''வெந்த நீறணி மார்பன் சிறுத்தொண்டன்.''***

என்றும் கூறுகிறார்.

இந்தச் சிறுத்தொண்டரைத் தவிர வேறு சிறுத்தொண்டர்களையும் ஞானசம்பந்தர் கூறுகிறார். அவர் கூறுவது இது:

''வணங்கும் சிறுத்தொண்டர் வைகலேத்தும் வாழ்த்தும்
கேட்டு
அணங்கும் பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே.''

''வெள்ளமெல்லாம் விரிசடை மேலோர் விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழல் ஏத்தும்
சிறுத்தொண்டர்
உள்ளமெல்லாம் உள்கிநின்றாங்கே
உடனாடும்
கள்ளம் வல்லான் காதல்செய் கோயில்
கழுக்குன்றமே.''

''பழகவல்ல சிறுத்தொண்டர் பாவின்னிசை
குழகரென்று குழையா வழையாவரும்
கழல்கொள் பாடலுடையார் கருகாவூரெம்
அழகர் வண்ணம் அழலும் அழல்வண்ணமே.''

இப் பாடல்களில் கூறப்படுகிற சிறுத்தொண்டர் என்பவர் யாவர்? அவர் ஏன் சிறுத்தொண்டர் என்று கூறப்படுகின்றனர்? என்பன ஒன்றும் விளங்கவில்லை. இதனை ஆராயவேண்டுவது அறிவுடையவர் கடனாகும்.

## 4. கழியில் மீன்பிடித்தல்

பௌத்தப் பள்ளிகளையடுத்த கழிகளிலே பௌத்தத் துறவிகளில் சிலர் ஒருவருமறியாமல் மீன்பிடித்த செய்தியை ஞானசம்பந்தர் கூறுகிறார். துறவிகளுக்குரிய சீலங்களில் உயிர்களைக் கொல்லக்கூடாது என்பதும் ஒன்று. பௌத்தத் துறவிகளில் சிலர் இவ்வாறு உயிர்க்கொலை செய்து வந்தது பௌத்த ஒழுக்கத்துக்குப் புறம்பானது. ஒவ்வொரு சமயத்திலும் கால வேறுபாட்டினாலே சிற்சிலர் சமய ஒழுக்கத்தைத் தவறி நடப்பது உண்டு. அவ்வாறு தவறி நடந்த செய்தியை ஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் குறிப்பிடுகிறார்.

''கடுக்கள் தின்று கழிமீன் கவர்வார்கள்.''

என்றும்,

''கழிக்கறைப் படுமீன் கவர்வார்.''

என்றும்,

''கழியருகு பள்ளியிடமாக வடுமீன்கள் கவர்வாரும்.''

என்றும், பௌத்தத் துறவிகள் மீன்பிடித்த செய்தியைக் கூறுகிறார். சமண சமய நூலாகிய நீலகேசி உரையிலும் பௌத்தர் கழிகளிலே மீன்பிடித்த செய்தி கூறப்படுகிறது.

## 5. அரசரைப்பற்றிய செய்திகள்

சம்பந்தர் காலத்துக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு, சங்க காலத்தின் கடைசியில் இருந்த செங்கண் சோழனை இவர் தமது தேவாரத்தில் சிற்சில இடங்களில் குறிப்பிடுகிறார். அவரைத் தவிர, வெங்குரு, சிரபுரம், புறவம், சண்பை என்னும் வேறு பெயர்களையுடைய சீகாழியில் இவர் காலத்துக்கு முன்பு அரசாண்ட சில அரசர்களின் பெயரைக் கூறுகிறார். அவ்வரசர்கள் தருமன், சிலம்பன், தேர்வலவன், சண்டன், நந்தன் என்பவர்கள்.

''செங்கோல் நடாவிப் பல்லுயிர்க்குஞ் செய்வினை
மெய்தெரிய
எங்கோத் தருமன் மேலியாண்ட வெங்குரு மேயவனே.''

''தலையாய்க் கிடந்திவ் வையமெல்லாந் தன்னதோராணை
நடாய்ச்
சிலையால் மலிந்த சீர்ச்சிலம்பன் சிரபுர மேயவனே.''

''ஒருதேர் கடாவி ஆரமருள் ஒருபது தோள்தொலையப்
பொரு தேர் வலவன் மேவி யாண்ட புறவமர்
புண்ணியனே.''

*''தவர்செய் நெடுவேல் சண்டனாளச் சண்பை*
*யமர்ந்தவனே.''*

*''நட்டார் நடுவே நந்தனான நல்வினையா லுயர்ந்த*
*கொட்டாறுடுத்த தண்வயல்சூழ் கொச்சை யமர்ந்தவனே.''*

இதில் கூறப்படுகிற தருமன், சிலம்பன், தேர்வலவன், சண்டன், நந்தன் என்பவர் யாவர்? சோழநாட்டை யாண்ட இவர்கள் சோழ அரசரா, பல்லவ அரசரா, அல்லது வேறு குலத்து அரசரா? என்பது தெரியவில்லை. இதில் தேர் வலவன் என்பவன் ஐந்து பகையரசரின் (ஒருபது தோள்களை) அழித்தான் என்று கூறப்படுகிறான். அந்தப் பகையரசர்யாவர்?

திருமூக்கீச்சரக் கோயிலைக் கட்டியமைத்தவர் சேர சோழ பாண்டியர் என்று கூறுகிறார். ''தென்னவன் கோழியெழில் வஞ்சியும் ஓங்கு செங் கோலினான் செய்த மூக்கிச்சரம்'' என்றும், ''வடமனீடு புகழ்ப் பூமியின் தென்னவன் கோழிமன்'' செய்த மூக்கீச்சரம் என்றும், ''அந்தண மாதன னேரியன் செம்பியனாக்கிய'' மூக்கீச்சரம் என்றும், ''சீரினாலங்கொளிர் தென்னவன் செம்பியன் வில்லவன்'' சேரும் மூக்கீச்சரம் என்றும் கூறுகிற இவர், மூவேந்தரின் கொடிகளையும் கூறுகிறார்.

*''செருவிலாரும் புலி செங்கயல் ஆனையினான் செய்த*
*பொருவின் மூக்கீச்சரத்தெம் அடிகள்.''*

என்று கூறுகிறார். இதில் சோழருடைய புலிக் கொடியையும் பாண்டி யருடைய மீன் கொடியையும் கூறி, சேரருடைய விற்கொடியைக் கூறாமல் ஆனைக் கொடியைக் கூறுகிறார். சேரர்களுக்கு யானைக் கொடியும் இருந்ததென்பது இதனால் தெரிகிறது. யானைக் கொடி எந்தக் காலத்தில் சேரர்களுக்குரியதாயிருந்தது என்பதை ஆராய்வது சரித்திர வரலாற்றுக்கு முக்கியமாகும். தென்னாட்டிலே யானை பொறித்த காசுகள் வழங்கி வந்தன என்று நாணய ஆராய்ச்சியாளர்கள் (*Numismatics*) கூறுகிறார்கள். இவற்றை யாராய்வது தமிழ் நாட்டுச் சரித்திர வரலாற்றாசிரியர் கடமையாகும்.

சம்பந்தர் தமது காலத்திலோ அல்லது தமக்கு முற்பட்ட காலத்திலோ இருந்த பல்லவ மன்னர்களைத் தமது தேவாரத்தில் குறிப்பிடவில்லை.

ஆனால், தமது காலத்திலிருந்த சோழ அரசனைக் குறிப்பிடுகிறார். அந்தச் சோழ மன்னன் பெயரைக் கூறவில்லை. நெடுமாறன் என்னும் கூன் பாண்டியன் மனைவியாராகிய பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசி யாரின் தந்தையாகிய சோழனை அவர் குறிப்பிடுகிறார். அந்தச் சோழனை மணிமுடி தரித்துப் பெரிய இராச்சியத்தை யரசாண்டவன் என்று கூறுகிறார்:

**''மண்ணெலாம் திகழ மன்னனாய் மன்னு**
**மணிமுடி சோழன் றன் மகளாம்**
**பண்ணினேர் மொழியாள் பாண்டிமாதேவி**
**பாங்கினாற் பணிசெய்து பரவும்.''**

ஆலவாய்த் திருக்கோயில் என்று கூறுகிறார். இது சரித்திரத்துக்கு முரண் பட்ட செய்தி. மங்கைர்க்கரசியின் தந்தையாரான சோழ அரசன், பல்லவ அரசருக்குக்கீழ் (மகேந்திரவர்மன் நரசிம்மவர்மனுக்குக் கீழ்) குறுநில மன்னனாக இருந்தார் என்று சரித்திரம் கூறுகிறது.

ஞானசம்பந்தர், சமண சமயத்தவனாக இருந்த பாண்டிய நெடு மாறனைச் சைவசமயத்தில் சேர்த்தனர் என்பதை முன்னமே கூறியுள்ளோம்.

## 6. பழமொழி, திருக்குறள்

ஞானசம்பந்தர் தம்முடைய தேவாரப்பதிகங்களில் எடுத்தாளும் பழமொழிகளும் திருக்குறளும் வருமாறு:-

**''மடங்கொண்ட விரும்பியராய் மயங்கியோர்**
**பேய்த்தேர்ப்பின்**
**குடங்கொண்டு நீர்க்குச் செல்வார்...''**

**''தாமலார் போலவே தக்கனார் வேள்வியை**
**ஊமனார்தங் கனாவாக்கினான் ஒரு நொடி.''**

**''எழுந்துவகை நலிந்துழலும் அவுணர்கடம்**
**புரமூன்றும் எழிற்கணாடி**
**உழந்துருளு மளவையி னொள்ளெரி கொளவெஞ்**
**சிலை வளைத்தா னுறையுங் கோயில்.''**

*"அகர முதலானை அணியாப்ப னூரானைப்*
*பகரு மனமுடையோர் வினைபற்றறுப் பரே."*

*(திருஆப்பனூர் 5)*

*"செடிகணோயாக்கைப் பாம்பின்வாய்த்*
*தேரைவாய்ச் சிறுபறவைக்*
*கடிகொள் பூந்தேன் சுவைத் தின்*
*புறலாமென்று கருதினாயே."*

*(சம்பந்தர் II திருவாரூர் 6)*

# 7. நாளும் கோளும்

கோளும் நாளும் பார்த்துப் பிரயாணம் செய்யும் வழக்கம் ஞானசம்பந்தர் காலத்தில் இருந்தது என்பது அவருடைய தேவாரப் பாடல்களால் தெரிகிறது.

*"கோளும் நாளும் தீயவேனும் நன்காம் குறிக்கொண்மினே."*

*( II திருநாகேச்சரம் 6)*

என்று அவர் கூறுகிறார்.

*"ஒன்பதொ டொன்றோ டேழு பதினெட்டோ டாறு*
*முடனாய நாள்கள் அவைதான்*
*அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல*
*அடியாரவர்க்கு மிகவே."*

என்று பிராயணத்திற்கு ஆகாத பன்னிரண்டு நட்சத்திரங்களை அவர் கூறுகிறார். இதில் ஒன்பது என்றது கிருத்திகைக்கு ஒன்பதாவதாகிய பூரம், ஒன்று என்றது கிருத்திகை, ஏழு என்றது ஆயிலியம், பதினெட்டு என்றது பூராடம். ஆறுடன் ஆய நாட்கள் என்றது மேலே கூறிய நான்கு நட்சத் திரங்கள் அல்லாத ஏனைய எட்டு நட்சத்திரங்கள். அவை: பூரட்டாதி, மகம், கேட்டை, பரணி, சுவாதி, விசாகம், ஆதிரை, சித்திரை என்பன.

''தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய், ஆன சொன்மாலை'' என்றும் கூறுகிறார்.

இதனால், இவர் காலத்தில் நாள்கோள் பார்க்கும் வழக்கம் உண்டென்பது தெரிகிறது.

## 8. சமணமுனிவர் குன்றுகளில் தங்கியது

சமண முனிவர்கள் மலைக் குகைகளில் தங்கி தவம் செய்து வந்தனர். மலைக் குகைகளுக்குப் பாழி என்பது பெயர். குன்றுகளிலுள்ள பாழிகளில் சமண முனிவர் தங்கியிருந்த செய்தி, அப் பாழிகளில் இப்போதும் காணப்படுகிற கற்படுக்கைகளினாலும், கல்வெட்டுச் சாசனங்களினாலும் தெரிகிறது. ஞான சம்பந்தரும் தமது தேவாரத்தில் 'பாழியுறை வேழநிகர் பாழமணர்'' என்று கூறுகிறார். அன்றியும், இவர் காலத்திலே மதுரை மாநகரத்தைச் சூழ இருந்த யானை மலை முதலிய மலைகளிலே சமண முனிவர் இருந்த செய்தியையும் கூறுகிறார்:

**''ஆனைமாமலை யாதியாய விடங்களில் பல அல்லல் சேர்**
**ஈனர்கட் கெளியேனலேன் திருவாலவாய் அரனிற்கவே.''**

என்று திருவாலவாய்ப் பதிகத்தில் கூறுகிறார். இவர் கூறுகிற **யானை மலையாதியாய** இடங்கள் என்பது மதுரையைச் சூழ்ந்துள்ள யானை மலை, நாகமலை, **இடபமலை**, சமண மலை முதலான எட்டு மலைகள். இந்த எட்டு மலைகளில் சமண முனிவர் இருந்தனர் என்பதைப் பெரியபுராணம், ''எண்பெருங் குன்றத்து எண்ணாயிரஞ் சமணர்,'' என்று கூறுகிறது.

யானைமலை என்பது, யானை படுத்திருப்பதுபோல அமைந்த மலை. நாகமலை என்பது நாகப்பாம்பு படுத்திருப்பது போன்ற மலை. இயற்கையாக யானையும் நாகப்பாம்பும் போன்று அமைந்துள்ள இந்த மலைகளைப் பற்றி இடைக் காலத்திலே சில கதைகள் கற்பிக்கப்பட்டன. சமணர் தமது மந்திர சக்தியினாலே யானையை மலைப்பாம்பு விழுங்குவதுபோலக் காட்டிப் பாண்டிய அரசனை வசப்படுத்தினார்கள் என்பது ஒரு கதை. இந்தக் கதையைத் தக்கயாகப் பரணி உரையாசிரியர் தமது உரையில் குறிப்பிடுகிறார். இந்தக் கதை சமணர் மந்திர சக்தியுடையவர் என்பதைக் காட்டக்

கற்பிக்கப்பட்டதுபோலும். ஞானசம்பந்தர் காலத்தில் இந்தக் கதை கற்பிக்கப்படவில்லை. அவர் காலத்தில் இக்கதை வழங்கியிருந்தால் இதனைத் தமது தேவாரத்தில் கூறியிருப்பார். அவர் காலத்தில் இக்கதை வழங்காதபடியால், சமணர்கள் வசித்த யானைமலை முதலிய மலைகள் என்று மட்டும் கூறினார்.

இன்னும் பிற்காலத்தில் யானையைப் பாம்பு விழுங்கிய கதை வேறு விதமாகக் கற்பிக்கப்பட்டது. சமணர் தமது மந்திர சக்தியினால் யானையை யுண்டாக்கி, அதனை மதுரையை யழிக்கும்படி விட்டனர் என்றும் அதனைச் சிவபெருமான் நரசிங்க அம்பு எய்து கொன்றார் என்றும், பிறகு மலைப் பாம்பை யுண்டாக்கி அனுப்ப அதனையும் அவர் அம்பு எய்து கொன்றார் என்றும், அவ்வாறு கொல்லப்பட்ட யானையும் பாம்பும் மலையாக அமைந்து யானைமலை நாகமலை எனப் பெயர்பெற்றன என்றும் பிற்காலத்தில் கதைகள் கற்பிக்கப்பட்டன. இக்கதைகளைத் திருவிளையாடற் புராணத்தில் காணலாம்.

ஞானசம்பந்தர் காலத்துக்குச் சற்றேறக்குறைய ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு யானைமலையிலிருந்த குகையில் வைணவர் நரசிங்கப் பெருமாளை அமைத்தனர் என்னும் செய்தி அங்குள்ள கல்வெட்டுச் சாசனம் கூறுகிறது. யானைமலை முதலிய எண்பெருங் குன்றுகளைப் பற்றி இந்நூலாசிரியர் எழுதியுள்ள **சமணமும் தமிழும்** என்னும் நூலில் காணலாம்.

## 9. இசை, ஆடல், பாடல்

இசை ஆடல் பாடல் ஆகிய கலைகளைப்பற்றி ஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் குறிப்பிடுகிறார். இந்தக் கலைகள் அக் காலத்திலே நமது நாட்டில் நன்கு பயிலப்பட்டன என்பது தெரிகிறது. இக் கலைகளைப்பற்றி அவர் குறிப்பிடுகிற பகுதிகளைக் கீழே தருகிறோம்:

**''பண்ணின் நல்ல மொழியார், பவளத்துவர் வாயினார்**
**எண்ணின் நல்ல குணத்தார், இணைவேல்**
**வென்றகண்ணினார்**
**வண்ணம்பாடி வலிபாடித் தம் வாய்மொழி பாடவே,''**

''புரிகுழலார் சுவடொற்றி முற்றப்
பாவிய பாடல் அறாத அலூர்,''

''விழவொ டொலிமிகு மங்கையர் தகுமாடசாலை
முழவொடிசை நடமுஞ் செயு முதுகுன்று,''

''கருகு குழல் மடவார் கடி குறிஞ்சியதுபாடி
முருகன்னது பெருமை பகர் முதுகுன்று,''

''நொம் பைந்து புடைத் தொல்கு
நூபுரஞ்சேர் மெல்லடியார்
அம்பந்தும் வரிக்கழலும் அரவஞ்செய் பூங்காழி,''

''கருந்தடங் கண்ணார் கழல் பந்தம்மானைப் பாட்டயரும்
கழுமலம்,''

''பண்ணின்மொழியார் பாடலோவாப் பாசூர்,''

''பண்ணியல் பாடலறாத ஆலூர்,''

''வேலியின் விரைக் கமல மன்ன முகமாதர்
பாலென மிழற்ற நடமாடு பழுவூர்,''

''பண்ணி யாழ் பயில்கின்ற மங்கையர்
பாடலாட லோடார வாழ்பதி'' திருக்களர்.''

''சரியின் முன்கை நன்மாதர் சதிர்பட மாநடமாடி
யுரிய நாமங் களேத்தும் ஒலிபுனற்காழி நன்னகர்,''

''பஞ்சியாரு மெல்லடிப்
பணைத்த கொங்கை நுண்ணிடை
அஞ்சொலார் அரங்கெடுக்கும்
அந்தணாரூர் என்பதே,''

''வாசமலர் கோதுகுயில் வாசகமும்
மாதரவர் பூவை மொழியும்
தேசவொலி வீணையொடு கீதமது
வீதிநிறை தேவூர்,''

''வாசமலர் மென்குழல் மடந்தையர்கள்
மாளிகையின் மன்னி யழகார்
ஊசல்மிசை யேறி இனிதாக இசை
பாடுதவி மாணி குழியே,''

''சொல்வள ரிசைக் கிளவிபாடி
மடவார் நடமாடும்,'' திருநல்லூர்.

''பண்ணிடை ஒன்பதும் உணர்த்தவர்,''

''மாலையில் வண்டினங்கள் மதுவுண் டிசை
முரலவைத்த பாலையாழ்ப் பாட்டு,''

''சேறாடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்த வண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழிநற்
பண்பாடும் மிழலையாமே,''

''செங்கயல் லொடு சேல் செருச் செயச்
சீறியாழ் முரல் தேனினத்தொடு
பங்கயம் மலரும் புறவார் பனங்காட்டூர்,''

''பஞ்சுரம் பாடி வண்டியாழ் முரலும் பருதிநியமமே,''

''கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவை யாரே.''

மேலும், இசைக் கருவிகளையும் தமது பாசுரங்களில் குறிப்பிடுகிறார். அப் பகுதிகளில் சில வருமாறு:

''துளைபயிலுங் குழலியாழ் முரலத்
துன்னிய வின்னிசையாற் றுதைந்து,''

''மோந்தை முழாக் குழல் தாளமொர் வீணை
முதிர வோர் வாய்மூரி பாடி,''

''பண்ணுமூன்று வீணையோடு,''

''குழலினோசை வீணை மொந்தை
கொட்டமுழ வதிர,''

''தண்டுடுக்கை தாளந் தக்கை
சார நடம் பயில்வார்,''

''தமிழினீர்மை பேசித் தாளம்
வீணை பண்ணி நல்ல
முழவ மொந்தை மல்குபாடல்
செய்கையிட மோவார்,''

''பாடல் வீணை முழவங்
குழல்மொந்தை பண்ணாகவே
ஆடுமாறு வல்லான்,''

''பாராரு முழவ மொந்தை குழலியாழொலி
சீரா லே பாடலாடல் சிதைவில்ல தோர்,''

''தண்டுந் தாளமுங் குழலுந் தண்ணுமைக் கருவியும்,''

''கத்தரிகை துத்திரி கறங்குதுடி தக்கையொ டிடக்கை படக
மெத்தனையு லப்பில் கருவித்திர ளலம்ப,''

''சல்லரி யாழ்முழவ மொந்தை குழல்தாள மதியம்ப.''

## 10. திரு ஏகபாத உரை

ஏகபாதம் என்பது, ஒரு செய்யுளின் முதல் அடி போலவே ஏனைய அடிகளும் வருவது. இதற்குப் பொருள் கூறுவது கடினம். திருஞானசம்பந்தர் இயற்றிய இந்தத் திரு ஏகபாதப் பதிகத்துக்கு ஒரு பழைய உரை உண்டு. மகா வித்வான் காஞ்சீபுரம் சபாபதி முதலியார் அவர்கள் 1864-இல் அச்சிட்ட தேவாரத் திருமுறையில், அந்தப் பழைய உரையை அச்சிட்டிருக்கிறார்கள். அவ்வுரையை ஈண்டுத் தருகின்றேன்.

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்

முதலடி

**பதப்பொருள்** : பிரமம் - ஞானாகாசமாகிய பராசத்தியை, புரத்துறை - அந்தப் பரிபூரணத்தை மிகுதியாக வியக்கப்பட்டது, பெம்மான் - பெருமான், எம்மான் - எந்தப் பெரியோன்.

**பொழிப்பு** : ஞானாகாசமாகிய பராசத்தியான பரிபூரணத்தை மிகுதியாக வியந்து அந்தப் பராசக்திக் கதீதமாகிய சுகமே வடிவாய் முதல் நடு விறுதி காணப்படாத வஸ்து எந்தப் பெரியோன்.

இரண்டாமடி

**பதப்பொருள்** : பிரமபுரத்து - மேல் நிலத்து, உறை - தண்ணீர், பெரும் - விருப்பம், மான் - மான்போலும் விழியுடைய பெண், எம் - எம் முடைய, ஆன் - ஆன்மா.

**பொழிப்பு** : மேல் நிலமாகிய ஆகாசத்தின்கண்ணே யோடா நின்ற கங்காதேவியை விரும்பித் திருமுடியிலே வைத்தவன், எம்மை நீங்காத நிலைமையையுடைய எமதுயிர்.

மூன்றாமடி

**பதப்பொருள்** : பிரமம் - பிரமதத்துவம், புரம் - சரீரம், உறை - எண்ணுதல், பெம் - ஆசை, ஆன் - அமையாமை, எம்மான் - என்னை யொக்க வந்தவன்.

**பொழிப்பு** : பிரம ரூபத்திலே யெண்ணப்பட்ட என்னை முத்தியிலே விடுகைக்கு அமையாத விருப்பமுள்ளவனா யென்னை யொக்க வந்தவன்.

நான்காமடி

**பதப்பொருள்** : பிரமபுரத்துறை - பிரமபுரமென்கிற சீகாழிப்பதி யிலே வீற்றிரா நின்ற, பெம்மான் - கர்த்தா வானவன், எம்மான் - என் னுடைய சுவாமி.

*பொழிப்பு* : பிரமபுரமென்கிற சீகாழிப் பதியிலே வீற்றிரா நின்ற கர்த்தாவானவன் என்னுடைய சுவாமி.

பெரியோனும் எனக்குயிரானவனும் என்னை யொக்க வந்தவனும் சீகாழிப் பதியில் வீற்றிருக்குங் கடவுளெனக் கூட்டிப் பொருள் கொள்க.

**விண்டலர் பொழிலணி வேணுபுரத்தரன்**
**விண்டலர் பொழிலணி வேணுபுரத்தரன்**
**விண்டலர் பொழிலணி வேணுபுத்தரன்**
**விண்டலர் பொழிலணி வேணுபுரத்தரன்**

முதலடி

**பதப்பொருள்**: விண்டு - மலை; அலர் - ஒலி, பொழில் - உலகம், அணிவு - அகப்படுதல், ஏண் - பெருமை, நுபுரம் - சிலம்பு, தரன் - தரித்துள்ளவன்.

*பொழிப்பு* : அஷ்டகுல பர்வதங்களும், ஒலி சிறந்த தரிசு மணி யாகவும், அகில லோகங்களையும் உள்ளே யகப் படுத்துந் தன்மையவாயும், பெரிதாயுமுள்ள திருச்சிலம்பினைத் தரித்துள்ளவன் (நூபுரம் எனற்பாலது, நுபுரம் எனக் குறுகிநின்றது)

இரண்டாமடி

**பதப்பொருள்** : விண்டு - விஷ்ணு, அலர் - புறனுரை, பொழில் - அரசினிழல், அணி - பொருந்தி, வேணு - விருப்பம், புரத்து அரன் - புரத்தையரித்தவன்.

*பொழிப்பு* : விஷ்ணுவின் புறனுரையாகிய சிவதூஷணத்தை அரச மரனீழலில் அவனுடனிருந்து விரும்பியுள்ள முப்புரங்களைச் சங்கரித் துள்ளவன். (அண்ணி யெனற்பாலது, அணியென இடைக்குறைவாய் நின்றது.)

மூன்றாமடி

**பதப்பொருள்** : விண்தலர் - தேவர்கள், பொழில் - கற்பகப் பூஞ் சோலை, அணிவு - சூடுதல், ஏணு - எண்ணும், புரத்தரன் - தேவேந்திரன்.

***பொழிப்பு*** : தேவர்கள் கற்பகப் பூஞ்சோலை மலர்களால் அர்ச்சிக்கப் படுகின்ற தேவேந்திரனுடைய. (எணு எனற்பாலது, ஏணு என நீண்டது. புரந்தரன் எனற்பாலது, புரத்தரனென வலித்து நின்றது.)

நான்காமடி

***பதப்பொருள்*** : விண்டு - இதழ்கள் விண்டு, அலர் - மலர்கின்ற, பொழில் அணி - சோலை சூழ்ந்த, வேணுபுரத்து அரன் - வேணு புரமென்று மொரு பெயருள்ள சீகாழிப்பதிக்குக் கர்த்தா.

***பொழிப்பு*** : இதழகள் விண்டு மலர்கின்ற சோலை சூழ்ந்த சீகாழிப் பதிக்குக் கர்த்தாவாயுள்ளவன். (தேவேந்திரன் மூங்கில் வழியாக வந்து பூசித்ததால் வேணுபுரமென்னும் பெயர் பெற்றது.)

சிலம்பினைத் தரித்துள்ளவரும், முப்புரத்தை யெரித்தவரும், தேவேந்திரனுடைய சோலை சூழ்ந்த வேணுபுரத்தில் வீற்றிருக்கும் இறைவரெனக் கூட்டி யுரைத்துக் கொள்க.

***புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே***
***புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே***
***புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே***
***புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே***

முதலடி

***பதப்பொருள்*** : புண்டரிகத்தவன் - இதய கமலத்திலுள்ளவன், மேவிய புகலியே - எனக்கின்பந் தருவானுமாய் மீளா வழியாகிய புகலிட மாயுமுள்ளவன்.

***பொழிப்பு*** : இதய கமலத்திலிருந் திடையறாத வானந்தம் பொழியப் பட்டென்னை மலபோதத்தில் தள்ளாமல் எனக் கடைக்கலப் பொருளாயுள்ளவன்.

இரண்டாமடி

***பதப்பொருள்*** : புண்டரிகம் - திரிபுண்டரம், தவன் - மிக்க பெருமை யையுடையவன், மேவிய - பொருந்திய, புகலி - சொல்லப்பட்டவன். ஏ - என்பதீற்றசை.

**பொழிப்பு** : ஆன்மாக்களுக்கு இரக்ஷையாக முண்டம் போலிருந்த திருநீற்றை யணியப்பட்ட மிக்க கருணையானவனே யான் பாடும் பாடலை யுவந்துள்ளவன்.

மூன்றாமடி

**பதப்பொருள்** : புண்டரிகம் - புலி, தவன் - தவமுனி, மே - கூத்து, வியம் - பொன், பு - பொது, கலி - கற்றவன்.

**பொழிப்பு** : புலிக்காலும் புலிக் கையும் பெற்றுள்ள வியாக்கிரபாத முனிவருக்கு ஞானானந்தமாகிய நாடகத்தைக் கனகசபையிலே யாடல் செய்யும் பரதவித்தையைக் கற்றுள்ளான். (வியம் எனற்பாலது, வியவெனக் கடை குறைந்து நின்றது.)

நான்காமடி

**பதப்பொருள்** : புண்டரிகத்தவன் - பிரமதேவன், மேவிய - தனது போதத்தாலே பணியலுற்ற, புகலியே - புகலியென்னுஞ் சீகாழிப்பதியே.

**பொழிப்பு** : கீழ்ச் சொன்ன லீலைகளெல்லாஞ் செய்கின்ற சிவன் தனதிச்சையால் பொருந்தியிருக்குமூர் பிர்மாவானவன் பூசித்த புகலி யென்னுந் திருப்பதி.

**விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்**
**விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்**
**விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்**
**விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்.**

முதலடி

**பதப்பொருள்** : விள - விளாம்பழத்தை, கொளி - கன்று குணிலாக எறிந்து கொண்டவனாகிய விஷ்ணு, தி - விட்டு விளங்கா நின்ற, கழ்தரு - நின்மல நீடிய, எங்கு - எவ்விடத்தில், உருமேவினன் - தனது திருமேனி யிலே மேவினன்.

**பொழிப்பு** : கன்று குணிலாக எறிந்து விளவின் கனியைக் கொண்ட நாரணனைப் பிரகாசஞ் செய்யப்பட்டு நின்மலமாயிருந்துள்ள தனது பெரிய

திருமேனியிலே ஒன்று பாதியாக வைத்துள்ளான். (தீ எனற்பாலது, தி எனக் குறுகிநின்றது. கழுதரு எனற்பாலது, கழ்தரு என நின்றது.)

இரண்டாமடி

***பதப்பொருள்*** : விலங்கு எனற்பாலது விளங்கு எனவும், ஒலி எனற் பாலது ஒளி எனவுந் திரிந்து நின்றது. விலங்கு - மாறு பாடாய், ஒலி - கதறப்பட்ட பௌத்தனது தலையிலே, தீ - அக்கினியைச் சொரிந்து, கழ்தரு - மிக்க பயத்தோடும் விழுகின்ற, எங்கு - ஒலிக்கும், உருமு - இடியை, ஏவினன் - விழும்படி யேவினன்.

***பொழிப்பு*** : மாறுபாடாய்க் கதறப்பட்ட பௌத்தனது தலையிலே அக்கினியைச் சொரிந்து மிக்க பயத்தோடும் விழுகின்ற இடியை விழும்படி யேவிப் பௌத்தரை வேரறுத்தானுந் தானேயன்றி யானன்றாகும்.

தீ எனற்பாலது தி எனவும், காழ்தரு எனற்பாலது கழ்தரு எனவும், ஏங்கு எனற்பாலது எங்கு எனவுங் குறுகி நின்றன.

மூன்றாமடி

***பதப்பொருள்*** : விள் - நீங்குதல், அங்கு - அவ்விடத்தில், ஒளிது - ஒள்ளியது, இதழ்தரு - இகழப்படும், எங்குரு - எம்முடைய குரு, மேவினன் - கலந்தனன்.

***பொழிப்பு*** : தனது பரிபூரணத்திலே தன்னையிழந்து இரண்டாய் விசுவமுருகித் தான் விஷமாகத் தூஷணப்பட்டு நிற்கின்ற எனக்கும் குருமூர்த்தியாய் வந்து என்பிறவியை யொழித்துத் தனது பேரின்பமாகிய பரிபூரணத்திலே எனதடிமை குலையாம லிரண்டற வைத்தவன்.

நான்காமடி

***பதப்பொருள்*** : விளங்குஒளி - எங்கும் பிரகாசியா நின்ற கீர்த்தி, திகழ்தரு - சிறத்தல், வெங்குரு - இயமனால் பூசிக்கப்பட்ட திருப்பதி, மேவினன் - விரும்பினன்.

***பொழிப்பு*** : கீழ்ச் சொல்லிப் போந்த செய்திகளெல்லாமுடைய னெத்தன்மையனோ வென்னில், எங்கும் பிரகாசியாநின்ற சீருத்தியினாற்

சிறக்கப்பட்டுள்ள இயமனாற் பூசிக்கப்பட்ட வெங்குரு வென்னும் திருப்பதியை விரும்பியுள்ளான். (வெங்குரு என்பதும் சீகாழி.)

**சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்**
**சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்**
**சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்**
**சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்**

முதலடி

**பதப்பொருள்** : சுடர்மண் - சூடார்மண், இம் - ஈமம், ஆளி - ஆளப்பட்டவன், கைத்தோணி - போர்தொலைத்த தும்பைமாலை, புரத்து - திரிபுரங்களையும், அவன் - அவம் பண்ணினவன்.

**பொழிப்பு** : சுடுநிலமாகிய மயானத்தை நடமாடுமிடமாகக் கொண்டும், முப்புரங்களையும் நகைசெய்து சுடப்பட்ட வெற்றிப் போரையுடைய தும்பைமாலைக் கடவுள்.

சூடார் எனப்பாலது சுடர் எனவும், ஈமம் எனற்பாலது இம் எனவும் குறுகிநின்றன. துரோணமெனற்பாலது தோணியென மருவிற்று.

இரண்டாமடி

**பதப்பொருள்** : சுடர்மணி - சூடாமணி, மாளி - மாலி, கைத்தோள் - துதிக்கையினையுடைய யானையை, நிபுரத்தவன் - வடிவில்லாமற் செய்தோன்.

**பொழிப்பு** : என்னுச்சிக்குச் சூடாமணியாய் என்மேல் வைத்த மாலினையுடையவனுமாய் யாகத்தின்கண் வந்த யானையை வடி வொழித்துப் போர்க்குந் தன்மையையுடையவன்.

சூடாமணி யெனற்பாலது சுடர்மணி யெனவும், மாலியெனற்பாலது மாளியெனவும், தோல் எனற்பாலது தோள் எனவும் நின்றன. மாலையை யுடையவன் மாலி. தோல் - யானை.

மூன்றாமடி

**பதப்பொருள்** : சுடர் - சூரியன், மணி - கழுவி, மாளி - கெட்டவன், கைத்தோணி - தெப்பம், புரத்தவன் - புரந்தவன்.

***பொழிப்பு*** : சூரியனுடைய களங்கத்தைக் கழுவப்பட்ட சமுத்திரம்போன்ற செனனக்கடலிலே கீழ்ப்பட்டழுந்திக் கெடாநின்ற ஆன்மாக்களுக்குக் கைப்பற்றிக் கரையேறுந் தெப்பமாகப் பிரணவ மென்கிற மந்திரத்தை அவரது செவியின்கண்ணே யுண்டாக்கா நின்றவன்.

மண்ணி என்பது மணியென இடைகுறைந்து நின்றது. புரந்தவன் எனற்பாலது புரத்தவன் என வலித்தல் விகாரமாயிற்று.

நான்காமடி

**பதப்பொருள்** : சுடர் - விளக்கத்தையுடைய, மணி - நவரத்தினங்களாலே அலங்கரிக்கப்பட்ட, மாளிகை - மாளிகைகள் சூழ்ந்த, தோணிபுரத்தவன் - திருத்தோணி புரத்தின் கண்ணே வாழ்கின்றவன்.

***பொழிப்பு*** : விளக்கத்தை யுடைய நவரத்தினங்களாலே அலங்கரிக்கப்பட்ட மாளிகை சூழ்ந்த திருத்தோணி புரத்திலே வீற்றிருக்குஞ் சிவன் இத்தன்மையன்.

***பூசுரர்சேர் பூந்தராயவன் பொன்னடி***
***பூசுரர்சேர் பூந்தராயவன் பொன்னடி***
***பூசார்சேர் பூந்தராயவன் பொன்னடி***
***பூசுரர்சேர் பூந்தராயவன் பொன்னடி.***

முதலடி

**பதப்பொருள்** : பூ - பூமியிலுள்ளோர், சுரர் - தேவர்கள், சேர் - தோன்றுதல், பூ - இதயகமலம். தராயவன் - தரித்தவன், பொன் - பொலிவு, அடி - கண்ணாடி.

***பொழிப்பு*** : பூமியிலுள்ளாரையுந் தேவகணங்களாயுள்ளாரையுந் தனது நாபிக்கமலத்திலே தோற்றுவிக்கப் பட்ட பிரம்மா, விஷ்ணுவினது போதத்திலே கண்ணாடியும் நிழலும்போலப் பிரதிவிம்பியா நின்றவன். (ஆடி என்பது அடியெனக் குறுகிநின்றது)

இரண்டாமடி

**பதப்பொருள்** : பூசுரர் - மலத்தைக் கழுவிய சிவஞானிகள், சேர் - திரட்சி, பூ - பொலிவு, தராய் - பெறப்பட்ட, அவன் - அக்கடவுள், பொன் - வனப்பு நடி - நாடகமாடப்பட்டவன்.

***பொழிப்பு*** : மலத்திரயங்களைக் கழுவப்பட்ட சிவஞானிகள் கூட்டம் பொலிவு பெறத்தக்க வனப்பையுடைய ஆனந்த நிருத்தஞ் செய்தருள்பவன்.

மூன்றாமடி

***பதப்பொருள்*** : பூசு - திருநீற்றையுத் தூளிக்கப்பட்ட, உரர் - மார்பையுடையவர், சேர்பு - அரிதல், ஊளந்தாய் - தள்ளுதல், யவன் - யௌவனம், பொன் - அழகு, அடி - மூலம்.

***பொழிப்பு*** : சர்வாங்கமு முத்தூளனம் பண்ணின மார்பையுடைய சிவஞானிகளும், புண்ணிய பாவக்கட்டை யரிந்து விசுவத்தைத் தள்ளப் பட்ட சிறப்பையுடையருமா யிராநின்றவர்களுக்கு மிகுதியான மூலமா யுள்ளவன்.

உந்தராய் என்பது ஊந்தராயென நீண்டது.

நான்காமடி

***பதப்பொருள்*** : பூசுரர் - மறையோர், சேர் - திரட்சி, பூந்தராயவன் - பூந்தராயென்னுந் திருப்பதியிலே யுள்ளவன், பொன்னடி - அழகிய திருவடித் தாமரை.

***பொழிப்பு*** : மறுவிலா மறையோர் வாழ்கின்ற திருப்பூந்தரா யென்னுந் திருப்பதியின்கண் வீற்றிராநின்ற சிவனது அழகிய திருவடித் தாமரை யென்னை யாண்டிடுவதாக. (பூந்தரா யென்பது சீகாழி.)

***செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்***
***செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்***
***செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்***
***செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்***

முதலடி

***பதப்பொருள்*** : செருக்கு - மயக்கம், வாய்ப்பு - மேலீடு, உடையான் - கேடு செய்யான், சிரபுரம் - மேலாகிய இருப்பு , என்னில் - என்னுடைய போதமே.

**பொழிப்பு** : தனது திருவடிப் பிரசாத மில்லாதார்க்கு மலமயக்கத்தின் மேலீட்டைக் கெடாத சிவனுக்கு விசுவாதீனமான இருப்பிடம் எனது சைதனியமே.

இரண்டாமடி

**பதப்பொருள்** : செர் - சத்தாதிகளஞ்சுஞ் சேரப்பட்ட, உக்கு - அந்தப் பூமி, வாய்ப்புடையான் - தன் வாயினிடமாகவுள்ள விஷ்ணு, சிர் - சிறப்பு, அபுரம் - உயிர்போன களே பரம், என்னில் - மேனிலை.

**பொழிப்பு** : சத்தாதிகளஞ்சுஞ் சேரப்பட்ட உலகத்தைத் தன் வாயி னிடமாகவுடைய விஷ்ணுவின் களேபரத்தைத் திருமேனியிலே தரித்துள்ளான்.

சேர் எனற்பாலது செர் எனவும், சீர் எனப்பாலது சிர் எனவுங் குறுகிநின்றன.

மூன்றாமடி

**பதப்பொருள்** : செருக்கு - ஆத்தும விகாரமாகிய கர்வம், வாய் - இந்திரியம், புடையான் - இடத்தான், சிரம் - மேல், புரம் - சரீரம், என்னில் - சத்தியம்.

**பொழிப்பு** : ஆத்தும விகாரமாகிய கர்வத்தினாலே இந்திரியங் களுக்கு விடயமாகிய சுவர்க்கத்தி லிச்சையை யுடையானுக்கு அந்தச் சுவர்க்கம் மெய்யாக விசேஷித்திருக்குமன்றே.

நான்காமடி

**பதப்பொருள்** : செருக்கு - இந்திரியயுத்தத்திற்கு, ஆய்ப்பு - இளைப்பு, உள்தையான் - உள் தைக்கப்பட்டான், சிரபுரமென்னில் - சிரபுரமென் றுரைக்கில்.

**பொழிப்பு** : இந்திரிய வன்மையாகிய யுத்தத்துக்கு இளையாமல் அந்த இந்திரியமாகிய பாணங்கள் தனதறிவுக்குள் தைக்கப்படான். தாற்பரியம் - ஒருகாற் சிரபுரமென்று சொன்னவிடத்துப் பஞ்சேந்திரியங் களையும் அவியப் பொருது சிவனுடைய திருவடியிலே அடையாநிற்பன்.

பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்

முதலடி

**பதப்பொருள்** : பொன் - பொலிவு, நடி - கூத்துடையான், மாது - பத்திரகாளி, அவர் - பூத கணங்கள், சேர் - தங்குதல், புறவத்தவன் - சுடு காட்டிலுள்ளவன்.

**பொழிப்பு** : பொலிவினையுடைய மாயாநிருத்தம் புரிகின்ற பத்திர காளியும், பூத பசாசும் பொருந்திய மயானமே திருக்கோயிலாகவுள்ளவன்.

இரண்டாமடி

**பதப்பொருள்** : பொன் - தூய்மை, அடி - வழி, மாதவர் - தபோதனர், சேர் - திரட்சி, புறவம் - முல்லை நிலம், தவன் - தவம் புரிந்துள்ளான்.

**பொழிப்பு** : சுத்தமான வழியைத் தரப்பட்ட மகா இருஷிகள் திரண்டு தவம் பண்ணாநிற்கும் ஆரணியத்தில் தனித்துத் தவம்புரியா நிற்குந் தபோதனன்.

மூன்றாமடி

**பதப்பொருள்** : பொன் - இலக்குமி, அடி - ஆபரணத்தொகுதி, மாது அவர் - இருடிபத்தினிகள், சேர்பு உறு - பிச்சையிட வந்தணைதல், அவத்தவன் - கலை சோர்தலைச் செய்த நிருவாணி.

**பொழிப்பு** : அழகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இலக்குமியையொத்த இருடிபத்தினிகள் பிச்சையிட வந்தணையுமிடத்துத் தனக்குள்ள நிருவாணத்தை அவர்களுக்குக் கொடுத்தவன்.

நான்காமடி

**பதப்பொருள்** : பொன் - பொன்னாற் செய்யப்பட்ட பாடக நூபுர காலாழிகள் முதலியவு மிடப்பட்ட, அடி - பாதம், மாதவர் - கன்னியர், சேர்

- இனமாய் விளையாடுதல், புறத்தவன் - திருப்புறவமென்கின்ற திருப் பதியில் வாழ்கின்றவன்.

**பொழிப்பு** : பொன்னாற் செய்யப்பட்ட பாடக நூபு ராதிகளைப் பாதங்களிலே யணிந்துள்ள கன்னியர் திரண்டு விளையாடும் புறவ மென்னுந் திருப்பதியில் வாழ்கின்ற சிவன். புறவம் என்பதுஞ் சீகாழி

**தசமுக னெரிதர வூன்று சண்பையான்**
**தசமுக னெரிதர வூன்று சண்பையான்**
**தசமுக னெரிதர வூன்று சண்பையான்**
**தசமுக னெரிதர வூன்று சண்பையான்**

முதலடி

**பதப்பொருள்** : தசமுகன் - தயவையுடையான், எரிதர - எரி வீசு, ஊன்று - அழுந்து, சண் - வேகம், பையான் - படம் பொருந்திய பாம்பையுடையான்.

**பொழிப்பு** : ஆத்துமாக்களிடத்துக் கருணை பிறக்குமிடமா யுள்ளவன். அக்கினி வீசப்பட்டுத் திருவரையிலே அழுந்தச் சாத்தியுள்ள விரிந்த படத்தினையுடைய பாம்பை அரைஞாணாக வுடையான்.

இரண்டாமடி

**பதப்பொருள்** : த - அது, சமூகம் - திரட்சி, நெரி - நேரானவன், தர - புவி, ஊன் - மாமிசம், துசு - தூசு, அண்பையான் - விரித்துடுத்தான்.

**பொழிப்பு** : எல்லா மிறந்து அந்தமாயுள்ள சிவஞானிகள் குழாத்துக்கு நேரிதாகிய சூனியமாயுள்ள பொருளைத் தோற்றுவித் துள்ளானுமாய்ப் புவியினது ஊன் பொருந்திய தோலாடையைத் திருவரை யிலே விரித்துடுத்தவன்.

நேரி எனற்பாலது, நெரி எனக் குறுகிநின்றது. தரக்கு எனற்பாலது தர எனக் குறைந்தது. தூசு எனற்பாலது. துசு எனக் குறுகி நின்றது. பாயான் எனற்பாலது, பையாவெனக் குறுகிப் போலியாயிற்று.

மூன்றாமடி

**பதப்பொருள்** : தசம் - தைசதம், உக - கெட, நெரி - எதிர்ப்பட்டவன், தாம் - மலை, ஊன் - திருவுளத்தடைத்தல், து - விசேஷ ஞானமுள்ளவன், சண் - சட்சமயம், பையான் - பயனாயுள்ளவன்.

**பொழிப்பு** : ஆத்தும விகாரமான அகங்காரம் போம்படி என்னறி விலெதிர்ப்பட்டவன் கயிலாய மலையைத் திருவுள்ளத்தடைத் தெழுந்தருளி யிருந்து ஆத்துமாக்களை யிரக்ஷியா நின்ற விசேஷத்தை யுடையவனென் றேத்தும் சட்சமயங்களுக்கும் அவரவர் கொண்ட பயனாயுள்ளவன்.

*(நேரி எனற்பாலது நெரியெனக் குறுகிநின்றது.)*

நான்காமடி

**பதப்பொருள்** : தசமுகன் - பத்துத் தலைகளையுடைய இராவணன், நெரிதர - முறிய, ஊன்று - அமுக்கிய, சண்பை யான் - சண்பை என்னும் திருப்பதியில் வீற்றிருப்பவன்.

**பொழிப்பு** : பத்துத் தலையுள்ள இராவணன் முறியும் படி திருவிரலா லடர்த்தவன் யாரென்னில், சண்பையெனனுந் திருப்பதியிலே வீற்றிருக்குங் கடவுள்.

**காழி யானய னுள்ளவா காண்பரே**
**காழி யானய னுள்ளவா காண்பரே**
**காழி யானய னுள்ளவா காண்பரே**
**காழி யானய னுள்ளவா காண்பரே**

முதலடி

**பதப்பொருள்** : காழியான - நிலைபெற்று நின்மலமா சித்தத்தை யுடைய பத்தரிடத்து, உள்ளவா - சத்தியம், காண்பரே - நோக்குவர்.

**பொழிப்பு** : நிலைபெற்று நின்ற நின்மலமாகிய சித்தத்தையுடைய பத்தரிடத்துச் சத்தியப்பொருள் விளையும் பொருட்டு ஞான நாட்டத் தினாலே அவர்களைக் கடாக்ஷிகின்றவன்.

இரண்டாமடி

**பதப்பொருள்** : காழியான் - களங்கமுள்ளவன், நயனுள்ளவா - ஞானக் கண்ணுள்ளவாறு, காண்பரே - நிலைமையாக நினைப்பரே.

**பொழிப்பு** : திருமிடற்றிற் களங்கமுடையானது கருணையை நினைத்து ஞான நாட்டத்தையுடைய சிவஞானிகள் சிவனுக்கிச்சை

தன்னடியார்க்கே ஆங்காரத்தைதத் தடுக்குதே பணியெனத் தமதறிவிலே கருதாநிற்பர்.

மூன்றாமடி

**பதப்பொருள்** : காழியான் - விஷ்ணு, அயன் - பிரம்மா, உள்ள - நினைக்க, ஆ - அதிசயம், கண் - கருதுதல், பரே - அன்னியம்.

**பொழிப்பு** : விஷ்ணுவும் பிரம்மாவுந் திருமுடியுந் திருவடியுங் காணும் பொருட்டு, வராகமு மன்னமுமாகக் கருதி வடிவு கொண்டார் ஐயோ உள்ளபடி கருதிச் சிவனைப் பெறாமல் அவர் கருதியதேதென்னில், அன்னியமே கண்டனர்.

(கண் எனற்பாலது காண் என நீண்டது.)

நான்காமடி

**பதப்பொருள்** : காழியான் - காழிப்பதியினுள்ளான், அயன் - ஐயன், உள் - என்னறிவிலுண்டான், அவா - ஆசை, காண்பரே - தரிசிப்பரே.

**பொழிப்பு** : என் பொருட்டாற் காழியென்னுந் திருப்பதியைப் படைத் தானை என்னையனை எனதாசையைக் கீழ்ச்சொன்ன விருவர்களும் தாங்கள் தேடுந் தேட்டப் பிறவில் மயக்கத்திலே தெட்டமழித்துத் தோன்றா நிற்பவனைத் தேடி மறத்தலொழிந் தெவ்வாறு காண்பர்.

**கொச்சையன் னலைக்கூட கிலாருடன் மூடரே**
**கொச்சையன் னலைக்கூட கிலாருடன் மூடரே**
**கொச்சையன் னலைக்கூட கிலாருடன் மூடரே**
**கொச்சையன் னலைக்கூட கிலாருடன் மூடரே.**

முதலடி

**பதப்பொருள்** : கொச்சை - அறியாமையைப் பொருந்தியுள்ள ஆணவமலம், அன்னலை - பொருந்துதலை, கூடகிலார் - மாறு பட்டார், உடல் - உடலாலே, மூடரே - மூடாரே.

**பொழிப்பு** : ஆணவ மலத்தோடு கூடியுள்ள மயக்கத்துடன் மாறு பட்டோர்கள் மாயாதனுவாலு மந்திரதனுவாலு மறைக்கப்பட்டார்கள்.

(மூடார் எனற்பாலது மூடர் எனக் குறுகி நின்றது.)

இரண்டமடி

**பதப்பொருள்** : கொச்சை - புலால் நாற்றம், அண்ணல் - அணுகுதல், கூடகிலார் - மனம் பொருந்தமாட்டாதார், உடல் மூடரே - சரீரத்தைப் புதைப்பரே.

**பொழிப்பு** : புலால் நாற்றத்தைப் பொருந்திய மெய்யைப் பொய்யென்று மனங்கொள்ளமாட்டாமல் அதுவே தமது நிலைபெற்ற வுருவாக நினைத்துத் துவராடையாலேயுடம்பைச் சூழப்பட்ட பௌத்தரும்.

மூன்றாமடி

**பதப்பொருள்** : கொச்சையள் - பேதைத் தன்மையுடைய மச்சியா கந்தி, நலை - புலப்படாநின்ற அவளது நலத்தைக் கருதி, கூடு - சரீரம், அகில்ஆர் - அகில்மணம் பொருந்திய, உடன் - அத்தன்மையாளுடன், மூடரே - மொய்க்குமாறு பண்ணினது அது பொருந்துதல்.

**பொழிப்பு** : பேதைத் தன்மையையுடைய மச்சி கந்தியினுடைய நலத்தைக் கொள்ளும்பொருட்டு அவளது சரீரமெல்லாம் சுகந்த மொய்க்கும்படி யவளுடனே பொருந்திய பராசரனாகிய மகாவிருடிவந்து சிவனைப் பொருந்தியருச்சிக்கப் படுதலால்.

நான்காமடி

**பதப்பொருள்** : கொச்சை - கொச்சையாகிய பராசரன் பேராலுள்ள கொச்சையென்னுந் திருப்பதி, அண்ணலை - கர்த்தாவை, கூடகிலார் - நேர்படமாட்டாதார், உள்தல் - உள்ளுதல், மூடரே - அந்தகார நிறைந்த போதத்தை யுடையவரே.

**பொழிப்பு** : பராசர முனிவனாற் பூசிக்கப்பட்டு அவன் பெயரால் பெயர் பெற்றுள்ள கொச்சை நகரென்னுந் திருப்பதியிலே எழுந்தருளியிரா

நின்ற தலைமையோனை உள்ளபடி தரிசனம் பண்ணி வழிபடமாட்டார் களது நினைவு எவ்வாறிருக்கு மென்னில், மழைக்காலிருளும் வெளிதென இருண்ட மயக்கத்தையுடைய ஆணவபோதமாயிருக்கும்.

**கழுமல முதுபதிக் கவுனியன் கட்டுரை**
**கழுமல முதுபதிக் கவுனியன் கட்டுரை**
**கழுமல முதுபதிக் கவுனியன் கட்டுரை**
**கழுமல முதுபதிக் கவுனியன் கட்டுரை.**

முதலடி

**பதப்பொருள்** : கழுமலம் - மிகுதிப்பட்ட குற்றம், அமுது - செலம், பதிக்க - விளைவிக்க, உள்நி - உள்ள நீ, கட்டு - வடிவாகக் கட்டுண்டல், உரை - தேய்தல்.

**பொழிப்பு** : மிகுதிப்பட்ட தோஷமாயுள்ள சுக்கில சுரோணிதமாகிய இருவகை நீரின்கண் பதிந்து விளைதற்குள்ள நீயுமாயந்தக் கருப்பாசைய நீரின் கண்ணே சிரமுதலாகிய அவயவமாகத் தோற்றிப் பூமியின்கண் செனித்துப் பரிணமித்துப் பின்பு தேய்ந்து மரிக்கின்ற சென்மத்தையும்.

(பரிணமித்தல் - வேறுபடுதல்.)

இரண்டாமடி

**பதப்பொருள்** : கழு - கழுவப்படும், மலம்உது - ஆணவ மலமு மற்றதனுடன் சுட்டிச் சொல்லப்பட்ட மாயா மலத்தையுங் கன்மமலத்தையும், பதி - பாதி, கவுணி - உள்ளே அகப்படுத்திக் கவுளிகரித்துக் கொள்ளுதல், அன்கண் - ஆத்துமானிடத்து, துரை - இறைவர்.

**பொழிப்பு** : கீழ்ச் சொல்லிப்போந்த சென்மத்தையுங் கழுவிமலத் திரயங்களையுங் கழுவாநிற்கும், (என்றபதம் நிற்க. இனிச் சிவனது நாம முரைக்கற் பாற்று.) தனது பாதியாகிய திருவருளினாலே என்னை யகப்படுத்திக் கவுளி கரித்துக்கொண்டந்த அருள்வழியாக எனதிடத்திலிடை யறாமல் வாழுந் தன்னை யெனக்குத்தந் தடிமைகுலையாமலெக் கண்ணும் விட்டு விளங்குங் கர்த்தர்.

பாதி எனற்பாலது பதியெனக் குறுகிநின்றது.

மூன்றாமடி

**பதப்பொருள்** : கழும் - மயக்கம், அலம் - அலக்கண் படுதல், அமுது - அமுதம், பதி - கர்த்தர், க - கிரசு, உணியன் - உண்ணப்பட்டவர், கட்டு - விளக்கம், உரை - பொன்.

**பொழிப்பு** : மாயா மயக்கத்தின்கண்ணே மயங்கிப் பெத்தமுத்தி யிரண்டுந் தெரியாமல் திண்டாடப்பட்ட மலபோதர்க்கு அமுதம் போன்று அரிதாயுள்ளவுனுமாய் விட்டு விளக்கப்படா நின்ற பொன்னுருவையுடை யவனாய்ச் சிருஷ்டிக்குக் கர்த்தாவாகிய பிரமனது சிரக் கபாலத்திலே பிச்சைக்கொண்டு நுகருங் கருணையாளனே.

நான்காமடி

**பதப்பொருள்** : கழுமல முதுபதி - கீழ்ச் சொன்ன பதியின்கண், கவுணியன் - கவுணிய கோத்திரத்துவந்த மறையோனாகிய யான், கட்டு - காட்டு, உரை - உரைப்பீராக.

**பொழிப்பு** : திருக்கழுமல மென்னும் மூவாப்பழங் கிழமைப் பன்னிரு பெயர்பெற்ற அனாதிமூலமாகிய பதியிடத்துக் கவுணிய கோத்திரத்திலே தோன்றப்பட்ட யான் நிவேதிக்கப்படும் காட்டாகிய இப்பாடலைக் கீழ்ச் சொன்னவற்றிலும் மலத்திரயங்களிலும் அழுந்தா நின்ற ஒருத்தராகிலும் பலராகிலும் உரைசெய்வார் உயர்ந்தாரே யாதலா லிப்பாடலை யிடைவிடாமலுரை செய்வீராக.

(காட்டு என்பது, கட்டெனக் குறுகிநின்றது.)

# 9. ஆழ்வார் நாயன்மார் பாடல்கள்

மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்திலிருந்த ஆழ்வார்களும் நாயன்மார்களும் இயற்றிய பாடல்களில் சிலவற்றை மாதிரிக்காகக் காட்டுவோம். இப்பாடல்கள், அக்காலத்தில் இருந்த சைவ வைணவக் கருத்துக்களையும், பக்தியையும், சமயக் காழ்ப்பு முதலியவற்றையும், கண்ணாடிபோல் காட்டுகின்றன. அன்றியும் செய்யுள் நடையையும் புலப்படுத்துகின்றன.

இவை பொய்கை ஆழ்வார் இயற்றிய இயற்பா முதல் திருவந்தாதி யிலிருந்து எடுக்கப்பட்டவை:

*வையம் தகளியா வார்கடலே நெய்யாக*
*வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய*
*சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை*
*இடராழி நீங்குகவே யென்று.* 1

*நெறிவாசல் தானேயாய் நின்றானை ஐந்து*
*பொறிவாசல் போர்க்கதவம் சாத்தி - அறிவானாம்*
*ஆலமரநீழல் அறம்நால்வர்க் கன்றுரைத்த*
*ஆலமர் கண்டத் தரன்.* 2

*அவரவர் தாம்தாம் அறிந்தவா றேத்தி*
*இவரிவ ரெம்பெருமா னென்று - சுவர்மிசைச்*
*சார்த்தியும் வைத்தும் தொழுவர் உலகளந்த*
*மூர்த்தி யுருவே முதல்.* 3

*கைய வலம்புரியும் சேமியும் கார்வண்ணத்*
*தைய! மலர்மகள்நின் ஆகத்தாள் - செய்ய*
*மறையான்நின் உந்தியான் மாமதிள்மூன் றெய்த*
*இறையான்நின் னாகத் திறை.* 4

மனமாசு தீரும் அருவினையும் சாரா
தனமாய தானேகை கூடும் - புனமேய
பூந்துழா யானடிக்கே போதொடு நீரேந்தி
தாம்தொழா நிற்பார் தமர். 5

சென்றால் குடையாம், இருந்தால்சிங் காசனமாம்,
நின்றால் மரவடியாம், நீள்கடலுள் - என்றும்
புணையாம், மணிவிளக்காம், பூம்பட்டாம், புல்கும்
அணையாம் திருமாற் கரவு. 6

அடைந்த அருவினையோ டல்லல்நோய் பாவம்
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில் - நுடங்கிடையை
முன்இலங்கை வைத்தான் முரணழிய முன்னொருநாள்
தன்னிலங்கை வைத்தான் சரண். 7

தோளவனை யல்லால் தொழாஎன் செவியிரண்டும்
கேளவன தின்மொழியே கேட்டிருக்கும் - நாள்நாளும்
கோணா கணையான் குரைகழலே கூறுவதே
நாணாமை நள்ளேன் நயம். 8

நயவேன் பிறர்பொருளை நள்ளேன்கீ ழாரோடு
உயவேன் உயர்ந்தவரோ டல்லால் - வியவேன்
திருமாலை யல்லது தெய்வமென் றேத்தேன்
வருமாறென் நம்மேல் வினை. 9

வினையால் அடர்ப்படார் வெந்நரகில் சேரார்
தினையேனும் தீக்கதிக்கண் செல்லார் - நினைதல்
கரியானைச் சேயானை ஆயிரம்பேர்ச் செங்கண்
கரியானைக் கைதொழுதக் கால். 10

ஏற்றான்புள் ளூர்ந்தான் எயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான் - கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீள்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு. 11

கொண்டானை யல்லால் கொடுத்தாரை யார்பழிப்பார்?
மண்தா வெனவிரந்து மாவலியை - ஒண்தாரை

*நீரங்கை தோய நிமிர்ந்திலையே நீள்விசும்பில்*
*ஆரங்கை தோய வடுத்து.* 12

*நாடிலும் நின்னடியே நாடுவன் நாள்தோறும்*
*பாடிலும் நின்புகழே பாடுவன் - சூடிலும்*
*பொன்னாழி யேந்தினான் பொன்னடியே சூடுவேற்கு*
*என்னாகி லென்னே எனக்கு.* 13

*பிடிசேர் களிறளித்த பேராளா! உன்தன்*
*அடிசேர்ந் தருள்பெற்றா ளன்றே - பொடிசேர்*
*அனற்கங்கை யேற்றான் அவிர்சடைமேல் பாய்ந்த*
*புனற்கங்கை யென்னும்பேர்ப் பொன்.* 14

*பொன்திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்*
*நின்றுலகம் தாய நெடுமாலும் - என்றும்*
*இருவரங்கத் தால்திரிவ ரேலும் ஒருவன்*
*ஒருவனங்கத் தென்று முளன்.* 15

*கீழ்க்கண்ட செய்யுட்கள் பூதத்தாழ்வார் இயற்றிய இயற்பா இரண்டாந் திருவந்தாதியிலிருந்து எடுத்தவை:-*

*அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக*
*இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி*
*ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு*
*ஞானத் தமிழ்புரிந்த நான்.* 1

*மற்றா ரியலாவார்? வானவர்கோன் மாமலரோன்*
*சுற்றும் வணங்கும் தொழிலானை - ஒற்றைப்*
*பிறையிருந்த செஞ்சடையான் பின்சென்று மாலைக்*
*குறையிரந்து தான்முடித்தான் கொண்டு.* 2

*சிறந்தார்க் கெழுதுணையாம் செங்கண்மால் நாமம்*
*மறந்தாரை மானிடமா வையேன் - அறந்தாங்கும்*
*மாதவனே! என்னும் மனம்படைத்து மற்றவன்பேர்*
*ஓதுவதே நாவினால் உள்ளு.* 3

ஒருருவ னல்லை ஒளியுருவம் நின்னுருவம்
ஈருருவ மென்பர் இருநிலத்தோர் - ஒருருவம்
ஆதியாம் வண்ணம் அறிந்தா ரவர்கண்டீர்
நீதியால் மண்காப்பார் நின்று. 4

கண்டேன் திருமேனி யான்கனவில் ஆங்கவன்கைக்
கண்டேன் கனலும் சுடராழி - கண்டேன்
உறுநோய் வினையிரண்டும் ஓட்டுவித்து, பின்னும்
மறுநோய் செறுவான் வலி. 5

யானே தவஞ்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான்! - யானே
இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது. 6

வரைச்சந் தனக்குழம்பும் வான்கலனும் பட்டும்
விரைப்பொலிந்த வெண்மல் லிகையும் - நிரைத்துக்கொண்
டாதிக்கண் நின்ற அறிவ னடியிணையே
ஓதிப்பணிவ துறும். 7

பகல்கண்டேன் நாராணனைக் கண்டேன் கனவில்
மிகக்கண்டேன் மீண்டவனை மெய்யே - மிகக்கண்டேன்
ஊன்திகழும் நேமி ஒளிதிகழும் சேவடியான்
வான்திகழும் சோதி வடிவு. 8

மண்ணுலகம் ஆளேனே வானவாக்கும் வானவனாய்
விண்ணுலகந் தன்னகத்து மேவேனே - நண்ணித்
திருமாலைச் செங்கண் நெடியானை எங்கள்
பெருமானைக் கைதொழுத பின். 9

அத்தியூ ரான்புள்ளை யூர்வான் அணிமணியின்
துத்திசேர் நாகத்தின் மேல்துயில்வான் - முத்தீ
மறையாவான் மாகடல்நஞ் சுண்டான் தனக்கும்
இறையாவான் எங்கள் பிரான். 10

*கீழ்க்கண்டவை பேயாழ்வார் அருளிச்செய்த இயற்பா மூன்றாந் திருவந்தாதியிலிருந்து எடுக்கப்பட்டவை:-*

***திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்***
***அருக்க னணிநிறமுங் கண்டேன் - செருக்கிளரும்***
***பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்***
***என்னாழி வண்ணன்பால் இன்று.*** *1*

***முன்னுலகம் உண்டுமிழ்ந்தாய்க் கவ்வுலகம் ஈரடியால்***
***பின்னளந்து கோடல் பெரிதன்றே - என்னே!***
***திருமாலே! செங்கண் நெடியானே! எங்கள்***
***பெருமானே! நீ இதனைப் பேசு.*** *2*

***தானே தனக்குவமன் தன்னுருவே எவ்வுருவும்***
***தானே தவவுருவம் தாரகையும் - தானே***
***எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத்***
***திருசுடரு மாய இறை.*** *3*

***இறையாய் நிலனாகி எண்திசையும் தானாய்***
***மறையாய் மறைப்பொருளாய் வானாய் - பிறைவாய்ந்த***
***வெள்ளத் தருவி விளங்கொலிநீர் வேங்கடத்தான்***
***உள்ளத்தி னுள்ளே உளன்.*** *4*

***தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்***
***சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் - சூழும்***
***திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்கு***
***இரண்டுருவ மொன்றா யிசைந்து.*** *5*

***இனியவன் மாயன் என்உரைப்ப ரேலும்***
***இனியவன் காண்பரிய னேலும் - இனியவன்***
***கள்ளத்தால் மண்கொண்டு விண்கடந்த பைங்கழலான்***
***உள்ளத்தி னுள்ளே உளன்.*** *6*

***அதுநன் றிதுதீதென் றையப்ப டாதே***
***மதுநின்ற தண்துழாய் மார்வன் - பொதுநின்ற***

*பொன்னங் கழலே தொழுமின் முழுவினைகள்*
*முன்னம் கழலும் முடிந்து.* 7

*உய்த்துணர் வென்னும் ஒளிகொள் விளக்கேற்றி*
*வைத்தவனை நாடி வலைப்படுத்தேன் - மெத்தெனவே*
*நின்றான் இருந்தான் கிடந்தானென் னெஞ்சத்து*
*பொன்றாமை மாயன் புகுந்து.* 8

*அலரெடுத்த உந்தியான் ஆங்கெழி லாய*
*மலரெடுத்த மாமேனி மாயன் - அலரெடுத்த*
*வண்ணத்தான் மாமலரான் வார்சடையான் என்றிவர்கட்*
*கென்னத்தா னாமோ? இமை.* 9

*சார்வு நமக்கென்றும் சக்கரத்தான் தண்துழாய்த்*
*தார்வாழ் வரைமார்பன் தான்முயங்கும் - காரார்ந்த*
*வானமரு மின்னிமைக்கும் வண்தா மரைநெடுங்கண்*
*தேனமரும் பூமேல் திரு.* 10

கீழ்க்கண்டவை திருமழிசையாழ்வார் இயற்றிய நான்முகன் திருவந்தாதியிலிருந்து எடுத்தவை:

*நான்முகனை நாரா யணன்படைத்தான் நான்முகனும்*
*தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான் -*
*யான்முகமாய்*
*அந்தாதிமேலிட்டு அறிவித்தேன் ஆழ்பொருளை*
*சிந்தாமல் கொண்மின் நீர் தேர்ந்து.* 1

*ஆறுசடைக் கரந்தான் அண்டர்கோன் தன்னோடும்*
*கூறுடைய னென்பதுவும் கொள்கைத்தே - வேறொருவர்*
*இல்லாமை நின்றானை எம்மானை எப்பொருட்கும்*
*சொல்லானைச் சொன்னேன் தொகுத்து.* 2

*அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர்*
*சிறியார் சிவப்பட்டார் செப்பில் - வெறியாய*
*மாயவனை மாலவனை மாதவனை யேத்தாதார்*
*ஈனவரே யாதலால் இன்று.* 3

குறைகொண்டு நான்முகன் குண்டிகை நீர்பெய்து
மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி - கறைகொண்ட
கண்டத்தான் சென்னிமே லேறக் கழுவினான்
அண்டத்தான் சேவடியை யாங்கு. 4

ஆல நிழற்கீழ் அறநெறியை நால்வர்க்கு
மேலையுகத் துரைத்தான் மெய்த்தவத்தோன் - ஞால
மளந்தானை ஆழிக் கிடந்தானை ஆல்மேல்
வளர்ந்தானைத் தான்வணங்கு மாறு. 5

சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை
நின்று வினைகெடுக்கும் நீர்மையால் - என்றும்
கடிக்கமல நான்முகனும் கண்மூன்றுத் தானும்
அடிக்கமல மிட்டேத்தும் அங்கு. 6

தேவராய் நிற்கும்அத் தேவும்அத் தேவரில்
மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும் - யாவராய்
நிற்கின்ற தெல்லாம் நெடுமாலென் றோராதார்
கற்கின்ற தெல்லாம் கடை. 7

உயிர்கொன் றுடலொழிய ஓடும்போ தோடி
அயர்வென்ற தீர்ப்பான்பேர் பாடி - செயல்தீரச்
சிந்தித்து வாழ்வாரே வாழ்வார் சிறுசமயப்
பந்தனையார் வாழ்வேல் பழுது. 8

தமராவார் யாவர்க்கும் தாமரை மேலாற்கும்
அமரர்க்கும் ஆடரவார்த் தாற்கும் - அமரர்கள்
தாள்தா மரைமலர்க ளிட்டிறைஞ்சி மால்வண்ணன்
தாள்தா மரையடைவோ மென்று. 9

இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்
இனியறிந்தேன் எம்பெருமான் உன்னை - இனியறிந்தேன்
காரணன்நீ கற்றவைநீ கற்பவைநீ நற்கிரிசை
நாராணன்நீ நன்கறிந்தேன் நான். 10

கீழ்க்கண்ட செய்யுட்கள் திருமழிசையாழ்வார் இயற்றிய திருச்சந்த விருத்தத்திலிருந்து எடுத்தவை:-

*பூநிலாய ஐந்துமாய்ப் புனற்கண் நின்ற நான்குமாய்*
*தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகா லிரண்டுமாய்*
*மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்*
*நீநிலாய வண்ணம்நின்னை யார்நினைக்க வல்லரே.* 1

*ஒன்றிரண்டு மூர்த்தியாய் உறக்கமோடு உணர்ச்சியாய்*
*ஒன்றிரண்டு காலமாகி வேலைஞால மாயினாய்*
*ஒன்றிரண்டு தீயுமாகி ஆயனாய மாயனே*
*ஒன்றிரண்டு கண்ணினாலும் உன்னைஏத்த வல்லனே.* 2

*விண்கடந்த சோதியாய் விளங்குஞான மூர்த்தியாய்*
*பண்கடந்த தேசமேவு பாவநாச நாதனே*
*என் கடந்த யோகினோ டிரந்துசென்று மாணியாய்*
*மண்கடந்த வண்ணம்நின்னை யார்மதிக்க வல்லரே.* 3

*வேறிசைந்த செக்கர்மேனி நீறணிந்த புன்சடை*
*கீறுதிங்கள் வைத்தவன்கை வைத்தவன்க பாலமிசை*
*ஊறுசெங் குருதியால் நிறைந்தகார ணந்தனை*
*ஏறுசென்ற டர்த்தஈச? பேசுகூச மின்றியே.* 4

*மோடியோடி லச்சையாய சாபமெய்தி முக்கணான்*
*கூடுசேனை மக்களோடு கொண்டுமண்டி வெஞ்சமத்து*
*ஓடவாண னாயிரம் கரம்கழித்த ஆதிமால்*
*பீடுகோயில் கூடுநீர் அரங்கமென்ற பேரதே.* 5

*இரந்துரைப்ப துண்டுவாழி ஏமநீர் நிறத்தமா!*
*வரம்தரும் திருக்குறிப்பில் வைத்ததாகில் மன்னுசீர்*
*பரந்தசிந்தை யொன்றிநின்று நின்னபாத பங்கயம்*
*நிரந்தரம் நினைப்பதாக நீநினைக்க வேண்டுமே.* 6

*கேடில்சீர் வரத்தனாய்க் கெடும்வரத்த யன்அரன்*
*நாடனோடு நாட்டமாயி ரத்தன்நாடு நண்ணிலும்*
*வீடதான போகமெய்தி வீற்றிருந்த போதிலும்*
*கூடும்ஆசை யல்லதொன்று கொள்வனோ? குறிப்பிலே.* 7

வான்களாகி நாங்கள்செல்ல நோய்மைகுன்றி மூப்பெய்தி
மாளுநாள தாதலால் வணங்கிவாழ்த்தென் நெஞ்சமே
ஆளதாகும் நன்மையென்று நன்குணர்ந்த தன்றியும்
மீள்விலாத போகம்நல்க வேண்டும்மால பாதமே. 8

சலங்கலந்த செஞ்சடைக் கறுத்தகண்டன் வெண்தலை
புலன்கலங்க வுண்டபாத கத்தன்வன்து யர்கெட
அலங்கல் மார்பில் வாசநீர் கொடுத்தவன் அடுத்தசீர்
நலங்கொள்மாலை நண்ணும்வண்ணம் எண்ணுவாழி
நெஞ்சமே. 9

அச்சம்நோயொ டல்லல்பல பிறப்புஆய மூப்பிவை
வைத்தசிந்தை வைத்தவாக்கை மாற்றிவானி லேற்றுவான்
அச்சுதன் அனந்தகீர்த்தி ஆதியந்த மில்லவன்
நச்சுநா கணைக்கிடந்த நாதன்வேத கீதனே. 10

கீழ்க்கண்ட செய்யுள்கள் திருஞானசம்பந்தநாயனார் இயற்றிய தேவாரத் திருமுறையிலிருந்து எடுத்தவை.

''சித்தந் தெளிவீர்காள்
அத்தன் ஆருரைப்
பத்தி மலர்தூவ
முத்தி யாகுமே.'' 1

பறையும்பழி பாவம்படு துயரம் பலதீரும்
பிறையும்புன லரவும்படு சடையெம்பெரு மானூர்
அறையும்புனல் வருகாவிரி யலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்பயில் நெய்த்தான மெனீரே. 2

மூவருமாகி யிருவருமாகி முதல்வனுமாய் நின்ற மூர்த்தி
பாவங்கடீர்தர நல்வினைநல்கிப் பல்கணநின்று பணியச்
சாவமதாகிய மால்வரைகொண்டு தண்மதின்மூன்று மெரித்த
தேவர்கள் தேவ ரெம்பெருமானார் தீதில்
பெருந்துறையாரே. 3

மெய்யராகிப் பொய்யைநீக்கி வேதனையைத் துறந்து
செய்யரானார் சிந்தையானே தேவர்குலக் கொழுந்தே

நைவனாயே னுன்றனாமம் நாளுநவிற் றுகின்றேன்
வையமுன்னே வந்து நல்காய் வலிவல மேயவனே. 4

சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே. 5

நீரின் மிசைத்துயின்றோ னிறைநான் முகனும் மறியா தன்று
தேரும் வகை நிமிர்ந்தா னவன்சேரு மிடம்வினவிற்
பாரின் மிசையடியார் பலர்வந் திறைஞ்சமகிழ்ந்தாக
மூரு மரவசைத்தான் திருவூறலை யுள்குதுமே. 6

ஆல முண்டமு தம்மம ரர்க்கரு ளண்ணலார்
கால னாருயிர் வீட்டிய மாமணி கண்டனார்
சால நல்லடி யார்தவத் தார்களுஞ் சார்விடம்
மால யன்வணங் கும்மழ பாடியெம் மைந்தனே 7

தனிவெண்டிங்கள் வாண்முக மாதர்பாடத் தாழ்சடைத்
துணிவெண்டிங்கள் சூடியோ ராடன்மேய தொன்மையான்
அணிவண்ணச்சிற் றேமத்தா னலர்மேலந்த ணாளனும்
மணிவண்ணனுமுன் காண்கிலா மழுவாட்செல்வ
னல்லனே. 8

வெல்பற வைக்கொடி மாலு மற்றை விரைமலர் மேலயனும்
பல்பற வைப்படி யாயுயர்ந்தும் பன்றிய தாய்ப்ப ணிந்தும்
செல்வற நீண்டெஞ் சிந்தை கொண்ட செல்வ ரிடம்போலும்
தொல்பற வைசுமந் தோங்கு செம்மைத் தோணி
புரந்தானே. 9

ஆலநீழ லுகந்த திருக்கையே யானபாட லுகந்த திருக்கையே
பாலினேர்மொழி யாளொரு பங்கனே பாதமோதலர் சேர்புர
பங்கனே
கோலநீறணி மேதகு பூதனே கோதிலார்மன மேவிய பூதனே
யாலநஞ்சமு துண்ட களத்தனே யாலவாயுறை யண்டர்க
ளத்தனே. 10

தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடையமல ரான்முனைநாள் பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மான்இவ னன்றே. 11

பாங்குடைத் தவத்துப் பகீரதற்கருளிப் படர்சடைக்கரந்தநீர்க்
கங்கை
தாங்குதல் தவிர்த்துத் தராதலத் திழித்த தத்துவ னுறைவிடம்
வினவில்
ஆங்கெரி மூன்று மமர்ந்துட னிருந்த வங்கையாலாகுதி
வேட்கும்
ஓங்கிய மறையோர் ஓமமாம் புலியூ ருடையவர்
வடதளியதுவே. 12

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினு முன்கழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே

இதுவோ வெமை யாளுமாறு ஈவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின் னருள் ஆவடுதுறை யரனே. 13

உரையும்பாட்டுந் தளர்வெய்தி யுடம்புமூத்த போதின்கண்
நரையுந்திரையுங் கண்டெள்கி நகுவர் நமர்க ளாதலால்
வரைகொள் பெண்ணைவந்துலா வயல்கள் சூழ்ந்த
கோவலூர்
விரைகொள் சீர்வெண் ணீற்றினான் வீரட்டானஞ்
சேர்துமே. 14

கண்காட்டும் நுதலானும் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டிலுறைவானும் விடைகாட்டுங்
கொடியானே. 15

*

# பின்னிணைப்பு

## 1. மகாவம்சம் 47 - ஆம் அதிகாரம்

இலங்கைத்தீவின் வரலாற்றைக் கூறுகிற மகாவம்சம் என்னும் நூலின் பிற்பகுதியாகிய சூலவம்சம் என்னும் பகுதியில் - 47ஆம் அதிகாரத்தில் மானவம்மனின் வரலாறு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:-

''இந்த அரசன் (ஹத்த தாட்டன் II.) இறந்த பிறகு மானவம்மன்[1] அரசனானான். இவன் எந்தக் குலத்தைச் சேர்ந்தவன்? இவன் யாருடைய மகன்? இவன் எப்படி அரசனானான்?

மஹாசம்மத குலத்தைச் சேர்ந்தவனும் அந்தக் குலத்து நல்ல குணங்களை வழிமுறையாகப் பெற்றவனும் தூபாராம விகாரையைக் கொள்ளையடித்தவனுமாகிய கஸ்ஸபனுடைய மகன் இவன். மலயராசனின்[2] மகளான சங்கமானா என்பவளை மணஞ்செய்து கொண்டு அவளுடன் உத்திரதேசத்தில்[3] யாருக்குந் தெரியாமல் தனிமையாக வாழ்ந்து வந்தான். இந்தச் செய்தியை ஹத்த தாட்ட அரசன் ஒற்றரால் அறிந்து கொண்ட போது, இவன் ஜம்புத் தீவிற்குப்போய்[4] நாரசீஹன்[5] என்னும் அரசனையடைந்து தன்பெயரைக் கூறி அவனுடைய ஊழியத்தில் அமர்ந்தான். இவன் அந்த அரசனைப் பல வகையிலும் திருப்தி செய்தான். அரசனுடைய நட்பை நன்கறிந்துகொண்ட பிறகு இவன்,

---

[1] மானவம்மனைச் சிங்களமொழியில் மஹலா - பானோ என்று கூறுகின்றனர்.

[2] மலயராசன் - மலையநாட்டின் அரசன். மலையநாடு என்பது இலங்கையின் நடுவில் உள்ள மலைப்பிரதேசம்.

[3] உத்தரதேசம் என்பது இலங்கையின் வடபகுதி; நாகநாடு என்பது இதன் பழைய பெயர்.

[4] ஜம்புத்தீவு - பாரதநாடு; இந்தியாதேசம்.

[5] நாரசீஹன் - நரசிம்மவர்மன், மாமல்லன்.

தன் மனைவியை வரவழைத்துக்கொண்டு அங்கே (காஞ்சீபுரத்தில்) வாழ்ந்துகொண்டு இரவும் பகலும் அரசனுக்குத் தொண்டு செய்து கொண்டிருந்தான். நாடு முழுவதையும் அரசாண்ட கண்டு வெட்டி[1] அரசன், இவன் செய்யும் ஊழியத்துக்கு மகிழ்ந்து இவனுக்குப் பெரும்பொருள் வழங்கினான். சங்கா என்னும் இவன் மனைவி நான்கு ஆண் மக்களையும் நான்கு பெண்மக்களையும் ஈன்றனள்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள், அரசன் மானவம்மனுடன் யானை மேல் அமர்ந்து உலாப்போனான். வழியில் நீர்வேட்கை கொண்டு இளநீர் ஒன்றை யானைமேல் இருந்த படியே பருகினான். பருகின பிறகு, கவனப் பிசகாக ஏவலாளன் என்று எண்ணி அதை மானவம்மனிடம் கொடுத்தான். மானவம்மன் இளநீரை வாங்கிக்கொண்டு, ''என் நண்பனான இவர் அரசன். அரசர் அன்புடன் கொடுப்பதை எச்சில் என்று ஒதுக்குவது தகாது. இதனைப் பருகுவது தகுதியே'' என்று எண்ணி அதைப் பருகினான். தமக்குள்ள துன்பங்களைப் போக்கி மேன்மைபெற விரும்புகிறவர் இத்தகைய அடக்கமுள்ள காரியத்தைச் செய்கிறார்கள். இதனைக் கண்டு அரசன் பதைபதைத்து இவன் கையிலிருந்த இளநீரை வாங்கி எஞ்சியிருந்த நீரைத் தான் குடித்தான். இவ்வாறு செய்வது சிறந்தவரின் செயலாகும். இதன்பிறகு அரசன் இவனைத் தனக்குச் சமமாக வைத்து உணவு உடை உறையுள் ஊர்தி முதலியவற்றில் எல்லாம் சமமாக நடத்தினான்.

இவ்விருவரும் இவ்வாறு இருந்த காலத்தில் வல்லப அரசன்[2] நரசீகன்மேல் போர் செய்ய வந்தான். அப்போது நரசீகன் தனக்குள் இவ்வாறு எண்ணினான். ''இவன்(மானவம்மன்) தனக்கு உரிமையாகக் கிடைக்கவேண்டிய அரச பதவியை என் உதவியினால் அடைய எண்ணி இரவும் பகலும் சலிப்பில்லாமல் எனக்கு உழைத்து வருகிறான். இப்போது இவன் என்னுடன் போர்க்களத்துக்கு வந்து அதில் இறந்துவிடுவானானால், நாங்கள் இருவரும் கலந்து யோசித்திருக்கும் காரியம் நிறைவேறாமல்

---

[1] கண்டு வெட்டி என்பது காடுவெட்டி என்பதன் திரிபு. காடுவெட்டி, காடவர் என்னும் பெயர்கள் பல்லவ அரசர்களைக் குறிக்கின்றன.

[2] வல்லப அரசன் - சளுக்கிய அரசன். சளுக்கிய அரசருக்கு வல்லபர் என்னும் பெயர் உண்டு.

போய்விடும்.'' என்று இவ்வாறு எண்ணி, மானவம்மனை நகரத்திற்குப் போகும்படி அனுப்பிவிட்டுத் தான் மட்டும் வல்லப அரசனுடன்போர் செய்யச் சென்றான். மானவம்மன் அதுபோலவே தனக்குள் எண்ணினான்: ''நான் உயிருடன் இருந்து அரசன் போரில் இறந்துவிடுவானானால் பிறகு நான் உயிர் வைத்திருப்பதனால் எனக்கு என்ன நன்மை? போர்க்களஞ் சென்று போர் செய்யாமலிருப்பேனானால், இவ்வரசன் என் மேல் வைத்துள்ள நம்பிக்கைக்குப் பாத்திரனாகமாட்டேன். தனக்குச் சமமாக என்னை வைத்திருப்பவனன்றோ இவ்வரசன்? அரசனுடன் போர்க்களம் செல்லுவதுதான் தகுதியாகும். வாழ்ந்தால் அரசனுடன் உயிர்வாழ்வேன், இன்றேல் அரசனுடன் போர்க்களத்தில் உயிர் விடுவேன்.'' என்று இவ்வாறு எண்ணி, ஆயுதங்களை ஏந்தி யானைமேல் அமர்ந்து போர்க்களஞ் சென்றான். போர்க்களத்தில் அரசன் இவனைக் கண்டபோது மகிழ்ச்சி பொங்க, ''நட்புக்கொள்ளத் தகுந்தவன் இவன்,'' என்று கூறினான். போரிலே மானாவின் சேனையும் அரசனுடைய சேனையும் வல்லப அரசனுடைய சேனையைச் சிதற அடித்தன. தேவர்களின் போர்க்களத்திலே நாராயணன் போர் புரிந்ததுபோல மானவம்மன் தன் வீரத்தைக் காட்டிப் போர் புரிந்தான். நரசீகன் மானவம்மனின் வீரத்தை மெச்சி அன்புடன் தழுவிக்கொண்டு ''நீதான் எனக்கு வெற்றியைக் கொடுத்தாய்,'' என்று புகழ்ந்து கூறினான்.

அவன் நகரத்திற்குத் திரும்பி வந்து வெற்றிவிழா கொண்டாடி மானவம்மனுடைய சேனைகளுக்குச் செய்ய வேண்டிய எல்லாச் சிறப்புக்களையும் செய்தான். பிறகு அரசன் தனக்குள் சிந்தித்தான்: ''என் நண்பன் எனக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்துவிட்டான். நானும் அவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வேன். நன்றி நினைக்கும் மக்களைக் காண்பது அரிது'' என்று சிந்தித்து, அமைச்சர்களை யழைத்து இவ்வாறு கூறினான்: ''இந்த நண்பனுடைய செயலை நீங்கள் எல்லோரும் கண்டீர்கள். நான் எனது அன்பையும் மகிழ்ச்சியையும் இவனுக்குச் செலுத்தவேண்டும். உதவி செய்தவருக்கு உதவிசெய்வது பெருமக்களின் கடமையாதலின், இவன் எனக்குச் செய்த உதவிக்குப் பதில் உதவியை நான் செய்ய வேண்டும்.'' இதைக்கேட்ட அவர்கள் எல்லோரும், ''அரசர் பெருமான் என்ன விரும்புகிறாரோ அதற்கு நாங்கள் உடன் படுகிறோம்'' என்று கூறினார்கள். அதன்மேல் அரசன், மானவம்மனுக்குத் தன்

சேனையைக் கொடுத்து மெய்க்காப்பளரையும் அளித்து மற்றும் வேண்டிய ஊழியர் களையும் கொடுத்து ''இலங்கைக்குப் போ,'' என்று கூறினான். மான வம்மன் சேனையை அழைத்துக் கொண்டு போனான். தூரதேசத்திற்குப் போகும் தன்மகனின் பிரிவைப்பொறாத தந்தைபோல அரசன் கண்ணீர் விட்டான். மானவம்மன் கடற்கரையில் மரக்கலம் ஏறிக் கடலைக் கடந்து விரைந்து வந்தான். இவன் வந்த செய்தியைக் கேட்ட (இலங்கை) அரசன் தாட்டோபதிஸன் (தலைநகரான அநுராதபுரத்தை விட்டு) ஓடினான். மானவம்மன் தலைநகருக்கு வந்து அதைப் பிடித்துக்கொண்டான். பிறகு, ஓடிப்போன அரசனைக் கொல்லக் கருதி அவனைத் தொடர்ந்தான். அப்போது தமிள (தமிழ) சேனை, தன்னுடைய அரசன் (நரசீகன்) நோயாய்க் கிடக்கிறான் என்று பரவிய செய்தியைக் கேள்விப்பட்டது. இச் செய்தியைக் கேட்டவுடன் அந்தச் சேனை திரும்பிப் போய்விட்டது. தமிழ்ச் சேனை போய்விட்ட செய்தியைத் தாட்டோப திஸ்ஸன் அறிந்து, பலத்த சேனையுடன் திரும்பி வந்து மானவம்மனுடன் போர் செய்யத் தொடங்கினான். அப்போது மானவம்மன் இவ்வாறு எண்ணினான்: ''என்னுடைய சேனை முழுவதும் போய்விட்டது. நான் போர்க்களத்தில் உயிர்விட்டால், என் பகைவனுடைய எண்ணம் நிறைவேறும். ஆகையால், நான் ஜம்புத் தீவிற்குப்போய் அங்கிருந்து சேனையை அழைத்து வந்து அரசாட்சியைக் கைப்பற்றுவேன்,'' என்று எண்ணி, மீண்டும் தன் நண்பன் நரசீகனை அடைந்து அவனது ஊழியத்தில் அமர்ந்தான். (இலங்கையை) நான்கு அரசர்[1] ஆட்சி செய்த காலம்வரையில் மானவம்மன் அங்கே (காஞ்சீபுரத்தில்) தங்கியிருந்தான்.

பிறகு நரசீகன் தனக்குள் எண்ணினான்: ''என் நண்பன் ஊக்கம் குறையாமல் அரச பதவியைப் பெறுவதற்காக எனக்குத் தொண்டு புரிந்து வருகிறான். இவனுக்கு நரையும் மூப்பும் வந்துவிடும் போலிருக்கிறது. இதைப் பார்த்துக்கொண்டு நான்மட்டும் அரசாட்சி செய்துகொண்டி ருப்பதா? என் சேனையை அனுப்பி அரசைக் கைப்பற்றி இவனுக்குக் கொடுக்காவிட்டால் நான் அரசனாக இருந்து என்ன பயன்?'' இவ்வாறு எண்ணித் தன் சேனைகளைக் கூட்டி அவர்களுக்கு வேண்டிய பொருளை

---

[1] நான்கு அரசர் பெயர்களாவன: தாட்டோபதிஸ்ஸன் *II*, அக்கபோதி *IV*, தத்ததன், ஹத்ததாட்டன் என்பன.

யும் பொன்னையுங் கொடுத்து, தானே முன்னின்று அவர்களைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று, பல உருவங்களுடன் அமைந்திருந்த பலமுள்ள கணக்கற்ற மரக்கலங்களை அமைத்துக்கொடுத்து, ''இதோ இவருடன் போங்கள்'' என்று கூறினான். ஆனால் அவர்கள் மரக்கலத்தில் ஏற மறுத்துவிட்டார்கள். அப்போது நரசீகன் தனக்குள் யோசித்துப் பார்த்து, மானவம்மனை அழைத்து, தான் அணியும் போர்க் கவசங்களையும் மற்ற அணிகளையும் அவனுக்குக் கொடுத்து அணிந்து கொள்ளச் செய்து, ''நீ போய் மரக்கலம் ஏறி கோட்ட என்னும் இந்த முரசைக் கொட்டுக,'' என்று கூறித் தான் ஒருவரும் அறியாமல் ஒளிந்துகொண்டான். மானவம்மன் அவ்வாறே மரக்கலத்தில் ஏறியிருந்து முரசு கொட்டினான். அதைக் கேட்டு, அரசன்தான் மரக்கலம் ஏறிச் செல்கிறான் என்று நினைத்துச் சேனைவீரர்கள் எல்லோரும் மரக்கலம் ஏறினார்கள். மானா சேனையுடன் பிரயாணப் பட்டான். கடலில் சேனை செல்வது நகரமே மிதந்து செல்வதுபோல் காணப்பட்டது. துறையை யடைந்து கரையிறங்கிச் சிலநாள் தங்கிச் சேனைக்கு ஓய்வு கொடுத்தபிறகு, (இலங்கையின்) உத்தர தேசத்தைக் கைப்பற்றி அந்நாட்டுமக்களைத் தன் வயப்படுத்திக்கொண்டு, தலை நகரின்மேல் சேனையை நடாத்திச் சென்றான். பொத்தகுட்டன்[1] இச் செய்தியைக் கேட்டுப் பெருஞ் சேனையுடன் போர்செய்ய வந்தான்.

இரண்டு சேனைகளும் கடல்மடை திறந்ததுபோல ஒன்றோடு ஒன்று கலந்து தாக்கிப் போர்புரிந்தன. யானைமேல் அமர்ந்து போர் செய்த மானவம்மன், பொத்தகுட்டனையும் அரசனையும் (ஹத்ததாதன்) வெவ் வேறாகப் பிரியும்படி செய்து, போர்புரிந்து அவர்களை ஓடச் செய்தான். ஹத்ததாதன் தோற்று ஓடியபோது வீரர்கள் அவனைக் கொன்று அவன் தலையைக் கொண்டுவந்து மானவம்மனுக்குக் காட்டினார்கள். பொத்த குட்டனோ (மலையநாட்டில் உள்ள) மேரு குண்டர நகரத்துக்குப் போனான். அங்கிருந்த அந்நாட்டு அரசன் அவனைக்கண்டு இவ்வாறு தனக்குள் எண்ணினான்: ''இவன் என்னுடைய நெடுங்கால நண்பன். ஆகையால், இவனுடைய துன்பக் காலத்தில் என்னிடம் அடைக்கலம்

[1] பொத்தகுட்டன் என்பவன் இலங்கையின் அரசாட்சியை நடாத்திய ஒரு தமிழன். ஹத்ததாதன் என்பவனைப் பெயருக்கு அரசனாக்கி, பொத்தகுட்டனே அரசாட்சியை நடாத்திவந்தான்.

புகுந்தான். நான் இவனைக் கைவிடக் கூடாது. ஆனால், என்னுடைய அரசனுக்கும் துரோகம் செய்யாமல், என் நண்பனுக்கும் துரோகம் செய்யாமல் நான் எவ்வாறு இருக்க முடியும்?'' என்று இவ்வாறு எண்ணிய இவன் நஞ்சு இடப்பட்ட அப்பங்களைத்தின்று உயிரைவிட்டான். பொத்தகுட்டனும் அவ்வாறே அந்த அப்பங்களைத் தின்று உயிர் நீத்தான். இவ்வாறு மானவம்மன், தனக்கு முன்போல் இருந்த பகைவர்களினின்றும் விடுபட்டான்.

இதுமுதல் மானவம்மன் (கொற்றக்) குடையின்கீழ் அமர்ந்து தீவின் குடிமக்களுக்கு வந்த தீங்குகளைக் களைந்து அரசாண்டான். இவன் புகழத்தக்க அநேக காரியங்களைச் செய்தான்..........''

## 2. மூவர்கோயில் சாசனம்

### I

புதுக்கோட்டையைச் சேர்ந்த குளத்தூர் தாலுகா கொடும்பாளூரில் மூவர்கோயில் என்னும் இடத்தில் கிரந்த எழுத்தில் எழுதப்பட்ட வட மொழிச் சாசனம் ஒன்று இருக்கிறது. கொடும்பை என்னும் கொடும்பாளூரை அரசாண்ட **பூதி விக்கிரம கேசரி** என்னும் வேளிர்மரபைச் சேர்ந்த சிற்றரசன் இந்தச் சாசனத்தை எழுதினான். இவன் தன் மனைவியர் இருவர் பேராலும் தன் பேராலும் ஆக மூன்று கோயில்களைக் கட்டியதோடு பெரிய மடம் ஒன்றையும்கட்டி, அந்த மடத்தைதக் காளமுகச் சைவ குருவாகிய மல்லி கார்ச்சுனர் என்பவருக்குத் தானம் செய்தான். அன்றியும், 50 துறவிகளுக்கு உணவுக்காகப் பதினொரு கிராமங்களையும் தானம் செய்தான். இந்தச் செய்தியைக் கூறுகிற இந்தச் சாசனத்தில், பூதிவிக்கிரம கேசரியின் முன்னோர்களான ஏழு தலைமுறையில் இருந்தவர்களின் செய்திகளும் கூறப்படுகின்றன. இந்தச் செய்திகள் பழைய சரித்திர வரலாற்றினைக் கூறுகிறபடியினால் மிகவும் உபயோகம் உள்ளவை.

இந்தச் சாசனத்தின் முதல் பகுதியும் கடைசிப் பகுதியும் அழிந்து விட்டன. இந்த மூவர்கோவில் சாசனத்தை முதன்முதல் கண்டுபிடித்த வெங்கையா அவர்கள் 1907-8 ஆம் ஆண்டு, சென்னை எபிகிராபி அறிக்கையில் வெளியிட்டார். பிறகு இந்தச் சாசனம் புதுக்கோட்டை

சாசனங்கள் என்னும் நூலில் 14-ஆம் எண் சாசனமாக வெளியிடப்பட்டது.[1] சரித்திரப்பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கீழ்நாட்டு ஆராய்ச்சி என்னும் ஆங்கில வெளியீட்டில், 1933-இல் இந்தச் சாசனத்தை வெளியிட்டதோடு இதன் கருத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.[2]

நமது ஆராய்ச்சிக்கு இந்தச் சாசனம் பெரிதும் வேண்டியதாயிருக்கிறது. ஆகையினால், இந்தச் சாசனக் கருத்தைத் தமிழில் தருகிறேன்.

**கொடும்பாளுர் சாசனம் - தமிழாக்கம்**

............பாண்டியனுடைய யானைக் கூட்டத்தை வென்றவன்............

1. இவன் வழியில், மழவரை வெற்றிகொண்ட புகழ்பெற்ற **வீரதுங்கனான பிரவீரஜித்து இ**வனுக்கு மகனாகப் பிறந்தான். இவனுக்கு அதிவீர அநுபமன் என்பவன் பிறந்தான். இவனுக்குச் **சங்ககிருத்து** என்பவன் பிறந்தான். இவனுக்குப் பிறந்தவன், இளவயதிலே பாம்புகளோடு வளர்ந்து புகழ்பெற்ற **நிருபகேசரி** ஆவன். இவன் மகன் வாதாபியை வென்ற **பரதுர்க்கமர்த்தனன்** என்பவன்.

2. இவனுடைய மகன், திவ்விய புகழொளி பெற்றவனும், அதிராஜ மங்கலத்தில் சளுக்கியனை வென்ற (கொன்ற?) வனுமாகிய **சமராபிராமன்** என்பவன்.

3. இவன் மகன் யதுவம்சத்தின் கொடிபோன்றவனான, தன் பெயருக்கேற்றபடி இணையற்றவனான அநுபமன் என்பவன். இவன் சோழ அரசன் மகளை மனைவியாகப் பெற்றவன். இவள், திருமாலின் மனைவி திருமகளைப் போன்றும், பிரமன் மனைவி கலைமகளைப் போன்றும், அரனுடைய மனைவி மலைமகளைப் போன்றும் சிறப்பு வாய்ந்தவள்.

---

[1] Inscriptions (Texts) of the Pudukkottai State No.14.

[2] The Kodumbalur Inscription of Vikrama Kesari; Prof. K.A. Nilakanta Sastri P. 1-10. J.O.R. Vol VII - 1933.

4. இவருக்குப் பிறந்தவன் புகழ்பெற்ற **பூதி** என்னும் பெயருடைய **மின்னாமலை** என்பவன். இவன் போரிலே **விக்ரமகேசரி** என்னும் சிறப்புப பெயரைப் பெற்றான்.

5. பல்லவர் சேனையின் இரத்தந் தோய்ந்தபடியினாலே, காவிரி ஆற்றின் நீர் செந்நிறமாயிற்று. மேலும் இந்த வீரன், போரிலே வீர பாண்டியனை வென்று வஞ்சிவேளைக் கொன்றான்.

6. பகைவராகிய யானைக் கூட்டத்தை வென்றபிறகு விக்ரமகேசரி கொடுமபாளூர் நகரத்திலே வாழ்ந்திருந்தான்.

7. புலவர்களுக்குக் கற்பகத் தருவாகவும், அரசரின் கையாகிய தாமரைகளுக்குத் தண்மதியாகவும், மண்மகளுக்கும் திருமகளுக்கும் நாமகளுக்கும் புகழ்மகளுக்கும் தலைவனாகவும் இருந்து இவன் அரசாண்டபோது, கூர்மையானது மகளிர் கண்களிலேயும், நிலையின்மை யானது அவர்களின் இமையிலேயும், கருமையானது அவர்கள் கூந்தலி லேயும், நெருக்கமானது அவர்கள் தனத்திலேயும் காணப்பட்டன. (மற்ற இடங்களில் காணப்படவில்லை)

8. இவனுடைய இரண்டு நல்ல மனைவியர் **கற்றளி, வரகுணை** என்பவர். கற்றளி இரண்டு அழகான பிள்ளைகளாகிய **பராந்தகன், ஆதித்ய வர்மன்** என்பவரைப் பெற்றாள்.

9. தவவொழுக்கத்தில் சிறந்தவரான வித்தியாராசி என்பவரின் சீடரும் அத்ரேய கோத்திரத்தில் பிறந்து வேதங்களைக் கற்று மதுரையில் வசித்து வந்தவருமாகிய புகழ் பெற்ற மல்லிகார்ச்சுனர் என்பவர் ஒருவர் இருந்தார்.

10. தன் பெயரினாலும் தனது இரண்டு மனைவியர் பெயரினாலும் மூன்று விமானங்களை அமைத்து அவற்றில் மகேசுவரரை எழுந்தருளி வித்து இவன் (விக்கிரமகேசரி) அவனுக்கு (மல்லிகார்ச்சுனருக்கு) ஒரு பெரிய மடத்தை அளித்தான்.

11. இந்த யாதவன், காளமுக வழிபாட்டைச் செய்யும் முனிவர் தலைவனுக்கு ஒரு பெரிய மடத்தையும் அதனுடன் சேர்ந்த பதினொரு கிராமங்களையும் கொடுத்தான்.

12. அசித வக்த்ர (காளமுக) துறவிகள் ஐம்பதின் மருக்காகப் பெரிய மடத்தையும்....... சந்தனம், புஷ்பம், அட்சதை, தூபம், தீபம், தாம்பூலம்..... அரசன்......

இந்தச் சாஸனத்திலிருந்து கீழ்க்கண்ட சிற்றரசர், யாதவகுலத்தைச் சேர்ந்த கேளிர், கொடும்பாளூரில் இருந்தார்கள் என்பது தெரிகிறது.

பாண்டியனுடைய யானைப்படையை வென்றவன்.

பெயர் காணப்படவில்லை.

1. பிரவீரஜித்து,

2. வரதுங்கன். (மழவரை வென்றவன்.)

3. அதிவீர அநுபமன்

4. சங்க கிருத்து

5. நிருபகேசரி
(இளமையில் பாம்புகளோடு வளர்ந்தவன்)

6. பரதுர்க்கமர்த்தனன்.
(வாதாபிஜித்)

7. சமராபிராமன்
(சளுக்கியனை அதிராசமங்கலத்தில் வென்றவன், யதுவம்சகேது என்னும் சிறப்புப் பெயருள்ளவன், சோழன் மகளான **அநுபமை** என்பவளை மணந்தவன்)

8. பூதி விக்ரமகேசரி (பல்லவர் சேனையை வென்றவன். பாண்டியனை வென்று வஞ்சிவேளைக் கொன்றவன். **கற்றளி, வரகுணை** என்பவரை மணந்தவன். கற்றளி வயிற்றில் பிறந்தவர்)

பராந்தக வர்மன் ஆதித்ய வர்மன்

# II

இந்தச் சாசனத்தை ஆராய்வோம். முதலில் 5-ஆவது எண்ணில் கூறப்பட்ட நிருபகேசரியை எடுத்துக்கொள்வோம். இதற்கு முன்பு இந்தச் சாசனத்தை ஆராய்ச்சி செய்த வெங்கையா, நீலகண்ட சாஸ்திரி, மீனாட்சி, ஹீராஸ் பாதிரியார், ஆரோக்கியசாமி முதலியவர்கள் நிருபகேசரியைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை. ஏன் ஆராயாமல் விட்டார்களோ தெரிய வில்லை. இவனைப்பற்றிச் சிறப்பான செய்தி கூறப்படுவதால் இவனைப் பற்றி நாம் ஆராய்வோம்.

நிருபகேசரி என்பது அரசர் சிங்கம் என்று பொருள் பெறும். இது, இவனுடைய சிறப்புப் பெயராகத் தெரிகிறது. இவன் இளமையில் பாம்புகளோடு வளர்ந்தான் என்று இந்தச் சாசனம் இவனைப்பற்றிக் கூறு கிறது. இதன் கருத்து என்ன? பாம்புகளோடு இருந்து மனிதன் வாழ முடியுமா? அது இயற்கையா? நிருபகேசரி, சிறுவயதில் பாம்புகளுடன் வளர்ந்தான் என்பதன் பொருள் என்ன?

பாம்பு என்றாலும் நாகம் என்றாலும் ஒன்றே. தென்னிந்தியாவிலே நாகர் என்னும் ஓர் இனத்தார் இருந்தார்கள். அவர்களுக்குப் பாம்பு அல்லது நாகம் அடையாளச் சின்னம். பல்லவ அரசர்களில் ஒருவன், நாக அரசன் மகளை மணஞ்செய்து கொண்டு அரசுரிமையைப் பெற்றான் என்று வரலாறு கூறுகிறது. விஜய நந்திவர்மனுடைய வேலூர்ப் பாளையத்துச் செப்புச் சாசனம், பல்லவ அரசர் வழியில் வந்த வீரகூர்ச்சன் என்பவன், நாக அரசனுடைய மகளை மணஞ்செய்து கொண்டு நாகர் அரசுரிமையைப் பெற்றான் என்று கூறுகிறது.[1] நாகர் சம்பந்தம் பெற்றபடியினாலே, பல்ல வருக்கு நாகர் என்னும் பெயரும் உண்டு எனத் தெரிகிறது.

மேலும், நாகருக்குரிய பாம்புக்கொடியைப் பல்லவ அரசரும் கொண்டிருந்தார்கள். காஞ்சீபுரத்து வைகுண்டபெருமாள் கோயிலைக் கட்டிய இரண்டாம் நந்திவர்மனான பரமேசுவரவர்மன் பாம்புக் கொடியையுடையவன் என்று திருமங்கை ஆழ்வார் கூறுகிறார்.

---

1. S.I.I. Vol.II p. 501 - 517.

''தேம்பொழில் குன்றெயில் தென்னவனைத்
திசைப்பச் செருமேல் வியந்து அன்றுசென்ற
பாம்புடைப் பல்லவர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகர மதுவே.''

என்று கூறுகிறார்.[1]

இதனால் பல்லவருக்குப் பாம்புக்கொடி உண்டென்பது தெரிகிறது. அன்றியும் நாகர் (பாம்பர்) என்னும் பெயரும் அவருக்கிருந்ததென்பது விளங்குகிறது. கொடும்பாளூர் அரசனான நிருபகேசரி, இளமையில் **பாம்புகளோடு வளர்ந்தான்** என்று கூறப்படுவதன் கருத்து, அவன் **பல்லவர் குடும்பத்தில் வளர்ந்தான்** என்பதாகும். பல்லவ இராச்சியத்தின் அருகில் இருந்த கொடும்பாளூர் சிற்றரசர், பல்லவரோடு நட்புடையவராய் இருந்தனர். ஆகவே சங்ககிருது தன் மகனான நிருபகேசரியைப் பல்லவர் அரண்மனையில் வளரவிட்டான் என்பதனால் அவன் பல்லவருடன் நட்பு முறையில் இருந்தான் என்பது தெரிகிறது. சங்ககிருது, பல்லவ அரசனான சிம்ம விஷ்ணுவின் காலத்திலும், நிருபகேசரி முதலாம் மகேந்திவர்மன் காலத்திலும் இருந்தவராதல் வேண்டும். எனவே, நிருபகேசரி தனது இளமையில் மகேந்திரனுடன் வளர்ந்தான் போலும்.

நிருபகேசரியின் மகனான பரதுர்க்கமர்த்தனன் (பகைவர் கோட்டையை அழிப்பவன் என்பது பொருள்.) வாதாபிஜித் (வாதாபி நகரத்தை வென்றவன்) என்று கூறப்படுகிறான். எனவே இவன், மாமல்லனான நரசிம்மவர்மன் புலிகேசியின் வாதாபி நகரத்தின் மேல் படையெடுத்தபோது அவனுடன் வாதாபிக்குச் சென்று அப்போரில் கலந்துகொண்டு அந்நகரை வென்றான் என்பது தெரிகிறது.

இவன் மகன் சமராபிராமன் (போர் செய்வதில் உவகை கொள்பவன்), அதிராசமங்கலத்தில் சளுக்கியனைக் கொன்றவன் (வென்றவன்) என்று கூறப்படுகிறான். ''அதிராஜமங்கலாஜௌ யோ நிஜகான சளுக்கிம்'' என்பது வாசகம். இதில் நிஜகான என்னும் வினைச்சொல்லுக்குக் கொன்றான் என்றும் எதிர்த்தான் என்றும் இரண்டு பொருள் உண்டு. இவ்விரண்டு

[1] 2-ஆம் பத்து. 9-ஆம் திருமொழி. 5

பொருள்களில் கொன்றான் என்பதே இங்குக் கொள்ளத்தகுந்தது. ஏனென்றால் வின்சன் ஸ்மித் முதலிய சரித்திர ஆசிரியர்கள், இரண்டாம் புலிகேசி பல்லவ நாட்டின் மேல் படையெடுத்து வந்தபோது போரில் கொல்லப்பட்டான் என்று எழுதுகிறார்கள். ஆகையினாலே, சமராபிராமன் சளுக்கியனை (இரண்டாம் புலிகேசியைக்) கொன்றான் என்று கூறுவதே பொருத்தமானது.

இதனால், பரதுர்க்கமர்த்தனனும் அவன் மகனான சமராபிராமனும் மாமல்லனான முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் இருந்தவர் என்பதும், மகனான சமராபிராமன் புலிகேசியைப் போரில் கொன்றான் என்பதும் தகப்பனான பரதுர்க்கமர்த்தனன் வாதாபி போரில் கலந்து கொண்டான் என்பதும் தெரிகின்றன.

புலிகேசியின் மகனான முதலாம் விக்கிரமாதித்யனின் கர்னூல் சாசனங்களில், தன் தந்தையாகிய புலிகேசியை மூன்று அரசர்கள் சேர்ந்து தோல்வியடையச் செய்தார்கள் என்று கூறுவது இங்கு நினைவுகொள்ளத் தக்கது. இரண்டாம் புலிகேசியை வென்ற மூன்று அரசர்கள் யாவர்? மாமல்ல னான நரசிம்மவர்மன் ஒருவன்; அவனுடன் தங்கியிருந்த இலங்கை மன்னனான மானவம்மா என்பவன் இரண்டாமவன்; கொடும்பாளூரை அரசாண்ட யதுகுலவேள் (தந்தையும் மகனுமான பரதுர்க்கமர்த்தனனும் சமராபிராமனும். இவர் இருவரும் ஒரே குடும்பத்தவர் ஆகையால் இருவரையும் ஒருவராகக் கொள்க.) மூன்றாமவன்.

சமராபிராமன், வாதாபிகொண்ட நரசிம்மவர்மனுக்குப் பிறகும், இரண்டாம் மகேந்திரவர்மன் முதலாம் பரமேசுவரவர்மன் ஆகிய பல்லவ அரசர் காலத்திலும் இருந்தவனாகத் தெரிகிறான். இவனைப்பற்றிய இன்னொரு சிறப்பான செய்தி என்னவென்றால், இவன், சோழன் மகளான அனுபமை என்பவளை மணஞ்செய்து கொண்டான் என்பதே. முடியுடை வேந்தராகிய சேர சோழ பாண்டியர், சிற்றரசராகிய வேளிரிடம் பெண் கொள்வது மரபு; ஆனால் வேளிருக்குத் தம் பெண்ணைக் கொடுப்பதில்லை. முடியுடை மன்னருக்குப் பெண்கொடை கொடுப்பவர் கேளிர் என்பது தொன்றுதொட்டு வந்த வழக்கம். இதனை நச்சினார்க்கினியர் தொல் காப்பியப் பொருளதிகார உரையில் கூறுகிறார்.

இந்தப் பழைய வழக்கத்துக்கு மாறாகச் சிற்றரசனும் வேளிர் மரபைச் சேர்ந்தவனுமாகிய சமராபிரமனுக்குச், சோழன் தன் மகளை மணஞ்செய்து கொடுத்தான் என்று கொடும்பாளூர்ச் சாசனம் கூறுகிறது. இந்த மாறு தலுக்குக் காரணம் என்ன? இக்காலத்தில் சோழமன்னர், பல்லவ அரசருக்குக் கீழ்ப்பட்டு அவருக்கு அடங்கியிருந்தனர். அதாவது முடியுடை மன்னர் வழியில் வந்தவராக இருந்தும் சோழர் பல்லவருக்குக் கீழ்ப் பட்டிருந்தனர். ஆனால், முடியுடை வேந்தரல்லாத சிற்றரசராகிய கொடும்பாளூர் வேளிர், பல்லவருக்கும் பாண்டியருக்கும் கீழடங்காமல் சுதந்தரராக வாழ்ந்திருந்தார்கள். அன்றியும் பல்லவ அரசருக்கு நண்பர் களாக அவரைச்சார்ந்து பெருமை பெற்றிருந்தனர். ஆகவே, பல்லவரின்கீழ் சிற்றரசனாக இருந்த சோழன் தன் மகளைச் சமராபிராமனுக்கு மணஞ் செய்வித்தான் போலும்.

சமராபிராமன் மகன் பூதிவிக்ரமகேசரியும் சோழர் குடும்பத்தில் மணஞ் செய்து கொண்டவனாகத் தெரிகிறான். இவனுக்கு முன்னர் மூன்று தலைமுறையில் இருந்தவர்கள், பல்லவருடன் நண்பராக இருந்திருக்க, இவன் பல்லவரோடு பகைத்து அவர்கள் சேனையை வென்றான் என்று சாசனம் கூறுகிறது. பூதிவிக்கிரமகேசரி, இரண்டாம் நரசிம்மவர்மனான இராஜசிம்மன் காலத்தில் இருந்தவனாதல் வேண்டும். இவன் பல்லவரைப் பகைத்தபடியினால், இவனுடைய இரண்டாம் பாட்டனான நிருபகேசரி பல்லவ அரசருடன் வளர்ந்தான் என்று கூறாமல், பல்லவர்மீது இவனுக் கிருந்த வெறுப்புத் தோன்றும்படி பாம்புகளோடு வளர்ந்தான் என்று இவனுடைய கொடும்பாளூர் சாசனம் கூறுகிறது போலும்.

## III

பூதிவிக்கிரமகேசரியின் கொடும்பாளூர்ச் சாசனத்தை ஆராய்ந்தவர் களில் சிலர் தவறான கருத்தையும் வெறும் யூகத்தையும் ஆதாரமாகக் கொண்டு பூதிவிக்ரமகேசரி கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இருந்தவன் என்று முடிவுகட்டியுள்ளனர்.[1] ஆனால், வேறு சில ஆராய்ச்சியாளர்கள் பூதி

---

1. Epi. Rep. Madras. G.O. No. 574. 17th July 1908. P. 87-89; J.O.R. Madras Vol VII P.1-10.

விக்கிரமகேசரி கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தவர் என்பதே ஆராய்ச்சிக்குப் பொருத்தமாக இருக்கிறது.

பூதிவிக்கிரமகேசரி கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இருந்தவன் என்று கூறுவோர் என்ன காரணம் காட்டுகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

1. விக்கிரமகேசரியின் கொடும்பாளூர்ச் சாசன எழுத்து கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் காணப்படுவதனாலே, விக்ரமகேசரி கி.பி.10-ஆம் நூற்றாண்டில் இருந்தவனாதல் வேண்டும் என்பது இவர்கள் கருத்து.

இந்தச் சாசனத்தின் முன்பகுதி அழிந்துவிட்டது; பின்பகுதியும் அழிந்துவிட்டது. எனவே, இதுதான் மூல சாசனமா என்பதில் சந்தேகம் தோன்றுகிறது. இது, பழைய சாசனத்தின் பிரதியாகப் பிற்காலத்தில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக இருக்கக்கூடும் அல்லவா? ஆகவே இது மூல சாசனமா அல்லது பிற்காலத்துப் படி எழுத்துச் சாசனமா என்பது தெரியாத நிலையில், வெறும் எழுத்தின் சான்றுகொண்டு காலத்தைத் தீர்மானிப்பது தவறு. பழைய சாசனங்களைப் பிற்காலத்தில் படி எடுத்துப் புதுப்பிக்கிற வழக்கம் உண்டு. உதாரணமாக நந்திவர்மன் III காலத்துச் சாசனத்தைப் பிற்காலச் சோழர் படி எடுத்து எழுதிவைத்திருக்கிறார்கள். 144 of 1928-29; S.I.I. Vol. XII. No. 55. மூன்றாம் நந்தியின்மற்றொரு சாசனத்தையும் பிற்காலச் சோழர் படி எடுத்து எழுதி வைத்திருக்கிறார்கள்; 480 of 1954 No. 58 S.I.I. Vol. XII. எனவே, முற்பகுதியும் கடைப் பகுதியும் மறைந்துபோன கொடும்பாளூர்ச் சாசனத்தைக் கி.பி.10-ம் நூற்றாண்டுச் சாசனம் என்று கூறுவது தவறு. சாசனத்தில் கூறப்படும் செய்திகள் கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுச் செய்தியாக இருப் பதனாலே இந்தச் சாசனம் பழைய சாசனத்தின் படியாக இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

2. பூதிவிக்ரமகேசரி, வீரபாண்டியன் என்பவனை வென்றான் என்று இச் சாசனம் கூறுகிறது. இந்த வீர பாண்டியன், இராஜராஜ சோழனுடைய மூத்த தமையனான ஆதித்ய கரிகாலன், தன் இளமைப்பருவத்தில் போர் செய்த வீரபாண்டியன் என்று சிலர் யூகிக்கிறார்கள். இந்த யூகத்தை ஆதாரமாகக் கொண்டு பூதிவிக்கிரமகேசரி, ஆதித்தியன் கரிகாலன் இருந்த

கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் (கி.பி. 970க்குமுன்) இருந்தவன் என்று கூறுகிறார்கள்.

இந்த முடிவும் ஏற்கத்தக்கதன்று. ஏனென்றால், வெறும் பெயர் ஒற்றுமையைமட்டும் சான்றாகக் கொண்டு இது முடிவு செய்யப்பட்டது. பூதிவிக்ரமகேசரி போர் செய்த வீரபாண்டியனும், ஆதித்த கரிகாலன் போர் செய்த வீரபாண்டியனும் ஒரே ஆளா? வீரபாண்டியன் என்னும் பெயருள்ள வேறு பாண்டியரும் இருந்திருக்கக்கூடும் அல்லவா? இருவரும் ஒரே பாண்டியனுடன் போர்செய்தார்கள் என்பதற்குச் சான்று என்ன? வீர பாண்டியன் என்னும் பெயர் ஒற்றுமை மட்டுந்தானே சான்றாக இருக்கிறது? எனவே, பெரிதும் ஐயத்திற்கிடமானதும் தெளிவான சான்று இல்லாதது மான இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

3. பூதிவிக்ரமகேசரியின் பாட்டனான பரதுர்க்கமர்த்தனன், வாதா பிஜித் (வாதாபிநகரத்தை வென்றவன்) என்னும் சிறப்புப் பெயருடையவன் என்று கொடும்பாளூர் சாசனம் கூறுகிறது. வாதாபிநகரம் கி.பி. 642-இல் நரசிம்மவர்மனால் வெல்லப்பட்டது என்று சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கண்டறிந்து முடிவுகட்டிய உண்மை. அந்த வாதாபிப்போரில், கொடும் பாளூர் அரசன் பரதுர்க்கமர்த்தனனும் கலந்துகொண்டு போரைவென்று வாதாபிஜித் என்னும் சிறப்புப்பெயரைப் பெற்றான். ஆனால் பூதிவிக்ரம கேசரி கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இருந்தவன் என்று சாசன எழுத்தை மட்டும் ஆதாரமாகக்கொண்டு முடிவு செய்து கொண்ட சிலர், பூதி விக்ரமகேசரியின் பாட்டனான பரதுர்க்கமர்த்தனன் வாதாபிப் போரை கி.பி. 642-இல் வென்று வாதாபிஜித் என்று பெயர்பெற்றான் என்று கூறினால், அது இவர்கள் காட்டும் 10-ஆம் நூற்றாண்டுக்குப் பொருந்தவில்லை யாகையால், பரதுர்க்கமர்த்தனன் செய்த வாதாபிப்போர் பிற்காலத்தில் நடந்த இன்னொரு வாதாபிப் போராக இருக்கவேண்டும் என்று கூறு கிறார்கள். அஃதாவது, இரண்டு வாதாபிப்போர் நடந்ததென்றும் முதலாவது போர், மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்திலும், இரண்டாவது போர் 9-ஆம் நூற்றாண்டிலும் நடந்ததென்று இவர்கள் யூகிக்கிறார்கள். இவ்வாறு இவர்கள் யூகிக்கிறார்களே தவிர சாசனங்களோ சரித்திரமோ இலக்கியமோ யாதொரு சான்றையும் இவர்கள் காட்டவில்லை. ஆதாரமற்ற வெறும் யூகத்தைமட்டும் சான்றாகக் கொண்டு சரித்திரம் எழுதுவது பைத்தியக்காரத் தனமாகும்.

பூதிவிக்கிரமகேசரி கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இருந்தவன் என்று சரித்திர ஆசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் எழுதியதற்கு ஏற்பவே, அவருடைய மாணவியாகிய டாக்டர் மீனாட்சியும் ''பல்லவர் ஆட்சி'' என்னும் நூலில் எழுதுகிறார்.[1] இவரும் சான்றுகள் இல்லாமலே யூகம் செய்துகொண்டு எழுதுகிறார். தெள்ளாரெறிந்த நந்திவர்மன் காலத்தில் இரண்டாவது வாதாபிப்போர் நடந்ததாக இவர் கூறுகிறார். குறுகோடு என்னும் குறுகோட்டையை நந்திவர்மன் வென்றதை நந்திக்கலம்பகம் கூறுகிறது. இதைச் சுட்டிக்காட்டி, நந்திவர்மன் கீழ் விக்ரமகேசரியின் பாட்டனான பரதுர்க்கமர்த்தனன் சிற்றரசனாக இருந்து குறுகோட்டைப் போரில் கலந்திருக்கக்கூடும் என்று இவர் யூகிக்கிறார். இராஷ்டிரகூட அரசனுடன் நிகழ்ந்த அந்தக் குறுகோட்டைப்போரிலே, ராஷ்டிரகூடருக்கு உதவியாக சளுக்கிய அரசனும் வந்திருக்கக் கூடும். அப்படி உதவிக்கு வந்த சளுக்கிய அரசனைப் பரதுர்க்கமர்த்தனன் கொன்றிருக்கக் கூடும். அதனால் அவனுக்கு வாதாபிஜித் என்று பெயர் வந்திருக்கக்கூடும். அல்லது, குறுகோட்டையை வென்றபிறகு, வாதாபி நகரத்தில் சென்று போர்செய்து அந் நகரை வென்றிருக்கக் கூடும். இவ்வாறு எல்லாம் இந்த ஆசிரியர் பொறுப்பில்லாமல் ஆதாரங்களையும் சான்றுகளையும் காட்டாமல் மனம் சென்றபடியெல்லாம் யூகித்துக் கொண்டு போகிறார்.

இவர் யூகிக்கும் யூகமும் ஒப்புக்கொள்ளத்தக்கதாயிராமல் முரண்படுகிறது. குறுகோட்டைப்போரை வென்றால் ''குறுகோடுஜித்'' என்று பெயர் ஏற்படுமே தவிர வாதாபிஜித் என்று பெயர் உண்டாகக் காரணம் இல்லை அல்லவா? ஆகவே, மூன்றாம் நந்திவர்மன் குறு கோட்டையை வென்றபிறகு, வாதாபி நகரத்தையும் வென்றான் என்று இவர் யூகிக்கிறார் இதற்கு யாதொரு சான்றும் கிடையாது. நந்திக்கலம்பகம், நந்தி வர்மன் வாதாபியை வென்றான் என்று எங்கும் கூறவில்லை, அன்றியும் சாசனங்களும் இல்லை. இவ்வாறு இல்லாத ஒன்றைக் கற்பித்துக் கொள்கிறார் இந்த ஆசிரியர்.

கொடும்பாளூர்ச் சிற்றரசர் கி.பி. 8ம் நூற்றாண்டில், முத்தரையரால் அடக்கப்பட்டுப் பெருமை குன்றியிருந்தனர். ஆகவே, அவர்கள் 8-ம்

---

[1] Pallava Administration Etc. by C. Minakshi, P. 303.

நூற்றாண்டுக்குப் பின்னர் நடந்த குறுகோட்டைப்போரில் கலந்து கொண்டனர் என்று கூறுவதே பொருந்தாது. 8, 9-ஆம் நூற்றாண்டுகளில், பல்லவருக்கு உதவியாக இருந்த சிற்றரசர் முத்தரையர் என்பது சாசனங்களினால் தெரிகிறது. முத்தரையர், கொடும்பாளூர் அரசரை வென்று அடக்கியபிறகே சிறப்படைந்தனர் என்பதும் அறியத்தக்கது.

இவற்றையெல்லாம் ஆராயும்போது, கொடும்பாளூர் அரசன் பரதுர்க்கமர்த்தனன் வாதாபிநகரப் போரில் கலந்து கொண்டது, மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில் நிகழ்ந்த வாதாபிப்போரிலே தான் என்பது தெளிவாகிறது.

கி.பி. 642-இல், இரண்டாம் புலிகேசி காலத்தில், பல்லவ நரசிம்ம வர்மன் நடத்திய வாதாபி போருக்குச் சாசனச் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் உள்ளன. அதன்பிறகு மற்றொரு வாதாபிப் போர் நடந்ததாக இதுவரையில் யாதொரு சான்றும் கிடையாது. ஆனால், மேற்கூறியவர்கள் மட்டும் இரண்டாவது வாதாபிப் போர் நடந்ததாக யூகிக்கிறார்கள். பேரனான பூதி விக்ரம கேசரியை கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இருந்தவன் என்று இவர்கள் முடிவு செய்துவிட்டபடியால், பாட்டனான பரதுர்க்க மர்த்தனன் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இருந்து வாதாபிப் போரை வென்றான் என்று கூறினால் உலகம் நகைக்கும் அல்லவா? ஆகவே, ஆதாரம் இல்லாவிட்டாலும் பிற்காலத்தில், இரண்டாவது வாதாபிப் போர் நடந்திருக்கவேண்டும் என்று இவர்கள் யூகித்துக் கற்பனை செய்து கொண்டார்கள். நரசிம்மவர்மன் காலத்தில், கி.பி.7-அம் நூற்றாண்டில் நடந்த வாதாபிப் போரில், வாதாபி ஜித்தாகிய பரதுர்க்கமர்த்தனன் இருந்தான் என்று சொல்ல இவர்களுக்கு விருப்பம் இல்லை. ஆகவே ஆதாரம் இல்லாத இரண்டாவது வாதாபிப் போரை இவர்கள் கற்பனை செய்து எழுதிவைத்து விட்டார்கள். இவர்கள் கற்பனையை, உண்மையை நாடுவோர், எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? கொடும்பாளூர் மூவர் கோயில் சாசனம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டுச் செய்திகளைக் கூறுகிறது என்று [1] ஹீராஸ் பாதிரியாரும் ஆரோக்கியசாமியும் கூறுகிற முடிபு சரியான தென்று கொள்கிறோம்.

---

1. J.R.A.S. 1934.

4. வெறும் யூகம் ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு சரித்திர ஆராய்ச்சி செய்கிற இவர்கள் மேலும் ''ஆராய்ந்து'' முடிவு கூறுகிறார்கள். இவர்கள் கூறுவது வருமாறு:

இராஜகேசரி வர்மன் காலத்துச் சாசனமும் பரகேசரிவர்மன் காலத்துச் சாசனமும் [2] இளங்கோவேள் ஆன மறவன்பூதி என்பவர் பெயரைக் கூறு கின்றன. இவற்றில் ஒன்று மறவன் பூதியின் மனைவியான கற்றளிப் பிராட்டியைக் கூறுகிறது. இவற்றில் பூதி, கற்றளி என்னும் பெயர்கள் கூறப்படுவதால், பூதி விக்ரம கேசரிக்கு இளங்கோ வேள் மறவன் பூதி என்னும் பெயரும் உண்டு என்றும், மறவன் பூதியின் மனைவி கற்றளிப் பிராட்டி, பூதி விக்ரம கேசரியின் மனைவி கற்றளி என்றும் பெயர் ஒற்றுமை ஒன்றை மட்டும் கொண்டு முடிவு கட்டிவிட்டார்கள். பூதிவிக்கிரம கேசரி வேளிர் குலத்தவன் என்பதும் யதுவம்சத்தவன் (யாதவ வம்சத்தவன்) என்றும் கொடும்பாளூர்ச் சாசனம் கூறுகிறது. பெயர் ஒற்றுமை மட்டும் ஆதாரமாகக் கொண்டு ஆராயும் இவர்கள், யதுவம்சத்து பூதிவிக்ரம கேசரி மறவ வம்சத்தைச் சேர்ந்தவன் என்றும் தீர்மானம் செய்துவிட்டார்கள் [3] இதுமட்டுமா?

இன்னொரு சாசனம் [4] செம்பியன் இருக்குவேள் என்பவரையும் அவர் மனைவி வரகுணை என்பவரையும் கூறுகிறது. பூதிவிக்ரம கேசரியின் மற்றொரு மனைவியின் பெயர் வரகுணை யாகையினாலே, இந்தச் சாசனத்தில் கூறப்படும் வரகுணை, பூதிவிக்ரம கேசரியின் மனைவிதான் என்று பெயர் ஒற்றுமை ஒன்றுமட்டும் சான்றாகக் கொண்டு, பூதிவிக்ரம கேசரிக்குச் செம்பியன் இருக்குவேள் என்னும் பெயரும் உண்டு என்று யூகித்துக் கொண்டு அதையே முடிவுகட்டி விட்டார்கள்.

வேறு இரண்டு சாசனங்கள் [5] மதுராந்தக இருக்குவேளான ஆதித்தன் விக்ரம கேசரி என்பவன் பெயரைக் கூறுகின்றன. இப் பெயரில் விக்ரம கேசரி என்று இருப்பதனாலே, இந்த ஆளும் பூதிவிக்ரம கேசரியே என்று

---

2. Nos 258 and 273 of 1903 No. 306 of 1903.
3. The date of bhuti vikarama kesari, K.A. Nilakanda Sastri J.R.A.S. July, 1935.
4. 377 of 1914.
5. 335 and 336 of 1904.

முடிவு கட்டிவிட்டார்கள். இவ்வாறு பெயர் ஒற்றுமை மட்டும் இவர்களுக்குச் சான்றாக உள்ளன!

வரகுணை, கற்றளி என்னும் பெயர் உள்ள பெண்கள் எல்லாரும் பூதிவிக்ரம கேசரியின் மனைவியராகத்தான் இருக்கவேண்டுமோ? வரகுணை, கற்றளி என்னும் பெயர்கள் வேறு பெண்களுக்குச் சூட்டப்பட வில்லையா? பூதி என்னும் பெயரும், விக்ரம கேசரி என்னும் பெயரும் வேறு எவருக்கும் உரியனவன்றோ? கொடும்பாளூர்ச் சாசனத் தலைவனாகிய பூதிவிக்ரம கேசரிக்கு மட்டுந்தான் இப்பெயர்கள் உரியனவோ? இவ்வாறு சாசனங்களில் காணப்படுகிற இப்பெயர்களையெல்லாம் ஒருவரைத்தான் குறிப்பிடுகின்றன என்று முடிபோடுவது என்ன ஆராய்ச்சியோ? இந்த ஆராய்ச்சியை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

முக்கியமாக இரண்டு செய்திகளைக் கவனிக்கவேண்டும். விக்ரம கேசரியின் இரண்டாம் பாட்டனான நிருப கேசரி, இளமைப் பருவத்தில் பாம்புகளோடு வளர்ந்தான் என்று சாசனம் கூறுகிறது. இந்தச் செய்தியைச் சரித்திரக்காரர்கள் எல்லோரும் இதுவரையில் ஆராயாமலே விட்டு விட்டார்கள். நாம் மேலே கூறியபடி பாம்புகளோடு (நாகருடன்) வளர்ந்தான் என்பதற்குப் பல்லவ அரசருடன் வளர்ந்தான் என்பது கருத்து. பூதி விக்ரம கேசரி கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இருந்தான் என்றால் அவனுடைய இரண்டாம் பாட்டனான விக்ரம கேசரி கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் இருந்தவனாதல் வேண்டும். 9-ஆம் நூற்றாண்டில் பல்லவ அரசர் ஆதிக்கம் ஆட்டம் கண்டுவிட்டது. வீழ்ச்சியடையும் நிலையில் இருந்த பல்லவருடன் கொடும்பாளூர் விக்ரம கேசரி தொடர்பு கொண்டிருந்தான் என்பது பொருந்தாது. பல்லவர் சிறப்புற்றிருந்த காலத்தில் விக்ரம கேசரி, பல்லவருடன் தொடர்பு கொண்டு அவர்களோடு வளர்க்கப்பட்டான் என்பதே பொருத்தமாகும். பல்லவர் சிறப்பு உச்சநிலையில் இருந்தது கி.பி. 7-ஆம் நூற்றாண்டில். ஆகவே, விக்ரம கேசரி கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இருந்தவனாதல் வேண்டும்.

இரண்டாவதாகக் கருதவேண்டியது இது: பூதிவிக்ரம கேசரியின் பாட்டனான பரதுர்க்க மர்த்தனன், வாதாபிஜித் (வாதாபியை வென்றவன்) என்று சாசனம் கூறுகிறது. சளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியினுடைய தலைநகரமான வாதாபி நகரத்தை வென்றவன் நரசிம்மவர்மன். இவன் இந் நகரத்தை கி.பி. 642-இல் வென்றான். இதனால் இவனுக்கு வாதாபி

கொண்ட நரசிம்மவர்மன் என்று சிறப்புப் பெயர் ஏற்பட்டது. இவனுடைய சேனைத் தலைவனாக இருந்தவர் பரஞ்சோதி எனப்படும் சிறுத்தொண்ட நாயனார். இந்தப் போரில், பரதுர்க்க மர்த்தனனும் கலந்துகொண்டு வாதாபி நகரத்தை வென்றதில் பெரும் பங்கு எடுத்திருக்கக் கூடும். ஆகையால் இவனுக்கு வாதாபிஜித் என்னும் பெயர் ஏற்பட்டிருக்கவேண்டும். வாதாபிப் போரில், நரசிம்மவர்மன் நேரில் கலந்து கொள்ளவில்லை. தன் சேனைத் தலைவனாகிய பரஞ்சோதியாரை அனுப்பினான். பல்லவ அரசனின் நண்பர்களாக இருந்த கொடும்பாளூர்ச் சிற்றரசனான நிருப கேசரியும், வாதாபிப் போரில் கலந்து கொண்டிருக்க வேண்டும். பரதுர்க்க மர்த்தனனின் தந்தையான நிருபகேசரி, பல்லவருக்கு நெருங்கிய நண்பனாய் நாக குலத்தவராகிய பல்லவரோடு வளர்ந்தான் என்று மேலே கூறினோம். எனவே, தந்தையாகிய நிருப கேசரி பல்லவ அரசருக்கு நெருங் கிய நண்பனாக இருந்ததுபோலவே மகனான பரதுர்க்க மர்த்தனனும் பல்லவ அரசருக்கு நண்பனாக இருந்து நரசிம்மவர்மன் நிகழ்த்திய வாதாபிப் போரில் கலந்துகொண்டு அதனை வென்று வாதாபிஜித் என்னும் சிறப்புப் பெயரையடைந்தான் என்று கருதுவது உண்மைக்கும் யுக்திக்கும் பொருந்துகிறது.

ஆகவே, பரதுர்க்க மர்த்தனனாகிய வாதாபிஜித், நரசிம்மவர்மன் காலத்தில் இருந்தவன் என்பதும் அவன் கி.பி. 642-இல் நிகழ்ந்த வாதாபிப் போரில் கலந்துகொண்டு அப்போரை வென்றவன் என்பதும் தெளிவாகிறது. எனவே, அவன் பேரனாகிய பூதி விக்ரம கேசரியும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவனாவான் என்பது தெரிகிறது. பிற்காலத்தில் மற்றொரு வாதாபிப் போர் நடந்திருக்கக் கூடும் என்று சிலர் கருதுவதற்குச் சான்றுகள் ஒன்றேனும் இல்லை.

பேர்பெற்று புகழுடன் இருந்த கொடும்பாளூர் அரசர்கள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலே, முத்தரைய மரபினரால் வெல்லப்பட்டுப் பெருமை குன்றிவிட்டார்கள். ஆகவே, கொடும்பாளூர் அரசரில் சிறப்புடன் இருந்த பூதிவிக்ரம கேசரி கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலே இருந்திருக்க முடியாது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அல்லது கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பூதிவிக்ரம கேசரி இருந்திருக்கவேண்டும் என்று கருதுவது தவறாகாது.

ஹீராஸ் பாதிரியாரும், ஆரோக்கிய சாமியும் இக் கருத்தைக் கொண்டிருப்பதும் கருதத்தக்கது. எழுத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டு மூவர் கோயில் சாசனம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு என்று கூறுவது ஏற்கத் தக்கதல்ல. எழுத்துக்களைப் பற்றிய ஆராய்ச்சி, நமது நாட்டைப் பொறுத்த வரையில், இன்னும் முற்றுப் பெறவில்லை. ஆகவே எழுத்துக்களை மட்டும் ஆதாரமாகக் கொண்டு காலத்தை ஆராய்வது சிறந்ததாகாது. சாசனத்தில் கூறப்பட்ட மற்ற விஷயங்களையும் நோக்க வேண்டும். இந்தச் சாசனம் முதலும் கடைசியும் இல்லாதபடியினாலே இது மூலசாசனம் என்று எப்படிக் கருதக்கூடும்? மூல சாசனத்திலிருந்து பிற்காலத்தில் எழுதப்பட்ட படியாக இருக்கக்கூடும் அல்லவா?

எனவே, மூவர் கோயில் சாசனத்தில் கூறப்படுகிற கொடும்பாளூர் அரசராகிய பரதுர்க்க மர்த்தனனும் (வாதாபிஜித்), அவன் மகன் சமராபிரானும், மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில் இருந்தவர் என்பதும் பல்லவ அரசன் சார்பாகச் சளுக்கியருடன் போர் செய்து வாதாபி நகரத்தை வென்றவர் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது.

## 3. யுவான் சுவாங் யாத்திரை குறிப்பு

யுவான் சுவாங் என்னும் சீனயாத்திரிகர், இந்திய தேசத்தில் செய்த யாத்திரையைப் பற்றி எழுதிய குறிப்பிலே, தமிழ் நாட்டைப் பற்றிய குறிப்புக்களைக் கூறுவோம்.

**சுலிய**

"தனகடகத்திலிருந்து யாத்திரிகர் தென்மேற்காக 1000லீ கடந்து சுலியவுக்குச் சென்றார். இந்த நாடு 2400லீ சுற்றளவுள்ள தென்றும் இதன் தலைநகரம் 10 லீ சுற்றளவுள்ளதென்றும் சொல்லப்படுகிறது. இங்கே ஜன நெருக்கமில்லாத காடர்ந்த பிரதேசம் அதிகம். வழிபறிக் கொள்ளைக்காரர் அதிகம். சதுப்பான வெப்பமுள்ள பிரதேசம். ஜனங்கள் பயங்கரமாகவும் துன்மார்க்கராகவும் இருக்கின்றனர். தீர்த்தங்கரரை வழிபடுகிறார்கள். பௌத்த விகாரைகள் பாழடைந்து கிடக்கின்றன. சிலவற்றில் மாத்திரம் பிக்ஷுக்கள் இருக்கிறார்கள். தேவாலயங்களும் அநேக திகம்பர ஆலயங்களும் இருக்கின்றன. தலைநகருக்குத் தென்கிழக்கில் அசோகர் கட்டிய சேதியம் ஒன்று உண்டு..."[1]

[1] On Yuan Chuang's Travels in India By Thomas Watters, Vol. II, P. 224-225.

இதில், தனகடகம் என்று கூறப்படுவது தான்ய கடகம் என்னும் பெயரையுடைய அமராவதி நகரம். இது கிருஷ்ண நதிக்கரையில் இருக்கிறது. இந்த நகரத்திலிருந்து சுலிய நாடு தென்மேற்கில் இருப்பதாகக் கூறப்பட்ட போதிலும் யாத்திரிகன் வரலாற்று நூலில் ஓர் இடத்தில் மேற்கில் என்றும் இன்னொரு இடத்தில் தெற்கில் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. சுலிய என்பது சோட அல்லது சோழ என்பதாகும். கன்னிங்காம் அவர்கள், சுலிய என்னும் இடம் தற்போதய கர்னூல் மாவட்டம் என்று கூறுகிறார்.[1] மேலும் தரணி கோட்டையிலிருந்து (தனகடகம்) மேற்கு தென்மேற்கில் 160 மைலில் உள்ள தென்று கூறுகிறார்.

**திராவிடம்**

''சுலிய நாட்டிலிருந்து கல்லும் காடும் உள்ள 1500 அல்லது 1600 லீ தூரத்தைக் கடந்து த-லொ-பி-து நாட்டுக்கு யாத்திரிகர் சென்றார். இது 6000 லீக்கு மேற்பட்ட சுற்றளவுள்ளது. இதன் தலைநகரம் கஞ்-சிஹ்-பு-லொ என்பது. இது 30லீ சுற்றளவுள்ளது. செழிப்பான நிலவளம் உள்ளது. பூக்களும் பழங்களும் நிறைந்து, உயர்ந்த பொருள்களை விளைவிக் கின்றன. இந் நாட்டுமக்கள் அச்சமற்றவர்களாய் முழுதும் நம்பத்தக்கவர் களாயுள்ளனர். பொதுநலக் கருத்துள்ளவரும் கல்விக்குப் பெருமதிப்புக் கொடுக்கிறவரும் ஆக இருக்கிறார்கள். இவர்கள் பேசும் எழுதும் மொழி மத்திய இந்தியாவின் மொழிக்கு மாறுபட்டது. இங்கு 100க்கு மேற்பட்ட பௌத்தப் பள்ளிகள் உள்ளன. இவற்றில் 1000க்கு மேற்பட்ட பிக்ஷுக்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஸ்தவிர பௌத்தப் பிரிவினர் தேவாலயங்கள் 80க்கு மேற்பட்டவையுள்ளன. இவைகளில் பெரும்பாலும் திகம்பரர் களுக்குரியது. இந்தத் தேசத்திற்கு முற்காலத்தில் புத்தர் பெருமான் அடிக்கடி எழுந்தருளியிருந்தார். இந்தப் பிரதேசத்தில் புத்தர் பெருமான் எங்கெங்கு எழுந்தருளி உபதேசம் செய்து மக்களைப் பௌத்தராக்கினாரோ அங்கங்கெல்லாம், அசோக சக்கரவர்த்தி பள்ளிகளைக் கட்டினார். இந் நாட்டுத் தலைநகரம், தர்மபால பூசா அவர்கள் பிறந்த நகரமாகும்..........''

''தலைநகருக்கு அருகிலே பௌத்த விகாரை யுண்டு. இந்த விகாரை, இந்நாட்டிலே கற்றுத் தேர்ந்த அறிஞர்கள் கூடுகிற இடமாகவுள்ளது. இங்கு 100 அடி உயரம் உள்ளதும், அசோகர் காலத்தில் கட்டப்பட்டதும் ஆன ஒரு

---

1. Ancient geography of India by General Cunningham, P.545.

பள்ளி இருந்தது. இந்த இடத்தில் புத்தர்பெருமான் தீர்தகரரை உபதேசத்தினால் வென்று பெருந்தொகையினரான மக்களைப் பௌத்தராக்கினார். நான்கு புத்தர்கள் முற்காலத்தில் இங்குத் தங்கின இடமும் உண்டு.''[1]

இதில் த-லொ-பி-து என்பது திராவிட என்பதாகும்: அதாவது திராவிட தேசம். கஞ்சிஹ்புலொ என்பது காஞ்சீபுரம்.[2]

யுவான் சுவாங் உடைய வரலாறு காஞ்சீபுரத்தைப் பற்றிய சில செய்திகளைக் கூறுகிறது. அதுவருமாறு:- காஞ்சீபுரம் இலங்கைக்குச் செல்வதற்குரிய ஒரு துறைமுகப்பட்டினமாக இருக்கிறது. இங்கிருந்து இலங்கைக்குப் போக மூன்று நாளாகும். யாத்திரிகர் (யுவான் சுவாங்) இந்நகரத்தைவிட்டு இலங்கைக்குப் போகு முன்னரே, இலங்கை அரசன் இறந்துவிட்டான். அங்குப் பஞ்சமும் குழப்பமும் ஏற்பட்டிருந்தன. அங்கிருந்து 300 பிக்குகள் இந்தியாவுக்கு வந்துவிட்டார்கள். அவர்கள் காஞ்சீபுரத்திற்கு வந்தபோது, சீனயாத்திரிகர் அவர்களைச் சந்தித்து இவ்வாறு கேட்டார்:-

உங்கள் நாட்டிலே பத்தந்தர் (புத்தர்), ஸ்தவிர பௌத்த மதத்தைப் போதித்துத் திரிபிடகத்தையும் யோக சாஸ்திரத்தையும் அருளிச் செய்தார் என்று அறிகிறேன். அவற்றைக் கற்றுக்கொள்ள நான் அங்கே போக விரும்புகிறேன். நீங்கள் ஏன் இங்கு வந்துவிட்டீர்கள்?

அதற்கு அந்தப் பிக்குகள், பஞ்சம் ஏற்பட்டதால் இங்கு வந்துவிட்டதாகவும், அன்றியும் புத்தர் பிறந்து வளர்ந்த ஜம்புத்தீவில் (பாரத நாட்டில்) உள்ள பௌத்த திருப்பதிகளைக்கண்டு வணங்குவதற்காக வந்ததாகவும் கூறினார்கள். மேலும் அவர்கள் சொன்னார்கள். 'எங்களுக்கு மேல் அதிகமாகக் கற்றவர்கள் அங்கு இல்லை. தங்களுக்கு ஏதேனும் தெரிய வேண்டுமானால் எங்களைக் கேட்கலாம்' என்று கூறினார்கள். அதன் மேல் சீன யாத்திரிகர், யோக சாத்திரத்தில் தமக்கிருந்த சில ஐயங்களைப்பற்றி அவர்களிடம் கேட்டார். அதற்கு இலங்கைப் பிக்குகள் கூறிய விடை சீலபத்திரர்[3] கூறியதற்கு மேற்பட்டதாக இல்லை.''

---

[1] p. 226. on Yuan Chwang's Travels in India by Thomas Watters, Vol. II.

[2] P. 548, Ancient geography of India by General Cunningham.

[3] சீல பத்திரர் என்பவர் நளாந்தைப் பல்கலைக் கழகத்தில் இருந்த பேராசிரியர். இவர் சீனயாத்திரிகரான யுவான் சுவாங்ருக்கு வடமொழி கற்பித்த ஆசிரியர்.

**மொ லொ கூட (மலகூட)**

''காஞ்சீபுரத்தை விட்டு சீனயாத்திரிகர் தெற்கே 3000 லீ சென்று மொலெகூட தேசத்தை யடைந்தார். இந்தத் தேசம் 5000 லீ சுற்றளவுள்ள தென்றும், தலைநகரம் 40லீ சுற்றளவுள்ள தென்றும் கூறுகிறார். நிலம் புதர்களடர்ந்த கரம்பாகவும் விளைவில்லாமலும் இருந்தன. இங்கு அதிக வெப்பமாகவும் மக்கள் கருநிறமுள்ளவர்களாகவும் இருந்தனர். அநேக பௌத்த விகாரைகள் இருந்தன. ஆனால் சில விகாரைகள் மட்டும் நன்னிலையில் இருந்தன. பிக்குகள் சொற்பத்தொகையினர் இருந்தனர். வெவ்வேறு பிரிவினருக்குத் தேவாலயங்கள் இருந்தன. முக்கியமாகத் திகம்பரர்கள் அதிகமாக இருந்தார்கள். தலைநகருக்குக் கிழக்குப்புறத்தில் அசோக சக்கரவர்த்தியின் தம்பியாரான மகேந்திரன் கட்டிய பழைய பௌத்த விகாரையின் இடிந்து போன கட்டிடம் இருந்தது. இது புத்தர் பெருமான் உபதேசம் செய்த இடமாகையால், அதை நினைவு கூர்தல் பொருட்டு இது கட்டப்பட்டது. காலப் பழமையுள்ள இந்த இடம். அடியவர் விரும்பிய கோரிக்கையை நிறைவேற்றி வைக்கும் சக்தியுடையது என்று நம்பப்பட்டு, அவ்வாறே இன்றும் தொழப்படுகிறது. இந்தத் தேசத்தின் தெற்கில் கடலுக்கு அருகிலே மொலொய (மலைய)மலை இருந்தது. இம் மலையில் சந்தனமரம் கற்பூர மரம் முதலிய மரங்கள் இருந்தன. இதற்குக் கிழக்கில் பொடலக மலை இருந்தது இதன் உயரமான உச்சியில் செல்லக் குறுகிய பாதை உள்ளதாயும் உச்சியில் தூயநீருள்ள ஏரியொன்று இருந்தது என்றும், அதிலிருந்து அருவியொன்று மலையை 20 தடவை சுற்றிக்கொண்டு கடலில் சென்று விழுந்தது என்றும் கூறப்படுகிறது. ஏரியின்கரையில் தேவாலயம் ஒன்று இருந்ததாகவும் அங்கு குவான் த்ஸுத்ஸாய் பூசா அடிக்கடி சென்ற தாகவும் கூறப்படுகிறது. பூசாவைக் காண்பதற்கு அருவியையும் மலை யையும் அரிதில் கடந்து அடியவர் சென்றார்களென்றும், ஆனால் சிலர் மட்டுந்தான் கோயிலுக்குச் செல்ல முடிந்ததென்றும் கூறப்படுகிறது. மலை யடிவாரத்திலிருந்து பிரார்த்தனை செய்தால் பூசா, சில சமயம் பாசுபத தீர்த்த கரராகவும் சில சமயம் மகேசுவரராகவும் காட்சியளிக்கிறாராம். பொதலக மலைக்கு வடகிழக்கே கடற்கரையோரத்தில் ஒரு நகரம் உண்டு. இது செங்க லொவுக்கு (சிங்களத்துக்கு) அடுத்துள்ள கடலில், இலங்கைக்குச் செல்லும் வழியில்

இருக்கிறது. இங்கிருந்து இலங்கை 300-லீ தென்கிழக்கே உள்ள தென்று கூறுகிறார்கள்.''[1]

இதில் கூறப்பட்ட மலகூடம் என்பது மலையகூடப் பிரதேசமாகிய பாண்டியநாடு. இந்த மலையகூட நாடு என்று சீன யாத்திரிகர் கூறுவது, கிழக்கே தஞ்சாவூர் மதுரை மாவட்டங்களையும், மேற்கே கோயம்பத்தூர் கொச்சி திருவாங்கூர் பிரதேசங்களையும் கொண்டது என்று கன்னிங்காம் கூறுகிறார்.[2]

## 4. பாண்டியன் நெடுமாறன் கால ஆராய்ச்சி

அரிகேசரி மாறவர்மன் என்னும் பாண்டியன் நெடுமாறன் (கூன்பாண்டியன்) காலத்தை ஆராய்வோம். இந்தப் பாண்டியனைத் திருஞான சம்பந்தர் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்துக்கு மாற்றினார். அன்றியும் ஞானசம்பந்தர் சிறுத்தொண்டர் என்னும் பரஞ்சோதியாரின் நண்பர். ஆகவே, ஞானசம்பந்தர், பாண்டியன் நெடுமாறன், சிறுத்தொண்டர் ஆகிய இவர்கள் சமகாலத்தில் வாழ்ந்தவர்ககள். சிறுத்தொண்டராகிய பரஞ்சோதியார், மாமல்லன் நரசிம்மவர்மனுடைய சேனைத்தலைவராக இருந்தவர். இவ்வரசன் பொருட்டுச் சளுக்கிய அரசனான இரண்டாம் புலிகேசியின் தலைநகரமாகிய வாதாவி நகரத்தின்மேல் படையெடுத்துச் சென்று அந் நகரத்தை வென்றார். வாதாபி நகரம் வெல்லப்பட்டது கி.பி. 642-இல். இந்தத் தேதி எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது; ஐயப்பாட்டிற்கு இடமில்லாதது. ஆகவே கி.பி. 642ல் சிறுத்தொண்டர், பாண்டியன் நெடுமாறன், ஞானசம்பந்தர் ஆகிய மூவரும் இருந்தார்கள் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

இம் மூவரில் ஞானசம்பந்தர் வயதில் இளையவர். சிறுத் தொண்டரும் நெடுமாறனும் வயதினால் சம்பந்தருக்கு மூத்தவர்கள். இது எல்லோரும் அறிந்த உண்மை. ஆனால், சரித்திரப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி அவர்கள் எழுதிய ''பாண்டிய இராச்சியம்'' என்னும் ஆங்கில நூலிலே, பாண்டி

---

1. P.228-229. on Yuan Chwang's Travels in India by Thomas Watters, Vol.II
2. P. 549. Ancient geography of India by General Cunningham.

யன் நெடுமாறனான கூன்பாண்டியன் சம்பந்தருக்கு இளையவன் என்று கூறுகிறார்.[1] இது விசித்திரமான வியக்கத்தக்க புதிய செய்தி.

ஞானசம்பந்தர் தமது பதினாறாவது வயதில் இவ்வுலகத்திலிருந்து மறைந்தார். அவர் கூன்பாண்டியைனச் சைவனாகக்கியபோது அவருக்கு உத்தேசம் வயது பதினான்கு. 14 -வயதுள்ள சம்பந்தருக்குப் பாண்டியன் இளையவனாக இருந்தான் என்றால் அப்போது பாண்டியனுக்கு வயது 12-ஆக இருக்கவேண்டும். பாண்டி மாதேவிக்கு வயது 10-ஆக இருக்க வேண்டும். அப்படியானால் பாண்டியன் நெடுமாறன் 12-வயதுக்கு முன்னரே அரசாட்சி பெற்றிருக்கவேண்டும். இதற்குச் சான்று என்ன? சாஸ்திரியார் இதற்குச் சான்று எங்கே கண்டார்? இலக்கிய நூலிலா அல்லது சாசனங்களிலா? சாஸ்திரியார் சான்று காட்டாமல் மனம்போனபடி எழுதி விட்டார். ஞானசம்பந்தர், திருநாவுக்கரசரைப் போல நீண்ட ஆயுளுடன் இருந்தார் என்று தவறாகக் கருதிக்கொண்டு இப்படி எழுதிவைத்தார் போலும்.

12-வயதுடைய பாண்டியன் மதம் மாறியபோது அவன் அரசியான பாண்டிமாதேவிக்கு வயது 10-ஆக இருக்கவேண்டும் என்று கூறினோம். 10-வயதுள்ள பாண்டியமாதேவி 14-வயதுள்ள சம்பந்தரைப் பார்த்து, ''நீர் சிறுபிள்ளை. சமணருடன் நீர் எப்படி வாது செய்ய முடியும்?'' என்று சொல்லுவாரா? அதற்குப் பதிலாகச் சம்பந்தர்,

> ''மானினேர் விழிமாதராய் வழுதிக்குமா பெருந்தேவிகேள்
> பானல்வா யொரு பாலனீங்கிவ னென்றுநீ
> பரிவெய்திடேல்.''
>
> (சம்பந்தர். திருவாலவாய்ப் பதிகம்)

என்று கூறுவாரா? ஆகவே சரித்திரப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் கூறுவது உண்மைக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமற்றதாகும். மதம் மாறிய பாண்டியன் நெடுமாறன் சம்பந்தரைவிட மூத்தவன் என்பதும் அப்போது அவனுக்கு வயது 25 அல்லது 30க்குக் குறையாமலிருக்கும் என்பதும் விளங்குகிறது இதுநிற்க;

---

1. The Pandian Kingdom by K.A. Nilakanta Sastri, 1929, P. 54. Note 1.

பாண்டியன் நெடுமாறன் கி.பி. 670-இல் அரசாளத் தொடங்கினான் என்று சாஸ்திரியார் கூறுகிறார்[1] இந்தத் தேதியும் பொருத்தமாக இல்லை. ஏறக்குறைய 25 ஆண்டுகளைக் கூட்டிக் கூறுகிறார். இது பொருத்தமற்றது என்பதைக் காட்டுவோம்.

வாதாபி நகரம் அழிக்கப்பட்ட கி.பி. 642-இல் சிறுத்தொண்டர் வாழ்ந்தவர். இதனைச் சாஸ்திரியாரும் ஒப்புக் கொள்கிறார். வாதாபிப் போர் முடிந்தவுடன் சிறுத்தொண்டர், சேனைத்தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொண்டு கணபதீச்சரத்தில் சைவத்தொண்டு செய்து வந்தார். அக்காலத்தில் அவருக்குச் சீராளன் என்னும் குழந்தை பிறந்தான். அக் குழந்தையின் ஐந்தாவது வயதில் ஞானசம்பந்தர் சிறுத்தொண்டர் இல்லஞ்சென்று சந்தித்தார். அப்போது ஞானசம்பந்தருக்குப் பன்னிரண்டு வயதாக இருக்கலாம். இவற்றைப் பெரிய புராணத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். வாதாபிப் போர் நிகழ்ந்த பத்து ஆண்டுகட்குப் பிறகு சம்பந்தர் சிறுத்தொண்டரைச் சந்தித்ததாகக் கொள்ளலாம். அந்த ஆண்டு கி.பி. (642 + 10 =) 652 - ஆகும். இரண்டு ஆண்டுக்குப் பிறகு, உத்தேசம் கி.பி. 654-இல் சம்பந்தர் பாண்டியனைச் சைவனாக்கினார்.

உத்தேசம் கி.பி. 670-இல் பாண்டியன் நெடுமாறன் அரசாட்சியை ஏற்றுக்கொண்டான் என்று நீலகண்ட சாஸ்திரியார் கூறுகிறார். சம்பந்தர் பாண்டியனைச் சைவனாக்கியது உத்தேசம் கி.பி. 654-இல் என்று மேலே காட்டினோம். 670-இல் பட்டம் பெற்ற பாண்டியனை, 652-ல் எவ்வாறு சம்பந்தர் சைவனாக்கியிருக்க முடியும்? பாண்டியன் அரச பதவியிலிருந்த போதுதான் சம்பந்தர் அவனைச் சைவனாக்கினார்; பட்டம் பெறுவதற்கு முன்பு அல்ல சம்பந்தரோ 16-ஆண்டு மட்டும் உயிர்வாழ்ந்திருந்தவர். சம்பந்தர் தமது 12-ஆவது வயதில் கி.பி. 652-இல் சிறுத்தொண்டரைச் சந்தித்தார். 14-ஆவது வயதில் கி.பி. 654 - இல் பாண்டியனைச் சைவனாக்கினார். பிறகு தொண்டைநாட்டுக்குத் தலயாத்திரை சென்றார். தலயாத்திரை முடிய 1 1/2 அல்லது 2-ஆண்டு சென்றிருக்கும். பிறகு சீகாழிக்கு வந்தார். அப்போது இவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. அஃதாவது 16-ஆவது வயதில் உத்தேசம் கி.பி. 656-இல் திருமணத்தின் போதே உலக வாழ்க்கையிலிருந்து மறைந்தார்.

---

1. The Pandian Kingdom.

சாஸ்திரியார் கூறுவதுபோல 670-இல் பாண்டியன் பட்டத்துக்கு வந்தான் என்றால், 656-இல் மறைந்த சம்பந்தன் எப்படிப் பாண்டியனை மதமாற்றியிருக்க முடியும்? ஆகவே, சாஸ்திரியார் பாண்டியன் நெடுமாறனுக்கு அமைத்த ஆட்சி ஆண்டு தவறாகிறது. நெடுமாறன் ஆட்சிக்கு வந்த ஆண்டு உத்தேசம் கி.பி. 652க்கு முன்னதாக இருக்கவேண்டும் என்று விளங்குகிறது.

(ஞானசம்பந்தர் கி.பி. 656-இல் மறைந்தார் என்று கூறினோம். இவருக்கு முன்னரே இவருடைய நண்பர்களாகிய சிறுத்தொண்டரும் திருநாவுக்கரசரும் உலகத்திலிருந்து மறைந்தார்கள். எப்படி என்றால், ஞானசம்பந்தர் திருமணத்திற்கு அவருடைய நண்பர்களான நாயன்மார்கள் எல்லோரும் திருநாவுக்கரசு நாயனாரும் வரவில்லை. வராத காரணம் இவ்விருவரும், திருமணத்திற்கு முன்னரே சிவபதவியடைந்ததுதான். இவ்விரு நாயன்மாரும் உத்தேசம் கி.பி. 655-இல் மறைந்தவராதல் வேண்டும்.)

எனவே, எல்லோரும் ஒப்புக்கொண்டதும் சந்தேகத்துக்கு இடமில்லாததும் ஆன வாதாவி அழிந்த கி.பி. 642-ஐ அடிப்படையாகக் கொண்டு, அப்போரில் சம்பந்தப்பட்ட சிறுத்தொண்டர் அவருக்கு நண்பரான ஞானசம்பந்தர், சம்பந்தரால் சைவனாக்கப்பட்ட நெடுமாறன் இவர்களின் காலத்தை ஆராய்ந்து பார்த்தால், பாண்டியன் நெடுமாறன் அரசாட்சிக்கு வந்தது கி.பி. 652க்கு முன்னதாக வேண்டும் என்பது திட்டமாகத் தெரிகிறது. ஆகவே சாஸ்திரியார் கி.பி. 670-இல் நெடுமாறன் ஆளத்தொடங்கினான் என்பது தவறாகிறது.

சம்பந்தர் சிறுத்தொண்டர் - நெடுமாறன் இவர்களைப் பற்றிய ஆராய்ச்சியில் இவ்வளவு முரண்பாடான குழப்பங்களைத் தமது நூலில் எழுதிவைத்த சரித்திரப் பேராசிரியர் நீலகண்டசாஸ்திரியார், இன்னொரு தவறையும் செய்து வைத்தார். தமது ''பாண்டிய இராச்சியம்'' என்னும் நூலில் இரண்டு வெவ்வேறு அரசர்களை ஒருவராகப் பிணைத்துக் கூறுகிறார். வேள்விக்குடி சாசனத்தில் கூறப்படுகிற அரிகேசரி மாறவர்மனையும் (இவனே கூன் பாண்டியன்), சின்னமனூர் பெரிய சாசனம் கூறுகிற அரிகேசரி பராங்குசனையும் வெவ்வேறு அரசராகக்கொள்ள வேண்டியிருக்க, சாஸ்திரியார் இருவரையும் ஒரே அரசனாகக் கொண்டார். அரிகேசரி

மாறவர்மனும் அரிகேசரி அபாரங்குசனும் முறையே பாட்டனும் பேரனும் ஆவார்கள். சாஸ்திரியார் இருவரையும் ஒருவனாக இணைக்கிறார் ராவ் பகததூர் *H*. கிருஷ்ண சாஸ்திரியும்,[1] மூவோ தூப்ராய் அவர்களும்[2] இந்த இரண்டு அரசர்களையும் பாட்டனும் பேரனும் ஆகக்கொண்டு ஆராய் கிறார்கள். இதுவே சரியாகும்.

கூன்பாண்டியனாகிய அரிகேசரி நெடுமாறன் காலத்தை சாஸ்திரியார் கி.பி 670-முதல் 710-வரையில் என்று கணக்கிடுகிறார். இது தவறு என்பதை மேலே காட்டினோம். பாட்டனையும் பேரனையும் ஒரே ஆளாகக் கருதிக்கொண்டு அதன்படி கணக்குப்போட்டதனால் ஏற்பட்ட தவறே இது. பாட்டனையும் பேரனையும் வெவ்வேறு அரசராகக்கொண்டு காலத்தைக் கணக்கிட்டால் கூன்பாண்டியனுடைய காலம் கி.பி. 650-முதல் 675-வரையில் என்பது ஆகும். வாதாபி கொண்ட கி.பி. 642-ஐ ஆதாரமாகக்கொண்டு மேலே நாம் ஆராய்ந்துகண்ட முடிவும் இந்தக் காலத்தை ஒத்திருக்கிறது. பாண்டியன் நெடுமாறன் கி.பி. 650-இல் முடிசூடினான் என்பதைவிட கி.பி. 645-இல் முடிசூடினான் என்று கொள்வதே பொருத்தமானது.

பாண்டிய அரசர் பரம்பரையை, வேள்விக்குடி சாசனம் சின்ன மனூர்ச் செப்பேட்டுச் சாசனம் இரண்டையும் ஆதாரமாகக்கொண்டு ராவ்பகதூர் கிருஷ்ண சாஸ்திரியாரும், மூவோ, தூப்ராய் அவர்களும், K.A. நீலகண்டசாஸ்திரியும் முறைப்படுத்திய பட்டியலைக் கீழே தருகிறோம். நீலகண்ட சாஸ்திரி பட்டியலில் இரண்டு ராஜசிம்மர் மட்டும் காணப்படுகின்றனர். மற்றப்பட்டியலில் மூன்று இராஜசிம்மர்கள் காணப்படுகின்றனர்.

**கிருஷ்ண சாஸ்திரி, மூவோ தூப்ராய் பட்டியல்**

**வேள்விக் குடி செப்பேடு**

1. கடுங்கோன்
2. மாறவர்மன்

---

[1] S.I.I. Vol. III, Part IV, P. 446.

[2] The Pallavas, P.67.

அவனி சூளாமணி

3. செழியன் சேந்தன்
4. அரிகேசரி மாறவர்மன்
(கூன்பாண்டியன்)
5. கோச்சடையன்
6. தேர்மாறன்
இராஜசிம்மன் I
7. ஜடிலன்
பராந்தகன்

**சின்னமனூர் பெரிய செப்பேடு**

1. அரிகேசரி
பராங்குசன்
2. ஜடிலன்
3. இராஜசிம்மன் - II
4. வரகுண்மகாராசன் I
5. மாறன். ஏகவீரன்.
ஸ்ரீவல்லபன்.
பரசக்கரகோலாகலன்

வரகுணன் - II பராந்தக
வீரநாராயணன்.
சடையன்
இராஜசிம்மன் - III

**நீலகண்ட சாஸ்திரி பட்டியல்**

**வேள்விக்குடி செப்பேடு**

1. கடுங்கோன்
2. மாறவர்மன்
அவனி சூளாமணி
3. சேந்தன்

4. அரிகேசரி.....
மாறவர்மன்
5. போர்சடையன்....
6. மாறவர்மன்.....
ராஜசிம்மன் - *I*
7. ஜடில பராந்தகன்....

**சின்னமன்னூர் பெரிய செப்பேடு**

1. அரிகேசரி
பராகுசன்
2. ஜடிலன்
3. ராஜசிம்மன்
4. வரகுணமகாராசன்
5. ஸ்ரீமாற
ஸ்ரீவல்லபன்
6. வரகுணவர்மன் 7. பராந்தகன்
வீரநாராயணன்
மாறவர்மன் இராஜசிம்மன் - *II*

# 5. முதலாழ்வார், திருமழிசையாழ்வார் கால ஆராய்ச்சி.

## I

பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் இம்மூவரும் முதலாழ்வார் எனப்படுவர். இம் மூவரும் ஒரே காலத்தில் இருந்தவர்கள். இவர்கள் காலத்தில் இருந்த திருமழிசையாழ்வார் இவர்களுக்கு இளையவர். ஆனால், நால்வரும் ஒரே காலத்தில் இருந்தவர்கள் என்பதற்கு இவர்களின் வரலாறு சான்று கூறுகிறது. வைணவ அடியார்களான இவர்கள், சைவ அடியார்களான நாவுக்கரசர், ஞானசம்பந்தர், சிறுத் தொண்டர், முருகநாயனார் முதலிய சைவ நாயன்மார்கள் வாழ்ந்திருந்த

அதே காலத்தில், அஃதாவது மாமல்லன் நரசிம்மன் காலத்தில் இருந்தவர்கள். இந்த ஆழ்வார்களின் காலத்தை எளிதாகக் கண்டுகொள்ள இவர்கள் நூல்களிலே சான்றுகள் இல்லை. ஆனால், பூதத்தாழ்வார் தமது செய்யுளில் மாமல்லபுரத்தைக் குறிப்பிடுகிறார். அந்தக் குறிப்பைக்கொண்டு, இவரும் இவருடனிருந்த மற்ற ஆழ்வார்களும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில், மாமல்லன் நரசிம்ம வர்ம பல்லவன் காலத்தில், இருந்தவர்கள் என்று தீர்மானிக்கலாம். இதனை ஆராய்வோம்.

பூதத்தாழ்வார் பாடிய திருவந்தாதியில்,

"தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளுந் தண்பொருப்பு வேலை - தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிட்குடந்தை யென்பரே
ஏவல்ல எந்தைக்கு இடம்."

என்னும் செய்யுளைப்பாடியுள்ளார்.[1]

இச் செய்யுளில் மாமல்லபுரத்தை மாமல்லை என்று கூறுகிறார். பூதத்தாழ்வார் பிறந்ததும் மாமல்லபுரந்தான். மாமல்லபுரம் இப்போது மகாபலிபுரம் என்று பெயர் வழங்கப்படுகிறது.

மாமல்லை என்னும் மாமல்லபுரம் பல்லவ அரசர்களின் துறைமுகப் பட்டினம். ஆகவே இங்குப் பல்லவ இளவரசர்கள் வாழ்ந்திருந்தார்கள். தந்தையாகிய மகேந்திவர்மன் காலத்தில், இளவரசனாயிருந்த நரசிம்ம வர்மன் இந் நகரத்தில் வாழ்ந்திருந்தான். நரசிம்மவர்மனுக்கு மாமல்லன் என்னும் சிறப்புப்பெயரும் உண்டு. இவன் காலத்து முன்பு இத் துறைமுகப்பட்டினத்துக்கு மாமல்லபுரம் என்னும் பெயர் இல்லை. வேறு பெயர் இருந்தது. மாமல்லன் காலத்தில் இவ்வூருக்கு இவன் பெயர் சூட்டப்பட்டு மாமல்லபுரம் என்று அழைக்கப்பட்டது. மாமல்லபுரம் மாமல்லை என்று சுருக்கமாக வழங்கப்பட்டது. தமது செய்யுளிலே மாமல்லபுரத்தைக் குறிப்பிடுகிறபடியால், பூதத்தாழ்வார் மாமல்லன் காலத்திலாவது அவன் காலத்திற்குப் பின்னராவது வாழ்ந்திருக்க வேண்டும்.

[1] நாலாயிரம், இரண்டாம் திருவந்தாதி: 70.

மூவோ தூப்ராய் அவர்கள் தமது 'பல்லவர் பழமை' என்னும் நூலிலே, நரசிம்மவர்மன் தம் சிறப்புப் பெயராகிய மாமல்லன் என்னும் பெயரினால் மாமல்லபுரத்தைப் புதிதாக உண்டாக்கினான் என்று கூறுகிறார்.[1] இவர் கூறுவதுபோல மாமல்லன் புத்தம்புதிதாக இவ்வூரை உண்டாக்கவில்லை. இவ்வூரின் பழைய பெயரை மாற்றித் தன் பெயரைச் சூட்டினான். அசரர்கள். ஊரின் பழைய பெயரை மாற்றித் தமது பெயரைச் சூட்டுவது மரபு. இதற்குச் சாசனங்களில் பல சான்றுகள் உள்ளன.

மாமல்லபுரம் சங்ககாலம் முதல் வேறு பெயருடன் இருந்து வந்ததென்றும், பெரும்பாணாற்றுப்படையில் கூறப்படுகிற நீர்ப்பெயற்று அல்லது நீர்பெயர்த்து என்பது அதன் பழைய பெயர் என்றுங் கூறுவர்.[2] நீர்ப்பாயல் என்று இவ்வூருக்குப் பெயர் இருந்ததென்றும் அப் பெயரையே பிற்காலத்தவர் ஜலசயனம் என்று வழக்கினார்கள். என்று கருதுவோரும் உளர். கடல்மல்லை என்பது இதன் பழைய பெயர் என்றும், பிறகு மாமல்லன் தன் பெயரை இட்டு மாமல்லபுரம் என்று வழங் கினான் எனக் கூறுவோரும் உளர்.

இதன் பழைய பெயர் எதுவாக இருந்தாலும், கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இருந்த முதலாம் நரசிம்மவர்மனால் மாமல்லபுரம் என்னும் புதியபெயர் இடப்பட்டதென்பதில் சிறிதும் ஐயமில்லை. பூதத்தாழ்வார் மாமல்லபுரத்தில் பிறந்தவர் என்று சொல்லப்படுகிறபடியாலும், அவ்வூரை மாமல்லை என்று அவர் தமது செய்யுளிலே கூறுகிறபடியாலும், அவ்வூருக்கு மாமல்லபுரம் என்னும் பெயர் ஏற்பட்ட பிறகு இருந்தவராதல் வேண்டும். ஏனைய ஆதாரங்களை ஒத்திட்டுப் பார்க்கும்போது, பூதத்தாழ்வார், நரசிம்மவர்மன் காலத்திலே, மாமல்லபுரம் என்னும் பெயர் ஏற்பட்ட காலத்திலேயே இருந்தவராகத் தெரிகிறார். ஆகவே, பூதத்தாழ்வாரும் அவருடன் நண்பர்களாக இருந்த பொய்கையாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார் ஆகிய ஏனைய மூன்று ஆழ்வார்களும் கி.பி. 7-ஆம்

---

1. Pallava Antiquities Vol. I, G. Jouvean Dubreuil.

2. Mamalla puram at the Sangam age by Pandit M. Raghava Aiyangar, journal of Oriental Research, Madras. P. 152-155, Vol. II, 1928.

நூற்றாண்டிலே வாழ்ந்திருந்தவர் என்பது தெரிகிறது. இதே கருத்தைத் திரு. கோபி நாதராயரும் கொண்டுள்ளார்.[1]

பூதத்தாழ்வார் தாம் பிறந்த மாமல்லபுரத்தை மாமல்லை என்று வெளிப்படையாகக் கூறியிருக்க, மு. இராகவையங்கார் அவர்கள் தமது ஆழ்வார்கள் காலநிலை என்னும் நூலில், மல்லை என்பதை மா என்னும் அடைமொழியுடன் ஆழ்வார் கூறினார் என்று பண்டிதர் முறையில் வலிந்து பொருள் கூறுகிறார். அவர் கூறுவது இது: ''மல்லை என்றும் அவ்வூர் ஆழ்வார் திருவாக்குகளில் வழங்குகின்றது. 'மாமல்லை கோவல்மதிற் குடந்தை' என்று பூதத்தாழ்வார் அருளிய தொடருள் 'மல்லை' என்பதற்குக் கொடுக்கப்பட்டவிசேடணம்:-

**''நீளோதம், வந்தலைக்கு மாமயிலை மாவல்லிக் கேணியான்''**

என்ற திருமழிசைப்பிரான் வாக்கிற்போல வந்த அடை சொல்லாகக் கொள்ளற்குரியதன்றி, மாமல்லபுரம் என்பதன் திரிபாகவே கொள்ள வேண்டும் என்னும் நியதியில்லை.''[2]

இவ்வாறு மாமல்லை என்பது மாமல்லபுரம் என்பதன் திரிபு அல்ல என்றும், மாமல்லை என்பதில் மா என்பது விசேடணம் (அடைமொழி) என்றும் வலிந்து பொருள் கூறுகிறார் அய்யங்கார். அப்படியானால், பூதத்தாழ்வார்,

**''மாமல்லை மாகோவல் மாக்குடந்தை என்பரே''**

என்று கூறாமல்,

**''மாமல்லை கோவல் மதிட்குடந்தை என்பரே''**

என்று ஏன் கூறினார்? மல்லைக்குக் கொடுத்த மா என்னும் அடையைக் கோவலுக்கும் குடந்தைக்கும் ஏன் கொடுக்கவில்லை?

இந்த ஐயம் அவருக்கும் ஏற்பட்டுப் பிறகு மாமல்லை என்பது மாமல்லபுரமாகத்தான் இருக்கவேண்டும் என்னும் முடிவுக்கு வருகிறார். அவர், அதே ஆழ்வார்கள் காலநிலை என்னும் நூலில் 32 - ஆம் பக்கத்தில் இவ்வாறு எழுதுகிறார்:

---

[1] P. 16. History of Sri Vaishnavas by T.A. Gopinatha Rao. 1923.

[2] ஆழ்வார்கள் காலநிலை, பக்கம். 32-33.

''இவ்வாறு கடல்வளம் பெற்றிருந்த பண்டைத் துறைமுகப்பட்டினம், முதல் நரசிம்மவர்மனால் பின்பு புதுப்பிக்கப்பட்டு மாமல்லன் என்ற அவன் சிறப்புப்பெயரைப் பெற்றிருத்தலும், அதனால், கடன்மல்லை என்ற தன் பழம் பெயரை யன்றி, மாமல்லபுரம் என்று புதுப்பெயரும் அதற்குப் பெரு வழக்காயமைந்திருத்தலும் கூடியனவே.''

இவ்வாறு மாமல்லை என்பதற்கு மாமல்லபுரம் என்னும் பொருளை இவர் ஒப்புக்கொள்கிறார். இதனோடு நிற்கவில்லை. மாமல்லன் நரசிம்மவர்மனுடைய தந்தையாகிய முதலாம் மகேந்திரவர்மனுக்குச் சத்துரு மல்லன் என்னும் சிறப்புப் பெயர் உண்டென்பதைக்கூறி சத்துருமல்லன் என்னும் பெயரால் மல்லை என்னும் பெயர் வந்திருக்கக்கூடும் என்று குறிப்பாகக் கூறுகிறார்.[1] இவர் குறிப்பாகக் கூறுவது போல இவ்வூருக்குச் சத்துருமல்லபுரம் என்ற பெயர் வழங்கியதாக இதுவரையில் சாசனங் களிலும் இலக்கியங்களிலும் சான்று கிடையாது. ஆகவே, மாமல்லை என்பது மாமல்லபுரம் என்பது உறுதியாகிறது.

மேலும், அய்யங்கார் அவர்கள் மாமல்லபுரத்து ஆதிவராகர் சந்நிதியுள் மகேந்திரவர்மனுக்கும் அவன் தந்தை சிம்ம விஷ்ணுவுக்கும் சிலையுருவங்கள் உள்ளன என்று கூறி அதனால் அக் கோயில் நரசிம்ம வர்மன் காலத்துக்கு முன்பே ஏற்பட்ட தென்று கூறுகிறார். இதுவும் தவறு. ஆதிவராகர் சந்நிதியுள், நரசிம்மவர்மன் காலத்தில் புதிதாக உண்டாக்கப் பட்ட சிங்கத்தூண்கள் இருப்பதனால், அக்கோயில் நரசிம்மன் காலத்துக்கு முற்பட்டதல்ல.

எனவே, பூதத்தாழ்வார் மாமல்லையாகிய மாமல்லபுரத்தைக் கூறுகிறபடியினாலே, அப்பெயர் ஏற்பட்ட மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில் அல்லது அதற்குப் பிற்பட்ட காலத்தில் இருந்தவராதல் வேண்டும். மற்ற ஆதாரங்களைக் கொண்டு பார்கிறபோது, நரசிம்மவர்மன் காலத்திலே இருந்தவராகத் தெரிகிறார். ஆகவே அவர் காலத்தில் அவருடன் நண்பர்களாக இருந்த மற்ற மூன்று ஆழ்வார்களும் மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில் இருந்தவராதல் வேண்டும் என்பதில் ஐயமில்லை.

---

[1] பக்கம்: 32.

## II

பூதத்தாழ்வார் காலத்தை மேலே ஆராய்ந்து, அவர் காலம் நரசிம்மவர்மன் காலம் என்று கூறினோம். அவருடன் அவர் காலத்தில் இருந்த பொய்கையாழ்வாரைப் பற்றிய சில ஐயங்களைப்பற்றி இங்கு ஆராய்வோம். நிரசிம்மவர்மன் காலத்தில் இருந்த பொய்கை ஆழ்வாரும், கடைச் சங்ககாலத்தின் இறுதியில் இருந்த களவழி நாற்பது பாடியவரும் ஆன பொய்கையாரும் ஒருவரே என்றும், ஆகவே பொய்கையாழ்வார் கடைச்சங்க காலத்தின் இறுதியில் இருந்தவர் என்றும் சிலர் கருதுகிறார்கள். **பொய்கை** என்னும் பெயர் ஒற்றுமை ஒன்றைமட்டும் சான்றாகக்கொண்டு இவ்வாறு கூறுகின்றனர். இது பொருந்தாது.

சங்ககாலத்தின் கடைசியில் இருந்த பொய்கையார், சேரமான் கணைக்கால் இரும்பொறை என்னும் சேர அரசனுடைய அவைப்புலவர். இவரே கோக்கோதை மார்பன் என்னும் சேர அரசனையும் பாடியிருக்கிறார் (புறம்: 48, 49.) சோழன் செங்கணான், கணைக்கால் இரும்பொறையைப் போரில் வென்று பிடித்துச் சிறைவைத்தபோது, அவனைச் சிறை மீட்பதற் காகப் பொய்கையார் களவழி நாற்பது பாடினார். அரசரைப்பாடி அரசரிடம் ஊழியம் செய்து வாழ்ந்தவர் பொய்கையார் என்னும் புலவர்.

பொய்கையாழ்வாரோ, மானிடரைப் பாடாதவர். திருமாலைத் தவிர வேறு ஒருவரையும் மறந்தும் பாடாதவர். இதனை இவரே தெள்ளத்தெளியக் கூறுகிறார்:

**''திருமாலை யல்லது தெய்வமென் றேத்தேன்''**

என்றும்,[1]

**''நாடிலும் நின்னடியே நாடுவன் நாள்தோறும்**
**பாடிலும் நின்புகழே பாடுவன்.''**

என்றும்,[2]

**''மாயவனை யல்லால் இறையேனும் ஏத்தாது என்நா.''**

என்றும்,[3]

---

[1] *முதல் திருவந்தாதி: 64*

[2] *முதல் திருவந்தாதி: 88*

[3] *முதல் திருவந்தாதி: 94*

பொய்கையாழ்வார் கூறுவது காண்க. ஆகவே, களவழி நாற்பது பாடிய பொய்கையார் வேறு; முதல் திருவந்தாதி பாடிய பொய்கையாழ்வார் வேறு என்பது வெள்ளிடை மலைபோல் தெரிகிறது. ஆனால், பொருந்தாக் காரணத்தைப் பொருத்திக்கூறி இருவரும் ஒருவரே என்று சொல்பவரும் உளர்.

''.....சோழன் கோச்செங்கணானைக் களவழி நாற்பது என்ற நூலாற்புகழ்ந்த பொய்கையார், மேற்கூறிய தமிழ் முனிவரான பொய்கையாழ்வாராகவே இருத்தல் கூடும் என்பது என் கருத்து'' என்று மு.இராகவையங்கார் அவர்கள் கூறுகிறார்கள்.[1]

கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்று அய்யங்கார் அவர்கள் கருதுகிற பொய்கையார் என்னும் புலவரே பொய்கையாழ்வாராக இருப்பாரானால், கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இருந்த பூதத்தாழ்வாருடன் அவர் எப்படி நண்பராக இருக்க முடியும்? பூதத்தாழ்வார் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில் இருந்தவர் என்று மேலே காட்டினோம். ஆகவே அவருடன் நண்பராக இருந்தபொய்கை யாழ்வாரும் கி.பி. 7- ஆம் நூற்றாண்டில் வ்ாழ்ந்தவராக வேண்டும். எனவே, சோழன் செங்கணானைப் பாடிய பொய்கையார் என்னும் புலவரே பொய்கையாழ்வாராக இருக்க முடியாது.

பொய்கையார் என்னும் பெயரையுயடைவர் பலர் வெவ்வேறு காலத்தில் இருந்திருக்கிறார்கள். களவழி நாற்பது பாடிய பொய்கையாரை யன்றி, பன்னிருபாட்டியல் என்னும் நூலில் காணப்படுகிற இலக்கண சூத்திரங்களை எழுதிய பொய்கையாரும், யாப்பருங்கல விருத்தியில் மேற்கோள் காட்டப்படுகிற செய்யுள்களைப் பாடிய பொய்கையாரும், இன்னிலை என்னும் நூலைப் பாடியவர் என்று கூறப்படுகிற பொய்கை யாரும் இவ்வாறு பல பொய்கையார்கள் இருந்திருக்கின்றனர். பொய்கை யார் என்னும் பெயர் முற்காலத்தில் மக்கள் பெயராகப் பலருக்கு வழங்கி வந்துள்ளது. ஆகவே, பெயர் ஒற்றுமையைமட்டும் ஆதாரமாகக் கொண்டு சங்க காலத்துப் பொய்கையாரையும் நரசிம்மவர்மன் காலத்துப் பொய்கை யாரையும் ஒருவரே என்று கூறுவது பொருந்தாது. 7-ஆம் நூற்றாண்டில் இருந்த பூதத்தாழ்வாரின் நண்பர் என்று கூறப்படுகிறபடியால் பொய்கை

[1] ஆழ்வார்கள் காலநிலை, பக்கம்: 28

யாழ்வாரும் இக்காலத்திலேதான் இருந்திருக்க வேண்டும். மற்றொரு நண்பரான பேயாழ்வாரும் இக் காலத்தில் இருந்திருக்க வேண்டும்.

# III

பூதத்தாழ்வார் பொய்கையாழ்வார் பேயாழ்வார் ஆகிய முதலாழ்வார் மூவர் காலத்திலே அவர்களோடு நண்பர்களாக இருந்தவர் திருமழிசையாழ்வார். ஆனால், இவர் மற்ற மூவரிலும் ஆண்டில் இளையவர், திருமழிசையாழ்வார் தாம் இயற்றிய நான்முகன் திருவந்தாதியில்,

> **''காப்பு மறந்தறியேன் கண்ணனே யென்றிருப்பன்**
> **ஆப்பு அங்கொழியவும் பல்லுயிர்க்கும் - ஆக்கை**
> **கொடுத்தளித்த கோனே! குணப்பரனே! உன்னை**
> **விடத்துணியார் மெய்தெளிந்தார் தாம்.''**

என்று பாடுகிறார். இதில் **குணப்பரனே** என்று வருவதால், குணப்பரன் என்னும் சிறப்புப் பெயருடைய மகேந்திரவர்மனை (முதலாவன்) இது குறிக்கிறது என்றும், ஆகவே திருமழிசையாழ்வார் மகேந்திர வர்மன் காலத்தவர் என்றும் சீநிவாச அய்யங்கார் அவர்கள் கூறுகிறார்.[1] மு.இராகவையங்கார் அவர்களும் இதனை ஒருவாறு ஏற்றுக் கொள்கிறார். ''ஆழ்வாரும் (திருமழிசையாழ்வாரும்) குணபரப் பெயரை வழங்கினர் என்பது ஏற்றுக் கொள்ளப்படின், அப் பெயர்கொண்ட மகேந்திரவர்மனது ஆட்சிக் காலத்தைத் (618-646) திருமழிசை யாழ்வாரது வாழ்நாளின் பிற்பகுதியாகக் கொள்ளலாம்'' என்று அவர் எழுதுகிறார்.2 மேலும், ''இவற்றால், சமயவாதஞ் செறிந்து நிகழ்ந்த மகேந்திரவர்மனது ஆட்சிக்காலமே திருமழிசைப் பிரானுக்கும் உரியதென்று கொள்வது பெரிதும் பொருந்தும் என்னலாம் இதற்கேற்ப, குணபரன் என்ற பல்லவன் பெயரையே, பொருட்பேறு சிறத்தல் பற்றி அவ்வாழ்வார் திருமாலுக்கு வழங்கலாயினர் - என்று மேற்கூறிய கருத்தும் ஏற்புடைத்தாயின், அப் பல்லவன் ஆட்சிபுரிந்த 7 ஆம் நூற்றாண்டின் தொடக்கமே, திருமழிசை யாரது வாழ்நாளின் பிற்பகுதி யென்று துணியத் தடையில்லை.''[3] என்று

---

1. P. 305 Tamil studies by M. srinivasa Aiyengar, 1914.
2. ஆழ்வார்கள் காலநிலை, பக்கம்: 37
3. ஆழ்வார்கள் காலநிலை. பக்கம்: 41

கூறுகிறார். ஆழ்வார், குணப்பரனே என்று கூறியது குணபரன் என்னும் மகேந்திரவர்மனைத்தான் குறிக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால், இவர்கள், இவ் வாழ்வாருக்கு முடிவு கட்டுகிற காலம் எமது ஆராய்ச்சிக்கு ஏறக்குறைய இணைந்து வருகிறது. இவர்கள், திருமழிசையாழ்வார் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்கின்றனர். எமது ஆராய்ச்சியில், இவ்வாழ்வார் அதே நூற்றாண்டில் ஆனால், மகேந்திரவர்மன் மகனான மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில் இருந்தவர் என்பது தெரிகிறது. இதனை ஆராய்வோம்.

திருமழிசை ஆழ்வாரையும் அவர் சீடரான கணிகண்ணரையும் காஞ்சிபுரத்திலிருந்து ஒரு பல்லவ அரசன் ''நாடு கடத்தினான்'' என்று வரலாறு கூறுகிறது. இவர்களை ''நாடு கடத்திய'' பல்லவ அரசன் முதலாம் நரசிம்மவர்மன் ஆக இருக்கக்கூடும் என்றும், இவ் வரசர்கள் மிகுந்த சைவப் பற்றுள்ளவர்கள் என்றும் ஸ்ரீநிவாச அய்யங்கார் கருதுகிறார்.[1]

இவர்களை மகேந்திரவர்மன் நாடு கடத்தியிலிருக்க முடியாது. அவன் மகனான முதலாம் நரசிம்மவர்மன்தான் நாடு கடத்தியிருக்கக் கூடும். ஏனென்றால், மாமல்ல புரத்திற்கு அப்பெயரைச் சூட்டியவன் நரசிம்மவர்மனே. மாமல்ல புரமாகிய மாமல்லனையைப் பூதத்தாழ்வார் தமது செய்யுளில்பாடியிருப்பதை மேலே காட்டினோம். ஆகவே, மாமல்லனான நரசிம்மவர்மன் காலத்தில் இருந்த பூதத்தாழ்வரின் நண்பரும் சமகாலத்தவருமான திருமழிசையாழ்வாரை அந்த நரசிம்மவர்மன் நாடு கடத்தியிருக்கக் கூடும் என்பது பொருத்தமானது. இதனாலும், இந்த ஆழ்வார்கள் நால்வரும் நரசிம்மவர்மன் காலத்தில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவர் என்பது மேலும் உறுதியாகிறது.

திருமழிசையாழ்வாரைக் காஞ்சியிலிருந்து பல்லவ அரசன் நாடு கடத்தியதற்குக் காரணம் ஒன்று கூறப்படுகிறது. ஆழ்வாரின் சீடராகிய கணிகண்ணரை அரசன் தன்னைப் பாடும்படி கேட்டான் என்றும், அதற்கு அவர் மறுக்கவே அவன் அவரை நகரத்தைவிட்டுப் போகும்படி கட்டளையிட்டான் என்றும், அதனால் கணிகண்ணருடன் திருமழிசையாழ்வாரும் அவருடன் கோயிலிலிருந்த பெருமாளும் நகரத்தை விட்டுப்

---

1. P.306. Tamil Studies by M. Srinivasa Aiyengar 1914.

போய்விட்டார்கள் என்றும்,பிறகு நகரத்தை விட்டுப் போய்விட்டார்கள் என்றும், பிறகு அரசன் அவர்களைத் திரும்பி வரும்படி கேட்டுக் கொண் டான் என்றும் கூறப்படுகிறது. இந்தக் காரணம் சரியென்று தோன்றவில்லை. வேறு காரணம் இருக்கவேண்டும். அக் காரணம் யாது?

கணிகண்ணருடன் திருமழிசை யாழ்வார் காஞ்சீபுரத்தில் இருந்த போது இவர்களால் அந்நகரத்தில் சமயப்பூசல் நேரிட்டிருக்கலாம். அஃதாவது சைவ வைணவர் கலகம் ஏற்பட்டிருக்கலாம். சைவனாகிய நரசிம்மவர்மன் கலகத்தை யடக்க இவர்களைக் காஞ்சியிலிருந்து ''நாடு கடத்தி''யிருக்கலாம். திருமழிசை யாழ்வார் பாடல்களில் இதற்கு சான்றுகள் உள்ளன. இவர் பௌத்த சமண சமயங்களைக் கடுமையாகத் தாக்கிப் பாடுகிறார். அதனுடன் சைவர்களையும் கடுமையாகத் தாக்குகிறார். இதனால் சைவர்கள் சினங்கொண்டு எதிர்வாதம் செய்திருக்கக் கூடும். இதனால் சமயப் பூசலும் குழப்பமும் ஏற்பட்டிருக்கும். நகரத்தில் இருக்கும் அரசன், இக்குழப்பத்துக்குக் காரணராயிருந்த திருமழிசையாழ்வாரையும் கணிகண்ணரையும் தற்காலிகமாக நாடு கடத்தியிருக்கக் கூடும். கலகம் அடங்கியவுடன் அரசன் நகரத்திற்கு வர அனுமதியளித்திருக்கக் கூடும்.

திருமழிசையாழ்வாராது பாடல்களில் சைவர்களைத் தாக்கும் செய்யுள்கள் சிலவற்றைக் காட்டுவோம்.

***''அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர்***
***சிறியார் சிவப்பட்டார் செப்பில் - வெறியாய***
***மாயவனை மாலவனை மாதவனை யேத்தாதார்***
***ஈனவரே யாதலால் இன்று.''*** [1]

***''ஆல நிழற்கீழ் அறநெறியை நால்வர்க்கு***
***மேலையுகத் துரைத்தான் மெய்த்தவத்தோன் - ஞாலம்***
***அளந்தானை ஆழிக் கிடந்தானை ஆல்மேல்***
***வளர்ந்தானைத் தான்வணங்கு மாறு.''*** [2]

***''குறைகொண்டு நான்முகன் குண்டிகைநீர்பெய்து***
***மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி - கறைகொண்ட***

---

[1] நான்முகன் திருவந்தாதி : 6
[2] ஷை 17

**கண்டத்தான் சென்னிமேல் ஏறக் கழுவினான்**
**அண்டத்தான் சேவடியை யாங்கு.''[1]**
**''முண்டன்நீறன் மக்கள் வெப்புமோடி அங்கி ஓடிடக்**
**கண்டுநாணி வாணனுக்கு இரங்கினான் எம்மாயனே.''[2]**

விரிவஞ்சி நிறுத்துகிறோம்

சிவவாக்கியர் என்னும் பெயருடன் பழுத்த சைவ அடியாராக இருந்து சிவபெருமானைப் புகழ்ந்து பாடிக் கொண்டிருந்த இவர், பேயாழ்வாரால் வைணவ பக்தராக்கப்பட்ட பிறகு, இவ் வாறெல்லாம் சிவனையும் சைவர்களையும் கடுமையாகத் தாக்கிப் பாடியது சைவருக்கு ஆத்திரம் மூட்டியிருக்கலாம். இதனால் நகரத்தில் சைவ வைணவ கலகங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும். கலகத்தை யடக்குவதற்காக, அதற்கு முதற் காரணராயிருந்த ஆழ்வாரை நாடு கடத்தியிருக்கலாம். இவ்வாறு இவரை நாடு கடத்திய பல்லவ அரசன் மாமல்லனான நரசிம்மவர்மனாகத்தான் இருக்க முடியும். இதனாலும், திருமழிசையாழ்வாரும் மற்ற மூன்று ஆழ்வார்களும் நரசிம்மவர்மன் காலத்தவர் என்பது தெரிகிறது.

## IV

இதுகாறும் ஆராய்ந்தவற்றால் பொய்கை பூதம் பேய் திருமழிசை என்னும் ஆழ்வார்கள் நால்வரும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலே மாமல்ல னான நரசிம்மவர்மன் காலத்திலே இருந்தவர்கள் என்பது தெரிகிறது.

திரு.மு. இராகவையங்கார் அவர்கள் இவ்வாழ்வார்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் 7-ஆம் நூற்றாண்டுவரையில் இருந்தவர்கள் என்று கூறுகிறார்:-

''இதுவரை கூறியவற்றால் முதலாழ்வார் மூவரும் திருமழிசையாழ் வாரும் 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை வாழ்ந்த பேரடியார்கள் என்பது... ஒருபடியாகத் தெரியலாம்.''[3] என்றும்

---

[1] ஷை 9

[2] திருச்சந்த விருத்தம் : எ72

[3] ஆழ்வார்கள் காலநிலை, பக்கம்: 48

''முதல் நந்திவர்மன் (கி.பி. 534), சிம்ம விஷ்ணு (கி.பி. 590) போன்ற பரம பாகவதரான அரசர்களதாட்சியில் பூதத்தாழ்வார் போன்ற வர்களும், மகேந்திரவர்மனான குணபரனதாட்சியில் திருமழிசையாழ் வாரும் விளங்கியவர்கள் என்ற என் கருத்து எவ்வகையினும் பொருந்துவதாதல் அறிந்து கொள்ளத்தக்கன.''[1] என்றும் கூறுகிறார்.

இவர் கூறும் காலம் ஏற்கத்தக்கதல்ல. பூதத்தாழ்வார் தமது பாடலில் மாமல்லையைப் பாடியிருப்பதால், அவர் மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தவர் என்பதையும் அவருடன் நண்பர்களாக இருந்த மற்ற பேயாழ்வார் பொய்கை யாழ்வார் திருமழிசை யாழ்வார்களும் இவ்வரசன் காலத்தில் இருந்தவர்கள் என்பதையும் மேலே விளக்கினோம். இராக வையங்கார் அவர்கள் தமது ஆராய்ச்சி முடிவை உறுதியாகக் கூறாமல் வழ வழவென்று நெகிழ்த்திக் கொண்டே போகிறார். முதலில் இவர் பொய்கையாழ்வாரைக் களவழி நாற்பது நூலின் தலைவனாகிய செங்கட் சோழன் காலத்தவர் என்று கூறினார். செங்கட் சோழன் காலம் உத்தேசம் கி.பி. 350-ல் ஆகும். அவன் மகன் காலத்தில் களபரர் என்னும் கலியரசர் வந்து சேரசோழ பாண்டிய நாடுகளைப் பிடித்து அரசாண்டனர். அவ்வாறு அரசாண்ட களபர அரசர்களில் அச்சுத விக்கந்தன் என்பவன் கி.பி. 450-இல் சோழநாட்டை யரசாண்டான். ஆகவே சோழன் செங்கணான் கி.பி. 350-இல் இருந்தவனாதல் வேண்டும். அக்காலத்திலேயே, அய்யங்கார் கருத்துப்படி பொய்கையாழ்வாரும் மற்ற ஆழ்வார்களும் இருந்தவராதல் வேண்டும். ஆனால், மேலே காட்டியபடி முதல் நந்திவர்மன் (கி.பி. 534) சிம்மவிஷ்ணு (கி.பி.590) போன்ற பல்லவ அரசர் ஆட்சியில் பூதத்தாழ்வார் முதலியவர்கள் இருந்தார்கள் என்கிறார். இவ்வாறு உறுதியில்லாமலும் உறுதியான சான்றுகள் இல்லாமலும் கூறுகிற இவர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில் காலத்தை நீட்டுகிறார். ஏறக்குறைய 250 ஆண்டுகளை இவ்வாழ்வார்களின் ஆயுள் காலமாகக் காட்டுகிறார்.

ஆழ்வார்கள் யோகிகளாய்ப் பல நூற்றாண்டுகள் வாழ்ந்திருந்தார்கள் என்பதைச் சமய நம்பிக்கையும் பக்தியும் உள்ளவர்கள் நம்பட்டும். ஆனால், சரித்திர ஆராய்ச்சியாளர்கள் இவ்வளவு நீண்டகாலத்தை ஒப்புக்

---

1. ஷை பக்கம்:

கொள்ளமாட்டார்கள். ஒப்புக் கொள்வதும் தவறு, இவ்வாழ்வார்கள் நால்வரும் பொதுவாக நூறு ஆண்டுகள் உயிர் வாழ்ந்தவர்கள் என்றுகொண்டு. உத்தேசம் கி.பி. 600 முதல் 700 வரையில் இருந்தவர்கள் என்று கருதலாம். மாமல்லன். நரசிம்மவர்மன் ஆட்சியும் இக் காலத்தில் அடங்குகிறது. சைவ அடியார்களான திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் காலமும் இதில் அடங்குகிறது. பக்தி யியக்கம் சிறந்திருந்த காலமும் இதுவே.

திவான்பகதூர் சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள், வான நூல் முறைப்படி கணித்து ஆழ்வார்கள் காலத்தை முடிவு கூறுகிறார் பொய் கையார், பூதத்தார், பேயாழ்வார் ஆகிய முதலாழ்வார் மூவரும் கி.பி. 719-இல் பிறந்தவர்கள் என்றும் திருமழிசை யாழ்வார் கி.பி. 720-இல் (ஜனவரி மீ 2உ செவ்வாய்க் கிழமை) பிறந்தவர் என்றும் கூறுகிறார். [1] இது ஒரு நூற்றாண்டு பின் தள்ளிப் போகிறது. அன்றியும் ஏனைய சரித்திர ஆதாரங்களுக்கு ஒத்திருக்கவில்லை. ஆகவே இந்த முடிவையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.


பொய்கை, பூதம், பேய், திருமழிசை ஆழ்வார்கள் மாமல்லன் நரசிம்மவர்மன் (கி.பி. 630-668) காலத்தில் இருந்தவர்கள் என்பதும், இதே காலத்தில் சைவ அடியார்களாகிய நாவுக்கரசரும் ஞானசம்பந்தர் முதலியவர்களும் இருந்தார்கள் என்பதும் எமது ஆராய்ச்சியின் முடிவு ஆகும்.

*

---

[1] The Date of Alvars Dewan Bahadur L.D. Swamikannu Pillai, pp. 231-261. Journal of the south Indian Association, vol. IV.

# நரசிம்மவர்மன்



மயிலை சீனி. வேங்கடசாமி